## கோ. கேசவன்

# திராவிட இயக்கமும் மொழிக்கொள்கையும்

○

எனது இந்தி எதிர்ப்பு என்பது இந்தி கூடாது என்பதற்கோ தமிழ் வேண்டும் என்பதற்கோ அல்ல...... ஆங்கிலமே பொது மொழியாக அரசாங்க மொழியாக தமிழ்நாட்டு மொழியாக தமிழன் வீட்டு மொழியாக ஆக வேண்டும் என்பதற்கேயாகும்,

(விடுதலை 27-1-1969) —பெரியார்.

# திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும்.

கோ. கேசவன்.

செல்மா

# திராவிட இயக்கமும் மொழிக் கொள்கையும்

© டாக்டர் கோ. கேசவன்

முதற்பதிப்பு மே 1991

வெளியீடு: செல்மா

2, சிவன் கோயில் தெற்குத் தெரு,

சிவகங்கை

அச்சாக்கம்: அகரம், சிவகங்கை.

விலை ரூ 15-00

மொழிப் போரின் முதல் தியாகி
தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த
தாளமுத்துவின் நினைவுக்கு.

| பக் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 15 | 23 | இத்தியக் | இந்தியக் |
| 19 | 11 | அமைப்படையிலே | அடிப்படையிலே. |
| 32 | 5 | மொழிகளைப் | மாநிலமொழிகளைப் |
| 42 | 7 | நீக்கட்சி | நீதிக்கட்சி |
| 51 | 11 | இத்தியை | இந்தியைக் |
| 55 | 34 | நல்விணக்கம். | நல்லிணக்கம் |
| 95 | 20 | பதிவு செம்ய | பதிவுசெய்ய |
| 102 | 16 | மைய அரசில் | மைய அரசால். |
| 117 | 8 | எடுத்துறை | எழுத்துரை. |
| 118 | 9 | குடுயரசுத் | குடியரசுத் |
| 119 | 19 | அனுமதிப்பு | அவமதிப்பு. |
| 133 | 7 | இந்தவெற்றி | இந்திவெற்றி |
| 156 | 7 | அரைநில வுடைமையை | அரைநிலவுடைமை |

# முன்னுரை

திராவிட இயக்கமும் மொழிக்கொள்கையும் என்ற தலைப்பின் மீது சில கருத்துகளை விவாதத்துக்கு வைப்பதற்கு முன்னர், இத்தலைப்பில் உள்ள **திராவிட இயக்கம், மொழிக்கொள்கை** ஆகிய இரண்டு அம்சங்கள் குறித்து சில வரையறைகளைத் தொகுத்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

முதலில் திராவிட இயக்கம் என்பது பற்றி. **தென் இந்திய நலவுரிமைச்சங்கம்** (இனி, நீதிக்கட்சி), **சுயமரியாதை இயக்கம், திராவிடர்கழகம்** (இனி, தி.க.,) **திராவிட முன்னேற்றக் கழகம்** (தி.மு.க.) **அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்** (அ.இ.அ.தி.மு.க.,) ஆகிய அமைப்புகளைத் திராவிட இயக்கம் எனக்குறிப்பிடுகின்றோம். இங்கு திராவிட இயக்கம் என்பதில் உள்ள திராவிட என்ற சொல், **திராவிடர்** என்ற பொருளிலும் **திராவிட** என்ற பொருளிலும் பயன்படுகின்றது. தி.க., என்பதில் **திராவிடர்** என்ற பொருளிலும் தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., என்பனவற்றில் **திராவிட** என்ற பொருளிலும் பயன்படுகின்றது. திராவிடர் என்பது இனத்தைக் குறிக்கும் சொல்; திராவிட என்பது ஒரு புவியியல் பகுதியைக் குறிக்கும் சொல்லாகும். நீதிக்கட்சியின் பெயரில் திராவிட என்ற சொல் ஒட்டவில்லையெனினும் அது நடத்திய தமிழ் இதழின் பெயர் **திராவிடன்** என இருந்தது. தெலுங்கு இதழின் பெயர் **ஆந்திரப் பிரகாசிகா** என்று இருந்தது. பனகல் அரசரும் டாக்டர் சி. நடேச முதலியாரும் இணைந்து ஏற்படுத்திய அமைப்பின் பெயர் **திராவிடர் மன்றம்** (The Dravidian Association) என இருந்தது. ஆனால் 1916 இல் இவர்கள் இருவரும் தியாகராயர், டாக்டர். டி.எம். நாயர்

ஆகியோருடனும் பல ஜமீன்தாரர்களுடனும் இணைந்து ஒரு இலட்சம் ரூபாய் மூலதனத்தில் தொடங்கிய கூட்டுப் பங்கு நிறுவனமான (Joint Stock Company) **தென்னிந்திய மக்கள் மன்றம்** (South Indian People's Association) என்ற அமைப்பின் பெயரில் **தென்னிந்தியா** என்பது உள்ளது. இதன் செயலர் என்ற முறையில் தியாகராயர் வெளியிட்ட அறிக்கை (1916 டிசம்பர்) **பிராமணரல்லாதோர் அறிக்கை** என்ற பெயரில் வந்தது. தென்னிந்திய மக்கள் மன்றத்தின் அரசியல் அமைப்பாக தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தொடங்கப்பட்டது. நீதிக்கட்சியில் தெலுங்கு, தமிழ் தேசிய இனத் தலைவர்களே மிகுந்திருந்தனர். இவர்களிலும் தெலுங்கு தேசிய இனத் தலைவர்களே ஆதிக்கம் பெற்றிருந்தனர் இந்தப் பெயரிடுதலில் (nomen clature) **தென்னிந்தியா**, *பிராமணரல்லாதார்* தொடர்களே உள்ளன. 'நீதிக்கட்சியின் தெலுங்கு தேசிய இனத் தலைவர்கள் திராவிடர் , என்பதை ஒப்புக்கொள்ளாத தால் கட்சியின் பெயரில் திராவிடர் சேர்க்கப்பட வில்லை' எனப் பின்னாளில் **ஈ.வெ. இராமசாமி** (இனி, பெரியார்) குறிப்பிட்டுள்ளார். (குடி அரசு 17.6.44) அதாவது தென்பகுதியில் உள்ள ஏனைய தேசிய இனங்களோடு இணைந்து நடத்திய அமைப்பு களில் தென்னிந்தியப் பிராமணரல்லாதார் என்பதையே பொதுவான அடையாளமாக்கிக் கொண்டுள்ளனர். அதே நேரத்தில் தெலுங்கு மொழிபேசும் பகுதிகளில் நிறுவப்பட்ட அமைப்புகளுக்குத் தம் தேசிய இனப் பெயரையே சூட்டிக் கொண்டனர்.

நீதிக்கட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட பல்கலைக் கழகம் **ஆந்திராப் பல்கலைக்கழகம்** (The Andra University) என்றே பெயரிடப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர் **திரு.எம்.சி. இராசா** அவர்கள் கொணர்ந்த ஒரு தீர்மானத்தின்படி (மார்ச் 1922) **பஞ்சமர், பறையர்** ஆகியோரின் பெயர்கள் அரசாங்க ஆவணங்களில் மாற்றப்பட்டன. இவர்கள் தமிழ்த் தேசிய இனத்தினராக இருப்பின் **ஆதிதிராவிடர்** என்றும் தெலுங்கர்களாக இருப்பின் **ஆதிதெலுங்கர்** என்றும் பெயரிடப்பட்டனர். (அரசு ஆணை எண். 817. சட்டம் (பொதுத் துறை,) நாள். 25-3-1922)

இங்கு தெலுங்கர்கள் திராவிடர் என்ற இனப் பெயரைச் சூட்டிக் கொள்ளாமல், தெலுங்கர் என்ற தேசிய இனப் பெயரைச் சூட்டிக் கொண்டனர். ஆனால் தமிழர்கள்,இப் பெயரைச் சூட்டிக்கொண்டது இங்கு கவனிக்கத்தக்கது. தெலுங்குப் பகுதிகளில் ஆந்திரப் பல்கலைக் கழகம் என்ற பெயரில் பல்கலைக் கழகம் நிறுவ, தமிழ் பேசும் பகுதிகளில் வைக்கவிருந்த பல்கலைக் கழகத்தின் பெயர் 'தமிழ்ப் பல்கலைக்கழகம் என்பதற்குப் பதிலாக திராவிடப் பல்கலைக்கழகம் என்றே இருந்தாக வேண்டுமென்று' நீதிக்கட்சியின் தமிழ்த்தலைவர்கள் மன்றாடினர். (குணா, **தமிழின மீட்சி—ஒரு வரலாற்றுப் பார்வை**, பக். 14) நீதிக் கட்சியின் தெலுங்குத் தலைவர்களிடம் திராவிடர் இன அடையாள மறுப்பும்தமிழ்த்தலைவர்களிடம் அதற்கான விருப்பும் இருந்தன என்பது தெளிவு.

நீதிக்கட்சியின் பெயரைத் திராவிடர் கழகம் என மாற்றும் பொழுது அதில் தெலுங்குத் தலைவர்களின் ஆதிக்கம் இல்லை; மாறாகப் பலர் அதிலிருந்து வெளியேறியும் காங்கிரசில் சேர்ந்தும் இருந்தனர். இக்கட்டத்தில் நீதிக்கட்சித் தலைவரான பெரியார் குறிப்பிட்டார்: **''இந்தியர் என்பதை மறுக்கிற படியாலும் இன உணர்ச்சியும் எழுச்சியும் பெற வேண்டுவதாலும் திராவிடர் என்ற பெயரைக் கொண்டோம்''** (குடி அரசு 9.12.44). நீதிக் கட்சியின் பெயரில் உள்ள **தென்னிந்தியர்** (South Indian) என்ற கண்ணோட்டத்தை இது மறுக்கிறது. பெரியாரின் இன்னொரு குறிப்புப்படி, **'இந்தியர் என்பது தப்பு என்பது மட்டுமல்ல; வெறும் கற்பனையும் கூட'** (குடி அரசு, 17. 6. 44) இங்கு இந்தியர் என்பது மறுக்கப்பட்டு, திராவிடர் என்ற இன உணர்ச்சியே மையம் கொள்கிறது. ஆனால் திராவிடர் என்பதற்கு எப்பொழுதுமே ஒரே பொருளையே பெரியார் கொண்டிருந்தார் என்றும் கூறமுடியாது. திராவிடர் என்றால் தமிழர், தெலுங்கர், மலையாளி, கன்னடர் ஆகியோரைக் குறிக்கின்றது எனக் குறிப்பிடுகின்றார். பிறிதோரிடத்தில் ஆரியர் தவிர்த்த ஏனைய மக்களை — முசுலீம்கள் மற்றும் கிறித்துவர்கள் உட்பட—திராவிடர் எனக் குறிப்பிடுகின்றார், (விடுதலை, 5--10—48) முசுலீம்கள், கிறித்துவர்கள்

அனைவரையும் திரவிடர் இனத்துக்குள் சேர்க்க இயலுமா என்பது சர்ச்சைக்கு உரிய ஒன்று. இந்தியப் பகுதிகளில் –தமிழ்ப்பகுதிகளில் ஆரிய இனத்தைச் சேர்ந்த பலர் சமயம் மாறி முசுலீம்களாகவும் கிறித்துவர்களாகவும் ஆகியுள்ளனர். எனவே இவர்கள் அனைவரையும் பெரியார் சொல்லும் வரையறைக்குள் அடக்க இயலுமா என்பது அடிப்படையான பிரச்சுனையாகும். மேலும் பெரியார் 'பிறவி பார்த்து இனப்பிரிவினை செய்யாமல் அவரவர் பழக்கம் பார்த்து இனப் பிரிவினை பிரிக்கும்படியும்' கேட்டுக் கொள்கிறார். (பெரியார் ஈ வெ.ரா. சிந்தனைகள்—முதல் தொகுதி, பக்.547–548). ஜப்பான் நாட்டவனொருவன், மக்கள்பிறவியில் பேதம் கிடையாது என்று கூறி அத்தகைய பேதம் இருக்கும் முறைகளை மறுப்பானானால் அவனையும் திராவிடன் என்று ஏற்றுக் கொள்ளலாம் எனப் பெரியார் பேசியுள்ளார் (திராவிடநாடு, 23-11-46). இந்தக் கருத்தை விளக்கிப் பேசிய சி.என் அண்ணாதுரை 'வர்ணாசிரமதருமத்தை ஆதரிப்பவர் ஆரியர்! அது கூடாது என்பவர் திராவிடர்! சுதர்மம் கோருவோர்ஆரியர்! சமதருமம் கோருவோர் திராவிடர். திராவிடர் என்பது ஒரு குறிச் சொல்,. என்று குறிப்பிட்டுள்ளார். (திராவிட நாடு, 23–11–46). அந்நாளில் திராவிட இனத்தளபதி என்று புகழாரம் சூட்டப்பட்ட அண்ணாதுரை திராவிடஇயக்க சித்தாந்தவாதியாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அவரைப் பொறுத்தமட்டில் வருணாசிரமதருமத்தை எதிர்த்தலே திராவிடரா இல்லையா என்பதற்கான அடையாளமாகும்' இன ரீதியில் திராவிடராக உள்ளவர்களில் எத்தனை பேர் இதற்கு இலக்கணமாக இருப்பர் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. இது பிறவி வழி இனக் கோட்பாட்டைமறுத்து விடுகிறது. இங்குநமக்குமுக்கியம், திராவிடர் என்பதற்குக் கொடுக்கப் படும் பல விளக்கங்களாகும். விளக்கங்களில் வேறுபாடுகள் இருப்பினும் பார்ப்பனரல்லாதோரை மட்டுமே மனதில் கொண்டு இவை அமைகின்றன. அதே நேரத்தில் திராவிடர் கழகத்தினர் திராவிடர் எனக் குறிப்பிடும்பொழுது அது தமிழ்த்தேசிய இனத்தினரைக் குறிப்பதாகவும் காணப்படுகிறது. நான்கு மொழிகள் பேசும் பகுதிகளை இணைத்து உருவாக்குவதாக இருந்த தட்சிணப்

பிரதேச அமைப்புகுறித்து பெரியார் தம் கண்டனத்தைக் கடுமையாகத் தெரிவித்தார். (விடுதலை 1.3.1955) இதற்குப் பெரியார் குறிப்பிடும் காரணமே இங்கு முதன்மையாகும். தட்சிணப் பிரதேச அமைப்பு ஏற்படின் மலையாளிகளும் பார்ப்பனர்களும் எல்லா உத்தியோகங்களையும் பறித்துக் கொண்டு விடுவர் எனப் பெரியார் குறிப்பிடுகின்றார். (விடுதலை 11-10-55; 14- 6-56). இங்கு பார்ப்பனரைப் புறந்தள்ளும் பொழுது திராவிடர் இன உணர்வு பெற்றுள்ள பெரியார், மலையாளிகளையும் சேர்த்துப் புறந்தள்ளும் பொழுது அவரதுஇன உணர்ச்சி குன்றிவிடுவதைக் காண்கிறோம். இந்த இடத்தில் பார்ப்பனரல்லாத மற்றும் மலையாளி அல்லாத தன்மையைக் காண்கிறோம். மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப் படுதலுக்கு முன்னர் பெரியாரின் திராவிடர் இன வரையறையில், பார்ப்பனரல்லாதார் என்ற ஒரே நிலைபாடு மட்டுமே இருந்தது. ஆனால் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபின் பெரியார் ஏனைய தேசிய இனத்தினரையும் புறந்தள்ளும் தன்மையைக் காண்கிறோம். எனினும் திராவிடர் என்ற பெயரைப் பெரியார் கை விட்டு விடவில்லை என்பதே இங்கு குறிப்பிடத்தகுந்ததாகும். கேரளம், ஆந்திரம், கருநாடகம் ஆகியவை பிரிந்தபின் தமிழ் நாடுதான் திராவிடநாடு ஆகும் என்கிறார் பெரியார். (விடுதலை (29-8-56)இங்கு கூடபெரியார் தமிழ்நாட்டை, திராவிட நாடு என்றே அழைப்பதைக் காணலாம். திராவிட நாடு எனக் குறிப்பிடும்பொழுது தமிழ்நாடு என்ற அர்த்தத்தில் குறிப்பிடுவதாகச் சொல்லும் பெரியார் (அறிவின் எல்லை, பெரியார், பக். 175), நேரடியாகத் தமிழ்நாடு என்ற பெயரை இங்கும் பயன்படுத்தவில்லை. உத்தியோகப் பொறுப்புகளில் மலையாளிகள் பெரும்பகுதியை ஆக்கிரமித்துவிடுவர் என வெளிப்படையாகச் சொல்லும் அளவிற்குத் தமிழர் நலத்தில் உறுதியோடு இருந்தபெரியார், மொழிவாரி மாநிலப் பிரிவினைக்குப் பின்னரும் தமிழர் என்ற பெயரைத்தம் கழகத்தோடு இணைத்துக் கொள்ளவில்லை. இதற்குப் பெரியார் கூறும் காரணம் இங்கு கருதத் தக்கது ஆகும். **''தமிழர் என்றால் பார்ப்பனரும் தன்னைத் தமிழர் என்றுகூறிக்கொண்டு நம்மோடு இணைந்துவிடலாம்'** எனப்பெரியார் கருதுகின்றார் (விடுதலை 15-3-48)

திராவிடர் என்றால் பார்ப்பனர் இணைய இயலாது; ஆனால் தமிழர் என்றால் பார்ப்பனர் இணைய இயலும் என்பதே பெரியாரின் கருத்து. ஆக **திராவிடர் என்பது பார்ப்பனரல்லாத தமிழர்களை** மட்டுமே குறிக்கக் கூடியதாகும். அண்ணாதுரையின் சொற்களில் அது ஒரு குறிச்சொல். இனவழிப்பட்ட முறையில் அல்லாமல் தேசிய இனவழிப்பட்ட முறையில் மட்டுமே அரசியல் நடத்த இயலும் என்பதையே இது தெரிவிக்கிறது. மேலும் பல காலமாக ஒரேபகுதியில் வாழ்க்கை நடத்தியதால் இரண்டு இனங்களுக்கு இடையில் ஏற் பட்டுவிட்ட கலப்பையும் அதனால் ஒரு தேசிய இனத் தில் ஏற்பட்ட மாற்றங்களையும் இது கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

தி.க., பார்ப்பனரல்லாத தமிழரை முன்னிலைப்படுத்து கிறது. பார்ப்பனரல்லாதார் என்பதில் பார்ப்பனரல்லாத அனைத்துப் பகுதி மக்களும் இடம் பெற்றிருக்கின்றனரா என்பது விவாதத்துக்கு உரிய விஷயமாகும். ஆதிதிரா விடர் இதில் இடம் பெற்றுள்ளனரா என்பது குறித்த ஐயம் நமக்கு எழுதல் இயல்பு. எனவே **தமிழ்த் தேசிய இனத்தினருள் பார்ப்பனரையும் தாழ்த்தப்பட்டோரை யும் விடுத்த ஏனைய தமிழர்களே** இவர்களால் திராவிடர் என வகைப் படுத்தப் படுகின்றனர். இது குறித்த வரலாற்றுப் பின்னணியை ஆய்வதற்கு இது ஏற்ற இடமன்று.

தி.மு.க, மற்றும் அ.இ.அ.தி.மு.க., இரண்டும் அண்ணாதுரையின் அரசியல்வழியை ஏற்றுக் கொண் டவை. அவரது அரசியல்வழி, **திராவிடம்** என்ற அரசியல் புவியியல் கண்ணோட்டம் (Geopolitical out look)கொண்டது. இன உணர்வுக் கண்ணோட்டத்தைப் (Racial outlook) பற்றி அண்ணாதுரை பல இடங்களில் குறிப்பிட்டிருப்பினும் அதைவிட அரசியல் புவியியல் கண்ணோட்டத்துக்கே அதிக அழுத்தம் கொடுத்திருந் தார். தி.மு.க., வின் தொடக்க விழாக் கூட்டமான, சென்னை இராயபுரம் இராபின்சன் பூங்காக் கூட்டத்தில் பேசிய அவரது உரையின் ஒருபகுதி வருமாறு:

''இந்த மண்ணுக்கு நன்றியுள்ளவர்களாக நடந்து

கொள்ளும்எந்த இனத்தவரும் இன்னலின்றி இன்ப வாழ்வுவாழப்பணியாற்றுவதே நம் கட்சியின் இலட்சியமாக இருக்கவேண்டும். திராவிடம் முழுமைக்கும் நன்மைகள் உண்டாக நாம் பாடுபட வேண்டியிருப்பதால் **திராவிடர் முன்னேற்றக் கழகம்** என்பதை விட **திராவிட முன்னேற்றக் கழகம்** என்று கட்சிக்குப் பெயர் இருப்பதே எல்லாவகையிலும் பொருந்தும்''

(தி.மு.க., வரலாறு, தொகுப்பு, சி. சிட்டிபாபு, பக். 208-209)

தி.மு.க., நிறுவனரின் புகழ்வாய்ந்த இந்தக் கூற்றில் திராவிடத்தில் உள்ள **அனைத்து இனத்தவர்க்கும்** உரிய இன்பவாழ்வுக்கு உத்தரவாதம் தரப்படுகிறது. இங்கு திராவிடம் என்று குறிப்பிடப் படுவது அன்றைய சென்னை மாநிலத்தையே ஆகும். மொழி வழி மாநிலம் பிரிக்கப்பட்ட1956ஆம்ஆண்டுக்குப்பின்னர் தமிழ்நாட்டுப் பகுதியை மட்டுமே அண்ணாதுரை குறிப்பிடுகின்றார். எனவே தி.மு.க.வைப்பொறுத்தவரை அதுதமிழ்நாட்டில் உள்ள **அனைத்து இன முன்னேற்றக் கழகம்** ஆகும். மொழிவாரி மாநிலப்பிரிவினைக்குப் பின்னர் தோன்றிய பல்வேறு அரசியல் யதார்த்த சூழல்களைத் தி.மு.க. கணக்கில் எடுத்துக் கொண்டது. அது தமிழ்த்தேசிய இனத்தில் உள்ள அனைத்து இனமக்களின் பிரதிநிதியாகத் தன்னைத் படிப்படியாக உருமாற்றிக் கொள்ள முனைந்தது. இந்தப் போக்கிலான வளர்ச்சியில் **இந்தியா மயமாதலையும்** (Indianisation) படிப்படியாக நாம் காண இயலும். தி.மு.க.,வின் இலட்சியமாக 1963 க்கு முன்னர் திராவிட சமதர்ம **ஜன நாயகக் குடியரசுக் கூட்டாட்சி** அமைப்பதாக இருந்தது. ஆனால் 1963 இல் (சூன் 8-10) 'இந்திய அரசுரிமை, ஒருமைத்தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்குள் இயன்ற அளவு கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட திராவிடக் கூட்டமைப்பை நிறுவுவதாக' மாறியது(தி.மு.க. வரலாறு, தொகுப்பு, டி.எம். பார்த்த சாரதி, பக். 368). சென்ற ஆண்டில் இதனுடன் **இந்திய ஒருமைப்பாடு** என்ற அம்சமும் இணைக்கப்பட்டது. இது இந்தியமயமாதலின் அழுத்

த்மான அறிகுறி. இதற்குரிய காரணங்கள் இங்கு நமக்கு வேண்டாதவையெனினும் திராவிடர் கழகத்திடமிருந்து வேறுபடக் கூடிய அம்சங்களாக **அனைத்து இனப் பிரதிநிதித்துவ முயற்சியையும் படிப்படியான** இந்திய மயமாதலையும் குறிப்பிட முடியும். தி.மு.க. வின் நிறுவனக் கூட்டத்தில் அண்ணாதுரை சொல்லியுள்ளதைப் போல 'தி.மு.க. திராவிடர் கழகத்துடன் ஒத்த கருத்துக் கொண்ட ஒட்டு மாஞ் செடி' என்பது இந்த இரண்டு அம்சங்களைப் பொறுத்தமட்டில் பொருந்துவதாக இல்லை. இந்த இரண்டு அம்சங்களின் தத்துவ நீட்சியே அ.இ.அ.தி மு.க. ஆகும். இதன் பெயரிலேயே **அனைத்து இந்திய** என்ற முன்னொட்டு இருக்கிறது. தமிழ் பேசும் பகுதிகளில் **உள்ள அனைத்து இனப்பிரதிநிதித்துவம்** என்ற நிலைபாட்டின் வளர்ச்சியாக, இதன் **தலைமையிலே பார்ப்பனர்களைக்** காணமுடிகிறது. இவை வரலாற்றின் திடீர் விளைவுகளல்ல. அண்ணாதுரை வகுத்தளித்த சித்தாந்தங்களில் காணப்படும் அம்சங்களின் தொடர்ச்சி ஆகும். திராவிடர் திராவிட என்று சொல்லிக் கொள் வதிலே நீதிக் கட்சி முதல் அ.இ.அ.தி.மு.க வரை யிலான திராவிட இயக்கங்களின் தமிழகத் தலைமை யினர் விரும்பி இருப்பினும், இவற்றுக்கு முறையே பார்ப்பனரல்லாத தமிழர் என்றும் தமிழகம் என்றும் பொருள் கொள்ளப்பட்டிருந்தன. இது ஒருவிதத்தில் **திராவிடமாயை** என மார்க்சிய அறிஞர் குணாளன் ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பது **சரியே**. இந்த மாயை யைப் போர்த்திக் கொள்ள வேண்டிய அவசியம் திராவிடர் இனத்தமிழர்களுக்கு **அல்லது** திராவிடப் பகுதியில் வாழும் தமிழர்களுக்கு ஏற்பட்டமைக்கான காரணங்களை வேறோர் இடத்தில் காணலாம். மேலும் திராவிடர் என்ற சொல் **பார்ப்பனரல்லாத தமிழர்** என்பதற்கு அழுத்தம் கொடுப்பதைப் போல, திராவிட என்ற சொல் **திராவிடப் பகுதியில் உள்ள அனைத்து இனங்கள்** என்பதற்கு அழுத்தம் கொடுத் துள்ளது. மேலும் இது படிப்படியாக **இந்தியக் கண்ணோட்டத்துக்கும்** இட்டுச் சென்றது. இத்தகைய நிலைபாடுகள், மொழிக் கொள்கையில் எதிரொலித்தன என்பதே நமக்கு இங்கு முதன்மையாகும்.

இரண்டாவதாக, மொழிக் கொள்கை பற்றிக் காண்

போம். மொழி பற்றிய பல்வேறு வரையறைகளே மொழிக் கொள்கை ஆகும். ஒரு மொழியின் தோற்றம், இயல்பு, பயன்பாடு ஆகியவை குறித்த பல கருத்துகளே இவ்வையாகும். ஒரு மொழியின் தேவையையும் பயன்பாட்டையும் மனித குலத்தின் உற்பத்திப் போக்கில் காணமுடியும். இந்தவிதத்தில் ஒருமொழியின் தோற்றத்தில் அதற்குரிய கருத்துப்பரிமாற்றப் பங்களிப்பைக் காணமுடியும். ஆனால் மனித குலம், ஒரு மொழியை இந்த அளவில் சுருக்கிக் காண்பது இல்லை. மனித குலம், [redacted]ங்களாகவும் (Genus) பின்னர் இனக்குழுக்களாகவும் (Tribes) வளர்ச்சி பெற்றது. இரத்த உறவுப் பிணைப்பு கொண்ட மனிதர்களின் தொகுப்பான கணங்களிலும் மொழியின்பயன் பாட்டைக் கண்டறிய இயலும். இனக் குழு என்பது கணங்களின் கூட்டு இனக்குழுவின் உருவாக்கத்தில் ஒரு மொழியின் திருந்திய வடிவத்தைக் கண்டறிய முடியும். இனக்குழு ஒரு பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டது, வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில் ஒரு குறிப்பிட்ட பிரதேசவரையறைக்குள் ஒரே மாதிரியான கூறுகளைக் கொண்ட ஒரு மொழியைப் பேசுகின்ற இனக் குழுக்கள் ஒருங்கிணைந்து தேசிய இனம் (Nationality) தோன்றுகிறது. இங்கு பல இனக்குழுக்கள் தமக்குள் ஒருங்கிணைந்து சமூக உற்பத்திப் போக்கின் ஊடாக ஒரு தேசிய இனமாக உருவெடுக்கும் காலத்தில் மொழி ஆற்றும் பங்கு குறிப்பிடத்தக்கது, மேலும் பல இனக்குழுக்களுக்கு இடையிலான உறவில் ஒரு பொதுமையான உளப்பாங்கு உருவாவதற்கு மொழியின் பயன் பாடு முதன்மையானதாகும். இந்த விதத்தில் ஒரு தேசிய இனத்தினரிடையே செய்திப் பரிமாற்றக் கருவியாக மட்டுமின்றி அதன் பண்பாட்டு நிகழ்வுகளின் ஒரு குறிப்பிடத்தக்க மதிப்பு கொண்டதாகவும் ஒரு மொழி இருப்பதைக் காணலாம்.

இப்படிக் காணும்பொழுது, ஒரு சமூக அரசியல் இயக்கத்துக்கும் மொழிக் கொள்கைக்கும் என்ன தொடர்பு இருக்கக்கூடும்? மனிதர்கள் தமக்குள் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள மொழி பயன்பட்டதை மனித சமூகத்தின் தொடக்க காலம் முதற்கொண்டு காண இயலும். மனித சமூகத்தின் வளர்ச்சியில் ஒரு குறிப்

பிட்ட காலத்தில் உருவான அரசதிகாரக் கட்டமைப்புக் காலத்தில் மொழியின் பயன்பாடு இன்னும் விரிவடைந்தது. கற்றுக் கொடுத்தலுக்கும் நிர்வாகம் செலுத்துதலுக்கும் மொழி தேவைப்படுகிறது. அரசதிகாரக் கட்டமைப்பில் ஒரு மொழியின் தேவைகள் குறித்த கருத்துகளையே ஓர் அரசியல் இயக்கத்தின் மொழிக்கொள்கை எனக் குறிப்பிடலாம்.

ஒரு தேசிய இனத்துக்கு பிரதேசப் பொதுமை, மொழி ஒருமை, பொதுவான உளப்பாங்கு ஆகியவை இன்றியமையாத கூறுகளே. ஒரு தேசிய இனம் ஒரே அரசதிகாரக் கட்டமைப்பில் இருந்தாக வேண்டிய தேவை இல்லை. நிலவுடைமைக் காலத்திலும் அல்லது முதலாளியத்துக்கு முந்திய உறவு முறைக் காலத்திலும் ஒரு தேசிய இனம் பல அரசதிகார மண்டலங்களின் கீழ் (Principalities) இருப்பதில் வியப்பில்லை. முதலாளியச் சமூகத்தில் பொருளாதாரக் குவிதலும் அரசியல் மையப்பாடும் ஒரு அரசதிகார மண்டலத்தின் கீழ் ஒரு தேசமாக (Nation) தேசிய இனத்தை ஒன்றுபடுத்கின்றது. இக்கட்டத்திலும் ஒரு தேசிய இனத்துக்குப் பொதுமையாக இருக்கும் மொழியின் பண்பாட்டு அம்சங்கள் தேச உருவாக்கத்தில் பயன்படுகிறது. இந்தவிதத்தில் ஒருமொழி தன்னை எப்பொழுதும் தேசிய இனத்தோடு அடையாளப் படுத்திக்கொள்கிறது. எனினும் ஒரு தேசிய இனம் நிலவுடைமைத்துவ அரசதிகாரக் கட்டமைப்பில் பல பகுதிகளாக இருந்த பொழுதும் அல்லது. முதலாளிய அரசதிகாரக் கட்டமைப்பில் ஒரு தேசமாக மாறிய பொழுதும் தம் அரசதிகாரத்தில் மொழியைப் பயன்படுத்தும் விதத்தில் அரசதிகாரக். குழுவுக்கு சில தனி நிலைபாடுகள் இருக்கும். இவ்வாறு உருவான அரசதிகாரக் குழுவின் மொழிக் கொள்கை அதன் வர்க்கப் பின்புலத்தோடு தொடர்பு கொண்டதாகும். அதாவது இந்த விதத்தில் **மொழிக்கொள்கைக்கு வர்க்க சார்பு** உண்டு

திராவிட இயக்கம், மொழிக் கொள்கை ஆகிய இரண்டு அம்சங்களின் மீதான இத்தகைய புரிதல்களுடன் நாம் தலைப்புக்குள் செல்வோம்.

# 1

ஆய்வு என்பதன் நோக்கமே, பல கருத்துகளை விவாதத்துக்கு முன்வைத்தலாகும். விவாதத்துக்கு வைக்கப் பட்ட கருத்துகளின் போதாமை, பொருந் தாமை, பொருத்தமுடைமை ஆகியவை குறித்த மேல் விவாதம் நடைபெறும்பொழுதே ஆய்வுக்குரிய பயன் இருக்க இயலும். விருப்பு வெறுப்பின்றி நிகழ்த்தப் பட்டாக வேண்டிய ஒரு துறையே இதுவாகும். இத் தகைய அடிப்படையின் மீது இங்கு பல கருத்துகள் விவாதத்துக்கு முன்வைக்கப்படுகின்றன.

திராவிட இயக்கம் என்பது இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பத்தாண்டுகளில் சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட சமூகமாற்றங்களினால் தோன்றிய சமூக அரசியல் இயக்கமாகும். இதன் மொழிக் கொள் கையைக் கவனிப்பதற்கு வகைசெய்யும் பொருட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான நவீன இந்திய அரசதிகாரத்தைத் தெரிந்து கொள்ளுதல் பொருத்தம் ஆகும்.

இன்றைக்கு நமது கருத்தில் உள்ள இந்தியா என்பது ஐரோப்பியர் உருவாக்கமே. ஐரோப்பியர் வருகைக்கு முன் இந்தியா, பல பகுதிகளாகப் பிரிந்திருந்தது. இந்தியாவில் உள்ள பலதேசிய இனங்களுக்கு இடையில் பரிவர்த்தனையும் உறவும் அங்குமிங்கும் இருந்திருப் பினும் கூட **இந்தியக் கருத்தோட்டம் இல்லை** என்பது வரலாறு; இருந்திருக்கவியலாது என்பது வரலாற்றுவிதியாகும். ஐரோப்பியர்கள் தமக்குள் மோதிக் கொண்டும், இங்குள்ள மன்னர்களோடு மோதிக்கொண்டும் இறுதியில் இங்குள்ள மக்களோடு மோதிக்கொண்டும் தம் ஆளுகையை வன் முறையோடும் சட்ட பூர்வமாகவும் நிறுவியபொழுது கட்டியமைக்கப் பட்டதே நவீன இந்தியா ஆகும். அறிஞர்ஸ்டிரேசி (Strachy) ஒரு முறை சொன்னதைப் போல **இந்தியா ஒரு புவியியல் சார்ந்த அரசியல் கருத்தமைப்பு** ஆகும். இந்தியாவின் சமகால அரசியல் வரலாற்றுப் பொருத் தப் பாட்டையும் அதன் ஒரு நூற்று ஐம்பது ஆண்டுக் கால இருப்பையும் ஆய்வுக்கண்ணோட்டத்தில் ஏற்கின்ற.

பொழுதே, மிகப் புராதன காலம் தொட்டே இதன் தோற்றத்தைத் தோண்டித் துருவி எடுத்து விளக்கும் உணர்ச்சி பூர்வமான கூற்றை ஆசைப்ற்றி அறைய லுற்ற கூற்றாகவே கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நாம் குறிப்பிடும் இந்தியா 19 ஆம் நூற்றாண்டு வரை பல மன்னர்களின் கீழ் இருந்தது. அதன்பின்கூட, பிரிட்டிசு இந்தியா, பிரெஞ்சு இந்தியா, போர்த்து கீசிய இந்தியா, சமஸ்தானப் பகுதிகள் எனப் பல பிரிவுகளாகவும் அமைந்திருந்தன. பிரிட்டிசு இந்தியாவின் எல்லைகளும் அதன் நிர்வாக-அரசியல் -இராணுவ வசதிகள் கருதி மாற்றியமைக் கப்பட்டு பிரிட்டிசு இலங்கை, பிரிட்டிசு பர்மா ஆகியவை தனித் தனியாகவும் அமைக்கப்பட்டன. இவை எவையும் மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் அமைந்தவை இல்லை. 1857 உழவர் போராட்டத்திற்குப் பிரிட்டன் அரசு இந்தியப் பகுதிகளில் உள்ள மன்னர்களுடன் சமரசம் செய்துகொண்டு சமஸ்தான எல்லைகளை ஒத்துக் கொண்டாலும், சமஸ்தானங்கள் பிரிட்டிசு இந்தியாவின் அரசியல் இணைப்புப் பகுதிகளாகவே கருதப்பட்டன. இந்தியப் பகுதிகள் ஓர் இறையாண்மை பெற்ற அரசின் கீழ் கொணரப்பட்ட இந்த அரசியல் நிகழ்வு, பிரிட்டன் ஏகாதிபத்தியத்தின் இராணுவ வாணிப நலன்களைக் கருதியதாகும். இந்தியப் பகுதிகளைப் பல்வேறு மாகாணங்களாகப் (Presidencies) பிரித்து நிர்வகிக்கும் அரசின்நோக்கமும் அதன் நலனிலிருந்தே முதன்மையாக உருப்பெற்றது. 'மாகாணப்பிரிவுகள் நிர்வாக வசதி கருதியும் இராணுவ முக்கியத்துவம் கருதியும் பிரிக்கப்பட்டதனால் அரசுக்கு அவை ஏற்புடையனவாக இருந்தன' என 1930 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட இந்திய சட்ட ஆணைக்குழு Indian Statuatory Commission, 1930) கருதியது. இதன் விளைவாக 19 ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் உருவான மாகாணங்கள் பல்வேறு தேசிய இனத்தவர்களைக் கொண்டிருந்தது. குறிப்பாக சென்னை மாகாணம் கன்னியாகுமரியிலிருந்து ஒரிசா வரை படர்ந்து தமிழர், தெலுங்கர், மலையாளர், கன்னடர், ஒரியர் ஆகிய தேசிய இனத்தினர்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டது. இவர்களில் தமிழர்கள் 41 சதவீதமும் தெலுங்கர்கள் 38 சதவீதமும்

1921ஆம் ஆண்டுக் கணக்கின்படி) இருந்தனர். ஏனையோர் சிறுபான்மை-தேசிய இனத்தினராக இருந்தனர். மாகாண உருவாக்கம், ஒன்றுக்கு மேற்பட்ட பல தேசிய இனமக்களைக் கொண்டதாக மட்டுமின்றி தேசிய இனமக்களிடையே எவ்வித சமத்துவ நிலையுமின்றி ஓரிரு தேசிய இனமக்கள் ஏனைய தேசிய இனமக்கள் மீது செல்வாக்கு செலுத்துதற்கு ஏற்ற வகையிலும் அமைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும். இந்தியா உருவாக்கத்தில் பிரிட்டன் ராசதந்திரிகள் எத்தகைய வழிமுறைகளைத் தம் நலன்கள் கருதி கையாண்டனரோ அவற்றை எவ்விதக் குறைவும் இன்றி மாகாண உருவாக்கத்திலும் கையாண்டனர். இந்தியாவின் எல்லைகள் அவ்வப்பொழுது மாறுந்தன்மை கொண்டதாக இருந்ததைப் போல மாகாணங்களின் எல்லைகளை வரையறை செய்யும் அதிகாரத்தை பிரிட்டன் பாராளுமன்றம் கொண்டிருந்தது. இதை 1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டமும் (பிரிவு எண் 290/1935) உறுதி செய்தது. இந்திய அரசு தன் தேவைகளுக்கு உருவாக்கிய நவீன கல்விக் கொள்கையும் தொழில் கொள்கையும் எல்லா மாகாணங்களிலும் ஒரே அளவினதாக இல்லை. மாகாணங்களுக்கு இடையிலும் ஒரே அளவினதாக இல்லை; ஒரு மாகாணத்தில் உள்ள பல்வேறு தேசிய இனங்களுக்கு இடையிலும் ஒரே அளவினதாக இல்லை. மாகாணங்களின் வளர்ச்சியும் தேசிய இனங்களின் வளர்ச்சியும் சீராகவும் சமத்துவமாகவும் இல்லாமல் சமச்சீரற்ற தன்மையில் (uneven ness) இருந்தன. **நவீன இந்திய அரசதிகார உருவாக்கத்தில், மேலிருந்து புகுத்தப்பட்ட திணிப்பும் சமச்சீரற்ற தன்மையும் முக்கிய பங்கு வகிக்கின்றன:**

இந்நிலையில் பிரிட்டிசு இந்திய அரசின் மொழிக் கொள்கையை சுருக்கமாகக் காண்போம். அரசின் நிர்வாக, அலுவல் மொழியாக எவ்வித விவாதமும் இன்றி ஆங்கிலமே பயன்பட்டு வந்தது. எனினும் 1861 இந்திய மன்றங்கள் கூட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட உள்ளூர் நிர்வாகமன்றங்களில் உறுப்பினர்களாக உள்ள இந்தியர்கள் நிர்வாக மன்றச் சட்டங்களில் ஆங்கில மொழியை அல்லது வேறு ஏதேனும் மொழியைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை தரப்பட்டிருந்தது. இந்த நிலையே மாநில சட்டமன்றம், மத்திய சட்ட

மன்றம் ஆகியவற்றுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. மாகாண/ மத்திய சட்ட மன்றங்களின் நடவடிக்கைகள் பொதுவாக ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டுமென்றும், ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறாதோர் வேறு மொழியைப் பயன்படுத்தலாமென்றும் குறிப்பிடப்பட்டது (சட்டப் பிரிவு எண் 85/1935). ஆட்சி மொழிக் கொள்கை குறித்து எவ்வித விவாதமுமின்றி ஆங்கிலமே கொண்டுவரப்பட்டது. எனினும் பயிற்று மொழி குறித்து ஆங்கிலேயரிடத்தும் இந்தியரிடத்தும் விவாதங்கள் இருந்துள்ளன என அறிகிறோம்.

நவீனக்கல்வியின் அறிமுகத்துக்கு முன்னரே ஐரோப்பிய இலக்கியத்தையும் அறிவியலையும் மொழிபெயர்க்கும் பணியில் வங்காள மாகாண அரசு ஈடுபட்டிருந்தது. 1823 இல் நியமிக்கப்பட்ட பொதுக்கல்விக்குழு இப்பணியில் ஈடுபட்டது. ஆனால் அது நீடித்து நடைபெறவில்லை. நவீனக் கல்வியை எந்த மொழியில் கற்றுத்தருவது என்பதில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. ஆங்கிலத்தின் வழியாகக் கற்றுத்தர வேண்டும் என ஒரு சாராரும், இந்தியாவில் பழக்கத்தில் உள்ள சமசுகிருதம் அல்லது அரபிமொழி வழியாகக் கற்றுத்தர வேண்டும் என இன்னொரு சாராரும் கருதினர். மெக்காலே, சார்லஸ் வுட், எல்பின்ஸ்டோன், டிரெவெலின் ஆகியோர் ஆங்கில வழியை முன்வைத்தனர். வாரன்ஹேஸ்டிங்ஸ், மிண்டோ ஆகியோர் வடமொழி அல்லது அரபிமொழி வழியாகக் கற்கும் முறையை முன்வைத்தனர். இராசாராம் மோகன்ராய், துவாரகநாத்தாகூர் போன்றோர். ஆங்கில்வழியை ஆதரித்து அரசிடம் மனுகொடுத்தனர். பம்பாய் ஜகன்னாத் சங்கர்சேத் போன்றோர் மாகாண மொழியைப் (Vernacular Language) பயன்படுத்த வேண்டினர். இத்தகைய விவாதங்களின் ஊடாக சார்லஸ் உட்குழு கொடுத்த பரிந்துரைகள் (19.7.1854) ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவை:

1) கல்லூரி அளவில் ஆங்கிலமே பயிற்றுமொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

2) தொடக்க நிலைக்கல்வி ஆங்கில வழியிலோ நவீன இந்திய மொழிகளின்வழியிலோ கற்பிக்கப்படலாம்.

3) உயர் கல்வியைக் கற்றுத்தருவதற்கு ஏற்ற விதத்தில் தம்மைக் காலப்போக்கில் தகவமைத்துக் கொள்ள நவீன இந்திய மொழிகளுக்கு ஊக்கமளிக்கவேண்டும்.

உட் அறிக்கையில் உள்ள பரிந்துரைகளை ஏற்று தலைமை ஆளுநர் (Governor General) 'இந்திய மக்களுக்கு ஆங்கில இலக்கியத்தையும் அறிவியலையும் ஆங்கில மொழியின் வாயிலாகக் கற்றுக் கொடுக்க...' ஆணையிட்டார் (1855) பயிற்றுமொழிக் கொள்கையைப் பொறுத்து உட் குழு பரிந்துரை முக்கியமானதாக உள்ளது. இதன் அடிப்படையிலேயே அரசின் பயிற்று மொழிக் கொள்கை அமைந்திருந்தது. 1919 ஆம் ஆண்டு சீர்திருத்தத்துக்குப்பின் ஏற்பட்ட இரட்டையாட்சியில் இந்தியர் பொறுபேற்றுக் கொள்ளும் மாற்றப்பட்ட துறைகளில்(Transferred Subjects) ஒன்றாகக் கல்வித் துறை கொண்டு வரப்பட்டது. 1935 இல் வழங்கப்பட்ட மாகாணசுயாட்சி சட்டத்திலும் பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட கல்வி, மாகாண அதிகாரத்திற்குள் வந்தது. திராவிட இயக்கத்தின் தொடக்கப் புள்ளியான நீதிக் கட்சி இரட்டையாட்சி முறைக் காலத்தில் அரசாங்கத்தை நிர்வகிக்கிற கட்சியாக இருந்தது. திராவிட இயக்கத்தின் சரிவில் காங்கிரசு. மாகாண சுயாட்சி காலத்தில் பதவிப் பொறுப்புக்கு வந்தது. அப்பொழுது திராவிட இயக்கம் காங்கிரசு அரசாங்கத்துக்கு எதிர்க் கட்சியாக இருந்தது. 1947க்கு முன் உள்ள இந்த நிலைமைகளில் திராவிட இயக்கத்தின் மொழிக் கொள்கையைக் காண்பதற்கு முன் இயக்கம் இயங்கிய பகுதியில் உள்ள மக்களின் மொழியுணர்வைத் தெரிந்து கொள்ளுதல் நலம்பயக்கும்.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்பது தெலுங்கு தேசிய இனத் தலைவர்களைப் பொறுத்து அரசுடன் உறவு ஏற்படுத்திக் கொண்டு, பற்பல பயன் களைப் பெறக் கூடிய ஒரு கருவியாக பயன்பட்டது என்பதைப் பல எடுத்துக் காட்டுகளைக் கொண்டு விளக்க முடியும். தென்னிந்திய பிராமணரல்லாதோர் என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையில் செயல் படுவதாகக் குறிப்பிட்டாலும் இவைஇரண்டும் வசதிகருதிய சொற்களாகக்

காணப்படுகின்றன. நீதிக்கட்சியின் தெலுங்குத் தலைவர்கள் 1920களின் தொடக்கத்திலேயே தெலுங்கர்களுக்கான தனி மாநிலம் கோரத் தொடங்கிவிட்டனர். நீதிக்கட்சித் தலைவர் **பொப்பிலி அரசர் 1931** இல் நடந்த இலண்டன் வட்ட மேசை மாநாட்டில் இதற்கான கோரிக்கையை வலியுறுத்தினார். மொழி வாரி மாநிலப் பிரிவினைக் கோரிக்கையின் நியாயத்தை நாம் மறுக்க இயலாது. இத்தகைய கோரிக்கையை எழுப்பும் நேரத்திலேயே நீதிக்கட்சியின்தென்னிந்திய அடிப்படை வெகுவாகக் குறைந்து கொண்டே வந்தது. இது மட்டுமல்லாமல் தெலுங்கு சமீன்தாரர்களின் அடிப்படையும்வலுவிழந்து கொண்டே போயிற்று.1930களில் ஏற்பட்ட சர்வதேசப் பொருளாதாரத்தேக்க நிலை (Depression) சமீன்தாரிப் பொருளாதாரத்தைப் பலமிழக்கச் செய்து விட்டது. 1802 இல் கொணரப்பட்ட உற்பத்தி உறவு வடிவம் இப்பொழுது உள்ள பொருளியல் நிலைக்குப் பொருந்தாததாகி விட்டது. பிரிட்டிசு அரசாங்கமே இதை மாற்றியமைக்கக் கூடிய தேவையை உணர்ந்தது. இக்கட்டத்தில் 1937 இல் பதவிக்கு வந்த சென்னை மாகாணக் காங்கிரசு, சமீன்தாரி உரிமையை நீக்க எண்ணியது. பிராமணரல்லாத தெலுங்கு சமீன்தாரர்களுக்கு இது வரை அழுத்தக் குழு (Pressure group) நிலையில் பயன்பட்ட நீதிக்கட்சியின் தேவை இப்பொழுது சிறிது சிறிதாகக் குறைந்து போயிற்று. செல்வாக்கு மிக்க பீதாம்பரம் அரசர், நீதிக் கட்சியிலிருந்து விலகி புதிய கட்சியைத் தொடங்கினார். நீதிக்கட்சித் தலைவர் பொப்பிலி அரசர் தமிழ் பேசும் பகுதிகளில் மும் முரமாக நடந்து கொண்டிருந்த மொழிப் போராட்டத்தைப் பற்றி அதிகம்கவலை கொள்ளாமல் தன் ஜமீனுக்கு விதிக்கப்பட்ட அதிகவரி குறித்தும் சமீன் தாரி ஒழிப்பு குறித்தும் அன்றைய மாகாணத் தலைமைஅமைச்சர் **சி. இராசகோபாலாச்சாரி** (இனி, இராசாசி) யுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் மும்முரமாக இருந்தார்; பின்னர் நீதிக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகினார். நீதிக்கட்சியின் தெலுங்கு சமீன்தாரி அடித்தளம் தகர்ந்தது. இதன் பின் தலைவரான பெரியார் அமைத்த செயற் குழுவில் தமிழர்களே பெரிதும் இருந்தனர். நீதிக் கட்சியின் பிரதான அடித்தளமாக தமிழ் முதலாளிகளும் வணிகர்களும் பங்கேற்றனர். இது தமிழக அரசியல் இயக்க

மாக மாற்றிக் கொண்டது. இயக்கம் இப்பொழுது இயங்கிக் கொண்டிருந்த தமிழகப் பகுதிகளிலேயே இயக்கத்தின் மொழிப்போராட்டமும் நடந்தது. இங்குள்ள தமிழர்களின் மொழியுணர்வைத் தெரிந்து கொள்வது நலம் பயக்கும்..

# 2

திராவிட இயக்கத்தின் மாபெரும் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பாடுகின்றார்:

**தமிழுக்கும் அமுதென்று பேர்—இன்பத்**
**தமிழெங்கள் உயிருக்கு நேர்**

தமிழை உயிருக்கு இணையாக நேசிக்கும் கலாச்சார மனநிலையின் கவித்துவ வெளிப்பாடே பாவேந்தரின் கவிதையாகும். இன்றைக்கும் கூட திராவிட இயக்கக் கூட்டங்களில் **உயிர் தமிழுக்கு-உடல் மண்ணுக்கு** என முழக்கமிடுவதைக் கேட்கலாம். இதன் சமூகப்பின்னணியைப் பின்னால் காண்போம். தமிழ் தேசிய இனத்துக்கு உணர்ச்சி ஊட்டக் கூடிய ஓரம்சமாக மொழி இருக்கிறது என்பதே இங்கு முக்கியமானது ஆகும். இங்கு மொழி என்பது ஒரு கருவி என்ற நிலையுடன் அது **தேசிய இனத்தின் அடையாளமாகவும்** கருதப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்களைப் படித்தால் மொழியைப்பற்றித் தமிழர்கள் அதிகம் சிந்தித்துள்ளனர் என அறிகிறோம். **தமிழ்** என்பது ஒரு மொழியைக் குறிக்கும் சொல்லாக மட்டுமின்றி பல பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகவும் பயன்பட்டு வந்துள்ளது. **தமிழர்** என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. (புறநானூறு 19; பதிற்றுப்பத்து 1–63; 16–2; பரிபாடல் திரட்டு 7). **தமிழ் நாடு** என்ற பொருளில் கையாளப்பட்டது (பதிற்றுப்பத்து 25 : அகநானூறு 227; புறநானூறு 51, 168, 198) **வீரம்** என்ற பொருளில் கையாளப்பட்டது.

''தமிழ் தலைமயங்கும் தலையாலங்கானத்து''
''அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர்;''

ஆகிய பாடல் அடிகளில் தமிழ் எனில் வீரம் என்பது பொருளாகும். ஆரிய அரசனுக்கு தமிழ் அறிவுறுத்துவதற்குப் பாடிய பாடல் என **குறிஞ்சிப்பாட்டின்** அடிக்குறிப்பு குறிப்பிடுகிறது. இங்கு தமிழ் என்பதற்கு **காதல்** என்று பொருளாகும். **தமிழ் தழீஇய சாயலவர்** என **சீவக சிந்தாமணி** (பாடல் எண் 2026) கூறும் பொழுது, **இனிமை** என்பதைத் தழுவி நிற்கிறது. தமிழ் என்பதற்கு பக்திப்பாடல்களில் **பக்தி** என்று பொருளுண்டு.

> ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்'' என்ற தொடரும், (தேவாரம்)
> ''என்னை இறைவன் படைத்தனன்
> தன்னை நலகு தமிழ் செய்யுமாறே'' (திருமந்திரம்)

என்ற தொடரும் பக்தி என்ற பொருளில் **தமிழ்** என்ற சொல் பயன்பட்டுவந்துள்ளது. **இராமலிங்க அடிகளாரின்** பாடல்களில் தமிழ் என்ற சொல்லுக்கு தத்துவ விளக்கம் தரப்படுகிறது. இறைவனுக்கும் உயிர்களுக்கும் இடையிலான உறவை விளக்குவதாக தமிழ் உள்ளது என அடிகளார் சமயத் தத்துவ விளக்கம் தருகின்றார். **தமிழர், தமிழ்,** நாடு, **காதல், வீரம், பக்தி,** ஆகிய பல் வகைப்பட்ட பொருள்களில் தமிழ் என்ற சொல் பயன் பட்டுவந்துள்ளது. (விரிவுக்குக் காண்க: டாக்டர் ப.கிருஷ்ணன், **தமிழ் நூல்களில் தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ் நாடு,** இளந்தமிழர் பதிப்பகம், சென்னை, 1984) எந்தத்துறையைப்பற்றிப் பாடுகின்றனரோ அந்தத்துறையாகவே தமிழ் காட்சியளித்துள்ளது. தமிழ் இவர்களுக்கு அந்தந்தக் காலத்திய பாடு பொருளாக காட்சியளித்துள்ளது. இலக்கியம் வாழ்வின் எதிரொலி என ஏற்றுக்கொண்டால் வாழ்க்கையின் மாற்றுருவ மாகத் தமிழைக் காணும் போக்கு தொடர்ந்து உள்ளது. இதன் தொடர்ச்சியாகவே பாரதிதாசனின்

> ''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
> மங்காத தமிழென்று சங்கே முழங்கு''

என்ற உன்னதக் கவிதை அமைந்துள்ளது. நீண்டகால மாக தமிழர் சமூகத்தின் கலாச்சாரப் பெட்டகமாகவே தமிழ் மொழியும் இலக்கியமும் விளங்கின. இந்த

விதத்தில் தமிழர் சமூகமனவியலில் மொழிக்கு உரிய பங்குகுறிப்பிடத்தக்கது. இதனாலே தமிழ் என்பதற்கே நூற்றுக்கணக்கான அடைமொழிகளைக் கொடுத்து தமிழர்கள் கொஞ்சி மகிழ்கின்றனர். இதனாலேயே தமிழின் பெயரைச்சொல்லி தமிழர்களை எளிதில் மகிழ்ச்சியடையச்செய்யலாம்; துயரமடையவும் செய்யலாம். அதாவது உணர்ச்சித் தூண்டலுக்குரிய அற்புதமான தூண்டுகோலாக தமிழ் அமைந்துள்ளது சிந்திக்கத்தக்கது ஆகும்.

இதற்குரிய காரணத்தை நாம் தமிழ்த் தேசிய இனத்தின் வரலாற்றில் கண்டறிந்தாக வேண்டும். நமது வரலாற்றைக் கண்டால் பல ஆட்சிக் காலங்களைக் காண்கிறோம். சங்க காலம் (அதாவது குறுநிலவேந்தர் மற்றும் மூவேந்தர் காலம்) களப்பிரர் காலம், பல்லவர் காலம், பிற்காலப் பாண்டியர்/ சோழர் காலம், நாயக்கர் காலம், மராட்டியர் காலம், முகலீம் காலம், ஆங்கிலேயர் காலம் என்று பல ஆட்சிக் காலங்களைக் காண்கிறோம். நமது வரலாற்றில் ஆட்சிகளின் காலம் பற்றிய சர்ச்சைகள் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை இருப்பினும் பல்லவர் காலம் (கி. பி. 600– 850 தொடங்கியே நமக்கு முறையான, ஒழுங்குபடுத்தக் கூடிய வரலாறு அமைகின்றது, இந்த ஆட்சிகளில் மூவேந்தர் மற்றும் பிற்காலப் பாண்டியர்/ சோழர் ஆகியோரின் ஆட்சிகளைத் தவிர, ஏனைய ஆட்சிகள் தமிழ்த் தேசிய இனத்துக்கு அன்றைய காலத்தில் அந்நியராட்சிகள் என்பதில் ஐயமில்லை. இப்படி நாம் வரலாற்றைக் காணும் பொழுது சங்க காலம்/ (கி. பி. 2 ஆம் நூற்றாண்டு வரை) பின்னர் பிற்காலச் சோழர் காலம் (கி. பி. 850– 1350) ஆகியவை தவிர ஏனைய காலங்கள் அந்நியராட்சிக் காலங்களே. எனவே தமிழ்த் தேசிய இனம், அந்நியராட்சிக்குள் உட்பட்டிருந்த காலமே அதிகமாகவுள்ளது இக்காலத்தில் அந்நிய மொழிகளே அரசதிகார மொழிகளாக இருந்தன. பல்லவர் காலத்தில் பாகத மொழி அரசு மொழியாக இருந்தது. வடமொழி அரசின் ஆதரவைப் பெற்றது. இந்தக் காலத்தை வடமொழியின் பொற்காலம் என்றும் தமிழின் வளர்ச்சிக்கு அரசின் ஆதரவு இல்லாத காலம் என்றும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர், சோழர்

கள் காலம் தமிழராட்சியாக இருந்து தமிழே ஆட்சி மொழியாக இருப்பினும் வடமொழிக்கு செல்வாக்கு இருந்ததைக் காண்கிறோம். நாயக்கர் காலத்தில் தெலுங்கு வடமொழி ஆகிய இரண்டு மொழிகளுக்கும் முதன்மை கொடுக்கப் பட்டன. பின்னர் வந்த முகமதியர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் பாரசீகம், உருது, ஆங்கிலம் ஆட்சிமொழிகளாக இருந்தன. களப்பிரர் முதல் ஆங்கிலேயர் வரையிலான ஆதிக்க சக்திகள் தத்தம் மொழிகட்கே முதன்மை கொடுத்த பொழுது தமிழ் பேசும் பகுதிகளில் தமிழுக்கு உரிய மரியாதை இருந்திருக்கப் போவதில்லை' களப்பிரர்கள். முகமதியர்கள் காலத்தைத்தவிர ஏனைய காலங்களில் (சோழர்களின் தமிழராட்சியிலும்) பார்ப்பனர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த சமூக, பொருளியல் தகுதி பிரமிக்கத்தக்கது. பார்ப்பனர்கள் நிலவுடைமையாளராகவும் அதிகாரிகளாகவும் சமயக்குருமார்களாகவும் விளங்கினர். மேலும் நாயக்கர், மராட்டியர் ஆட்சிகள் இந்து சமயத்தைக்காப்பாற்றும் நோக்கம் கொண்டுள்ளவையாதலால், பார்ப்பனர்கள் தனிமரியாதையைப் பெற்றிருந்தனர். இந்நிலையே பிரிட்டன் ஆட்சிக் காலத்திலும் நீடித்தது. அந்நியராட்சி, அந்நிய மொழிகளாட்சி ஆகியவற்றின் கீழ் தமிழர்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் உழன்று தவித்துக் கொண்டிருந்தனர். தம் தேசிய இனத்தின் அரசியல். பொருளாதார அடையாளத்தை இழந்து தவித்ததனால் தமிழர்கள் தம் கலாச்சாரத்தில்-குறிப்பாக இலக்கியத்திலும் சில காலங்கள் சமயத்திலும்—தம் அடையாளத்தைக் கண்டறிந்து பேணிக் காத்துக் கொள்ள முயன்றிருக்கின்றனர். அந்நியராட்சியையும் அந்நிய மொழிகளையும் தூக்கியெறியக் கூடிய புறநிலைச் சாத்தியப்பாடு இல்லாததால், தமிழர்கள் கலாச்சாரத்துறையில் தம் சுய அடையாளத்தைத் தேட வேண்டியவர்களாயினர். பல்லவர்களின் சமண, பௌத்த காலத்தில் சைவ, வைணவ எழுச்சியும் விசய நகர ஆட்சிக் காலத்தில் தனித்தமிழ்க் கடவுளான முருகன் சிறப்புத் தெய்வமாக உயர்ந்ததையும் வலுவான பார்ப்பனச் செல்வாக்குச்சூழலில் வீரசைவமும் கபாலிக சைவமும் பின்பற்றப்பட்டதையும் இசுலாமியர்கள் காலத்தில் பெருநிலவுடைமைப்பகுதிகளில் சைவ மடங்கள்

**தோன்றியதையும்** கருணையில்லா ஆங்கிலேயர் ஆட்சியில் கருணை மன நிலையில் பரவத் தொடங்கிய கிறித்துவச் சூழலுக்கு எதிருணர்வாக இராமலிங்க அடிகளாரின் சமரச **சன்மார்க்க நெறிமுறை தோன்றியதையும்** இத்தகைய கலாச்சார சுய அடையாளம் தேடும் முயற்சிகளாகக் கண்டறிய முடியும். தமிழ்த்தேசிய இன்த்துக்குள்ளே வளர்ச்சி பெற்றுவந்தவர்க்கங்களின் நிலைபாட்டுக்கு இவை உகந்ததாக அமைந்த பொழுதினும் இதற்கு பரந்துபட்ட ஒரு தேசிய இன அடித்தளத்தின் மீதே இந்த வர்க்கங்கள் **சேரவாரும் செகத்தீரே** என்று தமிழ்ச் சமுதாயத்தை அறை கூவி அழைத்தன.

இந்தக் கட்டத்தில் வட மொழிக்கும் தமிழுக்கும் உள்ள இணைவும் முரணும் குறித்த சிந்தனைகள் குறிப்பிடத் தக்கவை. பல்லவர் காலம் தொடங்கி சோழர் காலம் ஊடாக நாயக்கர் காலம் வரையில் வடமொழிக்குத் தமிழகத்தில் கொடுக்கப்பட்ட ஆளும் வர்க்க மதிப்பு குறிப்பிடத்தக்கது. தமிழைத் தென்பகுதி மொழியாகவும் வடமொழியை வடபகுதி மொழியாகவும்கருதும் போக்கு சிலப்பதிகாரம் காலம் தொடங்கி இருந்து வருகிறது. **தென் தமிழ்** (சிலப்பதிகாரம்) **வடசொற்கும் தென்சொற்கும் வரம்பாகிநின்ற வேங்கடம்** (கம்பராமாயணம், கிட்கிந்தாகாண்டம்: 745) ஆகியவை இதைத் தெரிவிக்கின்றன. இவ்விடத்தில் ஆரியர்- தமிழர் வேறுபாடு குறித்தும் சிலப்பதிகாரத்தில் கூறப்படும் புனைகதை முக்கியமானது. தமிழ் மொழியின் மேன்மையைப் பழித்துரைத்தற்காகக்கனக, விசயர் என்ற ஆரிய மன்னர்களை வென்றடக்கி இமயத்திலிருந்து கல் சுமக்கவைத்து சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டியதாகப் புனை கதை யொன்றை சிலப்பதிகாரத்தில்காண்கிறோம். ஒரு தமிழ் மன்னரின் தமிழ்ப் பற்றை மட்டுமின்றி, தமிழ் மன்னர் ஆரிய மன்னரை அடக்கிய திறத்தையும் இது குறிப்பிடுகிறது. ஆரியத்துக்கும் தமிழுக்கும் இடையிலான உறவில் இது தமிழின் மேன்மையை விளக்கிநிற்கிறது. ஆனால் பல்லவர் காலத்தில் நடந்தபக்தி இயக்கத்தில் சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக சைவ, வைணவமதங்கள் போரிட்ட பொழுது தமிழை 'ஓர்' எதிர்ப்புக் கருவியாகப் பயன்படுத்திய

பொழுது, தமிழையும் ஆரியத்தையும் இணைநிலையி லேயே சமமாகக் கருதினர்.

''தமிழ்ச் சொலும் வடசொலும் தாள் நிழல்சேர''
(சம்பந்தர்: தேவாரம்:77-4)
''ஆரியம் தமிழோடு இசையானவன்''
(அப்பர்: தேவாரம்:132-3)
''செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவன்''
(நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் 1654)

என்று சைவக் குரவர்களும் வைணவ ஆழ்வார்களும் இறைவனைப் பாடியுள்ளனர், இரண்டு மொழிகளையும் சமமாகப் பாவிக்கும் நிலை எப்பொழுதும் நீடித்து இருந்ததாகச்சொல்ல முடியாது. ஆரியத்தைவிட தமிழே மேன்மையானது என்ற கருத்து சோழர் காலந் தொட்டு தமிழ் இலக்கியத்தில் ஒரு சிந்தனைப் போக்காகவே இருந்ததைக் காணலாம்.

''அசைவில் செழுந்தமிழ் வழக்கே
அயல் வழக்கின் துறை வெல்ல''(பெரிய புராணம்,
ஞான சம்பந்தர் புராணம், 24).

''இப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சிலஇலக்கண வரம்பிலா மொழிபோல
எண்ணிடைப் படக்கிடந்ததாஎண்ணவும்படுமோ.''
(திருவிளையாடற் புராணம். திரு நகரச்சிறப்பு,57)

இவற்றில் அயல் வழக்கு, ஏனை மொழி என்பனவெல் லாம் வட மொழியைக் குறிப்பன; ஆனால் நேர் முக மாகக் குறிப்பிடவில்லை. இதற்குப் பிந்தைய கால இலக்கியங்களில் நேர் முகமாகக் குறிப்புகளைக் காண இயலும். இறைவனை ஆரிய மறைகள் காட்ட இயலா தன என்றும், தமிழ்க் கவிதைகள் மட்டுமே காட்ட இயலும் என்றும் குறிப்பிட்டு இலக்கியங்கள் எழுதப் பட்டன.

''அன்று தொட்டு இன்றுகாறும் அருமறை நான்கும் தேடி நின்றுழந் தோல மிட்டும் காணொணா நிமல மூர்த்தி.''

(சிவ ஞானமுனிவர். கலைசைப்பதிற்றுப் பந்தந்தாதி—52) வடமொழி வேதங்கள் காட்ட இயலாத நிமலனை எது காட்டும்?

''தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித் தீட்டா நிலைமைத் தெனவுலகில்
தெரிக்கும் காழித் திருஞானச் செம்மல் குழவிக்கு,''
(அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழ் )

வடமொழியைவிட தமிழே மேன்மையானது என்ற சிந்தனைப் போக்கின் இலக்கிய உச்சமே **தமிழ்விடுதூது** ஆகும். வடமொழி தமிழுக்கு ஏவல் செய்வதாகவே வருணிக்கப்பட்டுள்ளது (கண்ணிகள் 42-45) **தமிழ்விடு தூது** தமிழை அரியாசனத்திலேயே அமர்த்திப் பெருமைப் பட்டுக் கொண்டது.

''வீரியம் செய்து வினையொழிய வேரௌச
காரியம் செய்யும் கவிதையே— பாரில்
அரியாசனம் உனக்கே யானால் உனக்குச்
சரியாரும் உண்டோ தமிழே''

இங்கு கருதத்தக்கது என்னவெனில், தமிழை உச்சியில் முத்தமிட்டு நமது முன்னோர்கள் உளமகிழ்வு கொண்ட காலங்களில் எல்லாம் அவர்கள் வேற்று மொழியினராலும் மொழிகளாலும் அடிமையாக்கப் பட்டிருந்தனர் என்பதாகும், கால்டுவெல் தமிழின் தனித்துவத்தை மொழியியல் அளவில் எடுத்து விளக்கு வதற்கு முன்னதாகவே, தமிழ்மொழி குறித்து இத் தகைய மேல்நிலைக் கருத்துகள் இலக்கியத்தில் பதிந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. கால்டுவெல் எழுதிய **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** (1856) இத் தகைய கருத்தியலுக்கு ஒரு புதிய வெளிச்சத்தை கொடுத்தது. மேற்குறித்த பாரம்பரிய தமிழ்ப்பற்றுச் சிந்தனைக்கு ஆட்பட்டும் கால்டுவெல் கருத்தின் செல் வாக்குக்கு உட்பட்டும் சிந்தித்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர் **பேராசிரியர் சுந்தரம் பிள்ளை** ஆவார். இவர் எழுதிய **மனோன் மணீயம்** நாடகத்தில் வரும் தமிழ்த் தாய் வாழ்த்து இதற்கு முன் உள்ள கருத்தியலின் தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும் உள்ளது உலகம்

என்ற பெண்ணின் நெற்றியாக தெக்கணமும் அதில் இட்ட பொட்டாக திராவிடமும் உள்ளன. பொட்டின் நறுமணத்தைப் போல தமிழ் மணக்கிறது என்கிறார், தெலுங்கு, கன்னடம், மலையாளம் துளு ஆகிய மொழிகளை ஈன்ற மூலமொழியான தமிழ் ஆரியத்தைப் போல உலக வழக்கில் இறந்து விடாமல் இன்றளவும் இளமையோடு இருக்கிறது என்கிறார். இதில் திராவிட நல்திருநாடு, திராவிட மொழிகள் ஆகியவை பற்றிய குறிப்புகள் கூறப்படினும் எத்திசையும் புகழ் மணக்கும் தமிழுக்கும் ஆரியம்போல மறைந்து விடாத தமிழின் இளமைக்கும் முதன்மை அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். பேராசிரியர் இதைப்பாடும் பொழுது கூட தமிழ் எந்தநிலையிலும் தனக்குரிய அதிகாரத்தைப் பெற்றிருந்ததாகக் குறிப்பு இல்லை; தமிழர்களும் அடிமை நிலையிலேயே இருந்தனர்.

தமிழ்த் தேசிய இனம் கடந்துவந்த நீண்ட வரலாற்றுப் பாதையில் சுய அதிகாரத்துடன் இருந்த காலம் மிகவும் குறைவு. களப்பிரர், பல்லவர், நாயக்கர், முசுலீம்கள், மராட்டியர், ஆங்கிலேயர் ஆகிய வேற்று மொழி மக்கள் ஆண்ட காலங்களில் தமிழர்கள் தம் அடையாளத்தைக் கலாச்சாரத்தில் பேணிக் காத்துக் கொள்ள முயன்றனர். வேற்று சமயங்கள் ஆதிக்கம் செலுத்திய காலங்களில் அந்த சமயங்களை எதிர்ப்பதற்காகத் தமிழ்மொழியை எதிர்ப்புணர்வுக்குரிய ஒரு கருவியாகவும் பயன்படுத்தும் போக்கு இருந்ததையும் காண நேரிடுகிறது. தமிழைத் தென்மொழி எனக் கூறும் மரபு சிலப்பதிகாரம் தொடங்கி உள்ளது. தமிழுக்கும் வடமொழிக்கும் இடையிலான உறவும் நட்பும் பகையும் பாராட்டப் பட்டிருந்தன. பக்தி இயக்க காலத்தில் அதாவது பல்லவர் காலத்தில் வடமொழிக்கு அதிகம் இடம் கொடுத்திருப்பினும் புறச்சமயங்களான புத்தம், சமணம் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் வடமொழி, தமிழ் என்ற இரண்டு மொழிகளையும் இணைத்து சமமாகக் கருதும் போக்கு இருந்தது. ஆனால் சோழர் காலத்திலிருந்து தமிழை உயர்வாகக் கருதும் போக்கைக் காண்கிறோம். சேக்கிழார் முதல் சுந்தரம்பிள்ளை வரையுள்ள இந்தச் சிந்தனையாளர்களில் குறிப்பிடத்

தக்கவர்கள் சைவவேளாளர் என்பதையும் நாம் மனங் கொண்டால், வேளாளர் நிலவுடைமையாளர்க்கும் பார்ப்பன நிலவுடைமையாளர்க்கும் இடையிலானமுரண் பாடாகவும் இதைக்கொள்ளமுடியும். எனவே தமிழ்த் தேசிய இனத்தின் மொழியுணர்வு இந்தப் போக்கைச் சுட்டி நிற்கிறது. தமிழ்த்தேசிய இனத்தின் பாரம்பரிய சுயமரபுகளின் சேமிப்புக் கலனாக விளங்கி தேசிய இனப்பொதுமை நிலையில் விளங்குகிறது. இன்னொரு விதத்தில் இதனூடாகவே இதன் துணைப்போக்காக ஒன்றைக் கண்டறிய இயலும். தமிழ்த் தேசிய இனத் தின் சில சமூகப் பிரிவுகள் தம் வர்க்க நலன் கண்ணோட் டத்தில் தமிழை ஓர் எதிர்ப்புணர்வுக்கருவியாகவும் பயன்படுத்தின. இந்த அடிப்படைப் போக்கும் இதனுள் தொனிக்கும் துணைப் போக்கும் தமிழ்த்தேசிய இனத்தைப் பொறுத்து வரலாற்று ரீதியிலான தன்மை கொண்டதாகும். திராவிட இயக்கம் இயங்கிய தமிழகப் பகுதிகளில் உள்ள தமிழர்களின் மொழியுணர்வு குறித்த இத்தகைய புரிதலைக் கொண்டு மேலே செல்வோம்.

# 3

'நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழி லொழுகும்
........ ...................... ......திகழ்பரத கண்டமதில்
தெக் கணமும் அதில் சிறந்த திராவிட நல் திருநாடும்
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழணங்கே'.

இது பேரா்சிரியர் சுந்தரம்பிள்ளை எழுதிய மனோன் மணீயம் (1891) நாடகத்தின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் ஒரு பகுதி. ஆரியம், தமிழ் இவற்றோடு மட்டுமே தம் சிந்தனையை வைத்துக்கொண்டிருந்த தமிழ் உணர்வுச் சிந்தனையாளர் வரிசையில் இருந்து கொண்டே, உலகம், இந்தியா, திராவிட நாடு, தமிழ் என்ற கருத்தாக்கங்களை முன்வைக்கும் விதத்தில் வேறு பாடுகளை ஏற்றுக்கொண்ட நிலையைஇதில் (1891) காண் கிறோம் இந்தியா என்பது ஓர் அரசியல் யதார்த்தமாக வன் முறையில்திணிக்கப்பட்டுக் கொண்டிருந்தகாலத்தில்

ஆதன் பின் 1860 கள் முதற்கொண்டு சட்ட ரீதியாகத் திணிக்கப்பட்ட காலத்தில் பேராசிரியர் அதைப் புறக் கணிக்காமல் - அதே நேரத்தில் அதனுள் திராவிடத்தை யும் தமிழையும் உயர்த்திப் பிடிக்கும் போக்கில் வெளிப் படுத்திய இந்தச்சிந்தனை, பின்னாளைய திராவிட இயக்கங்களுக்குரிய அடிப்படையாக விளங்கியது. திராவிட இயக்கம் மட்டுமின்றி இருபதாம்நூற்றாண்டில் எழுச்சி பெற்ற அரசியல் இயக்கங்கள் மக்களைத் திரட்டு வதில் மொழியைப் பயன்படுத்தத் தொடங்கின.

இந்தியதேசியக் காங்கிரசு, இந்தியப் பகுதிகள் முழு வதையும்உள்ளடக்கித் திட்டமிடப்பட்ட அனைத்திந்திய இயக்கமாகும்.அனைத்திந்திய இயக்கம் என்பதேபுதிய, வகைப்பட்டதாகும். இந்திய தேசிய காங்கிரசு,சென்னை பம்பாய், கல்கத்தா ஆகிய பெரு நகரங்களில் உள்ள படித்த மற்றும் செல்வாக்குப்பெற்ற சமூகத்தினரின்இயக் கமாக இருந்த பொழுதே, இந்தி மொழி இந்தியப் பகுதி முழுவதும் காங்கிரசு தலைவர்களால் அறிமுகப்படுத்தப் பட்டது. அனைத்து இந்தியக் கூட்டுதேசியத்தின் அடை யாளமாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டு கள் முதற்கொண்டே இந்தி அறிமுகப்படுத்தப் பட்டது. அரசியலில் தீவிரவாதி என அறிமுகமான மராட்டிய தேசிய இனத் தலைவரான பாலகங்காதர திலகர் இந்தி கற்றுக் கொள்ள வேண்டிய தேவை குறித்து 1908 இல் வ.உ சிதம்பரம் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார் சென்னை ஜனசங்கம் என்பது வ உ.சி., பாரதி ஆகியோரின் முன் முயற்சியின் பெயரில் சென்னையில் தொடங்கப்பட்ட திலகர் வழியிலான அரசியல் இயக்க மாகும் சென்னையில் இந்திவகுப்புகளைத் தொடங்கியுள் ளதாகவும் காலப்போக்கில் இந்திவகுப்புகளுக்கு நிறைய மாணவர்கள் வந்து சேருவார்களெனத் தாம் நம்புவதா கவும், பாரதியார் திலகருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் (29.5.1908, பாரதியாரின் கடிதங் கள் தொகுப்பு ரா. அ. பத்மநாபன், பக், 25) மோகன் தாஸ் கரம்சந்காந்தி 1909 இல். பின்வருமாறு குறிப் பிட்டார்: ஒவ்வொரு தேசபக்த இந்தியனும் தன் தாய் மொழியைத்தவிர இந்தியையும் கற்றுக் கொள்ள வேண் டும் (Hindi and English in the South, M.K. Gandhi, 1956. P. III). இந்திய தேசியக் காங்கிரசு குழு வாத

நிலையிலிருந்து இன்னமும் மக்கள் திரள் இயக்கமாக (Mass Movement) உருமாறாத சூழலில் இத்தகைய கருத்துக்களை இந்திமொழி அல்லாத தேசிய இனத் தலைவர்களிடம் காண்கிறோம் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது, காந்தியின் மக்கள்திரள் பாதையில் நாடு ஈர்க்கப்படுதலுக்கு முன்னர் இந்திபேசும் தேசிய இனத் தினர், முசுலீம்கள், பெண்கள். கிராமப்புறப்பகுதியினர், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோர் பங்கெடுக்கும் இயக்க மாக காங்கிரசு இயக்கம் இல்லை; அது நகர்ப்புற வசதி படைத்த மக்களின் குறுகிய ஆதிக்கத்தில் இருந்தது. இதை உடைத்து தேசிய இன மக்களது எழுச்சியின் உருவமாகக் காங்கிரசு உருமாறிய காலத்தில் மக்களுடன் அதற்குரிய தொடர்புமிகவும்விரிவடைந்தது. அந்தந்த மாகாணங்களில் வட்டார மொழிகளில் மக்களுடன் அரசியல் உறவு கொள்ளுதலே எளிதான பணியாகும். இத்தகைய கட்டத்தில் ஒரு சிக்கல் எழுந்தது. ஒவ்வொரு மாகாணமும் பல மொழிகளைக் கொண்டது. குறிப்பாக சென்னை மாகாணம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஓரியா ஆகிய மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்டிருந்தது. இவற்றில் ஒரியா மொழி பேசும் சதவீதத்தினர் மிகவும் குறைவு, கன்னடம் மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் சமஸ்தானப் பகுதிகளிலே கணிசமாக இருந்தனர். எனினும் சென்னை மாகாண அரசியல் இயக்கத்தில் மொழி என்பது ஒரு சிக்கலாக இருந்தது. எல்லாத் தேசிய இனத்தினரையும் தொடர்பு படுத்த வேண்டிய தேவை காங்கிரசுக்கு இருந்ததனால் இந்தச் சிக்கல், அரசியல் அவசியத்திலிருந்து எழுந்ததாகும். இதனால் மொழி வழியாக காங்கிரசுக் குழுக்களைப் பிரித்துக்கொள்ள வேண்டிய அவசியம் உணரப்பட்டு 1920 இல் தெலுங்கு பேசும் பகுதிகளுக்கென ஒரு தனித்த காங்கிரசுக்குழு அமைக்கப்பட்டது. மொழி வழியாகவே அனைத்திந்தியத் தன்மை சாத்தியம். என்பதற்கு இது முதல் எடுத்துக் காட்டாகும். எனினும் இச்சிக்கலை முழுவதுமாகத் தீர்த்து விடவில்லை. அனைத்து இந்திய தேசிய காங்கிரசுக் கூட்டத்தில் அல்லது அனைத்து இந்தியத் தலைவர் தம் மாநிலம் தவிர வேறு மாநிலத்தில் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது ஏற்படும் சிக்கலை இது தீர்க்கவில்லை.

ஆங்கிலம் அன்றைய சூழலில் ஒரு சதவீதம் மக்களுக்கு மட்டுமேதெரிந்தமொழியாகஇருந்தது.இந்தக்கட்டத்தில் 1920 நாக்பூரில் கூடிய காங்கிரசு, புதியதாக அமைக்கப் பட்ட மொழிவாரி காங்கிசுக் கட்சிக் கூட்டங்களில் அந்தந்த மொழிகளைப் பயன்படுத்தும்படி ஊக்க மளித்தது. 1925 இல் கூடிய கான்பூர் காங்கிரசு மாநாட்டில்' காங்கிரசின் ஆண்டு மாநாட்டுக்கூட்டங்கள் இயன்றவரை இந்துஸ்தானி மொழியிலேயே நடத்தப் படவேண்டும்' எனக் காங்கிரசின் 'அமைப்புச்சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதே நேரத்தில் ஆங்கிலம் மற்றும் வட்டார மொழிகள் ஆகியவற்றையும் பயன்படுத்திக்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் கடுமையான எதிர்ப்புக்குப் பின்னர் நிறைவேற்றப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இத்தீர்மானம் குறித்த முன் முயற்சி 1918 இல் காந்தி யிடமிருந்து வந்தது, 1918 ஆம் ஆண்டிலேயே இந்தூர் இந்தி சாகித்ய சம்மேளனக் கூட்டத்தில்காந்திஇவ்வாறு பேசினார்.

> இந்திக்கு தேசியத் தகுதியையும் மாகாண மொழி களுக்கு, அவற்றுக்கு உரிய இடத்தையும் நாம் கொடுக்காதிருக்கும் வரையில் சுயராஜ்யத் தைப் பற்றியபேச்சுகள் அனைத்தும் வீண் என்பதே என் தாழ்மையான ஆனால் உறுதியான கருத்து. (Thoughts on National language, Navajivan Press, Ahmedabad, P 14).

காந்தி இது குறித்தபல சந்தர்ப்பங்களில் இந்தி அல்லது இந்துஸ்தானி எனப் பெயரிட்டு அழைப்பது, உருது மற்றும்தேவநாகரிவரிவடிவத்தில் எழுதப்பட்டுள்ள இந் துஸ்தானி மற்றும் இந்திமொழியை ஆகும். தென்னகத் தில் இந்தியைப் பரப்புவதற்கென காந்தியின் விருப்பப் படி 1918 இல் **தட்சிணபாரத் இந்தி பிரச்சார சங்கம்** சென்னையில் அமைக்கப்பட்டது. 1919 ஏப்ரலில் தமிழகச் சுற்றுப் பயணத்தின் பொழுது காந்தி 'ஆங்கி லத்தை நிராகரித்து இந்தியை ஏற்றுக் கொள்ளும் படியும் தேசிய உணர்வை முழுவீச்சில் வெளிக் கொணர இந்தியைக் கற்றுக்கொள்ளும் படியும்' தமிழக மக்களை வேண்டிக் கொண்டார்இந்துஸ்தானியைஎல்லோருக்கும்

**பொதுவான தேசிய மொழியாக'** காந்தி ஏற்றுக் கொண்டிருந்தார். இக்காலத்திய படைப்புகளைக் காணும் பொழுது இதற்கு காந்தி குறிப்பிட்ட காரணங்களில் முக்கியமானவை!

1) இந்தி, இந்திய மக்களில் பெரும்பான்மை மக்களால் பேசப்படும் மொழி

2) இந்தி, பயில்வதற்கு எளிதான மொழி.

3) இந்துக்களின் இந்தியும் முசுலீம்களின் உருதும் கலந்த இந்துஸ்தானி, இந்து–முசுலீம்களின் ஒற்றுமைக்கு வழிவகுக்கும்.

**எண்ணிக்கையே தீர்மானிக்கிறது** என்ற முடிவின்படி இந்திக்கு இங்கு மரியாதை கொடுக்கப்பட்டுள்ளது. 1921 ஆம் ஆண்டுக் கணக்கின்படி இந்தி பேசுவோர் தொகை 12.8 கோடி மக்களாகவும், இந்தியை விளங்கிக் கொள்வோர் தொகை 8 கோடி மக்களாகவும் இருந்தனர் என அறிகிறோம். வங்காளி பேசுவோர் தொகை 5.3 கோடி மக்களாக இருந்தனர் எனவும் அறிகிறோம். எண்ணிக்கை மட்டுமின்றி, இந்துஸ்தானி மூலம் **இந்து–முசுலீம்கள் ஒற்றுமையைக்** கட்ட முடியும் என்ற நோக்கம் முதன்மையாகிறது. வடமொழிச்சொற்களைப் பயன்படுத்தி இந்துக்கள் எழுதும் நாகரி வரிவடிவமும் பாரசீகச்சொற்களைப் பயன்படுத்தி முசுலீம்கள் எழுதும் உருது வரிவடிவமும் இந்து முசுலீம் சமயத்தினரிடையே ஒரு கலாச்சார இணைவைக் கொடுக்கும் எனக் காந்தி நேரு, ஆசாத் போன்றோர் நம்பினர். அனைத்திந்தியக் கட்சியொன்றில் பயன்படுத்தப்படும் ஒரு பொதுமொழியை உருவாக்குவதில் எண்ணிக்கையும் இருசமயத்தினர் ஒற்றுமையும் முதன்மையான காரணங்களாக முன்வைக்கப்பட்டன. 1919க்குள் நாட்டில் எழுந்த மக்கள் திரள் இயக்கத்தின் **ஜனரஞ்சக ஈர்ப்புத்** (populist) தேவையாகவும் இது காணப்படுகிறது. அதே நேரத்தில் அனைத்திந்தியக் கட்சியில் நேரு, பிரசாத் போன்ற இந்திபேசும் தலைவர்களும் காந்தி, பட்டேல் போன்று இந்திக்கு ஆதரவான வட பகுதித்தலைவர்களும் காங்கிரசின் மொழிக் கொள்கையை உருவாக்குவதில் தலைமைப்பாத்திரம் ஏற்றனர். அதாவது **வட இந்தியத் தலைவர்களே தலைமைப் பாத்திரம் வகித்தனர்.**

இதற்குரிய தேவை காங்கிரசுக்குள்ளிருந்து மட்டும் எழவில்லை. முதல் உலகப் பெரும் போருக்குப் பின் ஏகாதிபத்தியம் வழங்கிய பொருளாதாரச் சலுகைகளைப் பயன்படுத்தி இந்தியப்பகுதிகளில்உள்ள தரகு முதலாளி கள் தம்தொழில்களைப் பெருக்கினர். ஏற்கெனவேஇந்தி யாவின் வடமேற்குப்பகுதிகளில் (மராட்டியம், குசராத்) முன்னேறியிருந்த பார்சி-பனியா-பிராமண முதலாளிக ளுடன் வடகிழக்குப் பகுதிகளில் இதுவரை தரகுவணி கர்களாக இருந்த மார்வாரி முதலாளிகள் தொழில் துறையில் இறங்கினர். ஆலைத் தொழில், வங்கித் தொழில், இன்சூரன்சு நிறுவனத் தொழில், ஏற்றுமதி—இறக்குமதி வாணிபம் ஆகியவற்றில் இறங்கிய பார்சி—பனியா—பிராமண—மார்வாரி முதலாளிகள் வட இந்தி யப்பகுதிகளில் மட்டுமின்றி, தென்னிந்தியப்பகுதி களிலும் இத்தகைய தொழில்களில் மூலதனமிட்டனர். அனைத்திந்தியத் தொழில் மயமும் அனைத்திந்திய சந்தையும் தோன்றிய காலத்தில் அவற்றுக்கான பல தேவைகளுள் ஒன்றாக ஒரு பொது மொழி அவசியப் படுகிறது. இங்கு நாம் குறிப்பிடும் வட இந்திய முதலாளிகள்எவரும் இந்தி பேசுகின்ற மாநிலங்களுக்கு உரியவர்களோ இந்தியைத் தாய் மொழியாகக் கொண் டவர்களோ அல்லர். இன்றைக்குக் கூட பெருமுதலாளி களின் பட்டியலை மொழி அடிப்படையில் கண்டால் இதுவே உண்மையாக இருக்கும். இத்தகைய தரகு முதலாளிகள் வடஇந்தியப்பகுதியில் அதிகமாகப் பேசக் கூடிய ஒரு மொழியைத் தம் சந்தை மொழியாக மக் களிடத்தில் கொண்டு செல்லவிரும்பிய பொழுது அவர் களுக்கு இந்தி பயன்பட்டது. வட இந்தியத் தரகுமுத லாளிகளின் இத்தகைய ஒருதேவையை நிறை வேற்றும் போக்கிலும் காங்கிரசு தன் மொழிக் கொள்கையை அமைத்துக்கொண்டிருந்தது என்பது கவனிக்கத்தக்கது. 1925 கான்பூர் மாநாட்டில், காங்கிரசுக் கூட்டங்களில் ஏற்பட்ட மொழிச்சிக்கலுக்குத் தீர்வாகஅதன் சட்டத்தின் 33ஆவது பிரிவு திருத்தப்பட்டது. அது பின் வருமாறு:

1) அனைத்திந்திய நிகழ்ச்சிகள் இந்துஸ்தானியிலே நடத்தப்படும். இந்துஸ்தானி தெரியவில்லையெனில் ஆங்கிலம் அல்லது ஏதேனும் வட்டார மொழி பயன்படுத்தப் படலாம்

2) மாகாணக் காங்கிரசு நிகழ்ச்சிகள் 'மாகாண மொழியில் நடத்தப்படும் இந்துஸ்தானியும் பயன்படுத்தப் படலாம்.

மேல்பார்வைக்கு மிகவும் நெகிழ்ச்சியான நடைமுறையாகத் தோன்றும் இந்தக் கொள்கையில் இந்துஸ்தானியின் மேலாதிக்கத்தைக் காணமுடிகிறது. மேலும் இந்திய மொழி எதிலாவது ஒன்றில் பழக்கப்பட்டிருந்த காங்கிரசுக் காரர்களுக்கு ஆங்கிலத்தில் பேசுவதற்குரிய வாய்ப்பும் தரப்பட்டிருப்பது, ஆங்கிலத்தின் ஆதிக்கத்தையும் தெரிவிக்கிறது. நேரு, இராசாசி போன்றோர் ஆங்கிலத்தையும் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்புக்காக இம்மாநாட்டில் வாதிட்டமைகுறிப்பிடத்தக்கதாகும் காங்கிரசு அனைத்து தேசிய இனங்களின் கூட்டியக்கம் என்பதை ஏற்றுக் கொண்டால், இத்தீர்மானம் தேசிய இனங்களின் சமத்துவத்தைப் புறக்கணித்து விட்டது என்பதை எவ்வித தயக்கமின்றியும் குறிப்பிடலாம். இம்மாநாட்டுக்கு முந்திய பெல்காம் மாநாட்டில்(1924), இந்தியாவின் மாநில, மத்திய ஆட்சிமொழி குறித்துக் காந்தி உரையாற்றினார்.

> 'ஒருகுறிப்பிட்ட காலத்திற்குள் மாநிலங்களில் நிர்வாகம் அனைத்திலும் வட்டார மொழியே ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும். நாட்டின் தலைமை நீதிமன்ற மொழியாக இந்துஸ்தானி இருக்க வேண்டும். மத்திய அரசாங்கம், மத்திய சட்டசபை ஆகியவற்றின் மொழியாக இந்துஸ்தானி இருக்க வேண்டும். அனைத்துலகத் தொடர்புக்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படவேண்டும்.

உலகத்துக்கு ஆங்கிலம்; இந்தியாவுக்கு இந்துஸ்தானி; மாநிலத்துக்கு மாநில மொழி என்ற மூன்றடுக்குமொழிக் கொள்கை இந்தியாவின் ஆட்சிமொழிக்கொள்கையாக முன்வைக்கப்பட்டது. மேலும் இம்மாநாட்டில் இந்தியை இன்னும்பத்தாண்டுகளுக்குள்பொதுமொழியாகஉயர்த்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு அதற்குகந்த வகையில் எல்லாத் தொடக்கப் பள்ளியிலும் இந்தியை இரண்டாவது கட்டாயப்பாடமாகக்கற்றுத்தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. . காந்தியின் தேசியப்

புனர் நிர்மாணத்திட்டத்தில் தென்னிந்தியாவில் இந்தி மொழியைப் பரப்புதல் ஓரம்சமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. இதன் அடிப்படையில்சென்னை மாகாணத்தில் **சத்திய மூர்த்தி, திரு.வி. கலியாண சுந்தரனார்** (இனி திரு.வி.க.,). **இராசாசி** ஆகியோர் இயங்கினர். இந்தி பொதுமொழியாவதை சத்தியமூர்த்தி ஆதரித்து, இந்தியை இரண்டாவது கட்டாயப் பாடமாக வைக்கு மாறு கேட்டுக்கொண்டார் (சென்னை கல்வி மாநாடு, இந்து, 12.6.1924). திரு.வி க, தலைமை ஏற்ற தமிழ் மாகாண மாநாட்டில் (காஞ்சிபுரம், நவம்பர், 1925) தமிழ் இளைஞர்கள் மிக விரைவில் இந்தி கற்றுக் கொள்ள வேண்டும் எனத் தீர்மானம் இயற்றப் பட்டது (இந்து 26.11.1925) இந்த மாநாட்டின் பொழுது வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் குறித்து ஏற்பட்ட முரண்பாட்டில் பெரியார் மாநாட்டிலிருந்து வெளியேறினார். பெரியார் காங்கிரசில் இருக்கும் பொழுது இந்தி வகுப்புகளை நடத்துவதற்கு உறுதுணையும் உற்ற நிதியும் நல்கியிருந்தார் என் அறிகிறோம். தென்னிந்தியாவில் இந்தி கற்றுத்தரும் நிலையங்கள் 400 இருந்தன (இந்து, 15-4-1929) இவற்றில் பயின்று (1918-1930) தேர்வு பெற்றோர் 10000 என்ற எண்ணிக்கையில் இருந்தனர். சென்னை மாகாணத்தில் கல்லூரிகளிலும் இடைநிலைப் பள்ளிகளி லும்(SecondarySchool-6ஆம் வகுப்பு முதல்-அப்பொழுது இதை I Form-முதல் படிவம் என்பார்கள்) இந்தியை ஒரு மொழியாகக் கற்றுத் தரும்படி சென்னை மாகாணக் காங்கிரசு மாநில அரசுக்கு மனு கொடுத்தது (10.4.24 இந்திய அலுவலர் தேர்வுக்கழகத்தின் (Indian public Service Commission) உறுப்பினராக இருந்த **விசயராகவாச்சாரியார்**, சென்னைப் பல்கலைக் கழகப் பேரவை (Senate) உறுப்பினராக இருந்த சத்திய மூர்த்தி ஆகியோர் இந்தியை ஒரு மொழியாகக் கற்றுத்தர வேண்டுமென்று மிகவும் வலியுறுத்தினர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1923 இல் மெட்ரி குலேசன் வகுப்பில் இரண்டாவது விருப்ப மொழியாக (Optional Second Language) இந்தி அறிமுகப் படுத்தப்பட்டது. 1924 இல் இன்டர் மீடியட் Intermediate) வகுப்பிலும் 1929 இல் பட்ட வகுப்பிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. பள்ளி இறுதி வகுப்பில் (S.S.L.C) இந்தி ஒரு விருப்ப மொழியாகச் சேர்க்கப்

பட்டது (அரசு ஆணை எண் 640; கல்வித்துறை, 15-5 27). இதன்படி பள்ளி இறுதி வகுப்பு A, B, C என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

A: ஆங்கிலம், இரண்டாவது மொழி; கணக்கு, அறிவியல், வரலாறு, புவியியல்.

B மற்றும் C: இவற்றுடன் விருப்பப் பாடங்கள். C பிரிவில் இந்திமொழி.

இவற்றில் A பிரிவிலும் இந்திமொழியை இரண்டாவது மொழிகளில் ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளக் கோரிக்கை விடுக்கப்பட்டது (இந்து 10,4 1929) இந்தி மொழியை இங்கு அறிமுகப்படுத்த வேண்டும் என காங்கிரசு வேண்டிய காலத்தில் சென்னை 'மாகாணத்தில் கல்வித் துறையை நீதிக்கட்சி நிர்வகித்தது என்பதையும் நீதிக் கட்சியின் கல்விப் பொறுப்புக் காலத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் பெரியாரின் ஆதரவு பெற்ற **டாக்டர் பி. சுப்பராயன்**, மாகாண முதல்வராக இருக்கும் காலத்தில் பள்ளி இறுதி வகுப்பிலும் இந்தி அறிமுகமாயிற்று என்பதையும் மனங்கொள்ளுதல் அவசியம்.

இந்நேரத்தில் இந்திய நாட்டுக்கு மாதிரி அரசியல் சட்டத்தை உருவாக்க **மோதிலால்நேரு** வின் தலைமையில் காங்கிரசு ஒரு குழுவை அமைத்தது, ஏகாதிபத்தியத்துக்குள் அடங்கிய குடியேற்ற நாட்டுத்தகுதியை முன் வைத்த இக்குழு அடிமை மனநிலைச்சட்டம், மொழிக் கொள்கையைப் பொறுத்தும் தனது கருத்துகளைக் குறிப்பிட்டது. மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்படுவதை இக்குழு ஒப்புக் கொண்டது.

1) குடியேற்ற நாட்டின் மொழியாக நாகரி அல்லது உருது எழுத்துகளைக் கொண்ட இந்துஸ்தானி இருக்கும். ஆங்கிலமொழியை உபயோகிப்பது அனுமதிக்கப்படும். இந்துஸ்தானியைப் பொது மொழியாக (Common Language) ஆக்குவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்

2) மக்களால் விளங்கிக் கொள்ளத்தக்க ஒரு மொழியில் நாட்டின் அரசியலை நடத்திச் செல்ல வேண்டியிருப்பது இன்றியமையாததாகையால் மாநிலங்

களைப் பொறுத்து 'மாநிலமொழிகளே பயன் படுத்தப்பட வேண்டும்.

இது, குடியேற்ற நாட்டின் மொழியாக 'ஆங்கிலம் இன்னும் சிறிது காலத்திற்குத் தொடர்ந்து பயன் படுத்தப்பட வேண்டும் என உறுதியாகக் குறிப்பிட் டுள்ளது. மோதிலால் நேரு குழுவின் மொழிக்கொள்கை காந்தியின் பெல்காம் மாநாட்டு (1924) உரையை அடிப்படையாகக் கொண்டிருந்த பொழுதினும்' வெளி உலகத்தொடர்புக்கு மட்டுமே ஆங்கிலத்தைப்பயன் படுத்த வேண்டும் என்றும் இந்தியாவின் அரசாங்க மொழியாக இந்துஸ்தானி மட்டும் இருக்க வேண்டும் என்றும் காந்தி குறிப்பிட்டதற்கு விலகலாக(deviation) அமைந்துள்ளது. இந்துஸ்தானியைப் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு சிந்தனைப் போக்கும் இந்துஸ் தானியுடன் தொடர்ந்து ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு சிந்தனைப்போக்கும் காங்கிரசின் வட இந்தியத் தலைமையிடம் இருந்தன என்பது தெளிவு, தென்னிந்தியக் காங்கிரசுத் தலைமைக்கு எந்த விதத்திலும் ஒரு தீர்மானகரமான பங்கு இல்லையென்றாலும் இந்துஸ்தானியின் ஒட்டு மொத்த ஆதிக்கத்துக்கு மாற்றாக இந்துஸ்தானியுடன் கூடிய ஆங்கில மொழியைப் பயன்படுத்துதல் என்ற நிலையை ஆதரித்தனர்.

வடஇந்தியத் தலைமையிலோ தென்னிந்தியத் தலைமை யிலோ இந்துஸ்தானியை இந்தியாவின் நிர்வாக மொழி யாகவும் பொதுமொழியாகவும் ஆக்குவதற்கு யாருக்கும் எவ்வித மறுப்பும் இல்லை. இந்துஸ்தானியுடன் கூட தொடர்ந்து ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதில் வட இந்தியத் தலைமைக்குள் முரண்பாடு இருந்தது. அனைத்திந்தியத் தன்மையை ஒப்புக்கொண்ட தென் னிந்தியத் தலைமை வடஇந்தியத் தலைமையுடன் எவ்விதத்தும் போட்டியிட இயலாத தன் கீழான நிலையை அறிந்து, ஆங்கிலத்தை ஆதரிக்கக் கூடிய வட இந்தியத் தலைமையின் ஒருபகுதியுடன் தன்னை இணைத்துக் கொண்டு, இன்னொரு பகுதியுடன் **அரைமனது சமரசம்** half-hearted compromise) செய்து கொண்டது, இந்தியாவின் விடுதலை, கண்களுக்குப்

புலப்படாத காலத்திலேயே 'புதிய இந்தியாவின்' அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட பொழுது, மொழிக் கொள்கையில் இருந்த இத்தகைய வேறுபாடுகளும் சமரசங்களும் தொடர்ந்து நீடித்தன. அனைத்திந்தியாவைப் பொறுத்த அளவில் மத்திய நிர்வாக மொழி, பொது மொழி என்ற கருத்துகளையும் மொழிவாரி மாநிலங்களில் பயன்படுத்தப்படும் மொழி குறித்த கருத்தையும் நாம் மோதிலால் குழுவின் அறிக்கையில் காண்கிறோம். மொழிவாரி மாநிலங்களில் அந்தந்த மாநிலமொழிகளே அனைத்து நிலைகளிலும் பயன்படுத்தப் படவேண்டும் என்று குறிப்பிடும் பொழுது தேசிய இனங்களின் மொழிகளுக்கு உரிய நகுதி தரப்பட்டுள்ளது; அன்றைய சூழலில் ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்திய பொழுது இதுமுழு முற்றான ஜனநாயகத் தேவையாகும். அதாவது மாநிலங்களில் மாநிலமொழிகள் ஆட்சி செலுத்தும் பொழுதே அவை ஜனநாயகத்தைப் பெற்றுள்ளன என்று பொருளாகும். **அத்தகைய நிலை இன்றுகூட இல்லை** என்பதைப் பின்னால் காண்போம். அனைத்திந்திய நிர்வாக மொழியாகவும் பொது மொழியாகவும் இந்துஸ்தானியை மட்டும் தேர்ந்தெடுப்பது, இந்திய தேசிய மொழிகள் மீதான **இந்துஸ்தானியின் ஆதிக்கத்தையும்** இந்துஸ்தானியுடன் கூடிய ஆங்கிலத்தைத் தேர்ந்தெடுப்பது இந்திய தேசிய மொழிகள் மீதான **இந்துஸ்தானி மற்றும் ஆங்கிலத்தின் ஆதிக்கத்தையும்** வெளிப்படுத்துகின்றன என்பதில் ஐயமில்லை. **ஒற்றை ஆதிக்கமா** அன்றி **இரட்டை ஆதிக்கமா** என்ற நிலைபாடுகளில் ஏதேனும் ஒன்றைத்தேர்ந்தெடுத்துத் தான் அனைத்திந்திய அரசியலை நகர்த்தித்திர வேண்டுமா என்பது தான் அன்றைய வரலாறு நமக்கு எழுப்பியிருக்கும் கேள்வி; இன்றைக்கும் உள்ள கேள்வி. ஒற்றை ஆதிக்கமாயினும் இரட்டை ஆதிக்கமாயினும் இந்தியல்லாத ஏனைய இந்திய மொழிகள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலாகவே அது 'இருக்கிறது. மொழி வழியாக தேசிய இனங்களுக்கு தனிமாநிலத் தகுதி கொடுக்கும் மோதிலால் நேருவின் அரசியல் சட்டத்தில், இந்தி மொழியின் மேலாண்மையை ஒப்புக் கொள்வதன் வழியாக ஏனையமொழிகளுக்கு சமதகுதி மறுக்கப்பட்டுவிட்டது. பல்வேறு தேசிய இனங்கள் கலந்துவாழும் வரலாற்றுச் சூழலை மிகக் குறுகிய

ஆண்டுகள் மட்டுமே அதுவரை பெற்றிருந்த நேரத்தில், தேசிய மொழிகளுக்கு இடையில் சமத்துவத்தைக் கவனமாகப் பேணிப்பாதுகாத்துக் கொண்டு செல்ல வேண்டிய ஒரு நிதானமிக்க வழியை மோதிலால் நேருவின் அறிக்கை கையாளவில்லை. **இந்தியா என்பது பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு**(a country consisting of many nationalities) என்கிற அரசியல்யதார்த்தத்தை முற்றாகக் கணக்கிலெடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இந்தியா என்பது **பலமொழிகளைப் பேசும் இந்தியர்களைக் கொண்ட தொகுப்பாகவே** அந்தக் குழு **கணக்கி**லெடுத்துக் கொண்டது. ஆகவேதான் வெறும் எண்ணிக்கை அடிப்படையில் மட்டுமே ஒரு மொழியைத் தேர்ந்தெடுத்தது. எண்ணிக்கை அடிப்படையில் மட்டும் தீர்மானிக்கக் கூடிய விஷயமாக இது என்றைக்கும் இருக்கப் போவதில்லை யென்றாலும், அவ்வாறு தீர்மானிக்கப்பட்டதானது **கவர்ச்சி வாதத்தில்** (populism) அடங்கும். இந்திமொழி பேசும் மக்களை ஈர்ப்பதற்கான கவர்ச்சிவாதம்ஆகும், இந்திமொழியினர் அன்று தம் மொழியை ஏனைய மொழிகள்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கேற்ற வகையில் சமூகப் பொருளியல் ஆதிக்கத்தைப் பெற்றிருக்கவில்லை. இன்றும் இதுதான் நிலை. ஒரு மொழியின் ஆதிக்கம் என்பது அந்த மொழியைப் பேசுபவர்களின் ஆதிக்கத்தைக் குறிக்கிறது என்ற பொதுவான உண்மைக்கு இந்நிலை விதிவிலக்காக அமைந்துள்ளதைக் காண்கிறோம். மேலும் இந்து முசுலீம் சமயத்தினரிடையே ஒற்றுமைக்காக இந்துஸ்தானியைக் கொண்டுவர நினைத்தல், **சமய அடிப்படையில் அரசியலை அணுகுவதற்குரிய வரையறையை வகுத்துக் கொடுக்கிறது**. மேலும் நாகரி எழுத்தை இந்திபேசும் இந்துக்களும் உருதுஎழுத்தை வட இந்திய முசுலீம்களும் பயன் படுத்தினர். தென்னிந்திய முசுலீம்கள் பெரும்பகுதியினர் உருது எழுத்தை பயன்படுத்துவதில்லை. எனவே இந்த இன்னும் நுணுகிக் கண்டால் **வடஇந்தியப் பகுதிகளில்** இந்து- முசுலீம் சமய ஒற்றுமையைக் கருத்தில் கொண்டது, இத்தகைய எழுத்துக்கலவையால் சமய ஒற்றுமையைக் கட்டிவிட இயலாது என்பதைப் பின்னாளில் வரலாறு நிரூபித்தது, எண்ணிக்கைப் பெரும்பான்மையும் சமய

ஒற்றுமை நோக்கமும் கலாச்சார, வரலாற்று வேறுபாடுகளைக் கொண்ட பல்வேறு தேசிய இனங்கள் ஒரு நாட்டின் நிர்வாக மொழியாகவும் பொதுமொழியாகவும் ஒருமொழியைத் தேர்ந்தெடுப்பதற்குரிய போதுமான காரணங்களாக இல்லை; அதோடு அவை பொருத்தமான காரணங்களாகவும் இல்லை அனைத்து தேசிய இனங்களும் தம் கூட்டமைப்புக்குரிய ஒரு நிர்வாக மொழியைத் தேர்ந்தெடுப்பதில் சுயமாகவும் சமமாகவும்பங்கேற்றனஎன்றுசொல்லவோ விருப்பார்ந்த முறையில் இந்த முடிவுக்கு வந்தன என்று சொல்லவோ முடியாது. இது, காங்கிரசில் உள்ள வட இந்தியத் தலைமையின் அரசியல் தேவையிலிருந்து மேலிருந்து வலுக் கட்டாயமாகத் திணிக்கப்பட்ட ஒரு முடிவாகும். இதை முற்றாக எதிர்க்கும் அரசியல் ஆண்மையற்ற தென்னிந்தியத் தலைமை இந்துஸ்தானியுடன் ஆங்கிலம் என்பதை முன்வைத்து இவர்களுடன் சமரசம் செய்து கொண்டது! இந்நிலையில் திராவிட இயக்கத்தின் மொழிக் கொள்கையைக் காண்பது பொருத்தமாயிருக்கும். அதற்குமுன் மொழி குறித்து அந்த இயக்கத்தின் கருத்துகளைத் தொகுத்துக் கொள்வோம்.

## 4

நீதிக்கட்சி முதல் அ.இ. அ.தி.மு.க வரையிலான அமைப்புகளைத் திராவிட இயக்கம் என்ற பொதுவான அடைப்புக் குறியில் செறிக்கும் பொழுது, அனைத்து அமைப்புகளின் மொழிக் கொள்கை பற்றி விரிவாகக் காணவேண்டியதுதான் முறையான ஆய்வாகும். அத்தகைய நீண்ட, விரிவான ஆய்வை நாம் இச் சிறு நூலில் செய்ய இயலாது. எனினும் ஓரளவு நிறைவு செய்ய நாம் முயலுவோம்.

திராவிட இயக்கம் ஓர் அழுத்தக்குழு என்றவிதத்தில் அதன் செயல்பாடுகள் இரண்டு வழிமுறைகளில் அமைந்தன. அவை:

1) தேர்தலில் நேரடியாகப் பங்கேற்று, அரசியல் அதிகாரத்தை நேரடியாகப் பயன்படுத்துதல்.

2) தேர்தலில் நேரடிப்பங்கேற்பின்றி, வேட்பாளர்களை ஆதரித்து, அரசியல் அதிகாரத்தை மறைமுகமாக (indirect) பயன்படுத்துதல்.

இவை இரண்டுமே பாராளுமன்ற வாதத்தை அடிப்படையாகக் கொண்டவை. நீக்கட்சி, தி.மு.க., அ இ. அ.தி.மு.க ஆகிய கட்சிகள் தேர்தல்களில்பங்கேற்று அரசாங்கத்திலும் பொறுப்பேற்றிருந்தன. இவற்றில் நீதிக்கட்சி 1942 க்குப் பின் அரசாங்கம் அமைப்பதில் ஒத்துழைக்க மறுத்தது. 1949 இல் தொடங்கப்பட்ட தி.மு.க., 1956 வரை தேர்தலில் நிற்கவில்லை. எனினும் தி.மு.க., தொடங்கப்படுதலுக்கு முன்னரே அண்ணாதுரையிடம் தேர்தலில் பங்கெடுக்கும் விருப்பத்தைக் காணமுடியும். பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் பெரியாரின் தலைமையை முழுவதுமாக ஏற்ற (1939க்குப்பின்) நீதிக்கட்சியும் திராவிடர் கழகமும் (1944) தேர்தல் பங்கேற்பை விரும்பவில்லை. பெரியார் தொடங்கிய தென்னிந்திய சமதருமக்கட்சி (1933) தேர்தல் பங்கெடுப்பை விரும்பியிருப்பினும் அது யதார்த்தமாகவில்லை. ஆனால் பெரியார் எல்லாத்தேர்தல்களிலும் பிரச்சாரம் செய்து அரசாங்கப்பொறுப்பேற்பவர்களை ஆதரித்துள்ளார். காங்கிரசிலிருந்து வெளியேறியபின் இதுவே அவரது அரசியல் தந்திரப் போக்காக இருந்தது. சட்டபூர்வமான சீர்திருத்தங்களின் மூலம் மட்டுமே சமூக நன்மையைக் கொண்டுவர முடியும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்த பெரியாரிடமிருந்து அண்ணாதுரையின் சித்தாந்தம் அடிப்படையில் மாறிடவில்லை. இருவருமே பாராளுமன்றவாதத்தை ஒப்புக்கொண்டவர்களெனினும் பெரியார் வெளியிலிருந்து கொண்டு அரசாங்கத்தைப் பயன்படுத்தவும் அண்ணாதுரை உள்ளிருந்து கொண்டு அரசாங்கத்தைப் பயன்படுத்தவும் எண்ணினர். இத்தகைய வேறுபட்ட செயல்முறைகள் இருவரின் கருத்துகளையும் பாதித்துள்ளன- மொழிக் கொள்கை உட்பட.

இந்தப்பகுதியில் திராவிட இயக்கத்தின் இரண்டு

போக்குகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பெரியார், அண்ணாதுரை ஆகியோரின் மொழிபற்றிய கருத்துகளை மட்டுமே காண முயல்வோம். அவர்களின் போராட்டங்களையும் போராட்ட வடிவங்களையும் பின்னர்க் காண்போம்,

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் **பொற்கோ** அவர்கள் **பெரியாரின் மொழிக் கொள்கை** என்ற தலைப்பில் ஒருகட்டுரை எழுதியுள்ளார் (**புலமை**, டிசம்பர், 1979). பெரியாரின் படைப்புகளில் காணப்படும் கருத்துகளைத் தொகுத்துக் கண்டால் பல இடங்களில் **தொடர்ச்சியின்மையைக்** (inconsistency) காணமுடிகிறது. எனினும் இந்த அம்சத்தில் பெரியார் தம் கருத்துக்களை வெளிப்படையாக— எவ்வித ஒளிவு மறைவுமின்றி— முன்வைக்கின்றார்; மொழிபற்றிய அவரது கண்ணோட்டத்தில் அறிவியல் தன்மை (Scientific) உள்ளது.

தாய் மொழியின் மீது பற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் குறித்து !924 இல் காங்கிரசில் தலைவராக இருக்கும் பொழுது காங்கிரசு மாநாட்டுத் தலைமையுரையில் (1924 திருவண்ணாமலை வரை) பெரியார் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய பற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை' என இன்னோரிடத்தில் (ஈ. வெ. ரா. **சிந்தனைகள்**, தொகுப்பு, II. பக்.986) குறிப்பிட்டதோடு அத்தகைய பற்றுக் கொள்ளுதலை **தாய்ப்பால் பைத்தியம்** என்றும் வருணிக்கிறார். (மேற்படி தொகுப்பு, பக். 990). இது தொடர்ச்சியின்மையை மட்டுமின்றி எவ்வித ஒளிவு மறைவுமின்றி கருத்துகளைச் சொல்லும் பெரியார் முறையியலையும் நமக்கு அறிமுகப் படுத்துகிறது. 1938 இந்தி எதிர்ப்புப் போரின் பொழுது பெரியார் நடத்திய **குடிஅரசு**, கருத்துப்படங்களின் மூலமாகவும் உணர்வைத் தூண்டும் முழக்கங்கள் மூலமாகவும் ... தன்பங்கை ஆற்றியது.

ஓலம்! ஓலம்!!
ஓலம்!!!

ஓ! தமிழனே! தமிழ் அன்னை உன்
கடமையைச் செய்ய அழைக்கிறாள்
(குடிஅரசு 29.8.37).

தமிழன்னை மானபங்கம்! தமிழ்த்தாயின் துகிலை ஆச்சாரியார் உரிகிறார் (குடிஅரசு 19.12 37)

தமிழர் போர் மூண்டுவிட்டது.
எதற்காக?
தமிழுக்காக
தமிழர் தன்மானத்துக்காக!!
தமிழர் அறிவு கலை வீரம் ஆகியவற்றுக்காக.

(குடிஅரசு 29.5.38)

ஒரு சட்டபூர்வமான போராட்டத்தில் வெகுவான கிளர்ச்சி மதிப்புகளைக் (agitative value) கொண்ட **குடிஅரசு** வாசகங்கள் தமிழுக்காகப் போராட வேண்டிய தேவையையும் தமிழ்த் தேசிய இனத்தின் கலாச்சார சுயமரியதைக்காகப் போராட வேண்டிய தேவையையும் உணர்த்துகின்றன. ஆனால் பெரியார் பின்னாளில் தன் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை சுயமதிப் பீடு செய்யும் பொழுது குறிப்பிடுகின்றார்:

''எனது இந்தி எதிர்ப்பு என்பது **இந்தி கூடாது என்பதற்கோ தமிழ் வேண்டும்** என்பதற்கோ **அல்ல ..... ஆங்கிலமே பொது மொழியாக** அரசாங்க மொழியாக தமிழ்நாட்டு மொழியாக தமிழன் வீட்டுமொழியாகஆகவேண்டும் என்பதற்கேயாகும், (விடுதலை 27-1-1969)

தமிழர் போர், தமிழுக்காக, தமிழர் தன்மானத்துக்காக, தமிழர் அறிவுகலை வீரம் ஆகியவற்றுக்காக என்ற நிலை (குடி அரசு 29.5.38) மாறி, **தமிழர்போர், ஆங்கிலத்துக்காக** என்ற தன் உள்ளக் கிடக்கையை பெரியாரைத் தவிர வேறு எவரும் எவ்வித ஒளிவு மறைவுமின்றிச் சொல்ல முடியாதெனினும், தாளமுத்துவும் நடராசனும் **தம் வீட்டுமொழியாக ஆங்கிலம் ஆக வேண்டும் என்பதற்காகவா** தம்மைத் தியாகம் செய்து கொண்டனர் என்று நினைக்கும் பொழுது, மொழியுணர்வை அரசியல்வாதிகள் எந்த விதத்தில் சந்தர்ப்பவாதக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர்என்பதை நம்மால் வேதனையோடு குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1965 இல் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்த

பொழுது பெரியாரின் நிலைபாட்டைப் பின்னால் காண்போம். இதற்கு ஊடாகவே மொழிபற்றிய அறிவியல் கண்ணோட்டத்தைப் பெரியாரிடம் காண்கிறோம்.

> மொழியானது அந்தந்த நாட்டுச் சீதோஷ்ணத்திற்கு ஏற்பவும் அவரவர்களுக்கு வேண்டிய வாழ்க்கை, பழக்க, வழக்கப்பண்பு, குறிப்புகளுக்கேற்பவும் அமைந்துள்ளது. ஒருவனுடைய கருத்தை மற்றொருவனுக்குத் தெரிவிக்க மொழி முக்கிய சாதனமாக இருந்து வருகிறது...எந்த ஒரு மொழியின் சிறப்பும் பெரும்பாலும் அம்மொழியின் மூலம் அறியக்கிடக்கும் கருத்துகளைப் பொறுத்துத் தான் இருக்கும். (ஆணைமுத்து தொகுப்பு II. பக். 964–966)

மொழியின் தோற்றத்தையும் சிறப்பையும் யதார்த்தமாகக் காணும் பெரியாரின் அறிவியல் பார்வையில் வேற்றுமொழிச் சொற்களைக் கையாளுவதற்குரிய முறையையும் குறிப்பிடுகின்றார். ஒருமொழியில் இல்லாத கருத்தை வேறொரு மொழியிலிருந்து ஏற்க வேண்டிய பொழுது, புதிய வார்த்தை 'கருத்தைத் தெளிவாக விளக்கம் செய்வதாகவும் சுலபமாக உச்சரிக்கக் கூடியதாகவும்' இருக்க வேண்டும் என்கிறார். (மேற்படி நூல், பக். 972), மொழித் தூய்மையைவிட கருத்துத்தெளிவையும் சுலபமான உச்சரிப்பையும் பெரியார் விரும்பியுள்ளார். இதனால் 'ஆங்கில வார்த்தைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளலாம்' என்பதும் பெரியாரின் கருத்து. இந்தவிதத்தில் **மொழியின் உள்ளடக்கத்துக்கு** அது சொல்லும் பொருளுக்கு **முதன்மை தந்துள்ளார்** ஆங்கிலக் கலப்பையும் வடமொழிக் கலப்பையும் இதன் வழி அணுகுவதால் ஆங்கிலக் கலப்பின் வழி தமிழ் நவீனத்துவம் பெறமுடியும் என்றும் வடமொழிக் கலப்பின் வழி தமிழ் பிற்போக்கான, சமயத்தகுதியே பெறமுடியும் என்றும் பெரியார் கருதுகின்றார் (மேற்படி நூல், பக். 970–971 அறிவியல் பாடநூல்களில் வடசொற்கள் கலந்திருப்பதைப் பெரியார் 1927 முதற்கொண்டே கண்டித்திருப்பதைக் காணமுடியும் (தீர்மானம் எண் 2/ 28.11.27 நெல்லைமாவட்ட சுயமரியாதை மாநாடு). மொழிக்

கலப்பை மறுக்காத பெரியார் வடமொழிககலப்பை மட்டும் மறுக்கிறார். இந்தவிதத்தில் அவரது இனவழிக் கண்ணோட்டம் ஓரளவு இங்கு செல்வாக்கு செலுத்துவதைக் காண இயலும். இந்தவிதத்தில் மொழிபற்றிய பெரியாரின் கருத்துகள், அடிப்படையில் சமூகவளர்ச்சிக் கண்ணோட்டம் கொண்டதாக விளங்கியது. (மொழியும் அறிவும் பக் 30–31) மனதில்பட்டதைப் பொதுவாகச் சொல்லுந்திறனும் விருப்பமும் கொண்ட பெரியாரின் இந்நிலைபாட்டுக்கு அண்ணாதுரையின் நிலைபாடு வேறானதாகும்.

அண்ணாதுரையைப் பொறுத்தவரை, தமிழ்மொழி எண்ணத்தை வெளியிடும் கருவியாக மட்டும் இல்லை. 'தமிழர்க்குத் தமிழ் மொழி, அவர் விரும்பும் ஓர் தனிச் சிறப்புள்ள வாழ்க்கை முறைக்கு வழிகாட்டி நிற்கிறது. எண்ணத்தை வெளியிடும் வெறும் கருவியாக மட்டும் இல்லை.' என எழுதியுள்ளார் (திராவிட நாடு,14.1. 1963). தமிழ் மொழியின் 'பழமை, இளமை, இனிமை முதலிய மேதக்க பெருமைகளையும் அம்மொழியின் கண் மிளிரும் ஒப்புயர்வற்ற விழுமிய கருத்துகளையும்' பற்றி நிரம்ப எழுதியுள்ளார். (அறப்போர், சி. என். அண்ணாதுரை. பக். 5). மொழிவழியாக தேசியக் கலாச் சாரத்தைக் கண்டடையக் கூடிய சூழல் கொண்ட தமிழகப்பகுதிகளில் தாய்மொழிப் பற்றைத் தாய் நாட்டுப் பற்றோடு இணைத்து எண்ணுகிறார்.

> தாய் மொழிப் பற்றே தாய் நாட்டுப் பற்று என்பதை உணராது தான்தோன்றித் தம்பிரான்களாய்த் தடுமாறித் திரியும் தமிழ் மக்கள்...

என வருந்துகின்றார். (மேற்படி நூல், பக். 8–9), இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்—என உவமிக் கின்றார் (மேற்படிநூல்.பக்.39) தேசிய இனத்தின் கலாச்சாரப் பாதுகாப்புக் கலனாகத் தமிழைக் காண்கிறார்.

> தமிழ் நாட்டு மூவேந்தர் போற்றி வளர்த்துக் காப் பாற்றிவந்த தமிழ்ப்பண்பை, தமிழ்க் கலாச் சாரத் தைக் கனகவிசயன். சந்ததியார் கெடுக்க முன் வந்து விட்டனர்...... தமிழனுக்கு இருப்பது உயர்

> தனித்தோள்கள். அவை தமிழ்காக்க வாள் ஏந்தத் தான் இருக்கின்றன. (மேற்படி நூல், பக் 40)

பெரியாரின் கருத்துகளில் இருப்பதைப் போன்று அண்ணாதுரையின் கருத்துகளில் மொழியின் தோற்றத்தைப்பற்றியும் தன்மைகளைப் பற்றியும் ஒருங்கிணைந்த பார்வையோ அறிவியல் கண்ணோட்டமோ இல்லை. மொழிக் கலப்பு குறித்து பெரியார் அணுகுமுறையிலிருந்தும் அண்ணாதுரை வேறுபட்டுள்ளார். மொழிக் கலப்பை அதன் கருத்தைவைத்து பெரியார் மதிப்பிட்டார். இத்தகைய கருத்துரீயான பார்வை இன்றி, மொழிக்கலப்பை 'இனிமை பெறுவதற்கான' அடிப்படையில் அண்ணாதுரை அணுகியுள்ளார். இது ஒரு கருத்தைச் சொல்லுகின்ற வடிவத்துக்கு முதன்மை கொடுக்கும் நோக்கிலிருந்து வருதலாகும். இது குறித்து அண்ணாதுரை எழுதியுள்ளார்.

> தமிழ் இனிமை பெற இரவல் எற்றுக்குப் பெற வேண்டும்? புள்ளிக் கலாபம் படைத்த மயிலுக்கு வான் கோழிச்சிறகாலான தோகை தரவேண்டுமா? கிளி அழகுபெற . அதற்குப் பச்சை வண்ணம் பூச வேண்டுமா? கேட்கவேண்டாம் தம்பி! கோபிப்பர்!

அண்ணாதுரையின் இந்தக் கூற்றிலேயே வேற்று மொழிச் சொற்கள் கலந்துள்ளன. (திராவிடநாடு 18.3.1956). இந்தக் கடிதத்திலேயே நிரம்ப வட சொற்களை 'இனிமை' கருதிப் பயன்படுத்துவதற்காக வருத்தப்படும் அண்ணாதுரை, மொழிக் கலப்புக்காகக் குறிப்பிடும் காரணம் மறுத்தற்குரியது. இந்தக் காரணத்தினாலேயே மொழிக் கலப்பும் தேவை என்றமுடிவிற்கு அண்ணாதுரை வருகின்றார்.

> கண்ணுக்கு மை இடுவது போல பிறமொழிகளைப் பயன் படுத்திக் கொள்ளலாம். மை அதிகமானால் கண்ணை அரித்து விடுகிறதே.... அது போலப் பிறமொழிகளை அதிகமாகக் கலப்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும். (அண்ணாவின் உவமைகள், பக்42)

உவமை என்பது அரை உண்மையைத் தெரிவிக்கும் என்ற விதத்தில் அண்ணாதுரையின் உவமை நயத்தை நாம் பாராட்டினாலும் மொழிக் கலப்புக்கான அரை

காரணத்தை நாம் ஏற்றுக் கொள்ள இயலாது. இங்கு பெரியார் குறிப்பிடும் காரணம், அறிவியற் கண்ணோட்டம் கொண்டதாக இருக்கிறது. பெரியார் ஒரு மொழியில் உள்ள கருத்துகளுக்கு (உள்ளடக்கத்துக்கு) முதன்மை தந்தார்; அண்ணாதுரை அதைத் சொல்கின்ற முறைக்கு (வடிவத்துக்கு) முதன்மை தந்தார்., அண்ணாதுரையின் பின்னால் அணி வகுத்த கூட்டத்துக்கான காரணத்தை இதன்மூலமாகவும் கண்டறிய இயலும், இந்த வேறுபாட்டைத் தமிழிசை இயக்கத்தில் இருவரது, வேறுபட்ட நிலைபாடுகளிலிருந்து காணஇயலும். கருநாடக இசை மேலோங்கிய சூழலில் தமிழ்த்தேசிய இன விழிப்புணர்வின் ஓர் அடையாளமாக தமிழிசை இயக்கம் அமைந்த காலத்தில் பெரியார் தமிழின் வழியாகப் பாடுவதை விரும்பிய போதும் பாடலின் பொருளில் முதன்மைக் கவனம் செலுத்தினார். தமிழிசை என்ற பெயரில் வழிபாட்டுப் பாடல்களை அவர் விரும்பவில்லை.

> பஜனைப் பாட்டுகள் தமிழில் இருந்தாலென்ன? தெலுங்கில் இருந்தாலென்ன? இந்தியில் இருந்தாலென்ன? அல்லது, ஜப்பான், ஜெர்மனி மொழிகளில் இருந்தாலென்ன? கடவுளுக்கு எத்த மொழியும்தெரியாது (அறிவின் எல்லை, பெரியார், பக். 248)

> இசையில் மொழிக்கு முக்கியமில்லை என்பது தவறு. மொழி இனிமை, முக்கியமானது. அம்மொழி தமிழ் மொழியாய் இருக்க வேண்டும் என்று சொல்வதால் அம்மொழிக்குப் பொருள் வேண்டாமா? அப்பொருளுக்குப் பயன் வேண்டாமா? அப்பயன் நாம் செய்யும கிளர்ச்சிக்கு-, குறிக்கோளுக்கு ஏற்றதாக— நலம்தரத்தக்கதாக இருக்க வேண்டாமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுகிறேன், (குடிஅரசு 29. 1. 1944).

இசையில் தமிழுக்கு மட்டுமின்றி, கருத்துக்கு பெரியார் முதன்மைநிலை கொடுத்தார்,, அண்ணா

துரை நிலை இதற்குச் சற்று வேறுபாடானது:

> தியாகராஜ பாகவதரின் பாடல்களைத் தெளிவாகக் கேட்கும் பொழுதே பொருட் சுவையை மக்கள் ரசிக்கும் விதத்திலேயே பாடுவது தான் முக்கிய மான காரணம். கே. பி. எஸ். செந்தூர் வேலாண்டி பாடும்பொழுது இன்ன விஷயமாகப் பாடப்படுகிறது என்று புரிந்து கொண்டு பூரிக்கின்றனர் (தமிழின் மறுமலர்ச்சி, [2] அண்ணாதுரை, பக்.81)

பக்திப் பாடல்களாக இருப்பினும் மக்கள் ரசிக்கும் விதத்திலும் புரிந்துகொள்ளும் விதத்திலும் தமிழில் பாடுதலை அண்ணாதுரை அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது வடிவத்துக்கு முதன்மை கொடுக்கும் போக்கு. இதனால் பெரியாரை விட நிரம்பக் கூட்டத்தை அண்ணாதுரையால் திரட்டி ஜனரஞ்சக தலைவராக (Populist Leader) ஆகமுடிந்த தெனினும், இந்தப் போக்கினால் இவரது நாத்திக உள்ளடக்கம் படிப்படியாகக் குறைந்து 'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்'என்ற திருமூலரின் ஒரே கடவுள் கோட்பாட்டை ஒப்புக்கொள்ளும் ஆத்திகராக அண் ணாதுரை நீர்த்துப் போனதை வரலாற்றில் காண்கி றோம். இத்தகைய சமரசங்கள் அண்ணாதுரையின் அர சியல் சித்தாந்தத்தோடு தொடர்புடையவை.' அண்ணா துரையின் கருத்துகள் உணர்ச்சியின் அடிப்படையில் அமைந்தவை. தொன்மைக்குள்ளும் இளமைக்குள்ளும் தமிழை அடக்கி உயிராக நேசிக்கும் கலாச்சாரத் தோடு தொடர் புடையவை. இது நம் தமிழிலக்கியத் தில் வெளிப்பட்ட கலாச்சார மனநிலை. இதற்குகந்த விதத்தில் அண்ணாதுரையின் கருத்துகள் அமைந்தன. இதனாலேயே 'சராசரித்' தமிழனுடன், 'சாதாரணத்' தமிழனுடன் அண்ணாதுரை நெருங்க முடிந்தது. இத்தகைய கண்ணோட்டங்களின் வழியே இவர்கள் தம் மொழிக் கொள்கையை உருவாக்கிக் கொள்ளவும் காங்கிரசுக்காரர்களின் மொழிக் கொள்கையோடு எதிர்வினைபுரியவும் முடிந்தது. முதலில் 1947 ஆம் ஆண்டு வரையிலான வரலாற்று நிகழ்வுகளைத் தொகுத்துக் கொள்ள முனைவோம்.

# 5

பல தேசிய இனங்கள் கலந்து வாழவேண்டிய வரலாற்றுக்கட்டமைப்புள்ளஒரு நாட்டில்- அதுவும் ஓர் அடிமை நாட்டில் — ஒரு தேசிய இனத்தின் மொழியை மட்டும் பிறதேசிய இனங்கள் கற்றுக் கொள்வது', தேசிய விடுதலைக்கும் தேசிய ஒற்றுமைக்கும் வழி வகுக்கும் என வட இந்தியத் தரகு முதலாளிகளின் சார்பான காங்கிரசுத் தலைவர்கள், தவறாகக் கணித்தனர். அனைத்துத் தேசிய இனங்களின் மொழிகளுக்கு சமதகுதி என்பது விடுதலைப் போராட்ட காலத்திலேயே, புறக்கணிக்கப் பட்டது. சென்னை மாகாணக காங்கிரசுத தலைவர்கள் தொடக்கம் முதற்கொண்டே **பலவீனமான தற்காப்புத் தந்திரத்தைப்** பயன்படுத்தினர். வட இந்தியத் தரகு முதலாளிகளில் ஒரு பிரிவினர் ஆங்கிலத்தின் பயனைத் தொடர்ந்து விரும்பினர் இவர்களை அண்டி நின்று **இந்துஸ்தானியுடன் ஆங்கிலமும்** தொடர்ந்து இருக்கும விதத்தில் காங்கிரசின் மொழிககொள்கை அமையுமாறு, சென்னைத் தலைவர்கள் பார்த்துக் கொண்டனர் அதே நேரத்தில் இந்திபரப்பும் முயற்சிக்கும் துணை நின்றனர். **இராசாசி** தன் மாகாண அமைச்சரவையை 14 7. 37 இல் அமைத்தார். அதற்கு முன்னரே காங்கிரசு குழுக்கள் இந்திப்பள்ளிகள் நடத்தினர்; காங்கிரசு ஆதரவுடன் இந்திப் பிரச்சாரசபை வகுப்புகள் நடந்தன. காங்கிரசுத் தலைவர் **சத்தியமூர்த்தி**, 'ஆறாம வகுப்புமுதல் ஒன்பதாம் வகுப்புவரை இந்தியைக் கட்டாயப் பாடமாக வைக்க வேண்டும் என்றும் அப்படிக் கற்றுக் கொடுத்தால் இன்னும் 15 ஆண்டுகளில் இந்தியா, இந்தி நாடாக மாறும் என்றும' குறிப்பிட்டார் (MadrasMail 12. 7.34) இராசாசி, 'இந்திய வரலாற்றைப் பள்ளிகளில் இந்தியில் கற்றுத்தர வேண்டும்' என்று குறிப்பிட்டார் (Hindu 10.9.34) இந்த இரண்டு தலைவர்களின் கட்டுப்பாட்டில் தமிழ்நாடு காங்கிரசு குழுஇருநதது. காங்கிரசின் கட்டுப்பாட்டில் இருந்த உள்ளூர் ஆட்சி மன்றங்கள் (Local Bodies) நடத்தியபள்ளிகளில் இந்தி விருப்பப்

பாடமாகவும் கட்டாயப்பாடமாகவும் கற்றுத்தரப் பட்டது. சேலம் மாவட்டக் கழகம், நாமக்கல் வட்டப் பள்ளிகளில் 7 ஆம் வகுப்புமுதல் 9 ஆம வகுப்புவரை இந்தியைக் கட்டாயபபாட மாகவும் 10, 11 ஆகிய வகுப்புகளில் விருப்பப்பாடமாகவும் கற்றுத்தர முடிவு செய்தது (Madras Mail 29 9. 36). தஞ்சாவூர் மாவட்டக்கழகம் தன் நிர்வாகத்தில் உளள பள்ளி களில் இந்தியைக் கற்றுக்கொடுக்க ரூ 2520- ஒதுக் கியதாகத் தெரிகிறது (Madras Mail 14 3.35). காங்கிரசின் கட்டுப்பாட்டில இருந்த சென்னை மாநக ராட்சி தன் பள்ளிகளில இதந்தியைக் கற்றுக்கொடுக்க முயன்றது. இவை காங்கிரசின் கட்டுப்பாட்டில இருந்த நிர்வாகப்பள்ளிகளாக இருப்பினும, சென்னை மாகாணத்தின் கல்விப் பொறுப்பு நீதிக் கட்சிவசம இருந்தது குறிப்பிடத் தக்கது. 1936 இல சென்னை மாகாணக் கல்விஇயக்குநரின் பரிநதுரையின பெயரில், பள்ளி இறுதி வகுப்பில இரண்டாவது மொழிகளுள் ஒன்றாக A பிரிவில், இந்தி சேர்க்கப்பட்டது. (அரசு ஆணை எண். 2544, கல்வித்துறை, நாள் 27 11.36). 1927 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசு ஆணை, பள்ளிஇறுதி வகுப்பில் B, C ஆகியபிரிவுகளில இந்தி யைக் கற்றுக் கொடுக்க ஏற்கெனவே வசதி செய்திருந் தது. இந்தப புதிய ஆணையையும் இணைத்தால் பள்ளி இறுதி வகுப்பின எலலாப்பிரிவுகளிலும இந்தி விருப்பப்பாடமாக ஏற்றுக் கொளளப்பட்டிருந்தது என அறிகிறோம. 1936 இல் பொபபிலி அரசரின் தலை மையில் நீதிக்கட்சியின் அரசாங்கம் நடந்தது. பொப் பிலி அரசரின் ஆட்சிக் காலததில இன்னோர் ஆணை (Report on Public Instruction in the Madras Presidency, 1931– 35, P. 15) வெளியிடப் பட்டது. உயர் நிலைப்பள்ளிகளில் கற்றுததரப்படும் விருப்ப பாடத்தைக் கட்டாயப்பாடமாக மாற்றும் வசதியை இந்த ஆணை அளித்தது. இதனால் சென்னை மாகாண மொழிகளுள் ஏதேனும் ஒன்றைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களின நலனுக்காக இந்தி இரண்டாவது மொழியாகக கற்றுத் தரும் வசதி செய்து தரப்பட்டது. 1937இல் சென்னை மாகாணத்தில் 104 உயர் நிலைப் பள்ளிகளில் இந்தி கற்றுத்தரப்பட்டது. இந்தவிதத்தில்

நீதிக் கட்சிக காலத்தில் வெளி வந்த அரசுஆணைகள் இந்தி கற்றுக கொள்வதற்கு உகந்த விதத்தில் அமைந்தன. சென்னைமாகாணத்தில இந்தி கற்பித்தலுக்கு உரிய வரலாற்றில் நீதிக கட்சிககு தொடக்க காலப் பொறுப்பு இருநதது என்பதை மறுகக இயலாது என யூஜீனஎப்..இாசிக குறிப்பிடும் கருத்து ஏற்புடைத்தது ஆகும(Tamil Revivalism in the 1930's (ie-a p213)காங்கிரசுககு ஒரு திட்டவட்டமான மொழிக் கொள்கை இருந்ததைப் போல நீதிக் கட்சிக்கு எதுவும் இல்லை. இருப்பினும இரட்டையாட்சி முறையில் நீதிக்கட்சி பொறுப்பேற்றிருந்த காலத்தில், இடைநிலைக்கல்வியில் (Secondary School Education) இந்தியை ஒரு விருப்ப மொழியாகக் கற்றுக்கொளளவும் விருப்ப மொழி எதையும் கடடாயமாக்கிக் கொள்ளும் வசதியும் செய்துதரப்பட்டது என்பதையும் சென்னைப் பல்கலைக் கழகததில் இந்தியை விருப்ப மொழியாகக் கற்றுக் கொள்ளவும்வகை செய்யப்பட்டது என்பதையும் இங்கு நினைவுகூர்தல் பொருத்தமாகும். நீதிக்கட்சிக்கு இந்தக காலங்களில ஆதரவுதெரிவித்த பெரியாரின சுயமரியாதை இயக்கம் இது குறித்துக் கொண்டிருந்த கருத்து குறிப்பிடத்தக்கதாகும.

காங்கிரசில் இருக்கும் பொழுது இந்திப்பள்ளிகள் நடத்தப் பெரியார் நிதியுதவி செயததாகக் குறிப்புகள் உண்டு; இது குறித்து பெரியாரே பின்னால வருந்தியுள்ளார் (குடிஅரசு 14.3.1926). இந்த இதழில் **சித்திர புத்திரன்** என்ற புனை பெயரில் பெரியார் எழுதியுளள ஒரு கட்டுரையில், பிராமணரல்லாதாரின் பணத்தில் பிராமணர்கள் இந்தி கற்றுக் கொள்வதையும் இதில் நூற்றில் ஒரு பங்கு கூட தமிழ் மொழி கற்பிக்க முயற்சி எடுத்துக் கொள்ளவிலலை என்பதையும்' பற்றிக் குறிப்பிட்டுள்ளார். முதல் சுயமரியாதை இயகக மாநில மாநாட்டில் (செங்கற்பட்டு பிப்ரவரி 1929) 'கல்வி நிறுவனங்களில் தாய் மொழியும் பொது மொழியான அரசாங்க மொழியும் தவிர மற்ற மொழிகளின் படிபபுக்கு பொதுப்பணத்தைச் செலவழிக்கக்கூடாதென்று' ஒரு தீர்மானம் (எண: 12) இயற்றபபட்டது. மூன்றாவது மாநில மாநாட்டுக்கு முன்னால் பெரியார் எழுதிய ஒரு கட்டுரையில் (10.5.1931, குடி அரசு) 'இந்தி என்பதை பார்ப்பன

ஆதிக்கத்தோடும், ஆரிய நாகரிகத்தோடும், சமயக் கொள்கையோடும் இணைத்துக்' காண்கிறார். இக் கட்டுரையிலும் 'தாய் மொழியைத் தவிர வேறு மொழி தெரிய வேண்டுமெனில் அது ஆங்கில மொழியே' என்பதைப் பெரியார்வலியுறுத்தி உள்ளாா. மூன்றாவது மாநிலமாநாட்டின் தீர்மானம (7/1931) 'இந்தி மொழியைக் கற்க வேண்டுமென்பது வருணா சிரமத்துக்கு ஆதரவு கொடுப்பதாகும்' என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய கட்டுரைகளில் இந்தியை விருப்பப் பாடமாகக கறறுத்தர வசதி செயத நீதிக் கட்சியின் நடவடிககைகள குறித்து எவ்வித எதிர்ப்பும் இல்லாதது கவனிககத்தக்கதாகும. செனனை மாகா ணத்தில இந்தியின் அறிமுகததையும் பரவலையும் பெரியார் கலாச்சாரக் கண்ணோட்டத்தில் அணுகுவது புலனாகின்றது, பார்ப்பனர் ஆதிக்கம், ஆரியா நாக ரிகம, வருணாசிரம ஆதரவு, இந்துசமயக கொளகை ஆகியவற்றோடு பெரியார் இணைத்துக் காண்கிறார், பல மொழிகள் உளள சென்னை மாகாணத்தில் தாய் மொழியைத் தவிர ஆஙகில மொழியைக் கற்க வேண்டுமென்பதில் பெரியாருக்கு விருப்பம் இருந் ததையும் நாம் ஊகிக்க முடிகிறது, தாய் மொழியைக் கற்க வேண்டும் எனக் குறிபபிட்ட பெரியார் 'அறிவி யல் கல்வியைக கற்றுக் கொள்வதற்கு உகந்த மொழியாக, தமிழ் இலலையென்றும், குறிப்பிட்டு (குடிஅரசு 26. 1 36), ஆங்கிலம் பகுத்தறிவு பூர்வ மான. அறிவியல் மொழி என்றும் அது அன்னிய மொழிஇலலை என்றும் அதைக் கட்டாயமாகக் கற்க வேணடும என்றும் வலியுறுத்தினார். ஆனால அந்தக் காலத்தில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலமே முதல் மொழியாகவும் கட்டாய பாடமாகவும் இருந் தது. ஆங்கிலமே பயிற்று மொழியாகவும் இடை நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருந்தது. இரண்டா வது மொழியாக சமசுகிருதம், உருது தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், ஆங்கிலம் தவிர்த்த ஏனைய ஐரோப்பிய மொழிகள் ஆகியவற்றில் ஒன்று இருந்தது. எனவே இவற்றுள் தாய மொழியைக் கட்டாயம் கற்றாக வேண்டும் என்ற அவசியம் இல்லை இத்தகைய சூழலில் இராசாசியின் அமைச் சரவை பொறுப்பேற்றது.

1935 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் வழங்கிய சலுகை

களைப் பயன்படுத்தி 1937 இல் சென்னை மாகாணத் தில் தேர்தல் நடைபெற்றது, வாக்குரிமையானது சொத்துரிமை அடிப்படையில் என்றிருந்த நிலை மாறி, வயதுவந்த மற்றும் எழுதப்படிக்கத் தெரிந்த எல்லோருக் கும் வழங்கப்பட்டது. மாகாணக் கீழ்சபை முழுவதும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாலே நிரப்பப்பட்டது. சென்னை மாகாண மக்கள் தொகையில் 13.2 சதவீத மக்கள் பங்கெடுத்த 1937 ஆம் ஆண்டுத் தேர்தல், காங்கிரசை ஆட்சிக்குக் கொணர்ந்தது. பதிவான வாக்குகளில் 64,5 சதவீதத்தைப்பெற்று, மொத்தம் 215இடங்களில் 159 இடங்களை காங்கிரசு வென்றது. 'மாகாணங்களில் வெற்றிபெற்று அமைச்சரவை அமைத்தால் இந்தியைப் பரப்ப காங்கிரசு முயற்சி செய்யும்' என்று அனைத்திந்தியக் காங்கிரசு தன் தேர் தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

டாக்டர்.பி. சுப்பராயனைக் கல்வி-சட்டம் அமைச் சராகக் கொண்டு இராசாசி அமைத்த அமைச்சரவை யில் உள்ள பத்து நபர்களில், நால்வர் பார்ப்பனர்கள் ஆவார், பதவி ஏற்புக்கு இரண்டு நாள்களுக்கு முன் னர் (12.7.37) இந்திப்பிரச்சார சபைக் கூட்டமொன் றில் இராசாசி பேசுகையில் 'இந்தியாவுக்குப் பொது மொழி ஒன்று தேவையென்றும் அதற்கு இந்தி தகுதி உடையதென்றும்' குறிப்பிட்டார். இந்தி 6.7.8 ஆகிய வகுப்புகளில்கட்டாயப்பாடமாக்கப்படும் என 11-8-1937 இல் இராசாசி அறிவித்தார். இதைத்தொடர்ந்து 14.8.1937 கல்வி அமைச்சரான சுப்பராயன் 'இந்தி கற்றுக்கொள்வதால் தாய் மொழி பல வீனமடையாது' என அறிவித்தார் இதற்கான உடனடி எதிர்ப்பு, தமிழறிஞர்களிடமிருந்து வந்தது. இதைக் காண்பதற்கு முன் இந்தியை சென்னைமாகாணத்தில் கட்டாயப் பாடமாக மாற்ற வேண்டிய தேவை குறித்து காங்கிர சின் கருத்துகளைத் தொகுத்துக் கொள்வோம்:

1) இந்தி, பெரும்பான்மை மக்களால் பேசப்படும் மொழி.

2) இந்து, முசுலீம் ஒற்றுமையைக் கொணரப் பயன் படும் மொழி

என்ற இரண்டு அம்சங்கள் மட்டுமே இதறக்கு முன்னர் குறிப்பிடப் பட்டன. இந்த விதத்தில் இந்தி இந்திய தேசிய ஒற்றுமையின் சின்னமாகவும் கருதப் பட்டது. இந்தக் காரணங்களின் பொருந்தாமையை ஏற்கனவே கண்டோம். மேலும் இது சமய அடிப படையிலான அரசியலுக்கும் வழி கோலியது. இது மட்டுமலல, இநது சமய ஆதிககத்துக்கும் துணை நின்றது. தேவநாகரி வரிவடிவம் அல்லது உருது வரிவடிவம் ஆகியவற்றைப பயன் படுத்தி எழுதப்படும் இந்துஸ்தானியை மட்டுமே காந்தி குறிப்பிட டிருந்தார். ஆனால் இந்தி மொழி பெரிதும வடமொழி மயமாக் கப்பட்டது. வடமொழி வரிவடிவம் மட்டுமினறி சொற களும் பெருமளவில இநதி மொழியில் கையாளப பட்டது. இது இந்திமொழியை இந்துமொழியாகக கருதும அளவுககுக் கொண்டு சென்றது. இந்திமொழி பேசும் இந்து சமய அடிபபடை வாதிகளின் இதத கைய முயற்சி, இயலபாகவே முசுலீம் சமயத்தினருக்கு வெறுப்பை உணடாக்கியது, ஆக மொழியின் மூலம் சமய ஒற்றுமை, ஏற்படும் என்பதை வட இந்திய மாநிலங்களால் நிரூபிக்க இயலவில்லை மேலும் சென்னைமாகாணத்தின் மக்கள் தொகை அமைப்பில் இத்தகைய காரணத்தையும் கற்பிக்க இயலாது. 1931 ஆம் ஆண்டுக கணக்கின்படி சென்னை மாகாணத்தில் 7.5 சதவிதம் மக்களே, முசுலிம்களாக இருந்தனர். இவர்களில் பெரும் பகுதியினர் இந்து சமயத்திலிருந்து இசுலாமிய சமயத்துக்கு மாறியவா களாகவே இருநதனர். தெலுங்குப் பகுதியில் நெசவாளர்களாகவும் கைவினைஞர்களாகவும் மலபார் பகுதியில் குத்தகை விவசாயிகளாகவும் இவர்கள் இருந்தனர். தமிழ்ப் பகுதிகளில் பெரும்பாலும் சிறு வணிகர்களாக இருந்தனர். மலபார் பகுதியைத் தவிர சென்னை மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் இந்துக்களுக்கும் முசுலீமகளுக்கும் இடையில் சமய நல்லிணக்கம் இருந்தது. இங்குள்ள இந்துக்களின் மொழி, இந்தியும் அல்ல. இந்தச் சூழலில் இந்து—முசுலிம ஒற்றுமையை இங்கு ஒரு காரணமாகக் கற்பிக்க முடியாத நிலைமை இருந்தது. எனவே வேறு காரணங்கள் கற்பிக்கப்படடன.

விடுதலைக்குப்பின் அமையவிருக்கும் கூட்டரசில்

(Federalism) ஆங்கிலத்தின் இடத்தை இந்துஸ்தானி இட்டு நிரப்பும் என்றும் குறிப்பிடப்பட்டது. சென்னை மாகாண நிதி அமைச்சர் திரு டி.பிரகாசம் சட்டமன்றத்தில் இது குறித்துக் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத் தக்கது. 'இனிமேல் அமையவிருககின்ற கூட்டரசில் இந்துஸ்தானி இணைப்பு மொழியாகவும் அலுவலக மொழியாகவும் இருக்கும் என்றும் இநதுஸ்தானியை எதிர்ப்பவர்கள் தமக்கு மட்டுமின்றி தம் பரம்பரையினருக்தும் கேடு விளைவித்துக் கொள்கின்றனர் என்றும்' டி.பிரகாசம் குறிப்பிட்டுளளார் (Madras Legislative Assembly debates VOl. VII, Aug, 1938, pp330)! இவரது பேச்சில் இந்துஸ்தானியைக் கற்றுக் கொள்வதற்கு ஓர் அரசியல் அவசியம் கற்பிக்கப் படுகிறது. இன்னொரு காரணம் கற்பிக்கப்பட்டது. இந்தியைக் கற்றுக்கொண்டால வட இந்தியப்பகுதியில் வேலை கிடைக்கும எனக் குறிப்பிடப்படடது. இராசாசி போன்றவர்களே இந்தக் கருத்தைக் குறிப்பிட்டனர். இந்தியா முழுவதும் பணிபுரியவும் வணிகம் செய்யவும் இந்தி தேவைப்படும் (Madras Mail 12.7 37; 27.8 37)என மாணவர்கள், வணிகர்கள் ஆகியோர் மத்தியில் இராசாசி குறிப்பிட்டுள்ளார். இததகைய கருத்தைக் காந்தியும் குறிப்பிட்டுள்ளார்:

> திராவிடர்கள் சிறுபான்மையினராக இருப்பதால் வ அவ்ர்கள்தம்பகுதியைததாணடியுள்ள இநதியாவின் மொழியைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்பது தேசியப் பொருளாதாரத்தின் தேவையாகும்.
>
> (Gandhi, Hindi and English in the South, p.9).

சிறுபான்மையினர் மீது அதிகாரம் செலுத்தக்கூடிய சர்வாதிகாரியின் கட்டளையிடும் தொனியில் அமைந்த காந்தியின் கருத்தையே இராசாசி இங்கு வழிமொழிந்துள்ளமை குறிபபிடத்தக்கது.

ஆக, காங்கிரசின கண்ணோடடத்தில் அனைத்து தேசிய இனங்களின் ஒருமைப்பாடு அரசியல் அவசியம், பொருளாதாரக் கட்டாயம் (economic compulsion), சமய ஒற்றுமை ஆகிய காரணங்கள் முன் வைக்கப் பட்டன. இவற்றுள் அரசியல் அவசியமும்

பொருளாதாரக் கட்டாயமும் சென்னை மாகாணத்தில் அதிகமாக வலியுறுத்தப்பட்டன. இந்நிலையில் பள்ளிகளில் இந்தி கட்டாயமாகக் கற்றுத்தரப்படும் என்றும் இந்தியாவின் பொதுமொழியாகும் தகுதி இந்திக்கே உண்டு என்றும் இராசாசி அறிவித்தார். பின்னர், இவை குறித்து விவாதங்களும் செயல்பாடுகளும் ஏற்பட்டன, பெரியார் கலந்துகொண்ட பல்வேறு விவாத அரங்குகளில் இராசாசியின் நிலைபாடுகளுக்கான மறுப்பைக் காண்கிறோம். இதைத் தொகுத்துக் காண்போம், அவை:

1) இந்தியா பல்வேறு சமயங்களையும் சமூகவாழ்க்கை முறைகளையும் கொண்ட ஒரு நாடு. இன்றைய அரசியலைப் பார்க்கும் பொழுது எக்காரணங் கொண்டாவது நம் நாட்டை வட நாட்டுச் சம்பந்தத்திலிருந்து தனியாய்ப் பிரித்துக் கொண்டாலொழிய நமக்கு விடுதலை இல்லை.

2) சுயராஜ்யத்துக்கு பொதுமொழிஅவசியமே இல்லை. ரசியா இதில் நமக்கு முன்னுதாரண மாகும். ராமராஜ்யத்தைப் பார்ப்பதை விட ரசியராஜ்யத்தைப் பார்க்கலாம்.

3) இந்தி பெரும்பான்மை மக்களால் பேசப்படும் மொழி என்பது ஒரு புரட்டு.

4) இந்தி நவீனமொழி இல்லை. அது நமக்குப் பயன் படாது. ஆங்கிலமே இந்தியாவுக்கும் உலகுக்கும் பயன்படும்.

5) வேலைவாய்ப்புகளுக்கு இந்தி பயன்படும் என்பது கூட, பார்ப்பனரல்லாதாரை விட பார்ப்பனர்களுக்கே பயனளிக்கும். ஏனெனில் இந்தியில் தேறுவோர் பெரிதும் பார்ப்பனர்களே.

6) தமிழ்நாட்டில் தமிழ்மொழியே கட்டாயப்பாடமாக இல்லாத பொழுது, இந்தியைக் கட்டாயப்பாடமாக ஆக்குதல் பலாத்காரம் ஆகும்.

காங்கிரசுத்தரப்பில் வைத்த விவாதக் கருத்துகளுக்கு,

பெரியாரின் நீண்ட பதிலுரையில் (குடி அரசு 26.9.37) இந்தியா என்பது பல மொழிகள் பேசும் தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு என்ற நிலைபாடு அடிப்படையாக உள்ளது; மேலும் ஆங்கிலேயரின் அரசியல் அவசியத்தினால் பல தேசிய இனங்கள் இணைக்கப்பட்டும் பின்னர் பிரிக்கப்பட்டும் இருப்பதனால், இத்தகைய தேசிய இனங்கள் என்றென்றும் ஒரே கட்டமைப்பில் இருக்க வேண்டுமா? இருக்க இயலுமா? என்ற அரசியல் நிலைபாட்டையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. எனவே பெரியார் நிலைபாடு, காங்கிரசின் அனைத்திந்தியக்கண்ணோட்டத்திலிருந்துமாறுபட்டதாம். இந்தி எதிர்ப்பு, ஆங்கில ஆதரவு என்ற நிலைபாடுகளில உறுதியாக நிறகும் பெரியார், தமிழ் நாட்டில் தமிழ்மொழி கட்டாயப்பாடமாக இல்லாதது குறித்து வருந்துவது நியாயமான வருத்தமாகும். எனினும் இவ்விடத்தில் தமிழைக கட்டாயப் பாடமாக ஆகக வேண்டியது குறித்து எவ்விதக கருத்தையும் குறிப்பிடமால் பெரியார நழுவிச் சென்று விடுகிறார் என்கிற நமதுவருத்தமும் நியாயமானதாகும். ஆனால் இது பெரியாரின் மொழிக கொள்கையோடு தொடர்பு கொண்டதாகும்.

இராசாசி அமைச்சரவையின மொழிக் கொள்கைக்கான உடனடி எதிர்ப்பு, தமிழறிஞர்களிடமிருந்து ஏற்பட்டது இவர்கள் எதிர்ப்பு, இரண்டு விதங்களில் அமைந்திருந்தது என பேராசிரியா ஆ.தங்கராசு அவர்கள குறிப்பிடுதல் சரியானதாகும் (வெளியிடப்படாத எம் பில், பட்ட ஆய்வு: தமிழ் நாட்டில் மொழிச் சிககலும் வட்டார அரசியலும 1900-1940.) அவை

1. தமிழ்மொழிக்குத் தீங்கு பயக்கும.
2. தமிழ்ப்பண்பாட்டுக்கு கேடு தரும.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியரும் காங்கிரசின் அடிப்படை உறுப்பினரும் தென்னிந்திய இந்திப்பிரச்சார சபையின் ஆயுள் கால உறுப்பினருமான நாவலர் சோம சுந்தர பாரதியார் (இனி, பாரதியார்) இது குறித்து முதலில் கருத்துரைத்தார் (Madras Mail 17.8.1937) "இந்தி ஆட்சி மொழிக்குரிய சகலவிக

அதிகாரங்களுடன் திணிககப்பட்டால் அது நிச்சயம் தமிழுக்கு ஆபத்தான போட்டியாகும். அதிகாரத்தின் சிறப்பு சலுகைகளைப் பயன்படுத்தும் எந்தவொரு மொழியும் ஏனைய மொழிகளைக காட்டிலும் தேவைக்கு அதிகமான வசதிகளை அனுபவிப்பதனால் படிப்படியாக ஏனைய மொழிகளை அகற்றிவிடும். ஆங்கிலத்தைப் பொறுத்தமட்டில் ஆட்சியாளர்கள் கொடுத்த செல்வாக்கின் காரணமாக ஏற்கெனவே இந்த விதத்தில போதுமான அளவுக்குத் தமிழுக்குச் சேதாரத்தை ஏறபடுத்தியுள்ளது. தமிழர்கள தமிழைப் புறக்கணித்தும் ஆங்கிலததுக்கு முதன்மை கொடுத்தும் இருப்பதனால் தமிழ் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தி' தமிழுக்கு எவ்விதத்தும் போட்டி இல்லை என்பதைத் தமிழர் எவரும் ஒப்புக் கொள்ள மாட்டார் கள் என பாரதியார் கருதினார். கலாச்சார ரீதியில் இநதித்திணிப்பு கேடு விளைவிககும எனப் பாரதியார் கருதினார். ''எதிர் காலத்தில எலலோரும் இந்தியைக் கட்டாயமாகக் கற்றால், தமிழர்களின் மேண்மையும பண்பாடும பாதிக்கப்படாமல் இருக்கவியலாது தமிழை வலுக்கட்டாயமாக இந்தியுடன் இணைப் பதனால உருவாகும் ஒரு புதிய கலாச்சாரததுக்குத் தமிழர்கள பழக்கப்படலாம். ஆனால அது எவவிதத்தும தமிழ்க்கலாச்சாரமாகாது .. இந்தியா முழுவதற்கும் ஒரு பொது மொழி தேவை என்ற போலித தேசிய வாதத்தின் பெயரால் தமிழர்களின் வலிமிக்க பாரம பரியம் கெட்டுப் போவதை அனுமதிக்கக் கூடாது ..,, என்றும் பாரதியார் கருதினார் (Madras Mail 17 8.37) இந்தக் கருத்துகளில் பல தமிழறிஞாகள உடன் பட்டனர். இராவ்பகதூர் உமாமகேசுவரம் பிள்ளை, மறைமலையடிகள், ஜே.எம்.சோம சுந்தரம் பிள்ளை, பூரணலிங்கம் பிள்ளை ஆகியோர் பலஇடங்களில் கூடடங்கள நடததி (27.8.37 கரநதை; 29 8 37 திருவையாறு; 5.9.37 சென்னை; 12.10.37 நெல்லை; 26.2.38 திருவத்திபுரம்) தம் கண்டனத்தை வெளிப்படுத்தினர். கட்டாய இந்தி தொலைக எனபது மட்டுமின்றி தமிழைக் கட்டாயப் பாடமாக்குக என்பதும் இக்கட்டங்களில் முழககமாக இருநதது (மா. இளஞ்சேரன், தமிழன் தொடுத்த போர், பக் 54). பல ஊர்களில் உள்ள தமிழ்ச் சங்கங் கள் தன்னெழுச்சியாகவே இந்தக் கண்டனத்துடன்

தம்மை இணைத்துக்கொண்டன. நாமக்கல் தமிழ்ச் சங்கம் (29.8.37), தென்காசி திருவள்ளுவர் கழகம் (21.8.37) நெல்லைத் தமிழ் பாதுகாப்புச் சங்கம (5.9.37) பாளையங்கோட்டை தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம் (8.9.37) ஆகியவை ஊர்வலங்கள், கண்டனக் கூட்டங்கள் நடத்தின என அறிகிறோம்.

இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதைத் தத்தம் நோக்குகளில் எதிர்த்த சுயமரியாதை இயக்கத்தினரும் தமிழறிஞர்களும் இணைந்து நின்றே இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டனர். பெரியாரின் பேச்சுரைகளும் **குடிஅரசு** இதழ்களில் எழுத்துரைகளும் செய ஊக்கமிக்க கிளர்ச்சி மதிப்பைத் தாங்கி வெளிவந்தன.

**ஆபத்து! ஆபத்து!!**
**கல்விக்கு ஆபத்து!!!** (குடிஅரசு. 26.11.37)
**ஆபத்து! ஆபத்து!!**
**புரோகித ஆட்சியால்**
**பார்ப்பனரல்லாதார்க்கு**
**ஆபத்து!!!** (குடி அரசு. 6.3 38)

தமிழறிஞர்களும் சுயமரியாதை இயக்கத்தாரும் கலந்து கொண்ட சென்னை மாநிலத்தமிழர் மூன்றாம் மாநாட்டில் (திருச்சி, 26.12.37), ஆளுநரைச் சந்திக்க ஒரு தூதுக்குழு அமைக்கப்பட்டது. ஆயின் ஆளுநரைச் சந்திக்க இயலவில்லை. இதன்பின் மாகாண **இந்தி எதிர்ப்பு மாநாடு** காஞ்சிபுரத்தில் (27.2.38) நடந்தது. இம்மாநாட்டின் துவக்குநராக **சர். எம். கிருஷ்ணன் நாயரும** தலைவராக **சர்.கே.வி. ரெட்டியும்** இருந்தனர். தமிழர்மட்டுமின்றி மலையாளிகளும தெலுங்கர்களும் இந்திகட்டாயமாவதை எதிர்க்கின்றனர் என்ற ஒரு தோற்றத்தைக் கொடுக்க இது உதவியது ஆனால் சென்னை மாகாணத்தில் தமிழரல்லாத பகுதிகளில கட்டாய இந்திக்கான எதிர்ப்பு இல்லை கட்டாய இந்திகுறித்து நீதிக்கட்சி இன்னமும் தெளிவான கருத்துகளை உருவாக்கிக் கொள்ளாத நிலையில் இருந்தது. இந்தி படித்தால் அது வட நாட்டில் வேலைக்குத் துணையாக

இருக்கும் என்ற பொய்ப்பிரச்சாரத்தை நாயர் உடைத் தெறிந்தார் (குடி அரசு 27.2.28) பல தேசிய இனங் கள் உள்ள நாடுகளில் பல மொழிகள் பயன்பட்டு வரும் வரலாற்றுச் சூழலில் 'நிலையான ஒரு இந்தியப் பொதுமொழி கனவுலகில் தான் இருக்க முடியும் என்று ஒரு பொதுமொழிக் கோட்பாட்டை ரெட்டி மறுத்துரைத்தார். (தமிழனுக்கு தொடுத்த போர், பக் 63)

இந்தக் கண்டனங்களும் பேரணிகளும் எச்சரிக்கைகளும் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அல்ல. ஏகாதிபத்தியம் அனுமதித்த அளவுக்கு அரசாங்க அதிகாரத்தைக் கொண்டிருந்த காங்கிரசின் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்தவை ஆகும். ஏகாதிபத்தியம் தம் நலன்கள் கருதி வன்முறையில் பல்வேறு தேசிய இனங்களை ஒருங்கிணைத்து தம் மொழியை இங்கு அதிகாரமொழி யாக்கியது. அதைப் போன்று பல்வேறு தேசிய இனங் களின் விருப்பத்தை முற்றாகக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமலே இந்தியை ஒரு பொது மொழியாக ஏற்றுக்கொண்டும் அதைப் பள்ளிகளில் கட்டாயப்பாட மாக்கியும் காங்கிரசு தன் ஜனநாயக விரோதத்தை வெளிப்படுத்திக் கொண்டு, ஏகாதிபத்தியத்துக்கு மாற்றானசக்தியாக (Alternative Force) தகவமைத்துக் கொண்டது. அதேநேரத்தில் காங்கிரசின் இந்த தேசிய இனவிரோத மற்றும் ஜனநாயக மறுப்புத்தன்மையை எதிர்த்த சுயமரியாதை இயக்கத்தினரோ நீதிக் கட்சியின் உன்னதத்தலைவர்களோ ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் அல்லர்; ஏகாதிபத்திய அரசை காங்கிரசை விட அதிகமாக ஆதரித்தவர்கள். இந்தி எதிர்ப்பில் உறுதியாகநின்ற தமிழறிஞர்களில உமா மகேசுவரம் பிள்ளை, மறைமலையடிகளார் ஆகியோ ரும் ஏகாதிபத்திய அரசை ஆதரித்தவர்களே ஆவர். இன்னும் சொல்லப் போனால ஆங்கில மொழி இங்கு கட்டாயமாகக் கற்பிக்கப்படுவதையும அதைக் கற்றுக் கொள்வதையும பெருமையாகக் கருதுபவர்கள் ஆவர். இந்தி கட்டாயப்பாடமாக ஆவதை எதிர்க்கும் இவர்களது குரலில தேசிய இனத்தின் விழிப்புணர் வையும ஜனநாயக அம்சத்தையும் காண முடிகின்ற அதே நேரததில' அவை ஏகாதிபத்திய வரம்புக்கு உட்பட்டவையாகவே உள்ளன என்பதையும் இங்கு

மனங்கொளல் வேண்டும். இது சுய முரணாகத் தோற்றமளித்தாலும், ஒட்டு மொத்தமான தேசிய இனத்தின் நலன்கள் என்ற போர்வையில் சில வர்க்கங்களின் குரலாக இருப்பதையும் காணலாம். இந்தி எதிர்ப்பு இன்னும் சரியாகச் சொன்னால் இந் தித்திணிப்பு எதிர்ப்புஒருதேசியஇனத்தைமுன்னிறுத்திய சில வர்க்கங்களின் முயற்சியாக மட்டுமே தேய்ந்து போகிற விந்தையை இதில் நாம் காண இயலும். இது குறித்துப்பின்னர் விரிவாகக் காண்போம்.

இத்தகைய எதிர்ப்புகளுக்கு ஊடாக சென்னை மாகாணத்தில் சில இடை நிலைப்பள்ளிகளில் இந்தி யைக் கட்டாயப் பாடமாக்கும். ஆணை வெளியிடப் பட்டது. (அரசு ஆணை எண் 911' பொதுக் கல்வித் துறை, 21.4.1938) இதன்பின், 125 பள்ளிகளில் இந்தி கட்டாயமாக 6,7,8 ஆகிய வகுப்புகளில் கற்றுத் தரப்படும் என ஒரு சுற்றறிக்கை வெளியாயிற்று. தமிழ் நாட்டில் 60 பள்ளிகளிலும் ஆந்திரத்தில் 54 பள்ளிகளிலும் கருநாடகத்தில் 4 பள்ளிகளிலும் மலையாளப் பகுதியில் 7பள்ளிகளிலும் இந்தி கட்டாயப் பாடமாக்கப்படும் என அரசு அறிவித்தது. இதுகுறித்த முதல் எதிர்ப்பு என்ற விதத்தில் ராசமகேந்திரத் தில் உள்ள ஆலையொன்றின் முகவரான செகதீசன் என்ற ஸ்டாலின் மே முதல் நாளன்று காலவரையற்ற பட்டினிப் போர் மேற்கொண்டார். இது எவ்விதத்தும் திட்டமிடாதது ஆகும். சுயமரியாதை இயக்கம் இதற் கான எதிர்ப்புணர்வை மேலும் தொகுத்துக் கொள்வ தற்கு முன்னர், காங்கிரசில் உள்ள பிராமணரல்லா தோர் ஒன்று கூடி இதுகுறித்து விவாதித்தனர். (சுதேசமித்திரன் 20-5-38). பெற்றோர் விரும்ப வில்லையெனில் மாணவர்க்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும் இந்தித் தேர்வில் தோல்வியடைந் தால் அது அடுத்த வகுப்புக்குச் செல்லத் தடையாக இருக்கக் கூடாதென்றும் சில சலுகைகள் வழங்குமாறு அரசை அவர்கள் கேட்டுக் கொண்டனர். இவற்றை முழுமையாக அரசு ஒப்புக் கொள்ளவில்லை யெனினும் ஓரளவு சலுகையை வழங்கியது.

இடைநிலைப் பள்ளிகளில் 6,7,8 ஆகிய வகுப்பு களில் இந்துஸ்தானியைக் கட்டாய மொழியாகக்

> கற்றுக் கொடுப்பது, தாய்மொழியைக் கற்றுக் கொடுப்பதற்கு எந்த விதத்திலும் குறுக்கிடவில்லை ... இந்துஸ்தானி வகுப்புகளில் **வருகைப்பதிவு கட்டாயம்** என்ற விதத்தில் மட்டுமே அது கட்டாயமாகும் தாய்மொழிக்கு மாற்றாக இந்துஸ்தானியைக் கற்க வேண்டியதில்லை இந்த மொழிகளில் ஒன்றுடன் இந்துஸ்தானியையும் சேர்த்துக் கற்க வேண்டும்...'

இது வேறொன்றுமில்லை; **மும்மொழிக் கொள்கையாகும். ஆங்கிலமும் இந்துஸ்தானியும்** கட்டாய **மொழி**கள், தாய்மொழி உட்பட ஏனைய மொழிகளுள் ஒன்று விருப்ப மொழியாகும் இந்துஸ்தானி வகுப்பில் வருகைப் பதிவு அவசிய மென்பதும் ஆனால் அம்மொழியில் தேர்ச்சி பெறவேண்டிய தேவையில்லை யென்பதும் அரசின் **நெகிழ்ச்சி மிக்க ஆனால் சாதுரியமான வலைப்பின்னலாகும்.** இராசாசி இதைத் தன பாணியில் சொன்னார்: . **இது இலையில் வைக்கப் பட்ட சட்னி ருசி** பார்ப்பதோ **விட்டுவிடுவதோ நமது விருப்பமாகும்** இலையில் வைக்கப்பட்டிருப்பது சட்னியா வேறொன்றா என்பதை இராசாசி மட்டுமின்றி, தமிழக மக்களும் சேர்ந்து முடிவு செய்திருக்க வேண்டும் தமிழக மக்களுக்கான இந்த உரிமையை இராசாசி மறுத்தார். கட்டாய இந்தி குறித்து கருத்துவாக்கெடுப்பு நடத்தலாம் என்ற பாரதியாரின் வாதத்தை இராசாசி மறுத்தார் இந்நேரத்தில அரசு எடுத்த இன்னொரு நடவடிக்கை தமிழறிஞர்களைத் திருப்திப்படுத்தும நோக்கம கொண்டதாக இருந்தது. எனினும் அது முன்னரே தீர்மானிக்கப் பட்டிருந்தது 1938-39 ஆம கல்வியாண்டில் சில பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப பாடமாக்குவதோடு 'மாவட்டத்துக்கு ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுத்து அதில் வார்தா கல்விததிட்டத்தை சோதனைரீதியில் அமுல் நடத்துவதென்றும் **எல்லாப் பாடங்களையும் தாய் மொழியில் நடத்துவதென்றும்,** அரசு ஏற்கெனவே முடிவு செய்திருந்தது (குடி அரசு 27 2.38) **தாய்** மொழியில் பாடம் கறபித்தல் என்பது கட்டாய இந்தியுடன் ஒருங்கிணைக்கப பட்ட வகையில் திட்டமிடப பட்டது இங்கு குறிப்பிடத்தககதாகும். 21.4.38 இல் 125 பள்ளிகளில் கட்டாய இந்தியைக் கொண்டு வந்த

இராசாசி அமைச்சரவை உயர்நிலைப் பள்ளிகளில் தாய் மொழியைப் பயிற்று மொழியாக்க வேண்டும் என ஜூன் 1938இல் ஆணையிட்டது. 'கல்வியில் தாய் மொழியின முக்கியத்துவத்தை இந்த அரசு உணர்ந்திருக்கிறதென்றும் இதுவரை தாய்மொழி அனுபவிக்காத மாபெரும்முக்கியத்துவத்தை இப்பொழுது அனுபவிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டுவருகிறதென்றும்' அரசின் குறிப்பு வெளிப்படுத்துகிறது. (குடி அரசு 12.6.38)' சென்னை மாகாணத்தில் உயர் நிலைப்பள்ளிகளில் பயிற்று மொழியாகத் தாய்மொழியைக் கொண்டுவந்த வரலாற்றுப் பெருமை இராசாசிக்கு உண்டு என்பதை நாம் ஒரு போதும் மறைதது விட இயலாது. அது இராசாசியைப் பொறுத்து கட்டாய இந்தியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட திட்டம் ஆகும். மேலும் இது குறித்து முடிவு முன்னரே எடுக்கப் பட்டிருப்பினும் கட்டாய இந்தி எதிர்ப்புப் போரில் தாய்மொழிவழிக் கல்வி அரசின் கையில் உள்ள துருப்புச் சீட்டாக இழிந்து போய் விட்டது. இது மொழிவழிக்கல்விக்கும் அரசியலுக்கும் உரிய தொடர்பை அம்பலப்படுத்துகிறது. இராசாசியின் செயல்கள், கட்டாய இந்தி எதிர்ப்புப் போரைத் தடுத்து நிறுத்திட வில்லை

திருச்சியில் அமைக்கப்பட்ட (28. 5.38) இந்தி எதிர்ப்பு உயர்நிலைக் குழுவில் பாரதியார் தலைவராகவும் கி ஆ. பெ.விசுவநாதம செயலராகவும் பெரியார், சௌந்திரபாண்டியன், கே. எம். பாலசுப்பிரமணியம், உமாமகேசுவரன் உறுப்பினர்களாகவும் இருந்தனர். இக்கூட்டத்தில் நீதிக்கட்சியின் சட்டமன்றத் தலைவரான முத்தையா மற்றும் பன்னீர் செல்வம் ஆகியோரும் இதில் கலந்து கொண்டிருந்தனரெனினும், நீதிக் கட்சி அதுவரை எவ்வித அதிகாரபூர்வமான நிலைபாட்டையும் எடுத்துக் கொள்ளவில்லை. மேலும் இத்தகைய எதிர்ப்புக் கூட்டங்களில் ஆர்வத்தோடு கலந்து கொண்டவர்கள் பெரிதும் நீதிக் கட்சியின் தமிழ்த் தலைவர்களே ஆவர். பன்னீர் செல்வத்தின் கருத்து தெளிவாகவும் கூர்மையாகவும இருந்தது:

> 'தமிழர்களைப் பொறுத்த மட்டில் இந்தி' ஓர் அன்னிய மொழி. வரிவடிவத்தில், சொற்களில், பண்

பாட்டில், பாரம்பரிய மரபில் அது அன்னிய மொழி யே. இந்த மொழியோடு எங்கட்கு எவ்விதத்தும் தொடர்பில்லை இத்தகைய அன்னிய மொழி யைத் திணிப்பதன் மூலமாக தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் வெகுவாகச் சீர்குலையும் எனத் தமிழர்கள் நினைக்கின்றனர்.,

(Madras Legislative Assembly Debates, Vol, III, Aug. 1938, P. 326).

நீதிக்கட்சி சட்ட மனற உறுப்பினரான சி. பி. இராச கோபாலாச்சாரி (ஆரியரான இவர் திராவிடர் கட்சி யில் சேர்க்கப் படடிருந்தார்) 'இது வட இந்திய ஆதிக் கத்துக்கு வழி வகுககும்' என எசசரிக்கை விடுத்தார். (Sunday Observer, 10. 7. 38). அதிகார பூர்வமான ஒரு நிலைபாட்டை நீதிக் கட்சி எடுக்க வில்லை யெனி னும் அதன் தமிழகப் பிரிவு, கட்டாய இந்தியை எதிர்த் தது. எனவே நீதிக்கட்சி, அதன் சார்பு அமைப்பான சுயமரியாதை இயக்கம், தமிழறிஞர்கள் குழு ஆகிய வற்றின் கூட்டுச்செயற் பாட்டுக்குழு (Joint action Committee) வாக இந்தி எதிர்ப்பு உயர் நிலைக்குழு அமைக்கப் பட்டது. இநதி கட்டாயமாக மட்டுமின்றி விருப்பபாடமாகக் கறறுத்தரலையும் ஒழிக்க வேண்டு மென்பதே இதன் நோககமாக இருந்தது இதற்காக பிரச்சாரம், மறியல், கறுப்புக்கொடி காண்பித்தல ஆகியவற்றைக் கடைப் பிடிப்பதென்றும் இறுதியில சட்டமறுப்பு இயக்கம் நடத்துதல் என்றும முடிவெடுக்கப் பட்டது. (தமிழன் தொடுத்தபோர், பக். 66–67) இதன் படி 1.6.38 அனறு இராசாசி வீட்டு முன் மறியல் நடந்தது. பல்லடம் பொன்னுசாமி பட்டினிப் போரைத் தொடங்கினார். 3 6.38 அன்று மறியலில் ஈடுபடட சி.டி நாயகம், சண்முகானந்த அடிகள் பட்டினிப்போரில் இருந்த பொன்னுசாமி ஆகியோர் குற்றவியல் விதித் திருத்தச் சட்டத்தின கீழ் கைது செய்யப்பட்டனர்.

எந்தவொரு எதிாபபு ஏறபடும் பொழுதும் ஏகாதிபததிய அரசு அதை இரண்டு விதங்களில அணுகியது. ஒன்று, சீர்திருத்தங்கள வழங்குதல; இரணடாவது, அடககு முறையைப்பயன் பயன்படுத்துதல்(Reforms and Repres- sion). ஏகாதிபததியத்தின வாலைப்பிடிததுக்கொண்டே

பாராளுமன்றவாத அரசாங்க அதிகாரத்துக்கு வந்த காங்கிரசு கட்சி, இந்த அணுகு முறையைப் பயன் படுத்தியது. இந்தி கட்டாய மெனினும, அதில் குறைந்த பட்சம் இவ்வளவு மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை என்றும் இந்தி ஒரு வாரத்துக்கு 2½ மணி நேரம் மட்டுமே கற்றுத்தரப்படும் என்றும அறிவித்து பெற்றோர்—மாணவர் எதிர்ப்பை விலக்க எண்ணியது. தமிழ்ப்பயிற்று மொழியை ஒரு தந்திரோ பாயமாக அறிமுகப்படுத்தி, தமிழறிஞர்களை விலக்க எண்ணியது. அதே நேரத்தில் மறியல வீரர்களைக் குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்தது.

இந்தி எதிர்ப்புப்போரின் முதல் தளபதியாக வருணிக்கப் பட்ட சி.டி.நாயகமும் சண்முகானந்த அடிகளும் இந்த வழக்கு முடியும் வரை இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்தில் ஈடுபடுவதில்லை என உறுதியளிதத பின்னர் ஜாமீனில் விடுவிக்கப பட்டனர் ஆனால காங்கிரசுக் காரராக தம்மைக்குறிப்பிட்ட பொன்னுசாமி இத்தகையஉறுதியை அளிக்க முன் வராததால் சிறையிலடைக்கப்பட்டார். எதிர்ப்பு வலுத்துக்கொண்டே போயிற்று. நாள்தோறும் இராசாசியின் வீட்டின் முன் மறியல, செய்துகைதாயினர். இநதி எதிர்ப்புக் கூட்டங்கள பல இடங்களில் நடத்தப் பட்டன. அன்றைய சூழலைக் கொண்டு பார்க்கும் பொழுது மக்கள் பெருமளவில் திரண்டனர் எனத் தெரி கிறது (சென்னை, 26 6.38 -50000! விருதுநகர் 10.7 38,-10000). புறநகர்களில் நடைபெற்ற 87 பொதுக் கூட்டங்களில் மொத்தம் 5லட்சம் மக்கள கலந்து கொண் டதாக ஒரு குறிப்பு உள்ளது. தமிழ்நாட்டின் மையப் பகுதிகளில் இந்திஎதிர்ப்புக் கருத்தைப் பரப்ப திருச்சி யிலிருந்து சென்னை வரைநீண்ட நடைப்பயணம் மேற் கொள்ளப்பட்டது 42 நாளகள் நிகழ்த்திய இந்தப் பயணத்தின் பொழுது 234கிராமங்கள் 60 நகரங்கள் ஆகியவற்றில் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆகஸ்டு முதல நாளன்று தொடங்கிய இந்த நடைப்பயணத்தைப் பெரியார் தொடங்கிவைத்தார். செபடம்பர் 11 ஆம் நாளன்று சென்னையில்முடிந்த இந்தப்பயணம், இராசா சியின் உப்புச் சத்தியாக்கிரகப் பயணத்தை ஒத்திருந்த தாகக் குறிப்பிடுவர். கலவியறிவு மிகக் குறைந்தும் பொது விஷயங்களில் ஆர்வம் மிகக் குறைந்தும் உள்ள மக்கள் சமூகத்தில் இத்தகைய நடைப்பயணங்கள் அரசி

யலை மக்களிடத்தில் கொண்டுசெல்வதற்குப் பயன்படும் என்பதில் எவ்வித ஐயமிமுல்லை. காந்தியின் தண்டிப் பயணம் இத்நோடு இணைத்து சிந்திக்கத்தக்கது. இந்தி எதிர்ப்பு நாள் (1.7.38) என அறிவித்து, அன்று பள்ளிகள் புறககணிக்கப்பட்டன; கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அமைச்சர்களுக்குக் கறுபபுக் கொடி காட்டப்பட்டது; அவர்களின் பொதுக் கூட்டங்களில் மக்கள் நிறைவுறாமல் கற்களை வீசித்தம எதிர்ப்பை வெளிப்படுத்தினர். கட்டாய இந்தியை எதிர்க்கக் கூடிய வடிவங்களாக இவை முன்னிறுத்தப்பட்டன.

அரசு தொடர்நது குறறவியல் சட்டத்தைப் பயன படுத்தியது. இது குறித்த கணடனம சட்டமன்றததுக்கு உள்ளும் வெளியிலும் தெரிவிக்கப் பட்டது ஆரியரான டி. டி. கிருஷ்ணமாச்சாரி குறறவியல் சட்டததைத திரும்பப்பெற ஒரு மசோதாவைக (17.8.38) கொணர்ந தார். இந்தச சட்டத்திருத்தம் 1932 சட்டமறுப்புஇயக்கக காலத்தில் காங்கிரசுக் காரர்களை ஒடுககுவதற்காக திருத்தப்பட்டதாகும. மனச்சாட்சியின்பாது காவலரான காநதி இநதச் சட்டத்தை சாத்தானின் கைவாள (Satans Sword) என்று அன்று வருணித்தார். இராசாசி இதை நெறிமுறையற்ற சட்டம்(Lawless Law) என்றார் இந்த சட்டம் கொண்டு வரப்பட்ட காலததில இராசாசி கூறிய மறுப்புகளைக குறிப்பிட்டு டி டி கே. அதிகாரத் துககு இராசாசி வந்த பின்னர் அவர் தன் அரசியல் சித்தாநதத்தை மாறறிக் கொணடு விட்டார் என்றும் இப்பொழுது சுதந்திர உணர்வு கோலோசசுவதை விட இராசாசியிடம் அதிகார உணர்வு கோலோச்சுகிறது என்றும் தாக்கினார் (Madras Legislative Assembly Debates Vol 7.Aug.1938' P.236) டி.டி.கே யின் மசோதா, காங்கிரசின் பெருமபான்மையால் தோல்வியுற்றது. நீதிக்கட்சியைச் சேர்நத அப்பாத்துரைபிள்ளை 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியாளர் மீது குற்றவியல சட்டத்தைப் பயன படுத்தலாகாது, என்ற தீர்மானம் கொண்டு வந்த பொழுது இராசாசி வெகுவாக அம்பலப் பட்டார். இத்தகைய திருத்தச் சட்டததைப் பயன்படுத்து வதை இராசாசி நியாயப்படுததினார்.

'அன்னிய ஆதிககத்துக்கு அடிமைப்பட்ட ஒருநாடு ஆதிக்க நாட்டுடன் எப்பொழுதும் யுத்தத்தில

உள்ளது. அத்தகைய நேரத்தில் மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான மோதலில் பாராளுமன்ற விதிகளைப் பயன்படுத்தும் பிரச்சனையே இல்லை. ஆனால் பாராளுமன்ற அரசாங்கமுறையின் கீழ் நமது நிகழ்வுகளை நாமே நிறைவேற்ற விரும்புகிறோம்; பாராளுமன்றவாதநடைமுறையின் எல்லைகளை நாம் ஏற்றுக் கொள்கிறோம்... இதில் சட்டபூர்வமான கிளர்ச்சிக்கான உரிமையை நான்மறுக்கவில்லை. பாராளுமன்ற அரசாங்கமுறையில் எதை நான் மறுக்கிறேன்? **பெரும் பான்மையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை மீறுகிற சிறுபான்மையினரின் உரிமையையும் இதன்மூலம் அரசாங்கம் செயல்படுவதை சாத்தியமற்றதாக்குவதையும் மறுக்கிறேன்.** இத்தகைய முறையைக் கையாண்டால இந்தியாவில் சுயாட்சி என்பது சாத்தியமற்றதாகும்.

(Madras Legislative Assembly Debates, Vol.7. Aug.1938, P. 347).

இங்கு இராசாசி குறிபபிடும் யுத்தம், வன்முறை யுத்தமன்று. அன்னிய அரசாங்கம் நடக்கும் பொழுது சட்டத்தை மீறலாம் என்பதும் **சொந்த அரசாங்கம்** நடக்கும் பொழுது சட்ட வரம்புக்குட்பட்ட கிளர்ச்சியே போதுமானது என்பதும் இராசாசியின் அரசியல் சித்தாந்தமாகும். இது அரசாங்கததைக் கைப்பற்றிய பின் ஏற்படும் **ஞானோதயமாக** நமக்குத் தோன்றுகிறது. அரசாங்கததிறகு வருமுனனர் ஒன்றைச் சொல்வதும் வந்த பின்னர் முற்றிலும மாறாக, இன்னொன்றைச் சொல்வதும் **நபர்களின் சித்தாந்த மாற்றத்தை மட்டுமல்ல, ஆளும் வர்க்கத்தின் நிலையான சித்தாந்தத்தையும் நமக்குத் தெரிவிக்கிறது.** எதிர்க் கட்சியாக இருக்கும் பொழுது ஒரு சட்டததை எதிர்ப்பதும் ஆளும் கட்சியாக மாறிய பின்னர் அதே சட்டத்தைப் பயன்படுத்துவதும் பாராளுமன்ற வாத அரசியலின் ஒரு பண்பு ஆகும். அதுவே இங்கு நிருபிக்கப் படுகிறது. இந்தச் சட்டத்தை இப்பொழுது எதிர்க்கும் நீதிக் கட்சியின் தலைவர் பன்னீர்செலவம் உரையின் ஒருபகுதி இவ்வாறு அமைந்திருந்தது:

அடக்கு முறை நடவடிக்கைகளை மேற்கொள்வ

> தற்குக் குற்றவியல் விதித் திருத்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்க! ஆட்சியில் நீடித்திருப் பதற்கு இவை அனைத்தையும இன்னும் மேலா கவும் செயது கொள்க! நீங்கள் இப்போது செய் வதற்கு நீங்கள வருந்தும நிலை உங்கட்கு ஏற் படும் நாள் வெகுதொலைவில் இல்லை. (மேற் படி விவாதம், தொகுப்பு 7, பக். 326)

பன்னீர் செல்வம் கூற்றில் நியாயம் இருந்தது. ஆனால் இதே பன்னீர் செல்வம், சென்னைமாகாண உள்துறை அமைச்சராக (நியமன) இருந்த காலத்தில் (1934–1937) குற்றவியல் விதித்திருத்தச் சட்டம் பயன்பட்டதற்கான ஆதாரக்குறிப்புகள் நிரம்பவுள்ளன. சென்னைமாகாணத் தில் சட்டபூர்வமாக இயங்கிய இளைஞர் தொழிலாளர் கழகம் (Madras Young Workers' League) தடைசெய்யப் பட்டது. ஒரு பிரசுரம வெளியிட்டதற்காக வேறொரு சட்டததின் கீழ் கைது செய்யப்பட்ட தோழர் ஜீவானந் தம் விலங்குகள் பூட்டப்பட்டு இழுத்துச் செல்லப் பட் டார். இதில் ஈ. வெ கிருஷ்ணசாமியும் கைதானார். இவை பன்னீர் செல்வம் உளதுறை (நியமன) அமைச் சராக இருந்த காலத்தில் நடந்த சில நிகழ்வுகளாகும். பன்னீர் செல்வமோ இராசாசியோ இருவருக்கும் ஒரு தொடர்ச்சி இருக்கிறது. அரசாங்கத்தின் எதிர்த்தரப பில் இருககும் பொழுதும் ஆளும் தரபபில் இருக்கும் பொழுதும் ஒரே நிலைபாட்டுடன் இருக்க அவா களால் இயலவில்லை. இராசாசி குறிப்பிடுகிற பாராளு மன்றப்பாத நடை முறையின் ஒரு விளைவு இதுவாகும். பன்னீர் செல்வமும் இராசாசியும் இந்த சட்டத்தை எதிர்த்தும் 'உள்ளனர்; வாய்ப்பு இருப்பின் ஏதோ ஒரு நியாயத்தைக் கூறி பயன் படுத்தியும் உள்ளனர். இந்தி யாவிற்குப் பிரிட்டன ஏகாதிபததியம வழங்கிய நன் கொடையான பாராளுமனற வாத அரசியலில் ஆளுங் கட்சியும் ஆளும் கட்சியாக உருமாறிய எந்தக்கட்சியும் ஒரே குரலில் பேசுகின்ற விதத்தில் இந்த சமூக அமைப்பு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது அதாவது சட்டங்களுக்கு உரிய ஒடுக்கு முறையை நியாயப்படுத்தியும் அவற் றின் வர்க்கச் சார்பை மறைத்தும் செயல்பட்டாக வேண்டிய நிலைமையைக் காண்கிறோம. இந்தி எதிர்ப்பு வீரர்களிடத்தில் குற்றவியல் திருத்தச் சட்டத்தைப் பயன் படுத்தியபொழுது நடந்த இத்த

கைய விவாதங்கள் அரசு ஓர் ஒடுக்குமுறைக் கருவி என்பதையும் ஆள வருகின்றவர்கள் எவராயினும் ஒரே திசைச் சிந்தனையாளர்கள் என்பதையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

1938 செப்டம்பர் முதல இந்து தியாலஜிகல்பள்ளி முன் நாள்தோறும் மறியல் நடந்தது. நீதிக்கட்சியின் தலைவரான பொப்பிலி அரசர் தன் ஐரோப்பியச் சுற்றுப்பயணத்தைமுடித்துத் திரும்பியபின் இந்தியைக் கட்டாயமாகக் கற்றுததருவதைக கைவிடடு விருப்பபாட மாகவைக்குமாறு' அரசைக் கேட்டுக்கொண்டார். அதே போன்றுமறியல் போராட்ட வடிவத்தைக கைவிடுமாறும் இந்தி எதிர்ப்புக்குழுவைக் கேட்டுக்கொண்டார். தமிழா களைப் பொறுத்து தமிழ்மொழி இரண்டாவதுமதம் என வருணித்தபொப்பிலி நீதிக்கட்சியின் தமிழ்ததலைவாகள் வருணித்ததைப்போல இநதப் போராட்டத்தை ஆரியர் திராவிடர் கலாச்சாரப் போராட்டமாகக் கருதவிலலை. (Sunday Observer 11-9-1938).ஆந்திரப்பகுதிகளில் 54 பள்ளிகளில் இந்தி கட்டாயமாகக் கற்றுத் தரப்படுதல் குறித்து அங்கு கணடனம் எழவில்லை. பொப்பிலி அரசர் அயல்நாட்டிலிருந்து திரும்பியபிறகு ஆந்திராவில போராடட நிலையைத் தம் அரசியல் மறுவாழவுகருதி பொப்பிலி அரசர் ஏற்படுத்தக் கூடும்' என சென்னை அரசு முன்உணர்ந்தது. (Fortnightly Report.D.no. P.8 Public Dept; 12.10.1938) நீதிக்கட்சியின் முதுகெலும்புகளான ஆந்திர ஜமீனதாரர்கள் 1930களில் ஏற்பட்ட பொருளாதாரத் தேககத்தின் (Depression) மூலமாக வெகுவாகத் தம் பொருளியலபலத்தை இழந்து விட்டனர். ஜமீன்தாரிப் பகுதிகளில் வலுமிக்க குத்தகை விவசாயிகள் என்ற சமூகப் பிரிவு தோன்றத் தொடஙகி விட்டது. நீதிக கடசிக்குள்ளே முனிசாமி நாயுடு தலைமையில் தோன்றிய இந்தப் பிரிவு நீதிக் கட்சியின தலைமையைக கைப்பற்றாத வகையில நீதிக் கட்சியின் ஜமீன்தாரர்கள் அதை ஒடுக்கினர். எனினும் பொருளாதார நெருக்கடி இவர்களது செல்வாக்கின் மீதும் நெருக்கடியைச் செலுத்தியது. இந்நேரத்தில ஜமீன்தாரி முறை பொருளாதாரரீதியில காலாவதியாகிப் போனதால அரசே இதை ஒழிப்பது குறித்து சிந்தித்துக் கொணடிருந்தது அது குறித்த மசோதா ஒன்று சென்னை மாகாண சட்டசபையில் விவாத நிலையில்

இருந்தது. இந்நிலையில் அரசுடனா சலாடைக்குப் போகும் தந்திரத்தைக கையாளவ் கூடாதென்ற நிலையை ஜமீனதாரர்கள் எடுததததாக நாம் அறிகிறோம். மேலும் கட்டாய இந்தி எதிர்ப்பைக் கேடய மாக்கித தம் ஜமீனதாரி முறையைத் தக்கவைத்துக் கொள்ளும் தற்காப்பு யுத்தத்தை நடத்துவதற்கும் உரிய வலு இவர்களிடம் இலலை என அறிகிறோம். எனவே மசோதாவில் தமக்கு சாதகமான திருத்தங்களை ஜமீன் தாரர்கள் வேண்டிநின்றனர். ஆநதிரப் பகுதிகளில் பொப்பிலி வருகைக்குப்பின் கடடாய இந்திஎதிர்ப்புப போராட்டம் உருவாகி விடக் கூடாதென்பதில் இராசாசிஅமைச்சரவை கவனமாக இருநதது. இந்தநேரதநிய வரலாற்றுக் குறிப்புகளைப் படிக்கும்பொழுது பரஸ்பரம இரண்டுதரப்பினரும் தமக்கு பாதகம் விளைவிககககூடிய எந்தவொரு செயலிலும இறங்கவில்லை எனதெரிகிறது. சில கடிதப் போக்குவரததுகளைக கண்டறிந்து நீதிக்கட்சியின செயலற்ற தனமைககும் ஜமீனதாரி சடடத்தில், கொண்டுவநத திருத்தத்துக்கும இடையிலான தொடாபை **ஆளுநர் எர்ஸ்கின்** வெளிப்படுத்தியுள்ளார். (March to Freedom in Madras Presidency 1916–1947, Saroja Sundarajan P. 541) தெலுங்குப் பகுதிகளில் கடடாய இந்தி எதிர்ப்புப்போர் நடைபெறாமறபோனமைக்கு இது ஒரு காரணமே தவிர இதை ஓரே கராணமாகக் கருத இயலாது. எனினும் இந்த நேரத்தில் 1938 நவமபரில்பொப்பிலி அரசர் தானாகவே நீதிக்கட்சியின தலைவா பதவியிலிருந்து விலகினார். அரசியலில **உண்மையிலேயே சாணக்கியரான** இராசாசி நீதிக்கட்சியின் வலுமிகக கருவூலங்களை அப்புறப் படுத்திவிட்டு, கட்டாய இந்தி எதிர்ப்புப் போரின் தலைமைப் பீடததைத் தாக்கத் தொடங்கினார். குற்றவியல் விதித்திருத்தச்சட்டத்தின் 7 (1) பிரிவின் கீழ் பெரியார் மீது வழக்கு 5.12 38 இல் சென்னையில் தொடரப்பட்டது தமிழகப் பெண்களைத் தூண்டியதற்காகக் குற்றம் சுமத்தப்பட்ட பெரியார், நீதிமன்றத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான தொடர்பை அம்பலபபடுத்தி எதிர் வழக்காடாமல் இருந்தார். வழககுமன்றம பெரியாருக்கு மூன்றாண்டுக் கடுங்காவல் தண்டனை கொடுததது. சென்னை சிறையிலிருந்து பெல்லாரி சிறைக்கும் பின்னர் கோவை சிறைக்கும் மாற்றப்பட்ட பெரியார் 167 நாள்கள் சிறைவாழ்க்கைக்

குப்பின் உடல்நலம்கருதி அரசினால் விடுதலை செய்யப் பட்டார் (22.5 1939). சிறையில் இருக்கும் பொழுதே பெரியார் நீதிக்கட்சியின் தலைவராகத் (22.12.1938) தேர்ந்தெடுக்கப்பட்டார். நீதிக்கட்சியின் தலைவராவ தற்கு கே.வி.ரெட்டி, பாத்ரோவ், பி.டி. இராசன், முத்தையா செட்டியார், பன்னீர் செல்வம் ஆகியோர் மறுத்தபின் பெரியார் மீது அது சுமத்தப்பட்டது. E.Sa.Viswanathan, The Political Career of E.V. Ramasamy Naicker P 227) நீதிக்கட்சி தமிழகப் பகுதியின் இயக்கமாக மாறிவிட்டதை இது தெரிவிக் கிறது.

பெரியார் சிறையில் இருக்கும் பொழுதும் கண்டனக்கூட் டங்களும் பேரணிகளும் மறியலும் தொடர்ந்து நடந்தன. 1.6.38 முதல் நாள்தோறும் நடந்தது. சென்னை யிலிருந்து மட்டுமின்றி நெல்லை, மதுரை, இராமநாத புரம், சேலம், வடார்க்காடு ஆகிய மாவட்டங்களிலிருந் தும் மறியல் வீரர்கள் திரட்டப் பட்டனர். மேற்சொன்ன புறநகர்ப் பகுதிகளில் சுயமரியாதை இயக்கம் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தது. சிங்கப்பூரிலிருந்தும் தமிழர்கள் இங்கு வந்து மறியல் செய்தனர் (21 1.39 மறியல்) இவர்களில் பெண்களின் பங்கும் குறிப்பிடத் தக்கதாகும் மறியல்வீரர்கள் இருவர் மருத்துவமனை யில் இறந்தனர். தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த தாளமுத்து (15.1.1939), நாடார் சாதியைச் சார்ந்த நடராசன் (11.3.39) ஆகிய இரண்டு மாவீரர்களும் கட்டாய இந்தியை எதிர்த்த போராட்டத்தில் தம்மைத் தியாகம் செய்து கொண்டனர். இவர்கள் மரணத்தைக் காங்கிரசு ஆட்சியாளர்கள் கிண்டல் செய்தனர்: இந்தி எதிர்ப்புப் போராட்டத் தலைமையினர் தமபோராட் டத்துக்கான கிளர்ச்சித் தூண்டலாக மட்டும் பயன் படுத்திக் கொண்டனர்.

இருவருக்குமான இரங்கல் கூட்டங்கள் நிரம்பநடந்தன. ஆயிரக் கணக்கான அளவில் மக்கள் திரண்ட இந்தக் கூட்டங்கள், மக்களின் உணர்ச்சியைத் தூண்ட வல்ல நிகழ்ச்சிகளாக அமைந்தன. இந்தப் போராட்டத்துக் கான காரணத்தையும் தியாகத்தையும் காப உன்னதமாக மதிக்கிற சூழலில், பிணங்களைச் சுமந்துகொண்டு அரசியல் நடத்தியாக வேண்டிய மற்றும் உணர்ச்சி

யை மட்டுமே தூண்ட வல்ல அரசியல் கலாச்சாரத்தை யும் நாம் இங்கு அதன் தொடக்க நிலையில் காண் கிறோம். திராவிட இயக்கத்தின் அழுத்தமான அரசி யல் பண்பாட்டு அம்சங்களில் ஒன்றான இதை அண்ணாதுரையின் இரங்கல் உரைகளில் காணஇயலும்.

ஓர் எடுத்துக் காட்டு:-

> 'இதோ இங்கே நடராசனின் பிணம்.. .இவரது இதயம் துடிப்பதை நிறுத்தி விட்டது. இவரது இரத்த ஓட்டம் நின்று போயிற்று ..இவரது தலை முடி குத்திட்டு அசைவற்று நிற்கிறது தன் இனத் தின் சுதந்திரத்துக்கும் கலாச்சாரத்துக்கும் உரிய போரில் சண்டையிடும் பொழுது இவர் மரண மடைந்ததை இது எடுத்துக் காட்ட வில்லையா? ஆயிரக்கணக்கில் திரண்டுள்ள மக்களே! நடராசனின் எழுச்சிமிக்க உதாரணத்தை நாமும் பின்பற்றஉறுதி எடுத்துக் கொள்ள வேண்டாமா? அந்தோ பரிதாபம்! நடராசன் இப்போது நம்மிடம் இல்லை இந்தி திணிக்கப் பட்டால் தமிழ் மொழியின் வளர்ச்சி கெடுமா என்று இனி யாரேனும் கேள்வி கேட்டால், அவருக்குச் சொல்லுங்கள்: **இந்தி வந்தது. ஒரு தமிழன் இறந்து போனான்.** அதைத் தடுக்கும் முயற்சியில் இறந்து போனான் . .'

16.1.39 அன்று நடராசனின் இறுதி ஊர்வலத்துக்குப் பின் ஆல்பர்ட் ஜேசுதாசன் தலைமையிலான இரங்கல கூட்டத்தில் அண்ணாதுரை உரையின் ஒரு பகுதி இது வாகும். இது நிலை இவ்வாறிருக்கும் பொழுது காங்கிரசு அமைச்சர்கள் மறியல் வீரர்களைக் கிண்டல் செய்தனர். அற்பக் கூலிக்கு அமர்த்தப்பட்ட கூலியாள் கள் என இராசாசி வருணித்தார் (Madras Mail 1.1.39) சிறையில் ஒழுங்காக சாப்பாடு கிடைக்கு மென்பதால் பல அரிசனங்கள் கைதாகியுள்ளதாகத் தமிழரான டாக்டர் சுப்பராயன சட்டமன்றத்தில் கிண்டல் செய்தார் (Madras Legislative Assembly Debates, Vol. 11, 1939, p.476) இவர்கள் கிண்டலில் அரசியல் நோக்கு இருந்தது. படிப்பறிவில்லாத, ஏழைமக்களைப் பணம்கொடுத்துத் திரட்டி மறியலில்

ஈடுபடுத்துகின்றனர் என்று இராசாசி கருதினார். காங்கிரசுத் தரப்பில் மட்டுமின்றி நீதிபதிகளும் ஆளு நரும் இவ்வாறே கருதியுள்ளனர் 'ராபபிட எதுவுமே இல்லாத' பலர்மறியலில் ஈடுபட்டுக் கைதான பின்னரும விடுதலை பெற அவர்களுக்கு விருப்பமில்லையென்றும் சிறையில் அவர்கள் அரிசிச் சோறே கேட்கின்றன ரென்றும், ஒரு நீதிபதி குறிப்பிட்டு, அரிசிச்சோறே அவர்களை மறியலில் ஈடுபாடச் செய்தது என முடிக் கிறார். (தலைமைச்செயலர்க்குக் கடிதம், அரசுஆணை எண் 394, பொதுத்துறை, 3 3.39) இத்தகைய கூற்று களில் காங்கிரசுக்காரர்கள் பெருமை அடைந்து கொள்ள இயலாதபடி, ஆளுநரின் அறிக்கை இருந்தது. இந்தி எதிர்ப்புப்போர் மறியலில் ஈடுபட்டுக்கைதானவர் களில் பெரும்பான்மையினர், ஏறகனவே ஒத்துழை யாமை இயக்கத்திலும ஈடுபட்டுக் கைதானவா களே என்பதை ஆளுநர் குறிப்பிட்டார். மேலும் தங்கட்கு பணம் கொடுக்கும் வரையில் காங் கிரசுக்கு சார்பாகவோ எதிராகவோ நடக்கும் எந்த மறியல் போராட்டத்திலும இவர்கள் ஈடுபடதயங்க மாட்டார்கள் என்றும். ஆளுநர் குறிப்பிட்டுளளார். (Fortnightly Report D. No p 4-13. Public, Dept. 20.7.38) இத்தகைய அதிகார வர்க்கத் தரப்பினா மட்டுமன்றி மறியல் வீரர்களே இது குறித் தும் குறிப்பிட்டுள்ளனர் எனத் தெரிகிறது. பல்வேறு இடஙகளிலிருந்தும் திரட்டப்பட்ட மறியல் வீரர்கள் பல காரணங்களினால் திரட்டப் பட்டிருக்கலாம எனத் தெரிகிறது. பணம் கொடுத்தும் திரட்டியுள்ளனர்; உள்ளூர் செல்வாக்குப் பெற்ற இடை நிலைத் தலைவர் களின் விசுவாசமிக்க தொண்டர்களையும திரட்டி யுள் ளனர் (குடிஅரசு. 28. 8 38; Hindu, 9. 8, 38) இது ஒரு மறியலில ஈடுபடும் அனைவரையும் எத்தகைய நிலையில் காண்பது என்பதில் நமக்கு ஒரு சிக்கலை உருவாக்குகிறது

1930 க்குபபின் தோன்றிய மக்கள் திரள் அரசியலில் ஈர்க்கப்பட்ட வெகுவான மக்களின் அரசியல் புரிதல் குறித்த கணிப்பே இஙகு தேவைப படுகிறது. காங்கிரசு அமைச்சர்கள் கூற்றில்— ஆளுநா மற்றும் நீதிபதி கூற்றுகளில் எவ்வித அடிப்படை நியாயமும் இல்லை என மறுகக வேண்டிய அவசியமே நமக்கு வேண்டிய

தில்லை. ஒருபோராட்டத்தை— ஒத்துழையாமை இயக்கமாகவோ அல்லது இந்தி எதிர்ப்பு இயக்கமாகவோ— இருப்பினும்— கொச்சைப் படுத்துகின்ற அவர்களின் உள் நோக்கங்களில் நாம் உடன் பாடுகொள்ள வேண்டியதில்லை. படிப்பறிவில்லாத, வறிய நிலையில் உள்ள, அரசியல் புரிதல் மிகக்குறைவாக எளிதில் ஏமாறக் கூடிய மக்கள் பெரும் பாலானோர் இருக்கும் ஒரு சமூகத்தில் மக்கள் திரள் இயக்கத்துக்கு நபர்களை ஈர்க்கும் முறையையே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தி எதிர்ப்பு மறியலில் ஈடுபட்டிருந்த எல்லோரது அரசியல் புரிதலும் ஒரே அளவாக இருந்திருக்காது; அதோடு மட்டுமின்றி எல்லோருக்கும் முதலில் அரசியல் புரிதல் இருந்திருக்க வேண்டும் எனவும் நாம் எதிர்பார்க்கவும் இயலாது. நாம் மேற்சொன்ன சூழலில் இதை எதிர்பார்க்க இயலாது. அரசாங்கத்தை எதிர்த்த போராட்டங்களில் மக்கள் தத்தம பிரச்சனைகளின் ஊடாகவே முதலில் முன்வருகின்றனர். இவ்வாறு திரள்வதை **அரசியலற்ற திரட்டல்** (apolitical mobilisation) எனலாம் இத்தகைய திரட்டலின் வழி போராட்டத்துக்கு வரும மக்களை அரசியல் புகட்டுதலின் மூலமாக அரசியல் சக்தியாக உருமாற்ற இயலும் ஒரு குழு நிலையிலான அரசியலிலிருந்து மக்கள்திரள் அரசியல் நிலைக்குச் செல்லும் காலத்தில் மக்களை இந்த விதத்தில் கணக்கிலெடுக்க வேண்டும். இதற்கு, மக்கள் திரள் இயக்கத்தலைமை உணர்வு பூர்வமாக அரசியலை முன்வைக்கவேண்டும். அரசியலற்ற முறையிலே தொடக்கத்தில மக்கள் திரள்கின்றனர் என்பதற்காக இயக்கத்தின் தலைமை, அரசியலை முன் வைக்கக் கூடாது என்பதல்ல. அரசியலற்ற விதத்தில் திரளும் மக்களை அரசியல்மயப்படுத்தவில்லையெனில், அதற்கான திட்டமும நடைமுறையும் இயக்கத் தலைமையிடம் இல்லையெனில் இயக்கம் கொள்கைக்கான இயக்கமாக இல்லாமல் பிழைப்புவாத இயக்கமாக இழிந்து போய் விடும். ஒத்துழையாமை இயக்கத்திலும இந்தி எதிர்ப்புப் போரிலும் படிப்பறிவில்லாத ஏழை மக்கள் எவ்வித ஆழமான அரசியல் புரிதலின்றி இயக்கத்தின் மேல தோற்றத்தில உள்ள முழக்கங்களினால் மட்டுமே கவரப்பட்டும் அல்லது தம் வாழ்நிலைகளில் உள்ள பலவேறு இடர்ப்பாடுகளைக் கருதியும் ஈர்க்கப்பட்டிருக்கலாம. அரசியலற்ற அல்லது

அரசியலுக்குப் புறம்பாக இவ்வாறு திரளுவதில் எவ்விதத் தவறையும் மக்கள் செய்யவில்லை. ஆனால் இயக்கங்களின்தலைமை எவ்விதத்தில் மக்களை நெறிப்படுத்தியது என்பதே இங்கு பிரதான பிரச்சினையாகும். அந்தவிதத்தில் காணும் பொழுது இங்கு நடந்த மக்கள் திரள் இயக்கங்கள் மக்களை **செயலூக்கமற்ற பங்கேற்பாளர்களாகவே** (Passive participants) வைத்திருந்தன என அறிகிறோம். **இயக்கங்களின்தலைமையின் வர்க்கக் குணத்தையும் நலத்தையும் எதிரொலிக்கும் இந்தப் போராட்டங்கள், போராட்டங்களில் ஈடுபடும் மக்களின் வர்க்கக்குணத்தையும்நலத்தையும்எதிரொலிக்கவில்லை** பெரியாரின் விடுதலைக்குப்பின 1939 ஜூன் முதலவாரம் வரை சிறையில் உள்ள மறியல் வீரர்களை அவர்களின் தண்டனைக்காலம் முடிவதற்கு முன்னரே அரசு விடுதலை செய்தது. டாக்டர் தருமாம்பாள் தலைமையில தன்னைச் சந்தித்த குழுவிடம் (18.6.39) இந்திகற்பித்தலில் கட்டாயம் இல்லாதபடி அரசு கவனித்துக் கொள்ளும் என இராசாசி உறுதி அளித்தார். The Political Career of E.V. Ramasamy Naicker, P 252) இது குறித்த அரசின் குறிப்புகளைக்காணும் பொழுது இத்தகைய நிலைக்கு அரசு வந்திருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது. ஆளுநர் இந்திய வைசிராய்க்கு அனுப்பியதந்தியொன்றில் (6.11.39), 'இந்த மாகாணத்தில் கட்டாய இந்தியைக் கொண்டுவந்தது மாபெரும் தவறு என்ற கருத்தை இராசாசி கொண்டிருப்பதாகத் தெரிகிறது' எனக்குறிப்பிட்டுள்ளார். (Fortnightly Report D. No. P. 87, Public Dept; 10.11.1939) மேலும் ஆளுநரின் இன்னொருதந்தியில் (25.11.39) 'இந்த மாகாணமக்கள் மீது அவர்கள் விருப்பத்துக்கு மாறாக இந்தி கட்டாயமாக்கப்பட்டது என்றும் அதை அவர்கள் வெறுக்கின்றனர் என்றும் மீண்டும் குறிப்பிடுகிறேன' என்று வைசிராய்க்குத் தெரிவித்துள்ளார் (Fortnightly Report D.No.P.98, Public Dept., 1.12.39) இராசாசி அமைச்சரவையின் சிந்தனை மாறறத்தையே இவையெல்லாம் குறிப்பிடுகின்றன. 1938 அகடோபரில் கூடிய அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியில் 'இந்தி கட்டாயப பாடமாகக் கற்றுத்தரப்படவேண்டும்' என்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது 1937 இல் காங்கிரசு அரசாங்கம் அமைத்த மாகாணங்களில் சென்னை

மாகாணத்தில் இந்தியைக் கட்டாயமாக்கியதற்குப் பின்னர் ஏற்பட்ட அனுபவங்களைக் காங்கிரசு கணக்கி லெடுத்துக் கொணடதாகத் தெரிகிறது எனினும் இந்தக் கொள்கைக்கு ஏற்பட்ட எதிர்பபுக்குத் தலை வணங்கி இதைக் கைவிடுதல், அரசாங்கத்தின் சுய கௌரவத்துக்குப் பாதிப்பு எனககருதப்பட்டது. மேலும் அரசு இந்தி எதிரப்பாளர்கள் மீது நாக்குதலைத் தொடர்ந்து கொண்டே இருந்தது. டாக்டர்தருமாம்பாள் வீடு, விடுதலை மற்றும குடிஅரசு அலுவலகங்கள் போலீசாரால சோதனை எனறபெயரில் சூறையாடப் பட்டன. (ஆகஸ்டு 1939). போலீசாரின் அத்துமீறிய செயல்கள் குறித்து சட்டமன்றத்தில் நீதிக்கட்சியின் தலைவர் முத்தையா செட்டியார் கொணடுவந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. எவ்வித விவா தமும் இனறிக்கூட நிராகரிககப்பட்ட இந்தச் செயல், சட்டமன்றமோ பாராளுமன்றமோ தம வன்முறை அமைப்புகளான போலீசையும் இராணுவத்தையும் எவ்வித விமரிசனத்துக்கும் உட்படுத்தத்தயாராக இல்லை என்பதைத் தெரிவிககிறது.

இந்நேரத்தில், செப்டம்பர் 1939 இல் ஏற்பட்ட உலகப் பெரும் போர் இந்தி எதிர்ப்புப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தது. போரில இநதியாவைக் கலநதாலோ சிக்காமலே இந்தியாவைப் பிணைத்ததற்குக் காங்கிரசு எதிர்ப்பு தெரிவித்தாலும், இந்தியா குறித்த கொள் கையை பிரிட்டன் உடனடியாக அறிவிதது அதை நிறை வேற்றினால் ஒத்துழைக்கத்தயார் என்று காங்கிரசு குறிப்பிட்டது. இதற்குப் பிரிட்டன் ஒத்துக் கொள்ளாததால இதுவரை அளித்த ஒத்துழைப்பைத் திரும்பப் பெறுவது என்ற முடிவில, காங்கிரசு தம் அமைச்சரவைகளைப் பதவி விலகச் செய்தது. அதன்படி 26.10.39 இல் இராசாசி அமைச்சரவை பதவி விலகியது இந்நேரத்தில் 25 10 39 இல் கூடிய நீதிக்கட்சியின் செயற்குழு, உலகப்போரில் பிரிட்டனை மனப்பூர்வமாக ஆதரிப்பதென்றும் இந்தி எதிாப்புக் கிளர்ச்சியைக் கைவிட்டு அரசாங்க ஆதரவு நடவடிக் கைளில் ஈடுபடுவதென்றும தீர்மானிததது(குடிஅரசு. 29 10.39). இதனபின பெரியார், முத்தையா, பன்னீர் செல்வம் ஆகியோர் ஒரு கூட்டறிக்கையில் 'இந்தி கட்டாயமாக்கப்பட்டிருப்பதை நீக்காவிட்டால் தமிழ்

மக்களுக்கு சாந்தியோ சமாதானமோ திருப்தியோ ஏற்படாதென்றும்' தெரிவித்துக் கொண்டனர். (குடி அரசு 19.11.39). இதன்பின் பெரியாரின் வேண்டுகோளின்படி இந்தி எதிர்ப்பு உயர்குழு 31.12.39 இல் காஞ்சிபுரத்தில் கூடி, பின்வரும் முடிவுகளை எடுத்தது. (குடி அரசு 7.1.40)

1) உலகப் பெரும்போரில் பிரிட்டன் அரசைஆதரித்தல்.
2) இதுவரை கட்டாயமாக 125 பள்ளிகளில் இந்தி கற்றுத் தரப்படுவதை ரத்துசெய்ய ஆளுநரை வேண்டுதல்.
3) இந்த ஆண்டில் புதிதாக 100 பள்ளிகளில் கட்டாயமாக கொண்டுவரப்படும் என்ற இராசாசி அமைச்சரவையின் ஆணையை நீக்கியதற்கு நன்றி தெரிவித்தல்

நன்றியும் வேண்டுதலும் ஆதரவும் ததும்பி நிற்கும் இந்தப் பாசறை முடிவுகளை செயல்படுத்த பெரியாரைத் தலைவராகவும் அண்ணாதுரையைச் செயலராகவும் கொண்ட இந்தி எதிர்ப்பு வாரியம் நியமிக்கப்பட்டது. ஏற்கனவே இந்தி எதிர்ப்பு மறியல் போராட்டம் பெரியாரின் அறிக்கைக்குப்பின் (29.10.39) நிறுத்தப்பட்டு விட்டது. போராட்டம் தொடங்கப்படும் முன்னர் எந்த நிலை இருந்ததோ அதே நிலையே போராட்டத்தை முடிக்கும் பொழுதும் இருந்தது என்பது கவனிக்கத் தக்கது. போராட்டத்தை அரசுக்குச் சார்பாக முடித்துக் கொண்ட பிறகே மறியல்வீரர்கள் அனைவரும்13.11.39 அன்று விடுதலையாயினர். அப்பொழுதும் கட்டாய இந்தி நீக்கப்படவில்லை. கட்டாய இந்தியை நீக்கலாம் என ஆளுநர் விரும்பினாலும் (வைசிராய்க்குத் தந்தி 25–11–39), இந்திய வைசிராயும் பிரிட்டிசு இந்திய மந்திரியும் காங்கிரசை உடனடியாகப் பகைத்துக் கொள்ள விரும்பாமல் இது குறித்து முடிவெடுப்பதில் காலம் கடத்தினர் என அறிகிறோம். இறுதியில் கட்டாய இந்தி நீக்கப்பட்டு, விருப்பப்பாடமாகக் கற்கத் தடையில்லை என்று அறிவித்து அரசு ஆணை (எண் 301, கல்வித்துறை, 21.2. 1940) வெளியிடப்பட்டது. முதல் மூன்று பாரங்களில் தேர்வு எதுவுமில்லாமல் கற்றுக் கொடுப்பதால் போதிய அறிவோ திறமையோ ஏற்படாதென உணரப்பட்டதால் விலக்கிக் கொள்ளப்

பட்டதாக அரசு ஆணை குறிப்பிட்டது இதற்குப்பின் 28.2.40 இல் அரசு வெளியிட்ட விளக்கத்தில் **இந்தியை விருப்பப்பாடமாக ஏற்றுக்கொள்வதற்குத் தடையில்லை** யென்றும், **இந்தியை உயர் நிலை வகுப்புகளில் பாடமாக வைப்பதால் தாய் மொழிக்குக் கெடுதல் உண்டாகுமெனக் கூறுதல் தவறாகும்** என்றும் குறிப்பிடப் பட்டது (குடிஅரசு 3.3.40).

நீதிக்கட்சித் தமிழர்கள், தமிழறிஞர்கள், முசுலீம் லீக் கட்சியினர், வணிகர்கள், பெண்கள் ஆகிய பலதரப் பட்ட மக்கள் பிரிவினர் தொடர்ந்து 500 நாள்களுக்கும் மேலாக (1. 6. 38 முதல் 30 10. 39 வரை) நடத்திய இந்தப்போராட்டத்தில் இருவர் பலியுண்டும் ஒருவர் பத்துவாரங்கள் பட்டினிப்போர் இருந்தும் குற்றவியல் திருத்தச்சட்டத்தின் கீழ் 1271 பேர்கள் கைதுசெய்யப் பட்டும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இதற்குப் பின்தள மாக இருந்தும் செயல்பட்டனர். காந்தியின் சட்டம் மறுப்பு இயக்கத்துக்குப்பின்னர். நடைபெற்ற குறிப் பிடத்தக்க போராட்டமாக இதை நாம் கருதலாம். இன்னும் குறிப்பாக **தமிழ்பேசும் பகுதிகளில் மட்டுமே நடந்த முதல் தேசிய இனவிழிப்புணர்ச்சி இயக்கம்** என இதைக்குறிப்பிடலாம். ஆனால் **இந்த இயக்கத் தின் தலைமை மற்றும் அதன் வரையறை** ஆகிய இவற்றோடு இணைத்து இது குறித்துக் கணிக்க வேண்டும்

மொழிப்பாடங்களில் ஆங்கிலம் கட்டாயமாக இருந்தது. அத்தகைய கட்டாயம், பெருமிதமாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. பெரியாரைப் போன்றவர்கள் இதை வெளிப்படையாகவே குறிப்பிட்டனர் **இந்தி பொது மொழியா** என்ற நூலை எழுதிய (1937) மறைமலை அடிகள், **இந்தி பொதுமொழியாக வேண்டாம்** என்ற கட்டுரை எழுதிய சுத்தானந்தபாரதி (செந்தமிழ்ச்செல்வி, 1936) மற்றும் தமிழவேள் இராவ்சாகிப் உமாமகேசுவரம் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகிய தமிழறிஞர்கள் அனைவரும் தவிர்க்கவியலாதபடி **ஆங்கிலவேள்களாகவும்** (விரும்பிகளாகவும்) இருந் தனர். உயர்நிலைப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலம் முதல்மொழியாகவும் கட்டாயமாகவும் கற்றுத்தருவதற்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை.

இரண்டாவது மொழிப்பாடமாகத் தாய்மொழியைக் கட்டாயமாகக் கற்கவேண்டிய சூழல் அன்றைக்கு இல்லை. பலதேசிய இனங்கள் கொண்ட மாகாணமான சென்னையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமசுகிருதம். உருது. மற்றும் ஏனைய ஐரோப்பிய மொழிகள் ஆகிய இவற்றில் ஒன்றைக் கற்றால் போதும் இதிலும் தமிழ் கட்டாய மொழி இல்லை. மேலும் தாய்மொழியே கட்டாயமாக இராத பொழுது இந்தி கட்டாயமா என இதை ஒரு விவாதத்துக்குப் பல தமிழறிஞர் பயன்படுத்தியுள்ளனரே தவிர, இந்தி எதிர்ப்பு வாரியம் அமைக்கப்பட்ட திருச்சி பாசறைக் கூட்டத்துத் (21.4.38) தீர்மானங்களில் தாய்மொழியின் கட்டாயத்தன்மை இல்லை. 1938 ஐ விடுவோம. 1990 ஆம் ஆண்டில் திராவிட இயக்கத்தின் நீண்ட நெடிய 23 ஆணடுகள் ஆட்சிக்குப் பின்னரும் தமிழ்மொழிக கல்வி கட்டாயமிலலை என்பதை இங்கு மனங்கொள்தல் ஆய்வுவட்டத்துக்கு அப்பாற்பட்டதாக இராது. திராவிட இயக்கத்தைப் பொறுத்து கட்டாய ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக இந்தி கட்டாயமாக இருககக் கூடாது என்பதுதானே தவிர தாய் மொழி கட்டாயமாக இருகக வேண்டும் என்பதலல, இத்தகைய கோரிக்கை நிலையை 1937–1940 மொழிப் போராட்டத்தில் உணரலாம். கட்டாய இந்தியை மட்டுமல்ல, இந்தி விருப்பப் பாடமாக வருவதையும் ஒழிக்கவேண்டும் என்பதும் இந்தப் போராட்டத்தின் கோரிக்கையாகவும் இருந்தது. (தமிழன் தொடுத்த போர், பக் 66-67). நீதிக்கட்சி காலத்திலேதான் முதன் முறையாக இந்தி உயர் நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விருப்பப்பாடமாக ஏற்கப்பட்டது என்பதையும் விருப்பப்பாடத்தைக் கட்டாயபாடமாக மாற்றுவதற்கு உரிய வசதியும் நீதிக்கட்சிக்காலத்திலே ஏற்பட்டது என்பதையும் கவனிக்கும் பொழுது நீதிக்கட்சியின் தலைமைக்கு இந்தக் கோரிக்கையின் மீதான ஈடுபாடு (Commitment to the demand) உறுதியுடன் இருந்ததாக நம்மால் முழுமனதுடன் ஏற்க இயலாது. மேலும் கட்டாயபாடமாக இருப்பதை எடுப்பதே கோரிக்கையாக இருப்பினும்125 பள்ளிகளில் கட்டாயப்பாடமாகவைக்கப் பட்டதை நீக்குவதற்கு (20.2.40) முன்னரே போராட்டம் நிறுத்திவைக்கப்பட்டதாக பெரியாரால் மட்டுமே—இந்தி எதிர்ப்பு வாரியத்தைக் கலக்காமலே—அறிவிக்கப்பட்டது.

இங்கு பெரியார் எவ்வித அமைப்புக் கட்டுப்பாடுமின்றி யும் தனிநிலைப்பட்டதாகவே அறிவித்தார். இந்தி எதிர்ப்பு உயர் நிலைக்குழு என்பது பெயரளவிலான அமைபபாகவும் பெரியாரே எல்லாம என்ற நிலையே செயலளவிலானதாகவும் இருந்தமையை இது எடுத்துக் காட்டுகிறது போராட்டத்தின அமைப்புவடிவத்தோடு இது தொடாபு கொண்டதாகும். போராட்டத்தின்வெளிப் படையான கோரிக்கை நிறைவேறாததற்கு முன்னரே இந்தியைக் கட்டாயப்பாடமாகப் புகுத்திய பார்ப்பனீய ஆட்சி அழிந்து வேறுஆட்சி ஏறபட்டிருபபது முதலிய சில காரணங்களை முனனிட்டு நிறுததுவதாகப் பெரியார் குறிப்பிட்டுள்ளதாகவும் அறிகிறோம் (தமிழன் தொடுத்தபோர், பக். 95). கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் காங்கிரக அரசின் பதவிவிலகலோடு பெரியார் தொடர்புபடுத்திக் குறிப்பிடுதல், போராட் டத்தின் உன்னத நோககத்தைக கொச்சைப்படுத்து வதாகத் தோன்றுகிறது. அதேநேரத்தில் போராட்டத் தலைமையின் வரையறையையும் வர்க்க எல்லையை யும் நமக்குச் சுட்டுகின்றது.

இந்தப் போராட்டம் தமிழ்பேசும் பகுதிகளில் மட்டுமே நடநதது. அதிலும் குறிப்பாக சென்னைநகரில் (சில நேரத்தில் சேலத்தில்) மறியலும் புறநகரங்களில் கண்டனக் கூட்டங்களும் நடந்தன. போராட்டததில தமிழறிஞர்கள் இருப்பினும செயல் பூர்வமானதலைமை சுயமரியாதை இயக்கமே ஆகும. சென்னைமாகாணத் தில் தமிழ்பேசும் பகுதிகளில மடடுமே சுயமரியாதை இயக்கம் இருந்தது. சென்னைமாகாணத்தில் நகர்மய மாதல போக்கு, தமிழ்பேசும் பகுதிகளிலே அதிகம் நடைபெற்றது. மேலும் பம்பாய், கலகத்தா ஆகிய மாகாணங்களைப் போன்று ஓரளவு நிறைவளிககத்தக்க விதத்தில் இங்கு தொழில் வளர்ச்சி இல்லையெனினும் சென்னைமாகாணத்தில் ஏற்பட்ட தொழில் மயம பெரிதும் தமிழ்பேசும பகுதிகளுககுளளே இருந்தது என அறிகிறோம். முதல் உலகப் பெரும போா வரை இங்கு பிரிட்டன் நிறுவனங்களின் மூலதனமே ஆலைத்தொழில், தோட்டத்தொழில, வாத்தகம் ஆகியவற்றில பெருத் திருந்தது. அதன்பின் ஏகாதிபத்தியம் வழங்கிய பாது காப்பான சலுகைகளைப பயனபடுத்தி வட இந்திய பார்சி, பனியா, மார்வாரி ஆகிய பிரிவினரது மூலதனம்

தமிழ்நாட்டில் ஆலை, தோட்டம், வர்த்தகம ஆகியவற்றில் மட்டுமின்றி தொழில்களைக் கட்டுப்படுத்தக் கூடிய வங்கிதொழில் இனசூரன்சு தொழில் ஆகியவற்றில் பிரிட்டன மூலதனததோடு இணைந்தும் தனியாகவும் இருந்தது. தமிழநாட்டுக்குள இருந்த சமூகப்பிரிவுகளில் முதன்மை நிலைகளாக நாடார், பிராமணர், செட்டியார் ஆகிய பிரிவுகளைக் குறிப்பிடலாம். விவசாயத் துறை உபரியைக கொண்டு தொழில்துறைக்கு நாயுடு சாதிமுன்னேறி வந்ததைக குறிப்பிடலாம. நாடார்களின் வர்த்தகமூலதனம் பெருத்தது. வர்த்தகத்தில் மட்டும் இருந்த நாடார்கள் ஏகாதிபத்திய நிறுவனங்களுக்குப் பொருளைப் பெற்றுக்கொடுக்கும் தரகுவணிக முதலாளிகளாகவே இருந்தனர். (சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும், கோ. கேசவன், பக். 57-58). பிராமணர்கள வட்டித் தொழிலிலும வர்த்தகத் தொழிலிலும தம் மூலதனத்தைக் குவித்திருந்தனர். வங்கிதொழிலிலும் இன்சூரன்சு தொழிலிலும ஆலைத் தொழிலிலும இவர்கள தம மூலதனத்தைப் பயன்படுத்தி பிரிட்டன் நிறுவனங்கள் அமைத்த நிாவாக முகமை (Managing Agency) யில் இணைந்திருந்தனர். (மேற்படி நூல, பக் 63-65) இவாகள குறிப்பாக மின்நிறுவனம, இரசாயனப் பொருள் நிறுவனம், சர்க்கரை ஆலை, சிமெண்டு ஆலை, பேப்பர் ஆலை மற்றும் மோட்டார் உதிரிப்பாகங்கள ஆலை ஆகியவற்றில் பிரிட்டன் நிறுவனங்களுடன் இணைந்து மூலதனமிட்டிருந்தனர். இவர்கள் மூலதனத்தைக் காட்டிலும் அபரிமிதமான மூலதனக்குவியலைக் கொண்டிருந்த செட்டியார் மூலதனம், நூறபுநெசவு ஆலை, சர்க்கரை ஆலை, உரப்பொருள் ஆலை, மோட்டார் உதிரிப் பாகங்கள் ஆலை, இன்சூரன்சு, மற்றும் வங்கித் தொழில் ஆகியவற்றில் முனைந்திருந்தது. இவர்களும் பிரிட்டன் நிதிமூலதன நிறுவனங்களுடன் பிணைந்திருந்தனர். இங்கு குறிப்பிடத்தக்கது என்னவெனில தமிழ் நாட்டில் உள்ள நாடார், பிராமணர், செட்டியார் மூலதனம் அனைத்தும் ஏகாதிபத்திய மூலதனத்தோடு பிணைப்புக் கொண்டவை என்பதோடு மட்டுமினறி, அதன் இளையபங்குதாரராகவும். இருந்தது. இன்னும் சொல்லப் போனால ஏகாதிபத்திய நிறுவனம் நடத்தும் ஒரு நிர்வாக முகமையில் செட்டியார் மூலதனமும் பிராமணர் மூலதனமும் இணைந்தே கூடசெயல்பட்டன.

குறிப்பாக ஹார்வி முகமையில் முத்தையா செட்டியாரும் சங்கரலிங்க ஐயரும் இணைந்திருந்தனர். பாரி முகமையில் எம்.சி.டி, முத்தையா செட்டியாரும் சீனிவாச ஐயரும் இணைந்திருந்தனர். மேற்குறிப்பிட்ட அரங்கில் தமிழநாட்டுக்குள் செட்டியார் மூலதனத்துக்கு அடுத்த நிலையில் பிராமணர் மூலதனம் இயங்கியது. பிராமண மூலதனத்தை ஒரு பிரதான போட்டி என்று சொல்ல இயலாது. செட்டியார் மூலதனத்துக்குப் பிரதான போட்டியாக வடஇந்திய. பார்சி—பனியா மூலதனம் இருந்தது. உதாரணமாக சிமெண்டு, பஞ்சாலை, உப்பொருள் ஆலை ஆகிய தொழில்களில் வடஇந்திய மூலதனத்தின் குவியலோடு செட்டியார் மூலதனம் போட்டியிட முடியவில்லை. இவற்றைவிட வங்கித்தொழிலிலும் இன்சூரன்சுதொழிலிலும் செட்டியார் மூலதனம் வடஇந்திய மூலதனத்துக்கு ஈடுகொடுக்க இயலவிலலை. இந்தத்தொழில்கள், பல தொழில்களைக்கட்டுப்படுத்தும் நிலையில் இருந்தன. இந்தியாவிலேயே பிரிட்டன் மூலதனத்துக்கும் பார்சி—பனியா மார்வாரி மூலதனத்துக்கும் அடுத்த நிலையில் குவிந்துள்ள செட்டியார் மூலதனம், தமிழ் நாட்டுப பகுதிகளில் உள்ள தொழிலகளில் வட இந்திய மூலதனத்தின் வடிவத்தில் தனக்குரிய போட்டியைக் கணடது. 1930 க்குப்பின் இந்த நிலையில ஒரு குறிப்பான வளர் நிலையும் ஏற்பட்டிருந்தது. வட இந்திய பார்சி-பனியாமார்வாரி முதலாளிகளுடன் தமிழ்நாட்டுப் பிராமண முதலாளிகள் இணைந்து பலநிறுவனங்களைக் கூட்டு நிர்வாக முகமைகளில் தொடங்கலாயினர். டால்மியா (பனியா நிறுவனம்- சிமெண்டு) மோடி (பார்சி நிறுவனம் —சிமெண்டு, தோட்டத் தொழில்), பிர்லா (மார்வாரி திறுவனம்— மோட்டார் தொழில்) ஆகிய வட இந்திய முதலாளிகளுடன் இங்குள்ள பிராமண முதலாளிகள் தம மூலதனத்தைக் கூட்டு மூலதனமாக இணைக்கும் பொழுது தமிழ் நாட்டில் அது பலத்த சக்தியாக உருவெடுத்தது. இந் நிலையில் செட்டியார் மூலதனத்துக்கும் பார்சி—பனியா-மார்வாரி பிராமண மூலதனததுக்கும் இடையிலான மோதலைக காணமுடியும். இந்த மோதல் முழுமுற்றானதுஅல்ல. இதே செட்டியார். மூலதனம (முத்தையா செட்டியார்) பின்னாளில் பிர்லாவுடன் சேர்ந்து இந்துஸ்தான் கார்களின் உதிரிப்பாகங்களைப பூட்டும் தொழிலில் ஈடு

பட்டது. எனவே இந்த மோதல் தற்காலிகமானது. எனினும் இது ஒரு மோதலே. இந்தவிததில் தமிழ் நாட்டின் மூலதனச் சூழலில் பிரிட்டனின் வர்த்தக, தொழில் மூலதனமே இஙகுள்ள அனைத்து சகதிகளின் மூலதனத்தின் மீது மேலாதிக்கம செலுத்துவதாக இருப்பினும் அதறகுட்பட்டு இயங்கும் செட்டியார் மூலதனமும் வட இந்திய மூலதனமும் இங்கு தமக்குள் தற்காலிகமான மோதுதலை வெளிப்படுத்திக் கொள் கிறது. 1930 ஆம் ஆண்டுகளின் சூழலில் பார்சி-பனியா- மார்வாரி மூலதனம் வடமேற்கு, வடகிழக்குப் பகுதிகளையும் தாண்டி அனைத்திந்தியச் சநதையைத் தேடிக் கண்டடைந்து அதை உறுதிப்படுத்திக் கொண் டிருந்தது ஆனால் செட்டியார் மூலதனத்துக்கு அத் தகைய விரிவாக்க ஆற்றல் அப்போது இல்லையெனி னும் தமிழ் நாட்டுக்குள் தன்னை அழுத்தமடையச் செய்ய முயன்றது. இந்த முரண்பாடும் ஏற்பட்டது. இத்தகைய சூழலில் கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட் டத்தைக் காணகிறோம்.

பொருளியல் நிலைக்கும் அரசியல் நிலைக்கும் இடை யிலான உறவு ஒரு நேர் கோட்டில் அமைந்ததாக எப்போதும் இராதெனினும் பொருளியல் நிலை அரசி யல் நிலையில் தம்மை ஏதேனும் ஒருவிதத்தில் வெளிப் படுத்திக் கொள்கிறது. இந்தவிதத்தில் கண்டால் 1930களுக்குப்பின் தோன்றிய தமிழகப் பொருளாதாரச் சூழலில் உருவெடுத்தபுதிய நிலைகள் அரசியலில் வெளிப் படுவதைக் காணமுடியும். சென்னை மாகாணத்தில் தொழில் மயம் மிகுந்த தமிழ் நாட்டில் செட்டியார் மூலதனத்துக்கும் வட இநதிய மூலதனம் மற்றும் தமிழ் நாட்டுப் பிராமண மூலதனத்துக்கும் இடையிலான போட்டி ஒரு புதிய நிலையாகும். வட இந்திய மூல தனத்துக்கு அதன் மூலதனப் பெருக்கத்தினால் அனைத் திந்திய சந்தைகிடைத்துள்ளது, ஆனால் செட்டியார் மூலதனம் பற்றாககுறைபால் தமிழ்ப்பகுதிக் குளளேமட்டும் இயங்கியது. அதோடு கோவை, நெல்லை மாவட்டங்களில உருவெடுத்தநாயுடு முதலாளிகட்கும் வடஇந்திய மூலதனம போட்டியாக இருந்தது. எனவே செட்டியார், நாயுடு ஆகியோரின் ஆலை மூலதனத்துக் கும் நாடாரின் வர்த்தக மூலதனத்துக்கும் வடஇந்திய மற்றும் தமிழ்ப்பிராமண மூலதனத்தின் இருப்பும் சேர்க் கையும் போட்டியாக இருந்தது. இது வடக்கு-தெற்கு

என்றபாகுபாட்டிற்கும் ஆரியர்- திராவிடர் என்றபாகு பாட்டிற்கும் மிகவும் ஏதுவாக அமைந்து போயின. தமிழ்பேசும் பகுதிகளில் தோன்றிய தரகுமுதலாளியம் தமக்குரிய சந்தையை இழந்து விடாமலிருக்கும் ஒரு தற்காப்புப்போரில் இத்தகைய நிலைபாடுகளை உரு வாக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. இந்தநிலையில் செட்டியார், நாயுடு, நாடார் ஆகியோரின் இந்த மோதல உணர்வை சுயமரியாதை இயக்கம் தன் கொள் கைகளில் பிரதிபலித்தது. 1937 இல இராசாசி அமைச் சராகப் பொறுப்பேற்றதும அவரது அமைச்சரவை யில் கணிசமானோர்(4/10) பிராமணர்களாக இருந்தது வும் இஙகுள்ள பிராமணர் மேலாதிக்கத்தைத் தெரிவிக் கின்றன. மேலும் இராசாசி கொண்டுவந்த கட்டாய இந்தியும் அதற்காகக் காங்கிரசு தரப்பில் சொல்லப் பட்டவாதங்களும வடஇந்திய முதலாளிகளின் மேலாதிக் கத்தை அங்கீகரித்தனவாகவே இருந்தன. இவற்றுக் கான எதிர்ப்பு சுயமரியாதை இயக்கத்தின் ஊடாக நடந்தது. இன்னொரு பிரிவையும் இங்கு காண வேண்டும். பிராமணர்களோடு வேளாளர்களும் தமிழகத்தில் நிலவுடைமையாளர்களாக இருந் தனர். இருவருமே நிலவுடைமைக் கலாசசாரத் தையே முன்னிறுத்தினரெனினும் அதன் தலைமைக்கு இருவரிடத்திலும் போட்டி இருந்தது. பிற்காலச் சோழர் காலம் தொடங்கி தற்காலம்வரை இரண்டு பிரிவுகளுக்கு இடையிலான போட்டியை வாலாற்றிலும் இலக்கியத்தி லும் காணலாம் வேளாளர்கள், இங்குள்ள பிராமணர் கள் அனைவரையும் ஆரியர்கள் என்றும் அவர்களின் பணபாடு வேற்றினப் பண்பாடு என்றும தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வந்தனர். இவர்கள் தங்களைத் தமிழோடு இணைத்துக் கொண்டு ஆரியத்தை எதிர்த்தனர். வேளாளர்கள், கட்டாய இந்தியில் ஆரிய ஆதிக்கத்தைக் கண்டனர். பெரும்பான் மைத் தமிழறிஞாகள, நிலவுடைமைக கண்ணோட்டத் துடன் இருந்தனரெனினும் அதிலும பிராமண எதிர்ப்பு நிலவுடைமைக கண்ணோட்டத்துடன இருந்தனர். இதை ஒரு சாதியோடு மட்டும் வைததும் எண்ணமுடியா தெனினும் தொடர்ந்து ஒரு சாதியே இந்தக் கருத்தி யலை முன்வைத்துக் கொண்டிருந்தது. நெல்லை, தஞ்சை, செங்கற்பட்டு ஆகிய இடங்களில் உள்ள வேளாளர் அறிஞர்களே இதில் முன்னின்றனர். எனவே

பிராமண எதிர்ப்பு நிலவுடைமைக் கண்ணோட்டத்திய தமிழ் அறிஞர்களும் செட்டியார், நாயுடு முதலாளிகளும் நாடார் வணிகர்களும் தமது கலாச்சார, பொருளாதார நலன்களை முன்னிலைப் படுததும் ஒரு போக்கில், கட்டாய இந்தியை எதிாககும வாயப்பை வரலாறு இவர்களுக்கு வழங்கியது. இந்தப் போராட்டத்துக்கு தரகுமுதலாளிகளும தரகுவணிகர்களும் நிலவுடைமைச சிந்தனையாளர்களும் தலைமை தாங்கினா. ஒரு தேசிய இனத்தின் மீது இன்னொரு மொழியைத் திணிப்பதை எதிர்ப்பதும பல்வேறு தேசியஇனஙகள் வாழும் ஒருநாட டில் ஒரு இனததின் தேசிய மொழியை ஏனைய தேசிய இனங்கள் மீது வலுக்கட்டாயமாகச சுமததுதலை எதிர்ப்பதும் ஜனநாயக பூர்வமான அம்சங்களே ஆகும். ஆனால் இவை அந்ததேசிய மொழியின் நனமை கருதியவை அல்ல எனபது இங்கு குறிபபிடத்தக்கதா கும. இந்தபபோராட்டத்தை நடதகிய இயக்கமும் அதை முன்னிலைப்படுத்திச் செயலபட்ட வர்க்கங்களும் ஆங்கில ஆதரவிலும் கட்டாய இந்தி எதிர்ப்பிலும் உறுதியாக நின்றன; ஆனால் கட்டாயமாகத் தமிழைக் கற்றாக வேண்டும் என்ற நிலைபாட்டை எப்போதும் எடுகக வில்லை. இந்த விதத்தில் வேற்று மொழியை எதிர்த் தல் எனற அம்சததில் இநத இயக்கத்துககும் வர்க்கங களுக்கும வெளிப்புறத் தோற்ற அளவில் தமிழ்த் தேசியத் தன்மை (Tamil National Character in Appearance) இருப்பதாகத் தெரிந்தாலும தேசிய மொழியை எப்பொழுதும் முன்னிறுததவிலலை எனற அம்சத்தில் இவை தேசிய மற்ற தனமையை சாராம சத்தில (Non — national Character in Essence), கொண்டிருப்பதைக காண்கிறோம. இதற்கு ஒரு முதன்மையான காரணம், இந்த இயக்கமும் இந்தப் போராட்டத்தில இந்த இயக்கத்தை முன்நிலைப் படுத்திய தரகு முதலாளிய வர்க்கங்களும் ஏகாதி பத்தியக் கட்டமைப்புக்குள்ளேயே தம் சிந்தனைகளை யும் செயல்பாடுகளையும் முடக்கிக் கொண்டிருந்தன. ஏகாதிபத்தியத்தின் சுரண்டல், இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்கள் மீதான ஒடுக்குதலிலும் குடி கொண்டுள்ளது. ஏகாதிபத்தியத்தை எதிாக்காமல் எந்தவொரு தேசிய இனத்துக்கும் அதறகுரிய சமூக, பொருளாதார, அரசியல் நியாயத்தை வழங்கி விட இயலாது. காங்கிரசு. நீதிக்கட்சி, சுயமரியாதை

இயக்கம் ஆகிய எவையும் ஏகாதிபத்தியத்தின் அரசியல் பொருளாதார நலன்களை முழுமுற்றாக எதிர்க்கும் தன்மையில் இருந்ததில்லை. காங்கிரசு. அவ்வப் பொழுது நடத்திய பல போராட்டங்கள் அதற்குரிய அரசியல், பொருளாதார பேரஆற்றலை வளர்த்துக் கொள்ளப் பயன் பட்டனவே தவிர, ஏகாதிபத்தியத் தின் நலன்களை அழித்துவிடும் தன்மையில் இல்லை. நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் இத்தகைய போராட்டங்கள் எவையும் இல்லாமலே தம் பேர ஆற்றலை வளர்த்துக்கொள்ளும தந்திரங்களில் ஈடு பட்டிருந்தன. ஏகாதிபத்தியத்தின செல்வாக்கு மண்ட லத்தில் இயங்கிய கட்டாய இந்தி எதிர்ப்புப் போராட் டத் தலைமையின் அடிப்படைக்குணம் தரகுத்தன்மை யாக இருப்பதால, தமிழ் தேசிய மொழியின் நலன்கள் முன்னிறுத்தப்பட வில்லை; ஆங்கிலமொழியின நலன் கள் புறக்கணிக்கப் படவில்லை அதே நேரத்தில் இந் தப் பகுதிகளில் பரவிக்கொண்டிருந்த வட இந்தியத்தரகு முதலாளியத்தை எதிர்க்கும் முகமாக கட்டாய இந்தி எதிர்ப்பை பயன்படுத்திக் கொண்டனர். ஒரு தேசிய இனத்தின் ஒட்டுமொத்தமான கோரிக்கையை அந்த குறிப்பிட்ட தேசிய இனத்துக்குள்ளே இருக்கும் சில தரகுமுதலாளிய வர்க்கங்கள் தாங்கள் தலைமையேற்று நடத்தும் போராட்டத்தில் இவ்வாறு தமக்கேற்பச் சுருக்கிக் கொண்டன.

இதே நிலையே தொடர்ந்து நீடித்தது. ஓ.பி. இராமசாமி ரெட்டியாரை முதலமைச்சராகவும் அவினாசிலிங்கம் செட்டியாரைக் கல்வி அமைச்சராகவும் கொண்ட காங்கிரசு அமைச்சரவை, சென்னைமாகாணத்தில் உள்ள 607 உயர்நிலைப் பள்ளிகளில மொழிப் பாடம் குறித்து அரசாணை யொன்றை (எண் 1643, கல்வித் துறை, நாள் 20.6 48) வெளியிட்டது. இதன்படி தாய் மொழி அல்லது ஏதேனும ஐரோப்பிய மொழி முதல் மொழியாகவும் இந்தி, வடமொழி ஆகிய இவற்றில் ஒன்று, இரண்டாம மொழியாகவும் ஆங்கிலம் மூன்றாவது மொழியாகவும் ஆக்கப்பட்டது. 1938-39 ஆகிய ஆண்டு களில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு சென்னை மாகாணத்தில் தமிழ் பேசும் பகுதிகளில் இரண்டாவது மொழிவிருப்பப்பாடமாகவும் ஏனைய பகுதிகளில்கட்டாய பாடமாகவும் ஆக்கப்பட்டது. தமிழ் பேசும் பகுதிகளில் மட்டும் கட்டாயம் ஆக்கப்படாததற்குப் பத்திரிகைகள்

பலமாய் ஆட்சேபித்தன. எனவே தமிழ் பேசும் பகுதிகளிலும் இரண்டாவது மொழி கட்டாயப்பாடமாக ஆயிற்று. மூன்றாவது மொழியும் இரண்டாவது மொழியும் முதல் பாரத்திலிருந்து (6 ஆம வகுப்பு) கட்டாயப் பாடங்களாகும். இக்கட்டத்தில திராவிடர் கழகத்தின் முன் முயற்சியில் தமிழறிஞர்கள் மட்டுமின்றி தமிழ் மொழிப் பற்றுக்கொண்ட சில காங்கிரசுக் காரர்களும ஒருங்கிணைந்தனர். இவர்களின் கருத்துகளைத்தொகுத்துக் கொண்டால், மொழிக் கொளகை குறித்த இவர்களது மாறிவரும் நிலைகளைக் காண இயலும. முதலில் பெரியாரின் கருத்துகளைக் காணபோம்.

பெரியார் இதற்குமுன் கொண்டிருந்த கருத்துகளுடன் சில புதிய நிலைபாடுகளை மேற்கொணடிருந்தார். ஆரியர் எதிர்ப்பு, ஆங்கில ஆதரவு என்ற வழக்கமான அம்சங்களுடன் சிலபுதிய அம்சங்கள்இணைந்திருந்தன. அவற்றுள் சில:

1) முதல் பாரத்திலிருந்து இங்கிலீஷைக் கட்டாயப் பாடமாக்கி இருக்கிறார். அதுவரை மகிழ்ச்சிதான்.. தமிழைப்பற்றி இப்போது தகராறு இல்லை. அதில் தான் எல்லாப்பாடங்களும் கற்பிககப்படப் போகின்றன. இந்தி வேண்டவே வேண்டாம் என்பதல்ல எங்கள் கொள்கை. அதைக் கட்டாயப் படுத்தக் கூடாது. என்று நாங்கள சொல்கிறோம் (விடுதலை 7.10.48)

2) சில காரியத்துக்கு வேண்டுமானாலும் கட்டாயமாக்குங்கள். ஆனால் குழந்தைகளுக்கு வேண்டாம். கல்லூரி மாணவர்களுக்கு வேண்டுமானால் இருக்கட்டும் (விடுதலை 7.10.48)

3) வடஇந்தியா செல்லும் தென்னிந்திய வணிகர்கள் இந்திகற்றுக் கொளளலாம் (விடுதலை 20.7 46)

கட்டாய இந்தி குறித்து மிகக்குறைந்த அளவேனும் சமரசநிலைக்கு வரத்தொடங்கியுள்ள இந்நிலையில் திராவிடப்பிரதமரின் கீழ் தமிழர் அமைசசர் கொணர்ந்த இக்கட்டாய இந்தியை எதிர்ப்பதற்கு முன்னா பெரியார் 1.8.48 இல பிரதமர் இராமசாமியைச் சந்தித்தார்.

அப்பொழுது 'அயதராபாத்தில் போராட்டம் துவக்கப் பட்டால் உடனே போராட்டத்தை நிறுத்திக்கொள்வதாகவும் சென்னைமாகாணத்தைக் காப்பாற்றுவதில் தனக்குக கவலையும பொறுப்பும் உண்டென்றும்' பெரியார் பிரதமருக்கு உறுதிமொழிகொடுத்தார். (விடுதலை30.10 48) அதாவது போராட்டம் தொடங்குதலுக்கு முன்னரே போராட்டத்தைச் சில சூழலில் நிறுத்திவிடுதற்கான உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருந்தது. அதாவது அரசாங்கத்துக்கு வேறுபகுதியிலிருந்துநெருக்கடி ஏற்படும் பொழுது, தனதுநெருக்கடியை விலககிகொள்தல் என்ற போராட்ட உத்தி இதில் உண்டு; மேலும், இந்தியப்படைகளின் செயலுக்கான ஆதரவும் இதில் இருந்தது. இதைப்பெரியார் வேறுவிதமாக வண்ணந்தீட்டி வர்ணிககிறார்.

> நம்முடைய நோக்கமெல்லாம் நமக்கு எதிர் வரிசையில் நிற்கும் அரசாங்கம் முழுபடை பலத்தோடும் நமமை அடக்கி ஒடுக்குதலுக்கான மற்ற வசதிகளோடும் இருக்கும்போதுதான் நம் போராட்டம் தீவிரமாக இருக்க வேண்டும். படைபலம் குறைந்து வசதிகள் இல்லாத நிலையில் நம் நெருக்கடியை அதிகமாக்கி அதனால் மனமில்லாமலே கட்டாயமாக நம எதிர்ப்புக்குக் கீழப்படியச் செய்துவிட வேண்டுமென்பது நம் விருப்பமும் அல்ல; விரும்பவும் கூடாது. (குடிஅரசு 18.9.48).

அரசாங்கத்துக்கு ஏற்படும் ஆயுதரீதியிலான நெருக்கடியைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய போர்த் தந்திரப் பாதை எதுவும் பெரியாரியத்துக்கு உடன்பாடு இல்லை. இது காந்தியத்திலிருந்து பெற்ற கடனாகும். இத்தகைய முனபுரிதலுடனும் சமரசத்துடனுமு இந்தப் போராட்டம் தொடங்கியது. 2-8-48 திராவிடர்கழக செயற்குழுவில் போராட்டம குறித்து முடிவெடுக்கும் முன்னா 1.8.48 இல் பெரியார் பிரதமருடன் பேசினார். அரசுக்கு நெருககடி ஏற்பட்டால் போராட்டம் திரும்பப் பெறும் என்ற பெரியாரின் உறுதியுடன் போராட்டத்தைக் கலவரமின்றி நடத்த வேண்டுமெனக்கூறி, பிரதமர் இசைவுதெரிவித்தார். இவ்வளவு ஏற்பாடுகளுடன் நடந்தபோராட்டத்துக்கான தயாரிப்புக் கூட்டத்தில் பெரியாரின் உரை வீராவேசமிக்கதாக இருந்தது

. மானத்தோடு போராடி மடிந்தாலும் தவறில்லை, திராவிடர்கள் மானத்துக்கும் வீரத்துக்கும் பேர்போனவர்கள்., குண்டுபட்டு இறந்தாலும் குண்டு மார்பில் பாய்ந்திருக்கட்டும் முதுகில் பாயும்படி நடந்து கொள்ளாதீர்கள். நமது நாட்டுச் சுதந்திரமும் தனிமையும் இந்தப போராட்டத்தின் வெற்றியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. (இந்திப் போர் முரசு, பக் 17, 18 19),

எளிதில் கிளர்ந்தெழச் செய்யும் ஆவேச உரைகளே போராட்டத்தின் அடிப்படையாகும். போராட்டம் தொடங்கிய பின்னர், அய்தராபாத்தில் இந்தியப் படை நுழைந்தது. முன்னரே ஏற்பட்ட உடன்படிக்கையின்படி போராட்டம் நிறுத்தப் பட்டது (14.9.48). பின்னர் (18. 9. 48) துவக்கப்பட்ட மறியலில அரசின் அடக்கு முறை 'பெரிதும பயன்படுத்தப் படவில்லை. இது குறித்துப் பெரியாரே மிகவும வருந்தியுள்ளார். அதிக அடககுமுறை பயன்படுத்தப் பட்டிருந்தால் மக்களுக்கு உணர்ச்சியும் உறசாகமும் ஏற்பட்டிருக்கும் என்றும் போராட்டம் மக்கள் கவனத்தைக் கவராததற்குக் காரணம் போராட்டக்குழு அல்ல என்றும் அதற்கு அரசே காரணம் என்றும் பெரியார் குறிப்பிட்டுள்ளார் (விடுதலை 27. 7. 52). இது ஒரு புதிய முறையிலான போராட்ட வடிவமாகும். இறுதியில் கட்டாய இந்தி குறித்த அரசாங்க ஆணை திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டது.

இந்தப் போராட்டத்தில் கோரிக்கை முதன்மை பெறு தலைவிடபோராட்ட வடிவமே முதன்மை பெறுகின்றது. ஒரு போராட்டம் நடை பெறுதலுக்குமுன்னரே போராட்டம் குறித்து அரசாங்கத்துடன் விவாதிப்பது: அரசாங்கத்துக்கு இராணுவ, அரசியல நெருக்கடி ஏற்படின் போராட்டம் திரும்பப்பெற்றுக் கொள்ளப்படும் என்ற உறுதி மொழியைப் போராட்டத் தலைமை கொடுப்பதும் கலவரமினறி மறியல செய்து கொள்ளலாம் எனஅரசாங்கம் அனுமதி கொடுப்பதும் மறியல்வீரர்களைத்தண்டிக்காமல விட்டுவிடுவதும் அடக்கு முறை இலலையென்பதால் போராட்டம் மக்கள் கவனத்தைக்கவரவில்லை என போராட்டத் தலைமை கவலைப்படுவதும் அதன்பின்னர் போராட்டத் தலைமையை நள்ளிரவிலஙகது செய்வதும்

உடனே போராட்டக் குழுவினர் அடக்குமுறை எதிர்ப்பு நாள் கொண்டாடுவதும் இறுதியில் அரசாங்கம் கட்டாய இந்தியைக் கைவிடுவதும் இந்தப் போராட்டத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை நடைபெற்ற நிகழ்வு களின் தொகுப்பாகும். இது இந்திமொழி ஆதிக்கத்தை எதிர்த்த சமரசமற்ற போராட்டமாக இல்லை என்ப தைமட்டும் இங்கு குறிப்பிடலாம். இந்தியின் கட்டாயம் குறித்தும் பெரியார் தன் கொள்கையைச் சற்று தளர்த்தி கல்லூரிகளில் கட்டாயமாக வைக்கலாம் என்றும் வணி கர்கள் இந்தி கற்றுக்கொள்ளலாம் என்றும் குறிப்பிட் டுள்ளமை இங்கு கவனிக்கத்தக்கவை. இதுவரை இந்தி பாடமொழியாகவே கட்டாயப்படுத்தப்பட்டது. 26.11.49 அன்று இந்திய அரசியல் சட்டம் அறிமுக மானபின் இந்தியின் பயன்பாடும் ஆதிக்கமும் அதிகமா யிற்று. அதைத்திராவிடர் இயக்கம் எங்ஙனம் எதிர் கொண்டது எனக்காண்போம். அதற்கு உறு துணையாக 1947க்குப்பின் இந்திக்குரிய இடத்தைக் காண்போம்.

# 6

இந்தியா பல மொழிகள் பேசுகின்ற, பல தேசிய இனங் கள் வாழுகின்ற ஒரு நாடாகும். இந்நாட்டில் பேசப்படு வதாகக் குறிப்பிடப்படும் 1652 மொழிகள், நான்கு மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவையாக உள்ளன. இந்தோ ஆரியன், திராவிடம், முண்டா (ஆஸ்திரிக்) மற்றும் திபேத்திய சீன மொழிக் குடும்பங்களான இந்த நான்கனுள் பிந்தைய இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளை இந்திய நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 2.13 சதவீதம் மக்கள் மட்டுமே பேசுகின்றனர் இந்திய மக்களில் இந்தோ–ஆரியக் குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளை 73.3 சதவீதத்தினரும் திராவிடக் குடும்பங் களைச் சேர்ந்த மொழிகளை 24.47 சதவீதத்தினரும் பேசுகின்றனர் பெரும்பான்மையாகப் பேசப்படும் 12 மொழிகளில் இந்தி, ஒரியா, அசாமியம், வங்காளி, மராத்தி, குசராத்தி, பஞ்சாபி, காஷ்மீரி, ஆகியவை

இந்தோ ஆரியக்குடும்பத்தலையாகவும் தமிழ், தெலுங்கு, கன்னடம். மலையாளம் ஆகியவை திராவிடக் குடும்பத் தலையாகவும் உள்ளன. இவற்றில் இந்தி, இமாச்சலப் பிரதேசம், அரியானா, இராசஸ்தானம், உத்தரப் பிரதேசம், மத்தியப்பிரதேசம், பீகார் ஆகிய ஆறு மாநிலங்களில் பேசப்படுகின்றது. எல்லாமாநிலங்களுக் குமே பன்மொழித்தன்மை இருககிறது. சிலமாநிலங் களில் அந்தமாநில மொழியைப் பேசுவோர் தொகை 85–90 சதவீதம் வரையிலும் உள்ளது; சிலமாநிலங் களில் அது 60 சதவீதம் வரையில் உள்ளது வேறுசில மாநிலங்களில் அநத மாநிலமொழியைப் பேசுவோர் தொகை 16 சதவீதம் மட்டுமே உள்ளது. ஆக ஒவ்வொரு மாநிலத்திலும் பன்மொழித்தன்மை ஏதேனும் ஒரு விதத்தில் உள்ளது.

இந்தச் சூழலில் இந்திய அரசின் மொழிக் கொள்கை யைக் காணவேண்டும். மொழிக் கொள்கையை உரு வாக்கிய அரசியல் சடட நிருணய சபை (இலரி, அ.ச. நி.), அன்றைய சட்டசபைகளால் மட்டுமின்றி, இந்திய சமஸ்தானங்களாலும் நியமிக்கபபட்ட உறுப்பினர் களைக் கொண்டதாகும். 1937 ஆம் ஆண்டு இந்தியா வின் 13சதவீதமக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரிட்டிசு இந்திய சட்டமன்றங்களின் பிரதிநிதிகளும் இந்திய சமஸ்தானங்களின் பிரதிநிதிகளும (20/161) இந்த சபையில் உறுப்பினர்களாக இருந்தனர். இதில் காங் கிரசுக் கட்சியின் சார்பில் 119 உறுப்பினர்களும் காங்கிரசுக்கட்சியின் சார்பிலும் ஏனைய அமைப்புகளின் சார்பிலும் 56 பிராமண உறுப்பினர்களும் இருந்தனர். சென்னைமாகாணத்தின் சார்பில 30 உறுப்பினர்களும் இந்திபேசும் பகுதிகளிலிருந்து அதிக உறுப்பினர்களும் இருந்தனர். குறிப்பாக இந்தி பேசும் பகுதிகளிலிருந்து காங்கிரசுப் பிராமணாகள் தனித்த ஒரு நிலையினராக இருந்தனர் எனத்தெரிகிறது.

அ.ச.நி. கூட்டம் தொடங்கியவுடன் எந்தமொழியைப் பயன்படுத்துவது என்பதில்ஒரு சிக்கல் எழுந்தது. பலித்த விவாதங்களுக்குப் பின்னர் கூட்டத்தில், இநதுஸ்தானி யில் (இந்தி அல்லது உருது) அல்லது ஆஙகிலத்தில் பேச வேண்டுமென்றும் சபைத்தலைவரின இசைவுடன் ஓர் உறுப்பினர் தன் தாய் மொழியில் பேசலாம் என்றும்

சபையின் நிகழ்ச்சிகள் இந்துஸ்தானியிலும் ஆங்கிலத்திலும பதிவு செய்யப்படும் என்றும் முடிவுசெய்யப்பட்டது. (14.12.46). அ.ச.நி. எடுக்கப்படும்/அல்லது விவாதிக்கப்படும் எந்தவொரு கருத்தும் அதற்கு முன் அ.ச.நி. உள்ள காங்கிரசு உறுப்பினர்கள் முதலில் விவாதிதது முடிவெடுக்கப்படும் அதைபபோல மொழிக் கொள்கையும் முதலில் காங்கிரசு உறுப்பினர்கள் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்கப்பட்டது. இந்திய மைய அரசு இயங்குவதற்கும் மைய அரசு மாநிலங்களோடு தொடர்பு கொள்வதற்கும் உரிய மொழிக்குரிய சொற்கள் ஆராயப்பட்டன. Common Linquafranca, State, official, governmental, executive, ruling national, administrative என்ற பலசொற்கள் ஆராயப்பட்டு இறுதியில (official) அலுவல்மொழி என்பதே ஏற்றுக்கொள்ளப்பட்டது. (Granville Austin, The Indian constitution: Cornor Stone of a Nation, Oxford University Press, Bombay, p.276). அலுவல் மொழியாக எது அமைய வேண்டும் என்ற விவாதங்களைப் படிக்கும் பொழுது விவாதங்களின் தன்மை மிகவும் கடுமையாக இருந்ததைக் காணமுடிகிறது, காங்கிரசுக் கூட்டத்தில் இந்தியா அல்லது இந்துஸ்தானியா என்றபிரச்சனை முதலில் எழுந்தது. இந்தியாவின் அலுவல் மொழியாக இந்தியை ஏற்றுக கொள்வதென காங்கிரசு உறுப்பினர்கள் சபை63/32என்ற வாக்குகளில் முடிவெடுத்தது. அதன்பின், தேவநாகரி வரிவடிவத்தில எழுதப்பட்ட இந்தியை ஏற்றுக கொள்வதென 6?/18 வாக்குகளில முடிவெடுத்தது. ஆங்கிலம் இரண்டாவது மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது (15. 7 1947) இந்த நிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டு காங்கிரசுக் கூட்டத்தில 'தேவநாகரிவரிவடிவத்தில் எழுதப்படும இந்தி இந்தியஒன்றியத்தின அலுவல் மொழியாகஇருக்க வேண்டும' என மீண்டும் ஒருமனதாக முடிவெடுககப்பட்டது (12, 8. 1949). இந்தத் தீர்மானத்துக்கு காங்கிரசில் எதிர்ப்பு இல்லைஎன்பது குறிப்பிடத்தககது. இன்றைக்குப் பலர் தவறாகக் கருதுவதுபோல இந்தியாவின் அலுவல் மொழியாக இருக்கவேண்டியது இநதியா ஆங்கிலமா என்ற விவாதம் நடக்கவே இல்லை. ஆனால் காங்கிரசின் மேற்கண்ட தீர்மானத்தை ஒருமனதாக ஒப்புக கொண்டு அதற்கு ஒரு திருத்ததததை

44 உறுப்பினர்கள் (இவர்களில் 28 உறுப்பினர்கள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்) கொடுத்தனர். தேவநாகரி வரிவடிவத்தில் உள்ள இந்தியை அலுவல் மொழியாக ஒப்புக்கொள்வதோடு 'ஆங்கிலம் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து பயன் படுத்தப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தின் இரண்டு அவைகளும் விரும்பினால் மேலும் சில காலத்துக்கு அதன் பயனை நீட்டிக்க வேண்டும் என்றும்' ஒரு திருத்தம் கொணர்ந்தனர் (மேற்படி நூல் பக்.293) இத்திருத்தத்தை விரிவாக ஆராய்ந்த காங்கிரசுக் கட்சி உறுப்பினர்கள் சபை இது குறித்து ஆராய ஒரு துணைக் குழுவை நியமித்தது. இக்குழு ஆராய்ந்து, சில அம்சங்களை விரிவுபடுத்தியது. இதை மீண்டும் காங்கிரசுக் குழு முன் வைத்தது. முன்ஷி மற்றும அய்யங்கார் திட்டம் என்றழைக்கப்பட்ட இதன் அம்சங்களாவன:

1) ஒன்றியத்தின் ஆட்சிமொழி, தேவநாகரி வரிவடிவிலான இந்தி.

2) ஆங்கிலம், 15 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். பாராளுமன்றம் விரும்பினால் இதை நீட்டிக்கலாம்.,

3) இந்தியத் தலைமை நீதிமன்றம், மாநில உயர் நீதி மன்றங்கள் ஆங்கிலத்தில் நடைபெறும். மசோதாக்கள், அவசரச் சட்டங்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்படும். பதினைந்து ஆண்டுகளுக்குள் இந்த நிலையை மாற்றுவதற்கு மசோதாக்கள் கொணர வேண்டு மெனில் குடியரசுத் தலைவரின் இசைவுடனே அவை கொண்டுவரப்பட வேண்டும்.,

4) இந்தியாவின் பன்முகப் பண்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் இந்தியை வளர்ப்பதும் பரப்புவதும் ஒன்றிய அரசின் பணியாகும்.

5) ஆங்கிலம மற்றும சமசுகிருதம் தவிர்த்து விட்டு 13 மொழிகளைக் கொண்ட ஒரு மொழி அட்டவணை இணைக்கப்படும்.

6) மாநிலங்கள் தம் மாநிலத்தில் பயன்படும்மொழியை அல்லது இந்திமொழியைத் தம் பயன்பாட்டுக்கு

வைத்துக் கொள்ளலாம்; மாநில சட்டமன்றம் விரும்பும்வரை ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

7) ஒன்றியத்துக்கும் ஒரு மாநிலத்துக்கும் அல்லது இரு மாநிலங்களுக்கு இடையே இணைப்பு மொழியாக ஒன்றிய மொழியே பயன்படும்; இந்தி பேசும் மாநிலங்கள் தமக்குள் இந்தியைப் பயன் படுத்தலாம்.

இத்தகைய அம்சங்களைக் கொண்ட முன்ஷி- அய்யங்கார் திட்டம், 2 9.49 இல காங்கிரசுககுழு முன் விவாதத்துக்கு வந்தது. இதற்குப் பல திருத்தங்கள் கொண்டுவரப் பட்டன. ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டிய காலம் குறித்து பலகருத்துகளை அடக்கிய தாக இவை இருநதன. மொழி அட்டவணையில் சமசுகிருதத்தையும் இணைக்க வேண்டும் என்றும் ஒரு திருத்தம் கொண்டுவரப் பட்டது. இது குறித்த வாக் கெடுப்பில் 77/77 என்று வாககுகள் அமைந்தன. கூட் டத்துக்குத் தலைமை தாங்கிய காங்கிரசுத் தலைவர் பட்டாபி சீத்தாராமையா தன் இறுதி வாக்கை (Cast vote) பதிவு செய்ய விரும்பாததால் அதிகாரபூர் வமாக எந்த முடிவும் 2.9 1949 இல் எடுக்க இயல வில்லை. எனவே இதுகுறித்து கட்சிக் கட்டளை (Party whip) இதுவரை இல்லை. இந்நேரத்தில் 12.9.49 அன்று அரசியல் சட்ட நிருணய சபை இராசேந்திர பிரசாத் தலைமையில் கூடியது. இதில முன்ஷி- அய்யங்கார் திட்டம் தீர்மானமாகக் கொண்டு வரப்பட்டு அதன் மீது பல திருத்தங்கள் கொணரப் பட்டு விவாதங்கள் நடந்தன. 14.9 49 பகல் இடை நேரம் வரை எவ்வித முடிவுக்கும் வர இயலவில்லை. இக்கட்டத்தில் பகல் 3 மணிக்கு அரசியல் சட்ட நிருணய சபையின் காங்கிரசு உறுப்பினர்கள் சபை கூடியது. முன்ஷி- அய்யங்கார் திட்டத்துக்கு திருத் தங்கள் கொணரப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவையாவன:—

1) 15 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆங்கிலத்தைத் தொடர்ந்துபயன்படுத்துவது குறித்துப் பாராளு மன்றம் சட்டமியற்றலாம்.

2) குடியரசுத்தலைவரின் இசைவுடன் உயர்நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் இந்தியில் அமையலாம்.

3) ஒரு மாநிலத்தின் அலுவல் மொழியில் அதன் மசோதாக்கள், சட்டங்கள் வெளியிடப்படலாம்; ஆனால் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் வெளியிடப் பட வேண்டும்

4) மொழி அட்டவணையில் சமசுகிருதம் இணைக்கப்பட வேண்டும.

இந்த சமரசங்கள்ஒத்துக் கொள்ளப்பட்டு புதிய முன்ஷி–அய்யங்கார் திட்டம் உருவாயிற்று. காங்கிரசு உறுப்பினர்கள் கொடுத்திருநத 400க்கும் மேற்பட்ட திருத்தங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டன. இதுவே காங்கிரசின் அதிகாரபூரவமான தீர்மானம் ஆயிற்று. 14.9.1949மாலை நடைபெற்ற அரசியல் சட்ட நிருணய சபைக் கூட்டததில் இது முன்மொழியப்பட்டு பலத்த ஆரவாரத்துக்கு இடையில நிறைவேற்றப்பட்டது. (மேற்படி நூல், பக்-300–305). இங்கு நாம் கணக்கிலெடுததுக் கொள்ள வேண்டிய அம்சங்கள். பின்வருமாறு:

1) அரசியல் சட்ட நிருணய சபையின் காங்கிரசு உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்தியாவின்அலுவல் மொழி இந்தியா ஆங்கிலமா என்பதில் கருத்து வேறுபாடுகள் ஏற்படவில்லை; இந்தி என்பதை ஒப்புக் கொண்டு இந்தியுடன் ஆங்கிலம்தொடர்ந்து எத்தனை ஆண்டுகள் இருக்க வேண்டும் என்பதில மட்டுமே கருத்து வேறுபாடுகள்ஏற்பட்டன.

2) இந்துஸ்தானியைப புறக்கணித்து இந்தியை (தேவநாகரிவரி வடிவில்) ஏற்றுக் கொண்டது, காங்கிரசின் இந்து சமயச் சார்பை வெளிப்படையாகத் தெரிவிககிறது.

3) இந்தியை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற சக்திகளுக்கும இந்தியுடன் ஆங்கிலமும் தொடர்ந்து இருக்கவேண்டும்என்றசக்திகளுக்கும இடையிலான

மோதுதலில் இந்திக்குச் சில சலுகைகளைக் கொடுத்துவிட்டு ஆங்கிலம் வென்றதை இது காட்டுகிறது.

4) இந்தியா, பலமொழிகளைப் பேசும நாடு என்பது கணக்கில் கொள்ளப்படவில்லை. மாநிலமொழிகள், வட்டாரமொழிகள் (Regional Languages) என்று குறிப்பிடப்பட்டன; தேசிய மொழிகள் எனக்குறிப் பிடப்படவில்லை. ஆங்கிலம், இந்தி, அதன்பின ஏனைய இந்தியமொழிகள் என்ற ஒரு படிநிலை முறை ஏற்படுத்தப் படடுவிட்டது.

இந்திய அரசியல் சட்டம், மொழி ரீதியில சமத்துவமற்ற நிலையை ஏற்றுக கொண்டுளளது. இந்திய அரசியல் சட்டத்தின் ஒருபிரிவின் படி [29(2)] அரசுநடத்தும் ஒரு கல்வி நிறுவனத்தில சமயம, இனம், சாதி, மொழி ஆகிய வற்றின் அடிப்படையில் எந்தவித பாரபட்சத்தையும் மாணவர்கள் சேர்க்கையில் காட்டலாகாது என்று உள்ளது. ஆனால சட்டப்பிரிவு 16 (2) என்ன சொல கிறது?

> சமயம், இனம, சாதி, பரம்பரை, பால பிறப்பிடம், வாழுமிடம் ஆகியவற்றின் அடிப்படையில எவருக் கும் அரசு வேலைககுத் தகுதியிலலை என்றோ பிறரிடமிருந்து பாரபட்சம் காட்டுவது என்றோ கூறி மறுக்கக் கூடாது.

அதாவது கல்விவாய்ப்பில் மொழிரீதியில் வேறுபாடு காட்டலாகாது; வேலைவாயப்பில் மொழிரீதியில் வேறு பாடு காட்டுதலைப்பற்றிக் குறிப்பு இலலை அதாவது வேலைவாய்ப்பில் மொழிசமத்துவம இலலை. 14.9.49 அன்று எடுத்த முடிவுகளை அரசியல் சட்டத்தில் காணலாம் (பாகம் 17. அலுவலமொழி. சட்டப்பிரிவுகள் 343 முதல் 351 வரை).

இன்னொன்றும் உன்னிப்பாகக் கவனிக்கததக்கதாகும். எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மொழிகள் 1967 ஆமஆண்டு திருத்தத்தையும சேர்த்தால் 15ஆகும். இவற்றைத் தேசிய மொழிகள் என அரசியல சட்டம

குறிப்பிடுவதாக நம்மில் பலர் கருதிக்கொண்டிருக்கிறோம். அத்தகைய ஒரு தகுதியை அரசியல் சட்டம் இவற்றுக்கு வழங்கவில்லை எட்டாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பல்வேறு மொழிகள் [சட்டப்பிரிவு 341 (1)] என்றும இந்தியாவின் ஏனைய மொழிகள் (சட்டப்பிரிவு 351) என்றும் மட்டுமே குறிப்பிடபபடுகின்றன. எங்கினும் இவை தேசிய என்ற தகுதியை அடையவே இல்லை. இந்தி மட்டுமே இந்தியமொழிகளுள் அலுவல்மொழி (Official Language) என்றும் பரிவர்த்தனைமொழி (Language for Communication) என்றும் குறிபபிடப்பட்டுள்ளதே தவிர எனைய எந்தவொரு மொழிககும் எத்தகைய தகுதி கொடுக்கப்பட்டுளளது என்பதில எவ்விதக் குறிப்பும் இல்லை. பல்வேறு மொழிகள் பேசுகின்ற ஒரு நாட்டின் நிலையைக் கணக்கிலெடுத்துக் கொண்டதாக அமையாத இந்தச் சூழல், ஏனையமொழிகள் மீதான இந்தியின் ஆதிககத்தை வெளிப்படையாகவே அறிவிக்கிறது. அதோடுமட்டுமின்றி இந்தியமொழிகள் அனைத்தின் மீதும் ஆங்கிலத்தின் ஆதிக்கம் தொடர்ந்து இருக்குமாறு வழிகோலப்பட்டது சுருக்கமாகக் கண்டால் மொழியைப் பொறுத்து நாடு, இந்திமொழிபேசும் பகுதி என்றும் இந்தியல்லாத மொழிகள் பேசும்பகுதி என்றும் கருதத்தக்கவிதத்தில் அமைந்து போயிற்று.

இந்நிலையில் அரசியல் சட்டத்தில் வாக்களித்ததைப் போல இந்தியை இன்னுமம வளம்பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஆட்சிமொழிக்குழு (7.6.1955) கெர் (Kher)என்பவர் தலைமையில்அமைக கப்பட்டது. இக்குழு அனைத்து மாநிலங்கட்கும் சென்று இறுதியில் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்ட பரிந்துரைகளில சில;

1) இந்தி வடடாரமொழியாக இருக்கும் மாநிலங்களில் ஆங்கிலத்துக்குப்பதில் இந்தியை அறிமுகப்படுத்துவதில் கணிசமான முன்னேற்றம் உளளது. ஏனைய மாநிலங்களில ஆங்கிலம் குறைவாகவே அகற்றப்பட்டுள்ளது.

2) பதினைந்து ஆண்டுகளுக்குப்பின்னரும் ஆங்கிலம் ஏதேனும் ஒரு விதததில்-துணை ஆடசிமொழியாக நீடிக்க வேண்டும்.

3) ஒருமொழியின் அடிப்படையில் மாநிலங்கள் அமைந்தால் ஆங்கிலத்தை விரைவில் அகற்றி வட்டார மொழி ஆட்சிமொழியாக வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெறும்.

4) இந்தி பேசாதபகுதிகளில் ஆங்கிலம், தாய்மொழி, இந்தி ஆகிய மூன்று மொழிகளையும் மாணவர்கள் படிக்க வேண்டும். இந்தி பேசும் பகுதிகளில் இந்தி, ஆங்கிலம் என்ற இரண்டையும் கற்றுக கொண்டால் போதும்.

5) பல்கலைக் கழகங்களில் இந்தியையோ வட்டார மொழிகளையோ பயிற்று மொழியாக வைத்துக கொள்வதைத் தீர்மானிககும் உரிமை பலகலைக் கழகங்களுக்குக் கொடுக்கப்பட வேணடும்.

இந்தியை முழுமையான அலுவல் மொழியாக்குவதற்குரிய நிலைகளைக்கண்டறிய நியமிக்கப்பட்ட கொர்குழு, இந்திமொழி குறித்து மட்டுமின்றி ஏனையமொழிகள குறித்தும் நீதிமன்ற மொழி, பயிற்றுமொழி பயில வேண்டிய மொழிகளின் எண்ணிக்கை ஆகியவை போன்ற பல அம்சங்கள மீதும் கருத்துரைகளை வெளியிட்டது. **இந்திமொழிவெறியர்களைச் சமரசப் படுத்திக கொண்டே ஆங்கிலத்தின் ஆதிக்கத்தை வலியுறுத்துவதாகவே** இதன் பரிந்துரைகள் அமைந்தன. அதே நேரத்தில் இநதி பேசாத பகுதிகள் மீது இந்தி மொழியின் ஆதிக்கம் நீடித்தலுக்கான வழி செய்யப் பட்டிருந்தது. இக் குழுவின் பரிந்துரைகள் குறித்து 30 பாராளுமன்ற உறுப்பினர்கள் கொணட ஒரு குழு தன் அறிக்கையைப்பாராளுமன்றத்தில்சமாப்பித்தது. இக்குழுவின் பரிந்துரைகளைக்காணுமபொழுது 1965கருப்பிறகும் ஆங்கிலம் தொடர்ந்து ஒன்றிய மொழியாகப்பயன்படுததப்பட வேண்டும் என்பதில் இக்குழு அக்கறை காட்டிய அளவுக்கு, இநதிபேசாத மாநிலங்களில் மாநில நிர்வாகத்தில் ஆங்கிலத்தை வட்டார மொழிகள் அகற்ற இயலாத நிலை குறித்து எவ்வித அக்கறையும் காட்டவில்லை. இன்னும் சொல்லப் போனால் **அவ்வித அக்கறை அரசியல் சட்டத்துக்கே இல்லை**. இந்திக் குழுவின்பரிந்துரைகள்மீதான விவாதத்தில கலந்துகொண்ட

தலைமையமைச்சர் சவகர்லால் நேருவின் கருத்துகளி லும்இந்தியையும் ஆங்கிலத்தையும் இந்திபேசாதமக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமாறு வாதாடுகின்ற நிலை காணப்படுகிறது. (Jawaharlal Nehru's Speeches, September 1957–April, 1963.Volnme.IV, pp57-61) அதே பொழுது திரு. பிராங் அந்தோணி என்பவர், மொழி அட்டவணையில் ஆங்கிலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும், என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தபொழுது (7.8.1959) நேருவின் பேச்சில் ஆங்கிலம் குறித்த ஓா உறுதிமொழி இருந்தது. இன்றளவும் குறிப்பிடப்படும் நேருவின் புகழ்வாய்ந்த உறுதிமொழி என்பது இதுதான்;

> ''நான் இரண்டு வழிகளைக் குறிப்பிடுகிறேன். முதலாவது, நான் இதற்கு முன்பு சொன்னதைப் போல, எவ்விதத் திணிப்பும் இல்லை. இரண்டா வதாக, ஒரு வரையறையற்ற காலம் வரையில்— அது எவ்வளவு காலம் என எனக்குத் தெரியாது— ஆங்கிலம் அலுவல் காரியங்களுக்குப் பயன்படக் கூடிய துணை, கூடுதல் (associate, additional) மொழியாக இருக்கும. நான் இவ்வாறு குறிப்பிடு வதன்முக்கியகாரணம் இன்றைய வசதிகளைப் பொறுத்ததல்ல. இந்திபேசாத மக்கள் தங்கட்கு சில நன்மைகள் மறுக்கப் படுவதாக உணர்வதாக . உள்ளதே முககிய காரணம்...மக்களுக்குத் தேவைபபடுகிற காலம் வரையில் ஆங்கிலம் மாற்று மொழியாக (alternate language) எவ்வளவு காலத் துக்கு என்பதை முடிவு செய்யும் பொறுப்பு, இந்தி பேசும் மக்களிடத்தில் அல்ல, இந்தி பேசாத மக்களிடத்தில் விடப் பட வேண்டும்.''

இந்திபேசாத பகுதியினர் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தும் பொழுதெலலாம் நேருவின் உறுதி மொழி காப்பாற்றப்படும் என்று ஓர் உறுதிமொழி கொடுப்பதே ஒரு தீர்வாக உள்ளதைக் காணலாம், நேருவின் உறுதி, மொழியையச சிறிது கவனித்தல் பொருத்தம் ஆகும். இதன் அம்சங்களாவன:—

1) இந்தி, இந்திய ஒன்றிய அலுவல்மொழி என்பது உறுதிப்படுகிறது.

2) இந்திக்கு இந்தி அல்லாத மொழிகள் மீது அளிக்கப்பட்டிருக்கும ஆதிக்க இடம், திணிப்பு என்பதாகக் கருதப்படககூடாது.

3) இந்திக்கு கூடுதலாக, துணையாக, மாற்றாக (additional, associate, alternate) ஆங்கிலம் இந்தி பேசாதபகுதி மக்கள் விரும்பும்வரை நீடிக்கும்.

4) இந்தி பேசாத மக்கள் தமககுசில நன்மைகள் மறுக்கபபடுவதாக அவர்களால் உணரப்படுகின்றது.

இநதி மறறும ஆங்கில ஆதரவாளர்களை நிறைவு செய்யும் நேருவின்இந்த உறுதிமொழி, **இந்தி அல்லாத மொழிகள மீது தொடுககபபடும் ஒரு மாபெரும் தாககுதலாகும்;** மேலும, இநதியை ஒனறிய அலுவல் மொழியாக வைததுக கொண்டே ஆங்கிலததின் பயனுக்கு ஒரு நிரநதரத் தன்மையை அளிக்கக் கூடியதாகும்.

இந்தியின் ஆதிககத்திலிருந்து தப்ப நினைக்கும் அரசியலர்களை ஆஙகில ஆதிககத்துக்குள் இது அடக்கி விடுகின்றது. எனினும கொ குழுவின் பரிந்துரைகளை ஒட்டி குடியரசுத் தலைவர் சில ஆணைகளைப் பிறப்பித்தார (27.4.1960), அவை:-

1) மத்திய அரசுப்பணிகளுக்கான தேர்வுகளில் சில காலம் கழித்து ஆங்கிலத்துடன் இந்தியும் ஒரு மாற்று மொழியாகப் பயன்படுத்தலாம்,

2) பாராளுமனறச் சட்டங்களை ஆங்கிலத்தில் தொடர்ந்து வெளியிடுவதுடன அவற்றுக்கு அதிகார பூர்வமான இந்தி மொழி பெயர்ப்பு வழங்கப்பட்டாக வேண்டும்.

3) மாநிலச் சட்டமன்றங்கள் இந்திமொழி தவிர வேறு மொழியில் சட்ட மியற்றினால் ஆங்கில மொழி பெயாப்புடன இந்தி மொழி பெயர்ப்பையும் வழங்க வேண்டும்.

4) காலம் வரும்பொழுது, தலைமை நீதி மன்ற மொழி யாக இந்தி ஆக்கப படல் வேண்டும்.

5) காலம் வரும் பொழுதுஎல்லாப் பகுதிகளிலும் உள்ள உயர் நீதி மன்றஙக்ளில் வெளியிடப்படும் தீர்ப்பு கள், ஆணைகள் ஆகியவை இந்தியில் இருக்க வேண்டும்.

இந்தி பேசாந மககளுக்கு நேரு வழங்கிய உறுதி மொழிகளை இது நீர்த்துப் போகச் செய்தது மட்டு மின்றி, மாநில மொழிகளின் இடத்தையும் இந்தி நிரப்பும் என்ற அபாயத்தையும் இது முன்னறிவித்தது. ஆனால் குடியரசுத் தலைவரின் ஆணையோ பிரதமரின் உறுதிமொழியோ இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவுகளோடு எந்த விதத்தும் அடிப்படையில் முரண் கொள்ளவிலலை.

இத்தகைய விவாதங்களுக்குப்பின் 12.4. 1963 இல் ஆட்சி மொழி சட்ட மசோதா மைய அரசில் கொணரப் பட்டது.அதன் முதனமை அம்சங்கள பின் வருமாறு:

1) 1965க்குப்பின்னரும் மத்திய அரசின் செயல்களுக்கு இந்தியுடன் ஆங்கிலம தொடர்ந்து பயன்படுத்தப் படலாம்(may continue)

2) 1965க்குப்பின் குடியரசுத்தலைவர் ஒப்புதலுடன் இந்தியில் வெளியாகும் சட்டங்கள் மட்டுமே அதி காரபூர்வமானவையாகும். மாநிலஆளுநரின் இசை வுடன் வெளியிடப்படும் மாநிலச சட்டங்களும இநதியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப் பட்டால் மட்டுமே அவை அதிகாரபூர்வமான வையாகும்.

ஒரு நிலைபாட்டைத் தொடர்ந்து காணலாம். எல்லா மொழிகளின் மீது ஆங்கில ஆதிக்கமும் இந்திதவிர ஏனையமொழிகள் மீது இந்தியின் ஆதிக்கமும் இருப் பதைக்காணலாம்.1963 ஆம் ஆண்டுககுபபின நடந்தபல போராட்டங்கள், 1967 தேர்தலகளில் ஏற்பட்ட பலத்த தோல்வி ஆகிய இவை காஙகிரசில் சிங லேசான மாற்

றத்தை ஏற்படுத்தியது. இதனால்,1963 ஆம் ஆண்டு ஆடசிமொழிச் சட்டததுக்கு ஒரு திருத்தம் 1968 இல் (திருத்தச்சட்டம் 1/1968) கொணரபபட்டது. அதன் ஒரு பகுதி பின் வருமாறு:

> இந்தியை மாநில ஆட்சி மொழியாகக் கொள்ளாத மாநிலஙகள் தங்கள் சட்ட மன்றங்களில் 'அரசுக் காரியத்துக்காக ஆங்கிலத்தைப் பயன்படுத்தத் தேவையில்லை' என்ற தீர்மானத்தை நிறைவேற்றி அதை நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளும் தனித்தனியாக ஏற்றுக கொள்ளும்காலம் வரையிலும் ஆங்கிலம் இணை ஆட்சிமொழியாக இயங்கி வரும்

இந்த மிகலேசான மாற்றம், எந்தவித படிப்பினையையும் ஏற்றுக்கொண்டதன் விளைவாக இல்லை. இது ஒரு சட்டத்திருத்தம். இதை இன்னொரு திருததம் மாற்றிவிடலாம. ஆங்கிலம் நீட்டிக்கப்பட வேண்டிய காலம் குறித்த சாச்சைகளில் இந்த நிலைபாடே இதுவரை இறுதியாக உள்ளது. நேருவின் உறுதி மொழியில் இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை என்ற வாசகங்களுக்கு உரிய ஒரு விளக்கமாகவே இது உள்ளது. நேருவின் இந்த உறுதிமொழிக்கு இதுவரை அரசியல் சட்டத்தகுதி கொடுக்கப்பட வில்லை. எனினும் நேருவின் உறுதி மொழியுடன் கூறிய மொழிக் கொளகையை இநதியஅரசு கடைப்பிடித்துவருகிறது. இதையே காங்கிரஸ், ஜனதாக்கட்சி (19 77-1979,) பாரதிய லோகதளம்- அ. இ. அ. தி. மு. க., கட்சிகள் (1979) தி மு க., உளளிட்ட தேசிய முன்னணிக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளிலான மத்திய அரசாங்கங்கள் கடைப் பிடித்து வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது. திராவிட இயககக் கட்சிகளான அ. இ. அ தி. மு. க., பங்கேற்றிருந்த சரணசிங் தலைமையிலான இந்திய அமைச்சரவையும் தி. மு. க., பங்கேற்கும் வி. பி. சிங் தலைமையிலான இந்திய அமைச்சரவையும் இந்தியை ஆட்சி மொழியாகவும் ஆங்கிலத்தைத் துணை மொழியாகவும கொண்டு செயல்படுகின்றன எனபதும் இவை அனைத்தும் கட்சி பேதமின்றி நேருவின் உறுதி மொழியை ஒரு சட்டம் என்ற அளவில் (அரசியல் சட்டத்தில் ஒரு பிரிவு என்று அல்லாமல்) ஒத்துக் கொண்டுள்ளன என்பதும குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்தியாவில் இந்தியும் ஆங்கிலமும் மட்டும் புழககத்தில் இருப்பவையாகக் காணப்படின், இன்றைய மொழிக் கொள்கையை ஒப்புக் கொள்ளலாம். இந்திய நாடு பல்வேறு தேசிய இனங்கள் தத்தமக்கு உரிய சுய வரலாற்று வளர்ச்சியுடன் தத்தமக்கென சுய மொழிகளைக் கொண்டு தனித்து இயங்கியிருந்தமையும் ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்திய ஆதிக்கமே அவர்களை வலுக் கட்டாயமாக சுய தேவையின்றி ஒருங்கிணைத்தது என்பதையும் அப்படி ஒருங்கிணைக்கப் படும் பொழுது பல தேசிய இனங்களை கொண்ட ஒரு மாகாணமாகவும் (Presidency) இந்த மாகாணங்களின் சேர்க்கையே இந்திய நாடாகவும் ஆக்கப்பட்டது என்பதையும் அதற்குப் பின்னரே ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தமக்கான ஒரு பொது எதிரிக்கு எதிராக ஒன்றிணைய வேண்டிய தேவை ஏற்பட்டதையும் இத்தகைய **ஒருங்கிணைவு எதிர்மறை வழியிலானது** (Negative method) அதாவது **ஏகாதிபததியத்துககு எதிரான ஒருங்கிணைவு** என்பதையும் இத்தகைய ஒருங்கிணைவை நேர் வழியாக உருவாக்க வேண்டிய தேவைகள் உள்ளன என்பதையும் கணக்கிலெடுத்துக் கொண்டு அரசியல் சட்ட நிருணய சபை மொழிக் கொள்கையைஉருவாக்கவில்லை. ஏகாதிபத்தியத்தின் பொருளாதார ஆதிக்கத்துடன் சமசரம் செய்து கொள்ள விரும்பும் காங்கிரசுக் கட்சி (119/161) ,ஏகாதித்தியத்தின் நிரந்தர அரசியல் அடிமைகளாக இருக்க விரும்பும் மன்னர்கள்(20/161) ஆகியோரின் பிரதிநிதிகள் பெரும்பான்மையினராக இருந்த (119 + 20 = 139/161) அரசியல் சட்டநிருணய சபை, ஒரு சுதந்திர நாட்டுக்குத் தேவையான அரசியல் சட்டத்தை உருவாக்க முயன்றது **வரலாற்று வினோதமாகும்.** எனவே இந்த சபையின பெரும்பான்மை உறுப்பினர்களிடததில் தேசிய இன உணர்வை (Nationality Consciousness) நாம்கண்டறிய இயலாது. மேலும் அன்றைய அரசியல் கட்டமைப்பில் பல்வேறு தேசிய இனங்களில் கூட்டுப் பகுதியாகவே ஒவ்வொரு மாகாணமும் Composite State அதாவது (presidency) இருநததனால் தேசிய இனஉணர்வின பிரதிபலிப்பு இல்லை. சமத்துவத்தையும சமவாய்ப்பபையும் (Equality and equal opportunity) குறிக்கோள்களாகக் கொண்ட அரசியல் அமைப்புச் சட்டம், அரசு

வேலை வாய்ப்புகளில சமதத்துவ நதைப் பற்றிப் பேசும் போது எல்லாமொழிகளுககும உரிய சமத்துவத்தைஏற்க வில்லை (சட்டப் பிரிவு 16.2). இது மொழிச் சமத்துவ மினமையை அறிவித்து விடுகிறது. காநதியின் மொழிக் கொள்கையின் ஒரு பகுதியான உருது வரிவடிவிலான இந்துஸ்தானியை இந்திய ஒன்றிய மொழியாக்குவது என்ற நிலைபுறககணிககபபட்டு, இன்னொருபகுதியான தேவநாகரி வரிவடிவிலான இந்தியை இநதிய ஒன்றிய மொழியாக்குவது என்பது ஏற்கபபட்டது. இநதியா–பாக்கிஸ்தான் பிரிவினையினபொழுது ஏற்பட்ட உணர்ச் சிகளே இதற்குக் காரணம் என அரசியல் சட்ட நிருணய சபை உறுப்பினரான **கே சந்தானம** குறிபபிடடுள்ளார். இது மட்டுமன்று நிருணய சபைகளுக்குள்ளே மேலோஙகிய **இந்துவாதமே** இதற்குபபிரதான காரணமாகும். மொத்த உறுபபினர்கள் 161இல் இந்துக்கள 126 பேர்கள் இருந் தனர். 126 இந்துககளில் காஙகிரசு கடசியைச் சார்ந்து 109 உறுப்பினாகள இருநதனா. இன்னும சொல்லப் போனால் மொத்தம் 9 முசுலீம் உறுபபினர்களில் 15 பேர்கள் முசுலீமலீக் கடசியையும 3பேர்களமட்டும்காங்கி ரசுக்கடசியையும்இன்னொருவாமன்னராட்சிப பகுதியை யும் சார்நதிருந்தனர். எனவே அரசியல சட்ட நிருணய சபையிலும்–அநத காஙகிரசுப பிரிவுக்குள்ளும் இருந்த **இந்து சமயப் பொரும்பான்மை**(மேலாதிக்கம் என்று கூடச் சொல்லலாம)இநதுஸ்தானியை நீக்குவதிலஉறுதி யாக இருந்தது. பல்வேறு தேசிய இனங்களும சமயத் தினரும இணைந்து இனிமேல் கட்டவிருக்க வேண்டிய உணாச்சி பூர்வமான ஒருமைபபாட்டுக்கு (Emotional Integration) உகந்தவிதத்தில் நிதானமும் பொறுமையும் நீண்ட கால நோக்கும் இனறி மொழிக கொள்கை அவ சர கோலத்தில் முடிவு எடுக்கப்பட்டது எனினும நிர் வாகக் காரணங்கள் என்று சொல்லப்பட்டு தொடர்நது ஆங்கிலம நீடிக்க வசதிசெய்யும் விதத்தில் ஏகாதிபத்திய மன நிலையாளர்களுடன் சமரசம் செய்து கொள்ளப் பட்டது. நேருவின் உறுதிமொழி இத்தகைய சமரசத் துக்குப் பாதுகாவலாய் விளங்குகிறது.

• தொடக்கம் முதற்கொண்டே அரசியல் சட்ட நிருணய சபையில இந்திய ஒன்றிய மொழியாக இநதி (அல்லது இந்துஸ்தானி) அமைய வேண்டும் என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும்இல்லையென்பதையும் இந்தியுடன்

தொடர்ந்து ஆங்கிலம் இருக்கவேண்டுமா என்பது குறித்தும் அப்படியெனில எத்தனை ஆண்டுகள் என்பது குறித்தும் கருத்துவேறுபாடுகள் எழுந்தன என்பதையும மனங்கொள்கிறபொழுது, இந்திய ஒன்றிய அலுவல் மொழியாக ஒரு தேசிய இனத்தின் மொழிதான் இருக்க வேண்டுமா அல்லது பலதேசிய இனங்களின் பலமொழிகளும் இருக்க இயலுமா என்கிற விவாதங்களிலே ஈடுபடாமல் அரசியல சட்ட நிருணய சபையால் இருக்கமுடிந்தது என்பது வியப்பாகவே உள்ளது. ஆனால் அரசியல் சட்ட நிருணயசபை என்பது காங்கிரசுக் கட்சியின் விரிவாக்கம என்பதை உறுதி செய்யும்பொழுது இந்த வியப்பும் மறைந்து விடுகிறது மேலும் ஆங்கிலம் எத்தனை ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருப்பது என்பதில் நடநத விவாதஙகள் அடிப்படையைத திசைதிருப்பி விட்டன. மேலும் அரசியல் சட்டத்தில் தேசிய இனமொழிகளுக்கு தேசிய என்ற தகுதி (National) தரப்படாமலே இருப்பதும் அவற்றை இன்னமும் **வட்டார மொழிகள்** (Regional Languages) (Part XVII, Chapter II) எனறே அழைப்பதும் தேசிய இனங்களுக்கு இழைககும் அவமானமாகும. மேலும் எந்த ஒரு மாநிலத்திலும எதேனும் ஒரு மொழியை அல்லது பல மொழிகளை அல்லது இந்தியை மாநிலத்தின் அலுவல் மொழியாக்கிக கொள்ளும் உரிமையை மாநிலச் சட்டமன்றம் பெற்றிருக்கிறது (சட்டப்பிரிவு. 345). அதாவது இந்திபேசாத மாநிலம் விரும்பினால் தன் மாநிலத்தில் இந்தியை அலுவல் மொழியாக்கிக் கொள்ளலாம் இந்தியை வளர்ப்பதற்கென்றே பல சட்டப்பிரிவுகளைக் கொண்டுள்ள அரசியல் சட்டம் தேசிய இன மொழிகள் மீது துளி கூட அக்கறை கொண்டிருகக வில்லை.

இன்றைக்கு மட்டுமல்ல அன்றைய சூழலில் கூட அரசியல் சட்டத்தின மொழிப்பிரிவு வேறுவிதமாக அமைந்திருக்க வேண்டும். அரசியல் சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிட்ட சமத்துவம் மற்றும் சம வாய்ப்பு ஆகியவற்றின் விளக்க வுரையாக மொழிப்பிரிவு இருந்திருக்க வேண்டும். அனைததுத் தேசிய இன மொழிகளுக்கும் இந்திய ஒன்றிய அலுவல் நடைமுறைகளில் பங்கு இருத்தல் வேண்டும். பல்வேறு தேசிய இனங்கள் நீண்ட காலத்துக்குத் தமக்குத் தேவைபடடும் ஒருங்கிணைவை

யும் ஒருமைப்பாட்டையும் சுயமாக வளர்த்தெடுத்துக் கொள்ள வேண்டுமெனில், தேசிய இனங்களின் மொழிகளுக்கு இந்திய ஒன்றிய நடைமுறையில் பங்குஇருத்தல இன்றியமையாதது ஆகும். இத்தகைய அரசியல் சட்ட சூழலில் திராவிட இயககங்கள மொழிக் கொளகையை அமைத்துக் கொணட விதம் குறித்துக காண்போம்.

# 7

திராவிடர் இயக்கத்தின வரலாறு, கட்சிகள் பிளவுபடுதலும் தனிநபர்கள் சேர்தலும் கொண்டதாகும் "இந்திய அரசியல் சட்டம் அமுலுககு வந்த அதே ஆண்டில் திராவிடர் கழகத்திலிருநது திராவிட முனனேற்றக கழகம் பிரிந்தது. இரணடும் ஒத்த கொள்கைகள் உடையவை என்றும இரட்டைக குழல் துப்பாககி என்றும் தி.மு.க. வின் நிறுவனர் சி.என அணணாதுரை குறிப்பிட்டாலும் கொள்கைகளிலும் நடை முறைகளிலும் சிற சில வேறுபாடுகள் கொணடிருந்தன. இவை மொழிக் கொள்கையிலும் எதிரொலித்தன

சென்னை மாகாணக் கல்விஅமைச்சர் மாதவராவ் 2.5.50 அன்று ஓர் ஆணைபிறப்பித்தார், முதல் பாரத்திலிருந்து ஆறாம பாரம் வரை( -11 வகுப்புகள)இரண்டாம்மொழி ஆஙகிலம் என்றும், மூன்றாம் மொழி இந்தி என்றும், இவை இரண்டும் கட்டாய மொழிகள் என்றும் முதல் மொழியாக இந்திய மொழிகளில ஏதேனும ஒன்று என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது; அதாவது தாய் மொழியைக் கட்டாய மாகப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை.இதற்குஎதிர்ப்பு தெரிவிக்கப்படடது அதாவது முதல் மொழியாகத் தாய் மொழியை வைக்க வேண்டும் என்ற அளவில் எதிர்ப்புத் தெரிவிக்கப்படவிலலை; இரண்டாவது கட்டாய மொழியாக இந்தி வைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. திராவிடர் கழகம 10 5.50ஆம் நாளை இந்திஎதிர்ப்பு நாளாகக் கொண்டாடி, கறுப்புச் சட்டையணிந்து, கறுப்புக்கொடி ஊர்வலங்கள் நடத்தியது.

இந்தியைப் புகுத்துதலை ஆரியர் சதி, வடவர் சூழ்ச்சி என்ற வழக்கமான காரணங்களோடு வகுப்புவாரி பிரதி நிதித்துவ முறையைக் குலைக்கக் கண்டுபிடித்துள்ள புதுவழி எனப் பெரியார் குறிப்பிட்டார் (விடுதலை13. 5.50).1948 ஜுனில்கட்டாய இந்தியை அறிமுகப் படுத்திய அவினாசிலிங்கம் அவர்கள் இப்பொழுது (1950மே) அமைச்சராக இல்லாததால்இத்திணிப்பைக் கண்டித்தார் (கோவை தமிழ்த்திருவிழா விடுதலை 23.5.50), நீதிக் கட்சி, காங்கிரசுக் கட்சி என மாறி மாறித் தாவிச் சென்றாலும் பதவியை மட்டும தனியே தவிக்கவிடாமல் என்றும் அத்துடன் இணைத்திருந்தஆர்.கே. சண்முகம், தன்மானம் உள்ள எந்தத்தமிழனும் இந்தியை ஏற்றுக் கொள்ளமாட்டான்' எனத் தன்மானத்துக்கு இலக்கணம் அருளினார். (விடுதலை 23.5.50). இத்தகைய எதிர்ப்புகளுககுப் பின்னர் 18.7.50 அன்றுஅரசு, ஆணையைத் திரும்பப் பெற்றுக்கொண்டது.

அரசியல் சட்டநிருணயசபையில திராவிடர்கழகம் இடம் பெறவில்லை. மேலும் இந்தசபை திராவிட மக்களின் பிரதி நிதித்துவம் பெற்றதல்ல வென்றும் திராவிட மக்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக் கூடியதல்ல என்றும தி. க, தீர்மானித்திருந்தது (தூத்துக்குடி மா நாட்டுத் தீர்மானம் எண் 4; 1948 ஆம் ஆண்டு மே 8 மறறும் 9.). எனினும் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தில் இந்திய ஒன்றிய மொழியாக இந்தி மேம படுத்தப்பட்டதை தி க., எதிர்த்தது இதுவரை பள்ளிகளில இந்தி புகுத்தப்படுதலை எதிர்த்துக் கொண்டிருந்த தி. க., இப்பொழுது இந்தி அரசியலில, சமுதாய இயலில், கல்வி இயலில் அரசாங்க ஆதரவில் திராவிட நாட்டில் தலை காட்டக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்தது (விடுதலை 27 7. 52) இதற்கு முந்தைய இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பார்ப்பனத்து வேஷமே முக்கியமாய் இருநதது எனக் குறிப்பிட்டு, இப்பொழுதைய எதிர்ப்பு அரசியல் ரீதியிலானது எனப் பெரியார் குறிப்பிட்டார் (விடுதலை 27. 7. 52). அரசியல் சடடத்தில் உள்ளதை உடனடியாக அப்புறப்படுத்த இயலாதென்றெண்ணி ஆண்டுதோறும் ஆகஸ்டு முதல் நாளன்று இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்ட முறையைக் கையாளும்படி கோரினார். 1952 ஆம

ஆண்டு எடுக்கப்பட்ட இம்முடிவின்படி 1952, 1953 ஆகிய ஆண்டுகளில் ஆகஸ்டு முதல் நாளன்று புகை வண்டி நிலையங்களில் இந்தி எழுத்துகள் தார்பூசி அழிக்கப்பட்டன. ஆனால் 1. 8. 1954 அன்று நடை பெறவிருந்த அழிப்புக் கிளர்ச்சி 8- 8-.54– க்கு ஒத்திப் போடப்பட்டது. குடியாத்தம் சட்டமன்ற இடைத் தேர்தலில் காமராசர் காங்கிரசு வேட்பாளராகப் போட்டியிட்டதும் 1.8.54 அன்று நடைபெறவிருந்த தேர்தல் எவ்விதக் குழப்பமும் இன்றி நடைபெற்று காமராசர் வெற்றி பெற்று முதல்வராகத் தொடர்ந்து இருக்கவேண்டுமெனப் பெரியார் விரும்பியது காரணங்களாகும். (விடுதலை 17.7.54). அண்ணாதுரை பெரியாரிடமிருந்து விலகிய பின்னர், 1952 தேர்தலில் பெரியார் காங்கிரசை எதிர்த்து வேலை செய்தார். 1952 இல் குறைந்த அளவு பெரும்பான்மையுடன் காங்கிரசு இராசாசி தலைமையில் அமைச்சரவை அமைத்தது. இராசாசியின் குலக் கல்வித் திட்டத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பைக் கொண்டு இராசாசி பதவி இழந்த பின்னர், காமராசர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். காமராசரை பெரியார் ஆதரித்தார். முதலமைச்சரான காமராசர் போட்டியிட்ட இடைத்தேர்தல் பங்கமின்றி நடக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்த பெரியார், ஆகஸ்டு முதல் தேதியன்று நடைபெற வேண்டிய அழிப்புக் கிளர்ச்சியை எட்டாம்தேதிக்கு மாற்றியமைத்ததில் வியப்பில்லை. கிளர்ச்சி ஆண்டுதோறும் நடைபெறுகிற நடைமுறை ஒழுங்கு (routine) நிகழ்வாகி விட்டது. மேலும் அரசாங்கத்துடன் சமரசம் செய்து கொண்ட போராட்ட முறையை விட இப்பொழுது அரசாங்கத்தை ஆதரித்துக் கொண்டு அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை எதிர்த்த ஒரு போராட்ட வடிவம் கையாளப் பட்டது. இது கொள்கையிலும் நடைமுறையிலும் நீர்த்துப் போவதற்கான வாய்ப்புகளைத் திறந்து விட்டது.

இந்தப் போராட்ட வடிவம் நீர்த்துப் போயிற்று என்றெண்ணி திருச்சியில் கூடிய (17. 7. 1955) தி. க., கூட்டம் இந்திய தேசியக் கொடியைக் கொளுத்துவது என முடிவெடுத்தது. இந்திமொழியை அரசியலின் பெயரால் வன்முறையாகப் புகுத்தியதை எதிர்த்தும் கல்வித் துறையில் புகுத்தியதை எதிர்த்தும் இந்தியக் கூட்டாட்

சியில் தமிழர்கள் இருக்க சம்மதிகக வில்லை என்பதை எடுத்துக் காட்டவும் தேசியக் கொடியை கொளுத்தும் போராட்ட வடிவம் அறிவிக்கப்பட்டது (விடுதலை 20. 7. 1955). தமிழ் அல்லாத பிறமொழி தமிழ்நாட்டில் ஆட்சி மொழியாக,தேசிய மொழியாக,கல்வி,மொழியாக இருக்கக் கூடாதுஎன்பதற்காக இது அறிவிக்கப்பட்டது. (விடுதலை 21. 7. 1955).

தேசியக் கொடியைக் கொளுத்தும் போராட்டத்தைக் காங்கிரசுக் கட்சி பொதுவுடைமைக் கட்சி ஆகியவை மட்டுமின்றி தி.மு.க வும் ஒத்துக் கொள்ளவில்லை. இது வரை செய்யப்பட்ட கிளர்ச்சிகள் கவனிக்கப்படாமற் போனதாலே பரபரப்பான ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டியுள்ளதெனப் பெரியார் வெளிப்படையாகவே அறிவித்தார். (விடுதலை 23.7.1955). இது குறித்து அரசு கடுமையாக எச்சரித்து ஓர் அறிக்கையை வெளி யிட்டது (Hindu, 25.7.55). இதற்கிடையில் இந்தியத் தலைமையமைச்சா நேருவுடன் கலந்தாலோசித்ததாகக் கூறி முதலமைச்சர் காமராசர் ஓர் அறிக்கையை எல்லாப் பத்திரிகைகளிலும் (26.7.55). இல்வெளியிட் டார். தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப்பாடமாகத் திணிப்பதில்லை என்ற காமராசர் வாக்குறுதி அதில் வெளியிடப்பட்டிருந்தது, (தினமணி 26.7.55). இதன் பிறகு பெரியார் கொடி கொளுத்தும் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிடுவதாக அறிவித்தார். இங்கு பல அம்சங்களைக் கவனிக்க வேண்டும்.

பெரியாரின் கொடி கொளுத்தும் போராட்டம், இந்தியைக் கட்டாயப் பாடமாகக்கொண்டு வருதலுக்கு எதிரானது மட்டும் அன்று; ஆட்சிமொழியாக, தேசிய மொழியாக, கல்விமொழியாக இந்தியைத் தமிழகத்தில் கொண்டுவருவதற்கு எதிராக அந்தப் போராட்டம் என அறிவிக்கப் பட்டது-ஆரவாரத்தோடும் பரபரப் போடும். (விடுதலை 20.7.55) மேலும் அன்றைய சென்னை அரசில் இந்திகட்டாயப்பாடமாகவும்இல்லை; அதற்கான முயற்சிகளும் இல்லை. கோரிக்கைகளில் இம்மியும்நகராமலே ஒரு போராட்டத்திட்டம் கைவிடப் பட்டது; இது மட்டுமின்றி காமராசர் அறிக்கை வெளியிடப் படுவதற்கு முன்னர் பெரியாரிடம் அது காட்டப்பட்டு பெரியார் விரும்பிய படியே— இந்திமொழி தமிழ்நாட்டார் மீது

கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது என்ற ஒரே உறுதிமொழி கொடுத்தால் போதும் என்று பெரியார் விரும்பிய படியே- வாக்குறுதி தரபபட்டது (விடுதலை 3.8.55). அப்படியாயின் இந்த ஒன்று ஏன் பெரியாரின் விருப்பமா என்ற ஐயம் நமககு ஏறபடுவது ஒருபுறம் இருக்கட்டும் காமாரசர் அறிககை பெரியாரிடம் காட்டப்பட்டு பெரியாரின் ஒரே விருப்பம் உறுதி மொழியாக அறிவிககப் பட்டதைப் போல,போராட்டத் தைக் கைவிடுவதாகக் குறிப்பிட்ட பெரியாரின் அறிக் கையும் காமராசருக்குக் காட்டப்பட்டு வெளியிடப் பட்டது. பெரியாரின் செல்வாக்கு குறைந்த பொழுது அவரது செல்வாக்கைக் கூட்டுவதற்கான நோக்குடன் பெரியாரும் காமராசரும் இணைந்து ஏற்பாடுசெய்த திட்டமாக இது அமைந்துள்ளது என அன்றைய காலத் தில் அண்ணாதுரை வருணித்திருப்பதை (திராவிட நாடு, 14.8. 55)நாம் எளிதில புறககணிகக முடியாது. **மேன்மைதங்கிய அரசனின் விசுவாசமிகக எதிர்க்கட்சி** (King,s Loyal opposition) என்ற இடத்தைப பெற்று விட்ட பெரியாரின் இயக்கம்,தேசிய இனத்தின் சிக்கலை முன்னெடுப்பதாக ஆர்ப்பாட்டத்துடன் அறிவிக்கவும் பின்னர் ஆளுவோருடன் இணைந்து நின்று போராட் டத்தை (ஆரம்பிக்காத ஒன்றை) முடிககவும் ஆன உத்தி முறை, கடைந்தெடுத்த பிறபோக்குத் தனமான மற்றும் பிழைப்புவாத நிலைபாடு எனபதில எள்ளளவும் ஐயங் கொள்ள இயலாது. அரசியல சட்டம் அமுலுக்கு வந்த நாள்முதல் 1955 ஆகஸ்டுவரை மைய அரசு இந்தியைப் பரப்ப எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை வரிசைப் படுத்தினால் இந்தி ஆதிக்கத்தை உணர முடியும்:

1) சென்னை அரசில் உள்ள 1300 உயர்நிலைப் பள்ளி களில் 6 பள்ளிகளைத்தவிர 1294 பள்ளிகளில் இந்தி விருப்பபாடமாகக கற்றுத் தரப்பட்டது (Hindu 24.7.51).

2) மைய அரசு ஊழியர்கள் பதவிக்கு வந்தபின் தம் துறைவாரித் தேர்வுகளில் இந்திததேர்வு கட்டாய மாக வைக்கப்பட்டுள்ளது என மைய உள்துறை அமைச்சர் அறிவிப்பு(Hindu,10.8.51).

3) அரசியல் சட்டத்தில் வகைசெய்யப்பட்டதற்கு இணங்க, இந்தி பேசாத பகுதிகளில் இந்தியைப் பரப்ப இந்தி சீகசா சமீதி அமைக்கப்பட்டது. (Hindu 18.6.51)

4) 26.1.1952 அன்று இந்தியைப்பரப்ப ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டு, இதற்கென ரூ 17,08,000 தொகை ஒதுக்கப்பட்டது. (Hindu 28.1.52)

5) ஆங்கிலம் தொடர்ந்து இருக்கும் 15 ஆண்டுகளில் முதல் 5 ஆண்டுகளில் இந்தியை வளப்படுத்தும் பூர்வாங்க வேலை தொடங்கப்பட்டு கடைசி 10 ஆண்டுகளில் அலுவலக மற்றும் சட்டமன்ற நடவடிக்கைகளில் முழுமையாக அமுல்படுத்தப்படும் என மைய உள்துறை அமைச்சர் அறிவிப்பு (Hindu 30.3 54).

6) இந்தியைப்பரப்பவும் வளப்படுத்தவும் வகைகளைக் கண்டறிய ஒரு குழு நியமிக்குமாறு சேத்கோவிந்த தாஸ் தலைமையிலான பாராளுமன்ற இந்தி உறுப்பினர்கள் குடியரசுத்தலைவருக்கு 13.12.54 அன்று கொடுத்த மனுஅடிப்படையில் பி.ஜி.கெர் தலைமையில் ஒரு குழு 7.6.55 அன்று அமைக்கப்பட்டது (Hindu 8.6.55)

7) மைய அரசுப்பணிகளுக்கான அனைத்திந்தியப் போட்டிகளில் ஆங்கிலத்தைப் படிப்படியாக நீக்கி, இந்தியைப் பயன்படுத்த இந்திய அரசு விருப்பம் தெரிவித்தல். (Hindu 9.4 55)

8) 28.2.55 அன்று மைய நிதியமைச்சர் தன் வரவு செலவு அறிக்கையை (Budget) இந்தியில் முன் வைத்தார்.

9) பிப்ரவரி 1955 க்குள் 220 மைய அரசின் சட்டங்கள் இந்தியில் மொழியாக்கம் செய்யப்பட்டுவிட்டன. (Hindu, 16.3.55)

10) 26.1.65 க்குள் இந்தியைக் கற்றுக்கொள்ளும்படி இந்திபேசாத பகுதிகளின் மைய அரசு ஊழியர்கள்

31.3.55 அன்று அறிவுறுத்தப்பட்டனர் (Hindu 1-4-55)

11) மைய அரசின் ஊழியர்கள் பதவி உயர்வுக்கு இந்தி கட்டாயப் பாடமென அறிவிப்பு (Hindu, 21.4.55)

இவையெல்லாம் சில எடுத்துக்காட்டுகளே. 1950-55 காலத்தில் இந்தியை அலுவல் மொழியாகவும் தேசிய மொழியாகவும் மாற்ற அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளாகும். இத்தகு சூழலில் காமராசர் அறிக்கையைக் (அதாவது பெரியாரின் திருத்தங்களுடன் கூடிய) கண்ணுற்று பெரியார் மனநிறைவு கொண்டாரெனில் **தமிழ்த்தேசிய இனத்தின் நலன்களைப் பிரதிபலிக்கக் கூடிய தன்மையைக்கூட பெரியார் இழந்து விட்டார்** என்பதே சாலப்பொருத்தமாகும்.

அந்த நிலையைத் தாவிப்பிடிக்க அண்ணாதுரையின் தி.மு.க., பெரிதும் முயன்றது. 15.9.49 அன்று தி.க., விலிருந்து பிரிந்த தி.மு.க., மொழிக்கொள்கையில் தி.க., தேர்ந்தெடுத்த பாதையைவிட மக்களுக்கு நெருக்கமான பாதையைத் தேர்ந்தெடுத்தது. 8.9.50 அன்று எடுத்த தீர்மானத்தின்படி, மத்திய அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காண்பிக்கப்பட்டது. தி.க.வைப்போல தேர்தல்களை முற்றாக தி.மு.க., முதலில் நிராகரிக்கவில்லை. 17.11.51இல் கூடிய தி.மு.க., வின் பொதுக்குழுக்கூட்டத்தில் இந்திய அரசியல் சட்டத்தின் ஜனநாயகவிரோதமான மற்றும் ஏதேச்சதிகாரப்போக்கையும்கண்டிப்பதன் அறிகுறியாகமுதல்பொதுத் தேர்தலில் கலந்துகொள்வதில்லையெனினும் திராவிடத் தனியரசுப்பிரச்சனையை ஆதரிக்கும் கட்சிகளுக்கும் நபர்களுக்கும் ஆதரவுதருவதுஎன்றும் முடிவுசெய்யப்பட்டது. இந்தியஅரசியல் சட்டத்தின் ஜனநாயகவிரோதத்தையும் ஏதேச்சாதிகாரப்போக்கையும் கண்டித்தாலும், அரசியல் சட்டம் வழங்கியுள்ள வாய்ப்புகளை இப்பொழுதுமட்டும் பயன்படுத்துவதில்லை எனக்கவனமாக முடிவெடுத்தது. இத்தகைய வாய்ப்புகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்கேற்றவிதத்தில் அதன் நடைமுறைகள் அமைந்திருந்தன. மொழிச் சிக்கலில் திராவிடர் கழகம் மட்டுமே பிரதிநிதித்துவம் வகித்த பொழுது தி.மு.க, அதற்கு இணையாகத் தன்னையும்நிறுத்திக் கொண்டது. எந்தக் கட்டத்திலும் அதற்கு எதிரியாகத்தன்னை

நிறுத்திக் கொள்ள முனையவில்லை. நிதானமிக்க, சாதுரியமான நடைமுறைகளின் மூலம தி.க.வை மொழிச் சிக்கலிலிருந்து ஓரங்கட்டியது. பரபரப்பான, ஆர்ப்பாட்டமிக்க பெரியாரின் நடைமுறைக்குப் பதிலாக அண்ணாதுரையின் நடைமுறை, வளர்ச்சியை மையமாகக் கொண்டிருந்தது. வகுக்கப்படும் போர்த்திட்டம், கொள்கைக்குத் தீராப்பகையைத் தேடித்தருவதாக இருக்கக் கூடாது என்றும பகைக் கூடாரத்தில் உள்ளவர்களின் உள்ளத்திலும் பரிவு ஊட்டக்கூடியதாகஇருக்க வேண்டுமென்றும் இயக்கத்தின் இன்றைய நிலைக்கு ஏற்றதாகவும் எதிர்கால வளர்ச்சியைப்பாதிக்காததாகவும இருக்கவேண்டுமென்றும் அண்ணாதுரை பெரிதும விருமபியுள்ளார் (திராவிட நாடு 7.8.1955) இதுகுறித்துப் பின்னால்விரிவாகக் காண்போம்.

ஆங்கிலம் இந்தியாவின் அலுவல் மொழியாக இருக்க வேண்டும் என்பதில் அண்ணாதுரைக்கு உடன்பாடே, 1956 ஜனவரி28 இல் கூட்டிய பல கட்சிகள் மாநாட்டில் எடுக்கப்பட்ட இம் முடிவுக்கு அண்ணாதுரை உடன்பட்டிருந்தார். தி.மு.க. தி.க. தமிழரசுக்கழகம்,பொதுவுடைமைக்கட்சி, சோசலிஸ்டுக்கட்சி, பிரஜா சோசலிஸ்டுக்கட்சி ஆகிய கட்சிகள் அடங்கிய ஒரு அமைப்பு கூடி இவ்வாறு முடிவுஎடுத்தது. 1957இல் நடந்த தேர்தல்களில் பங்கெடுத்து தி.மு.க சட்டமன்றத்துக்கும் பாராளுமன்றத்துக்கும தன் பிரதிநிதிகளைஅனுப்பியது. இந்தியை வளர்ப்பதற்குரிய வழிவகைகளைக் கண்டறியும் பி.ஜி. கெர் குழுவின் அறிக்கை எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப் பட்டு, கருத்துகள் கோரப்பட்டன. சென்னை மாகாண அரசாங்கம் இது தொடர்பாக தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை இரண்டு முறை (நவம்பர்1957; 10.12-57) கூட்டியது. இரண்டு கூட்டங்களிலும் தி.மு.க. தலைவர் அண்ணாதுரை கலந்து கொண்டார். கெர் குழுவின் அறிக்கை மீதும் மும மொழித் திட்டம் குறித்தும் இந்திய ஒன்றிய அலுவல்மொழி குறித்தும் இந்தக் கூட்டங்கள் முடிவு செய்தன. முதலில்மும்மொழித்திட்டத்தைக் காண்போம்,

> 'தமிழ் நாட்டில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மூன்று மொழிகள இருக்கும. இந்தி பேசும் பகுதிகளில் இந்தி, ஆஙகிலம மறறும் எதாவது ஓர்

இந்திய மொழி ஆகிய மூன்று மொழிகள் இருக்கும். இந்த அடிப்படையில் நாம் மூன்று மொழிகளைப் பயன்படுத்தினால் இந்திய ஐக்கியம் ஏற்படும்... 1957 இல் சென்னை அரசாங்கம் நடத்திய சர்வ கட்சி மாநாட்டில் இந்தத் திட்டம் தோற்றுவிக்கப் பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட எல்லாக் கட்சிகளும் இதை ஏற்றுக் கொண்டது. (இந்தியாவின் மொழிப் பிரச்சினை, மோகன் குமார மங்கலம், என். சி. பி. எச்., வெளியீடு, ஜூலை 1965, பக். 53).

இந்திய ஒன்றிய மொழி குறித்து என்ன முடிவு எடுக்கப் பட்டது?

இந்தியப் பாராளுமன்றக் குழுவிற்கும் இந்திய அரசுக்கும் சென்னை அரசு இதைத் தெரிவிக்க விரும்புகிறது. இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழிகளாக இந்தியையும ஆங்கிலத்தையும் நீண்டகாலத்துக்குப் பயன்படுத்துதல் அவசியம் எனத் தெரிவிக்க விரும்புகிறது.

(Language Problem of India. Third Memorandum. Govt. of Madras, 1958, p. 16).

பாடமொழிகுறித்தும் அலுவல்மொழிகுறித்தும் எடுக்கப் பட்ட முடிவுகள் இவையாகும். மும்மொழித் திட்டம் குறித்துப் பின்னாளில் சர்ச்சைவந்தபொழுதுகூட்டத்தில் கலந்துகொண்டதற்குத் தான் கையொப்பமிடப்பட்டுள் ளதேதவிர, அரசு ஏற்றுக்கொண்ட முடிவை தாங்கள் ஒப்புக்கொண்டதாக அதற்கு அர்த்தமில்லை என அண்ணாதுரை விளக்கம் அளித்தார். இந்த இரண்டு அம்சங்களிலும் பின்னர் தம் நிலைபாட்டை விளக்கும் வகையிலும் வலியுறுத்தும் வகையிலும் தி.மு க., சட்ட மன்றத்தில் இரண்டு தீர்மானங்களைக் கொணர்ந்தது. ஆங்கிலம் இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியாகக் காலவரம்பின்றி நீடிக்கும் வகையில் அரசியல் சட்டத் தின் 17 ஆவது பிரிவு திருத்தப் படவேண்டும் என க. அன்பழகன் (11.3.58) கொணர்ந்ததீர்மானம்14/121 என்ற வாக்குகளில் தோற்கடிக்கப்பட்டது. இது வேறொன்றுமில்லை சென்னை அரசாங்கம் 10 12 57.

இல் கூட்டிய அனைத்துககட்சிக் கூட்டத்தில் எடுக்கப் பட்டமுடிவின் ஒருபகுதியாகும். ஆனால் இதையே சட்டமன்றத் தீர்மானமாக மாற்றுவதற்கு காங்கிரசு அன்றைக்குத் தயங்கியது. இன்னொரு தீர் மானத்தையும் (11.3.58) அன்றைய தி.மு.க., சட்ட மன்ற உறுப்பினர் எம்.பி. சுப்பிரமணியம் (பின்னர் ஈ.வெ.கி. சம்பத்துடன தி.மு.க.விலிருந்து விலகி, தமிழ்த்தேசியக்கட்சி அமைத்து; அதன்பினனர் காங்கிர சில் இணைநது, அதன் தமிழ்நாடு மாநிலத்தலைவராக உயாந்து,இறுதியில அ.இ.அ.தி.மு.க.,வில் இப்போது இருக்கின்றார்) கொணாந்தார். இந்திபேசும் மாணவர் கள இரண்டுமொழிகளை மட்டுமே கற்கும பொழுது இந்தி பேசாத பகுதிகளின மாணவாகள் மூனறு மொழிகளைக் கற்குமாறு காட்டாயப்படுத்தக் கூடாது என அவர் கொணர்ந்த தீர்மானம் தோற்கடிககப்பட்டது. மும் மொழித்திட்டம தொடர்பாக தமககுஏற்பட்ட கறையை இவற்றின மூலம் தி.மு.க., களைநதெறிந்தது; அதே நேரத்தில் ஆங்கிலத்தின் ஆதரவுசக்தி என்ற அழுத்த மான நிலையை உறுதிப்படுத்திக் கொண்டது. மேலும் மத்திய ஆட்சிமொழியாகவும் மாநிலங்களுக்கு இடையே தொடாபு ஏறபடுத்திக் கொள்ளவும் ஆஙகிலம்தான் பயன்படுத்தப்பட வேண்டும என்பதில் அண்ணாதுரை உறுதியாக இருந்தாா (சிகாக்கோ டெய்லி டைம்ஸ் நிருபருடன பேட்டி 9.10.1958)

அண்ணாதுரையின் ஆங்கில ஆதரவுநிலைபாடு. நேரு வின் உறுதிமொழியை (7.8.1959) இறுகப்பற்றிக் கொள்கிறது. நேருவின உறுதிமொழியை தேன் பெய்த லுக்கு இணையாக அண்ணாதுரை உவமித்துள்ளார். (திராவிட நாடு, 14.1 63) 1959 செப்டம்பரில் பூவிருந்த வல்லியில கூடிய தி.மு.க., மாநாட்டில் இது குறித்து வாழத்துத் தெரிவித்து, நேருவில வாக்குறுதி சட்டப் பூர்வமான நடவடிக்கையாக நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொணடார்.

இநநேரத்தில் 27.4.60 அனறு குடியரசுத் தலைவர் வெளியிட்ட ஆணையில கெர்குழுவின் பரிந்துரைகவ் குறித்த கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. நேருவின் உறுதிமொழியை தேன் பெய்ததெனவரவேற்ற தி.மு.க

குடியரசுத்தலைவரின் ஆணையை இந்திஏகாதிபத்தியக் கட்டளையாகக் கருதியது. 17.6.60 இல் கூடிய தி.மு.க.மாநிலப்பொதுக்குழுக்கூட்டம், இதை எதிர்த்து ஈ.வெ.கி.சம்பத் தலைமையில் ஒரு போராட்டக் குழுவை நியமித்தது. 31.7.60அன்று இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தப் பட்டது. ஆகஸ்டு மாதத்தில் தமிழகம் வரும் குடியரசுத் தலைவருக்கு எதிராகக் கறுப்புக் கொடி காண்பிக்கப்பட்டது. வீர ஆவேசமிக்க எழுத்துரைகளும் பேச்சுரைகளும் நிகழ்த்தப் பட்டன.ஒன்றை மட்டும் காண்போம்:

> நமக்கு எத்துணை கஷ்டம் நேரிடுவதாயினும் தாயகத்துக்கு மானக் குறைவு, இனத்துக்கு இழிவு, மொழிக்குத் தாழ்நிலை, ஏற்படலாகாது. ஏற்பட்டு விடக் கூடாது அந்தத் தூய தொண்டாற்றவே உயிர் நம்மிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது ...... அன்று கையாண்டதைவிடக் கடுமையாக இருக்கும் கெடுபிடி என்று அமைச்சர்கள் கூறுவரேல் நாம் என்ன சொல்ல முடியும். அன்று வீழ்ந்த பிணத்தை விட இன்னும் சற்று அதிக அளவில் கீழேசாயும்... இந்தப் போராட்டத்தில் எங்களுக்கு வெற்றி கிடைக்க வேண்டும், இல்லையேல் இந்த இயக்கத்தைக் கலைத்துவிட வேண்டும்.

அண்ணாதுரையின் திராவிடநாடு இதழில் வந்த கருத்துக்கள் (31.7.60) கூட்ட உரைகள் ஆகியவற்றில் போராட்டத்துக்குத் தொண்டர்களைத் தயார்படுத்தக் கூடிய எழுச்சிகள் நிரம்பியிருந்தன. ஆனால் இப்படிப் பரபரப்பாகத் தயாரிக்கப்பட்ட தொண்டர்களின் எழுச்சி, பயன் படுத்தப் படாமலே போயிற்று; குடியரசுத் தலைவருக்குக் கறுப்புக்கொடி காண்பிக்கும் கிளர்ச்சித் திட்டத்தை தி.மு.க., செயற்குழு கூடி நிறுத்திக் கொண்டது. 3. 8. 60 அன்று நேரு, ஈ. வெ. கி. சம்பத்துக்கு எழுதிய கடிதத்தில் தமது அரசு கொடுத்த உறுதிமொழி காப்பாற்றப்படும் என உறுதி குறிப்பிட்டிருந்ததாகவும் உள்துறை அமைச்சர் பந்த் இத்தகைய உறுதிமொழியைக் கொடுத்திருந்ததாகவும் இவையெல்லாம் அதிகாரப் பொறுப்பில் உள்ளோர் வாக்குறுதிகளைச் செயல்படுத்த விரும்புகிறார்கள் என்பதை

மகிழ்வோடு காண்பதாகவும் செயற்குழு குறிப்பிட்டது; அதோடு மட்டுமின்றி சம்பத்துக்கு நேரு எழுதிய கடிதம் தி. மு. கழகத்துக்கும் தென்னக மக்களுக்கும் நீதியும் நேர்மையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கும் வலுவான சான்று எனவும் செயற்குழு கருதியது. இறுதியில் இப்பொழுது பெற்றுள்ள இந்த முதல் வெற்றிக்கு அனைவரையும் பாராட்டுகிறது எனக் (திராவிடநாடு, 7. 8. 1960). குறிப்பிட்டது. நேருவின் வாக்குறுதியை குடியரசுத்தலைவரின் ஆணை மீறியிருப்பதாகக் குறைபட்டு திட்டமிடப்பட்ட ஒரு போராட்டத் திட்டம், நேருவின் வாக்குறுதி குறித்து நேருவின் இன்னொரு கடிதத்தை நீதியும் நேர்மையும் தரும் வலுவான சான்றாகக் கருதி அதையே முதல் வெற்றியாக சுயமகிழ்வு கொள்கிறது. இது பெரியாரின் கொடி கொளுத்தும் போராட்டம் நிறுத்தப்பட்டதை நினைவு படுத்துகிறது. உண்மையில் நேருவின் வாக்குறுதி குறித்த நேருவின் கடிதம் என்ன? 1960 ஜூலை 31 இல் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்குப் பின்னர் ஈ. வெ. கி. சம்பத், அண்ணாதுரையின் கட்டளைப்படி டில்லிக்குச்சென்று 3. 8. 60 அன்று நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். இக்கடிதத்தின் ஒருபகுதி வருமாறு (Sunday times 7. 8. 60).

> .... தெற்கில் நடைபெறும் கிளர்ச்சி முடிக்கப்பட்டாக வேண்டும்.. இப்பொழுது உள்ள நிலைமைக்கு ஒரே தீர்வு, கிளர்ச்சி திரும்பப் பெறப்பட வேண்டும் என்பதே... நாங்கள் இந்தக் கிளர்ச்சியை முடித்துக் கொள்வதில் பெரு விருப்பமாக இருக்கின்றோம், இந்தக் கிளர்ச்சி குறித்துத் தங்களின் பதில் செயல் பாடு (res ponse) கிளர்ச்சியை முனைப்புத்தணியச் (moderate) செய்வதில் எமது கட்சியின் கரத்தை வலுப்படுத்தும் என உறுதி கூறுகிறேன்....

இக் கடிதத்துக்கு நேரு அன்றே கடிதம் எழுதினார். அதன் பகுதிகள் பின்வருமாறு:

அன்புள்ள திரு. சம்பத்,

> ஆகஸ்டு 3 ஆம் நாளிட்ட தங்களின் கடிதத்தை இன்று காலையில் பெற்றேன்.

தாங்கள் எழுதியுள்ளவை குறித்து நான் மிகவும் வியப்படைந்தேன் என்பதைத் தங்களுக்குக் கட்டாயம் சொல்லியாக வேண்டும். மொழிப் பிரச்சினை குறித்து பாராளுமன்றத்தில் நான் அளித்த உறுதி மொழியிலிருந்து எந்த விதத்திலும் எந்தக் காலத்திலும் எமது அரசு பின் வாங்கியதில்லை. இன்னும் சொல்லப் போனால், இது குறித்த குடியரசுத்தலைவரின் ஆணையில் எமது உறுதி மொழி குறிப்பிடப் பட்டுள்ளது. நேற்றோ முன் தினமோ உள்துறை அமைச்சர் பாராளுமன்றத்தில் இதுகுறித்து வலியுறுத்தியுள்ளார்.சென்னைஅரசின் நிதியமைச்சரும் இந்த அம்சம் குறித்து மிகத் தெளிவாக விளக்கியுள்ளதாக அறிகிறேன். எனவே இந்த அம்சத்தில் தவறான புரிதல் ஏன் ஏற்பட்டுள்ளது என்பதை என்னால் விளங்கிக் கொள்ள இயலவில்லை. எமது அரசு கொடுத்த உறுதி மொழிகளை நாங்கள் முழுமையாகப் பற்றி யுள்ளோம்.

நம் நாட்டின் குடியரசுத் தலைவருக்கு அனுமதிப்பு தருவதாக மட்டுமே கருதத்தக்க விதத்தில் தங்கள் கட்சி செயல்படுவது எனக்கு மிகவும் வருத்தத் தைக் கொடுக்கிறது.

தங்களின் நேர்மையுள்ள,
ஜவகர்லால் நேரு.

நேருவின் கடிதம், சம்பத்தின் கடிதத்துக்குப் பதில் உரையாகும், எழுப்பப்பட்ட கிளர்ச்சியை முனைப்புத் தணியச்செய்வதற்கு நேருவிடமிருந்து பதில்செயல் பாட்டை எதிர்நோக்கியதாகும். பண்டித நேருவின் கடிதத்தில் நீதியும் நேர்மையும் தரும் வலிமையான சான்றுகள் எவையும் இல்லாததோடு, தம் உறுதிமொழி குறித்த மறுஉறுதிமொழியையும் குடியரசுத்தலைவரின் ஆணைக்கு எவ்விதமறுப்பின்மையையும் காண்கிறோம். அவைமட்டுமின்றி, குடியரசுத்தலைவருக்கு அவமரியாதை செய்வதில் வேண்டுமென்றே தி.மு.க., செயல் படுவதாக ஆழ்ந்த வருத்தமும் (அதாவது ஆளுவோர் மொழியில் சொன்னால் கடுமையான எச்சரிக்கையும்) உள்ளது. 17.6.60 இல் குமாரபாளையத்தில் தி.மு.க.,

பொதுக்குழு கூடி குடியரசுத்தலைவரின் ஆணையை திரும்பப்பெறவேண்டும் என்று ஒருமனதாக எடுத்த தீர்மானம் இன்னமும் அப்படியேதான் உள்ளது. ஆனால் உசுப்புப்பட்ட போராட்டம், முதல்வெற்றி குறித்த சுயபாராட்டுதலோடு முடிந்துபோயிற்று. எழுத்துக்களாலும் பேச்சுகளாலும் தட்டியெழுப்பப் பட்ட தொண்டர்களை அவை கொண்டே அடங்கச்செய்யும் திறனையும் தலைமை பெற்றிருந்தது. 7.8.60 திராவிட நாடு இதழில் மூலவர் மூவா முர்சொலி என்றதலைப் பில் அண்ணாதுரை எழுதிய கடிதம் இதற்கு நல்ல சான்று. போராட்டம் தொடங்குவதற்கு முன்னரே வெற்றிகிடைத்துவிட்டதாகவே இக்கடிதம் குறிப்பிடு கிறது. மேலும், குடியரசுத்தலைவரின் ஆணைக்கு விளக்கம் வேண்டியே போராட்டம் தொடங்கப்பட்டதாக வும் தேவையான விளக்கங்கள்கிடைத்ததால் போராட் டம் கைவிடப்பட்டதென்றும் குறிப்பிடப்படுகின்றன. 17.6.69 அன்று குமாரபாளையம் பொதுக்குழுவில் குடியரசுத்தலைவர் ஆணைதிரும்பப் பெறல்வேண்டு மென்றும் ஆகஸ்டு 30 க்குள் திரும்பப்பெறவில்லை யென்றில் போராட்டம் நடத்துவதெனவும் முடிவெடுக்கப் பட்டிருந்தது. இது எதுவும் நிகழாமலேயே வெற்றிச் சாறு பருகப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு போராட்டத்தின் அம்சங்களையும் தமிழக அரசியல் பண்பாட்டில் இவற்றால் ஏற்பட்ட விளைவுகளையும் பின்னர் காண்போம்.

இந்திக்கு எதிராக ஆங்கிலக் கேடயத்தை மட்டுமே தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த தி.மு.க. வின் மொழிக் கொள்கையில் 1960களின் தொடக்கத்தில் மிகுந்தோரான மாற்றத்தைக் கண்டறிய இயலும். அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று க. அன்பழகன் கொணர்ந்த ஒரு தீர்மானத்தின் மீது (5-9-60) அண் ணாதுரை ஆற்றிய உரையில் அது காணப்படுகிறது:

1). அரசியல்சட்டத்தின்17 ஆவது பிரிவு மொத்தமாகத் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

2) இந்திய நாட்டில் உள்ள ஒரு மொழிதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம்

நீக்கப்பட்டு எந்தெந்த மொழிகள் ஆட்சி மொழி களாக்கப்பட வேண்டும்.

3) அத்தகைய தகுதி அவற்றுக்கு வரும் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்க் வேண்டும்.

எப்படியாயினும் இறுதியாக அல்லது ஒரு நீண்ட இடைக் காலத்தில் ஆங்கிலத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கு இருப்பினும், 17 ஆவதுபிரிவை மொத்தமாகத் திருத்தியமைக்கவேண்டும் என்று கோரியதை ஒன்றுக்கு மேற்பட்ட பலமொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்க வியலாதாளென்று விவாதத்தோடு இணைத்ததைக் குறித்து நாம் பெருமைப்பட முடியும். இத்தகைய விவாதத்தை நடைமுறைச் சாத்தியத்தோடு மட்டு மின்றி, அதைக் கண்டடைவதற்கான வழி முறைக ளோடும் காணவேண்டும்.. அடிப்படையில் எவ்வித மாற்றமும் இல்லாத இந்த மிக லேசானமாற்றத்தைக் காணுமுன் இந்தியாவின் நிர்வாக மொழி குறித்த நோக்குகளை அண்ணாதுரை வகைப்படுத்தும் அடிப் படைகளைக் காணலாம் (திராவிடநாடு 14.8. 60)

1) இந்தியா என்றென்றைக்கும் ஒன்றாக இருக்கும் என்ற எண்ணத்தில் காண்பது.

2) இந்தியா பிரியப் போகிறது என்ற எண்ணத்தை மனதில் கொண்டு பிரியும் வரை உள்ள இடைக் காலத்தில் எது நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்பது.

3) மத்திய சர்க்காரிடம் அதிகப்படியான பொறுப்பு களைக் குறைத்துவிட்டால் நிர்வாகமொழி எதுவாக இருந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்துடன் அணுகுவது.

இந்த மூன்றில் இரண்டாவது நிலைபாட்டை எடுத்துக் கொண்டு அண்ணாதுரை மொழிச்சிக்கலை அணுகுவதாக குறிப்பிட்டுள்ளார் (திராவிட நாடு 14. 8. 60) இந்தியா பிரியும் வரையிலான இடைக் காலத்தில் இந்திய நிர்வாக மொழியாக இந்தியுடன். ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது தான் தி.மு.க. வின் நிலைபாடாக இருந்தது. ஒரு வேளை இந்தியா பிரிந்து திராவிடநாடு கிடைத்திருந்தால் திராவிடத்தின் நிர்வாக மொழி எதுவாக இருக்கக் கூடும்? திராவிட நாடும், இந்தியாவைப் போல பல தேசிய இனங்களைக் கொண்டதாகும். இதற்கு திராவிடர் கழகத்தின் பொதுச் செயலராக இருந்த அண்ணாதுரை 23. 11, 46 அன்று திராவிடநாடு ஏட்டில் பதிலளித்துள்ளார்.

> கேள்வி: திராவிடத்தின் மொழியாது?
>
> பதில்: திராவிடம் என்பது கூட்டாட்சி- அதிலே தமிழ் தெலுங்கு மலையாள, கன்னட மொழியினர் நாடுகள் இருக்கும். அந்தந்த நாடுகளிலே **தாய் மொழியே ஆட்சி** செய்யும். கூட்டாட்சிக் குழுவுக்கு... ஆங்கிலத்தை மொழியாகக் கொள்ளலாம் என்ற கருத்தைத் திராவிடர் கழகம் எடுத்துரைக்கும். பெரும் பான்மை நாடுகளின் ஒப்பம் கிடைத்தால் கொள்ளும்— இல்லையேல் எம். மொழிக்குப் பேராதரவு கிடைக்குமோ அம் மொழியைக் கொள்ளும்.

திராவிடக் கூட்டாட்சியின் உறுப்பு நாடுகளில் தாய் மொழிகளே ஆட்சிமொழிகள்; ஆனால் கூட்டாட்சியின் நிர்வாகம் ஆங்கிலம் அல்லது பெரும் பான்மை நாடுகள் ஒப்புக் கொள்ளும் ஏதேனும் ஒரு மொழியில் நடைபெறும். இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழியைக் கண்டடைவதில் எத்தகைய ஜனநாயக மறுப்பும் சமத்துவ மற்ற போக்கும் ஏகாதிபத்திய நோககும் காணப்பட்டனவோ அவைஎவ்விதததும் குறைவின்றி அண்ணாதுரையின் திராவிடக் கூட்டாட்சி நிர்வாக மொழியைக் கண்டடையும் முறையில் உள்ளது. பல தேசிய இனங்கள் கொண்ட ஒரு நாட்டில் ஆங்கிலத்தையோ ஏதேனும் ஒரு மொழியையோ அவசியமாக்குகிற இந்த முறையியல் அண்ணாதுரையிடம் தொடர்ந்து உள்ளது.

ஆகவே பிரிவினையை எல்லையாகக் கொண்டு ஒன்றிய மொழிக் கொள்கையை வகுப்பதாக அண்ணா துரை கூறும் சுய விளக்கத்தை ஏற்றுக் கொள்ளல் பொருத்தமாக இராது. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட பல மொழிகளையும் ஆட்சிமொழிகளாக உயர்த்துவது என்பதையும் அதுவரை ஆங்கிலத்தை ஆட்சிமொழி யாகக் கொள்வது என்பதையும் 1960கள் முதற் கொண்டு தி.மு.க., விடம் காண்கிறோம். இதன் நேர் மை/ நேர்மையின்மை குறித்துப் பின்னர்க் காண்போம். 1960களில் இந்தியப் பாராளுமன்ற அரசியல் வரலாறு பல மாறுதல்களைக் கண்டது. குறிப்பாகக் காங்கிரசுக் கட்சியின் ஏகபோகம் நெகிழ்ச் சியடையத் தொடங்கியது. நாடு சந்தித்த இரண்டா வது பொதுத் தேர்தலில் பல மாநிலங்களில் எதிர்க் கட்சிகள் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றன: 1962இல் தி.மு.க. 50 இடங்களைப் பெற்றது. இது மட்டுமின்றி காஷ்மீரத்திலும் வட.கிழக்கு மாநிலங்களிலும் தமிழகத் திலும் நடந்த தேசிய இன எழுச்சிகள் நாட்டைப் பிரிக்கும்படி கோரின. இந்நிலையில் இந்திய– சீன எல்லை முரண்பாட்டைப் பயன்படுத்திக் கொண்டு இந்திய ஒருமைப் பாட்டைக் காக்க வேண்டும் என்ற நோக்கத்தை அறிவித்துக் கொண்டு 1963 சனவரியில் பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்திருத்தம் (16 ஆம் திருத்தம்) கொணரப்பட்டது. நாட்டுப் பிரிவினை கோருபவர்கள் தேர்தலில் நிற்கத்தடை செய்யும் இத் திருத்தம் கொண்டு வரப்பட்ட பின், தி.மு.க. பொதுக் குழு சூனில் கூடி ஒரு குழு அமைத்து கட்சியின் சட்ட திட்டத்தில் மாற்றம் செய்தது; 3. 11.63ல் நடந்த செயற்குழு இதை ஏற்றுக் கொண்டது. அது பின்வரு மாறு:

> ......நான்கு மொழிவழி மாநிலங்களும் இந்திய அரசுரிமை, ஒருமைத் தன்மை, அரசியல் அமைப்புச் சட்டம் ஆகியவற்றுக்குள், இயன்ற அளவு கூடுதலான அதிகாரங்களைப் பெற்று நெருங்கிய திராவிடக் கூட்டமைப்பாக நிலவப்பாடு படுவது.

இத்திருத்தம், அரசியல் தந்திரம் என்ற பெயரில் இயக்கம்

தொடர்ந்து தேர்தல் பாதையை மேற்கொள்வதற்காக கொடுக்கப்பட்ட விலையாகும்.

இயக்கத்தின் மூலாதாரமான கொள்கை கைவிடப்பட்ட அதே காலத்தில் இந்திய உள்துறை அமைச்சர் அலுவலகமொழிமசோதா (12.4.63) கொணர்ந்தார். இந்த மசோதா, மாநிலங்களின் மீதும் இந்தியின் கரங்களை விரிவாக்குவதுடன் 1965க்குப் பின்னரும் ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்துவதற்கும் வகை செய்தது. இதை எதிர்த்த தி.மு.க. வின் நிலைபாடு இங்கு முக்கியமானது. 29.4.63 இல் தி.மு.க. கூட்டத்தில் இந்தியப்பிரதமர் நேரு அளித்த வாக்குறுதி மீறப்பட்டதைக் கண்டித்தும் பதினான்கு மொழிகளும் அலுவல்மொழிகளாக்கப்பட வேண்டும் என்றும் அண்ணாதுரை வலியுறுத்தினார். இந்தமசோதா மீதான விவாதத்தில் மாநிலங்களவையில் அண்ணா துரையின் (மே 1963) பேச்சு இப்படி அமைந்தது. பல் வேறு சமூக இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஒருமொழியை அலுவல் மொழியாக்குவது கூடாதென்றும் இத்தகைய மொழி காலப்போக்கிலேயே உருவாக முடியுமென்றும் அதுவரை இப்போதைய நிலையை நிரந்தரப்படுத்தி ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்றும் அண்ணாதுரை வலியுறுத்தினார். இதையே நாடாளுமன்றத்தில் கே.மனோகரன் வலியுறுத்தினார். 1960இன் தொடக்கத்தில் மேற்கொண்ட நிலையைத் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தியது. எனினும் மசோதா சட்டமானதைக் கண்டித்து, நீண்ட காலப் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டிய தேவையைத் தி.மு.க. உணர்ந்தது. ஜூன் 1963 இல் கூடிய தி.மு.க. பொதுக்குழு, இதற்கென ஒரு போராட்டக்குழுவை அறிவித்தது. இக்கூட்டத்தில்தான் கட்சியின் தலையான கொள்கையைக் கைவிடுவதற்கான ஒரு குழுவும் அமைக்கப்பட்டது; நவம்பரில் அது கைவிடப்பட்டது. 3.11.63 இல் இந்திய அரசுரிமையிலும் ஒருமைத் தன்மையிலும் அரசியல் அமைப்புச் சட்டத்திலும் நம்பிக்கை கொள்வதாக ஒப்புக் கொண்ட பின்னர் ஐந்தாண்டுகளுக்கு இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடை பெறும் என அறிவிக்கப் பட்டு, அரசியல் சட்டத்தின் 17 ஆவது விதியைப் பகிரங்கமாகக் கொளுத்துதல், அரசு அலுவலகங்கள் முன் மறியல்

என்ற போராட்ட வடிவங்கள் அறிவிக்கப் பட்டன. முன்னெச்சரிக்கையாக அண்ணாதுரை 16.11.1963 இல் சென்னையில் கைது செய்யப்பட்டார். சட்டப் பிரிவை எரிக்க வில்லையெனினும் 'அந்தக் காரியத்தைக் கருதி தீர்மானித்துக் கொண்ட' அண்ணாதுரைக்கு தேசிய அவமதிப்புச் சட்டத்தின்படி ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் அண்ணாதுரை மிகக் கவனமாகச் சட்ட வரம்புக்கு உட்பட்டுக் கொடுத்த வாக்கு மூலத்தின் ஓரிடத்தில் இந்திய அரசியல் சட்டத்தின் 17 ஆவது பிரிவுதான் உண்மையில் தேசிய அவமதிப்பை ஏற்படுத்துகிறது எனக்குறிப்பிட்டார். மதுரை, காஞ்சிபுரம், தூத்துக்குடி, கடலூர், சேலம், கோவை, ஆகிய இடங்களில் சட்டப் பிரிவுக்குத் தீயிடப்பட்டது. தி.மு.க. வின் முன்னணித் தலைவர்களும் மாவட்டத்தலைவர்களும் கைதாயினர். சென்னை, தூத்துக்குடி, விழுப்புரம், திண்டிவனம், செஞ்சி, கடலூர், குறிஞ்சிப்பாடி, குளித்தலை அரியலூர், பெரம்பலூர், முசிறி, கரூர், மணப்பாறை, கோவை, ஈரோடு, குன்னூர், கோபிச்செட்டிபாளையம், திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலை, பவானி, நாகர்கோவில், இராமநாதபுரம், இளையாங்குடி, அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர், சிவகாசி, தர்மபுரி, சேலம், இராசிபுரம், ஓமலூர், இடைப்பாடி, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் மறியல் செய்யப்பட்டது. பல்லாயிரக் கணக்கில் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர் (தி மு. க. வரலாறு, டி, எம், பார்த்தசாரதி, பாரதிநிலையம், 1986, பக். 393— 408). தமிழகத்தின் பெருநகரங்களிலும் நகரங்களிலும் சிறு நகரங்களிலும் சட்டப்பிரிவுக்குத் தீயூட்டல், மறியல், தடைமீறல் என்பன போன்ற போராட்ட வடிவங்களில் இந்தி எதிர்ப்புத் தன்மை வெளிப்பட்டது. ஏறத்தாழ இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்ற சுற்றெல்லையைத் தாண்டி தி.மு.க. வின் கருத்தியலுக்கு உட்பட்ட மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோரிடம் பரவத் தொடங்கியதைக் காணமுடியும். தமிழறிஞர்களின்(இன்னும் சொன்னால் தமிழாசிரியர்கள்) பங்கு இதற்கு முந்தைய போராட்டங்களில் அறிவுபூர்வமாகவும தர்க்கபூர்வமாகவும் இருந்தமையோடு இந்தப் போராட்டத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்களிடம் இந்திஎதிர்ப்புக்கருத்தை ஊன்றும்படி

பரவலாகவும் இருந்தது. போராட்டப்பரவலுக்கு இது ஒருபரந்துபட்ட அடித்தளத்தை அமைத்துக்கொடுத்தது. அதோடு அரசியலில் காங்கிரசுக்கு எதிரான சக்திகளான **இராசாசி, முகமது இசுமாயில், ம.பொ. சிவஞானம், ஆதித்தன்** ஆகியோர் மக்களிடமிருந்து சிறிது சிறிதாக காங்கிரசு அன்னியமாகிக் கொண்டுவருவதை ஊக்கப் படுத்திக் கொண்டே வந்தனர். எல்லோரையும் இணைக் கும் சங்கிலியாகஆங்கிலம் இருந்தது குறிப்பிடத்தக்கது. 1963–64 ஆம் ஆண்டுகளில் இந்தி எதிர்ப்பு யுத்தம் நடந்த பொழுது பெரியாரின்பங்கு என்னவாக இருந்தது என்பது முக்கியமானதாகும். பெரியார் சில அடிப்படை யான அம்சங்களில் தெளிவோடு காண ப்பட்டார்:

> இந்தியா யூனியனாக இருக்கும் வரை இந்தியை அசைக்க முடியாது. இன்றையராஜ்யம் அவர்களு டையது. நாம் ஒண்டிக் குடியாக இருக்கிறோம். மெஜாரிட்டி அவர்கள் ......அசைக்க முடியும் என்றால் பலாத்காரத்தில் இறங்க வேண்டும். அவ்வளவுதூரம் போவதற்கு இப்போது அவசியம் தோன்றவில்லை. ஆகவே இந்தியைப்பற்றிப் பேசுவது வீண் என்று முடிவு செய்து விட்டேன்.

சென்னைக் கடற் கரையில் 2.6.63 இல் நடந்த கூட் டத்தில் பெரியார் ஆற்றிய உரையின் ஒருபகுதி இது. (இந்தியும் ஆச்சாரியாரும், குடி அரசுப் பதிப்பகம்) ஈரோடு, பக்.2). இந்திய யூனியனை அண்ணாதுரை ஒத்துக் கொள்ளவிருக்கும் ஒரு காலத்தில் அவரைச் **சீண்டுவதற்காகப்** பெரியாரால் முன்வைக்கப்பட்ட விமரிசனமாக மட்டும் இதைக் கொள்ள வேண்டிய தில்லை. இந்திய யூனியனைப் பெரியார் ஒத்துக் கொள்ளவில்லையெனினும் —இந்தியையும் ஒத்துக் கொள்ளவில்லையெனினும் இப்போதைக்கு இதுவீண் எனக்கருதினார், காங்கிரசு ஆதரவில் உறுதியாக நின்ற பெரியாருக்கு மாற்றாக, காங்கிரசு எதிர்ப்பில் உறுதி யாக இருந்த இராசாசி பிரிவினை எண்ணத்தில் பேசு லானார்.18.1.65 அன்று திருச்சியில் கூடியகூட்டத்தில் இராசாசியின் உரையின் ஒரு பகுதி இது:

> குற்றநடைமுறைச் சட்டமோ தடையுத்தரவோ

> பிறப்பிக்கப்படலாம். **அவைமூட்டைசுமக்கும்கழுதைகள்**...வடவரின் கையில் உள்ள மத்திய அரசு இந்தியை மட்டுமே ஆட்சி மொழியாக்குவதைத் தொடர்ந்து அமுல் செய்தால **இந்தியத்துணைக் கண்டம் பதினைந்து பகுதிகளாகத்தனித்துப்பிரிந்து விடும்.** இது வரை எனக்குப் பிரிவினை எண்ணம் துளிர் விடவில்லை. ஆனால் அண்மைக் காலத்தில் அரசு நடவடிக்கைகளால் அப்படியொரு பிரிவினை உணர்வு என் உள்ளத்தில் தோன்றி வளர்ந்திருக்கிறது.

வரலாறு இப்போது திரும்பியுள்ளது. சட்டத்தைக் கழுதையாக வருணித்த இதே இராசாசி, பெரியார் மீது குற்றவியல் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தியவர்; அது 1939 இல்; இப்பொழுது 1965. பதவி என்பது நியாயத்தை மறந்து போகச் செய்யும் **மறதி மாத்திரை**யாக இருப்பதும் பதவி இழப்பு என்பது நியாயத்தை உணரச் செய்யும் **அருமருந்தாக** இருப்பதும் தெளிவு. அவினாசிலிங்கம் கல்வி அமைச்சராக இருக்கும் பொழுது இந்தியைக்கட்டாயப்பாடமாக 1948 இல் ஆக்க முயன்றார்; 1950இல் பதவியில் இல்லாதபொழுது இந்தித்திணிப்பில் அவமானத்தைக்கண்டறிந்தார். (விடுதலை, 21.5.50). டாக்டர் சுப்பராயன் (நீதிக்கட்சியின் சார்பில் பதவி; நீதிக் கட்சியிலிருந்து விலகி காங்கிரசு சுயராஜ்யக் கட்சியின் ஆதரவுடன் பதவி; பின்னர் நீதிக்கட்சி ஆதரவுடன் பதவி; பின்னர் காங்கிரசில் இணைந்து இராசாசி மந்திரிசபையில் பதவி.) தமிழ்நாடு காங்கிரசுக் குழுவின் தலைவராக இருந்த பொழுது இந்தி மட்டுமே ஆட்சி மொழியாகத்தகுதிபெற்றுள்ளது எனக் கண்டடைந்தார் (Hindu 19. 8. 52); ஆனால் இந்தப் பதவியை இழந்த பின் ஆங்கிலத்தின் பெருமைகளைச் சொல்லி இந்தியின் தகுதியின்மையை உலகுக்கு அறிவித்தார் (Hindu 7.6. 58). தமிழக அரசியல்வாதிகள் மீது குற்றவியல் தடைச்சட்டத்தை முதலில்பயன்படுத்திய மூல புருஷரான இராசாசிக்கு இப்போது புதிய ஞானம் பிறந்திருப்பினும், ஆங்கிலத்தின் தொடர்ச்சியான பயன்பாட்டைமட்டுமே தன் மொழிக் கொள்கையாக அறிவித்தார். ஆனால்இதுவல்ல இப்போது முக்கியம். பெருகி வரும் காங்கிரசு எதிர்ப்புவழிந்து விடாமல் செப்பனிட

வேண்டிய ஒரு பெரியஅரசியல் யுத்தியின் தொடக்க கட்டமாகவே இவர்கள் கூட்டு இருந்தது. நியாயமான கோரிக்கைகளை உள்ளடக்கிய ஒருமொழிப் போராட்டத்தின் இத்தகைய பரிமாணத்தை நாம் இல்லையென ஒதுக்கிவிட முடியாது.

1965 ஜனவரி 26 ஆம் நாளாம் குடியரசு நாளைத் துக்க தினமாகக் கொண்டாட வேண்டும் என தி. மு. க., கேட்டுக் கொண்டது, இயக்கம் எந்த வொன்றினாலும் சிதறிவிடக் கூடாது என்பதில் கவன மாக இருந்த அண்ணாதுரை துக்க நாளின் தன்மை யையும் விளக்கினார். குடியரசுக்குக் கண்டனமோ குடியரசு முறைக்குத் துக்கம் தெரிவிப்பதோ நோக்கம் அல்ல வென்றும் இந்திஆட்சிமொழியாக்கப்படுதலுக்கே கண்டனம் என்றும் அண்ணாதுரை தெரிவித்தார். (தி. மு. க., வரலாறு, பக். 409). அண்ணாதுரை உட்பட கழகத் தலைவர்கள் கைது செய்யப் பட்டனர்.

25. 1. 65 ஆம் நாள்முதல் தமிழக மாணவர்கள் இந்தப் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டனர். இயல்பான தன்னெழுச்சியினாலும் திராவிடமாணவர் முன்னேற்றக் கழக அமைப்பின் ஓரளவு நெறிப்படுத்துதலினாலும் (இரண்டையும் கலந்தே குறிப்பிட வேண்டும்) சென்னை மதுரை, கோவை, திருச்சி, விருதுநகர், சிதம்பரம் ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஊர்வலம் சென்றனர்; மதுரையில் 17 வது சட்டப் பிரி வுக்கு எரியூட்டப் பட்டது; சில இடங்களில் மாணவர் களைக் காங்கிரசுக்காரர்களும் பல இடங்களில் போலீசுக்காரர்களும் தாக்கினர். அன்று தி. மு. க. உறுப்பினர் திருச்சி கீழப்பழூவூரைச் சேர்ந்த திரு. சின்னச்சாமி என்பவரும் 26. 1. 1965 அதிகாலை சென்னை கோடம்பாக்கம் திரு. சிவலிங்கம் என்பவரும் தீக்குளித்துந்தம்மை மாய்த்துக்கொண்டனர். 26, 1. 65 அன்று நடை பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ஊர்வலத்தின் மீது போலீஸ் சுட்டதில் திரு இராசேந்திரன் மரணமடைந்தார். இராசேந்திரன் நினைவாகப் பல இடங்களில் நடத்தப்பட்ட மாணவர் ஊர்வலங்கள் போலீஸ் தடியடித் தாக்குதலுடன் முடிவ டைந்தன. தமிழகம் முழுவதும் ஒருங்கிணைக்கப்பட்ட

மாணவர் அமைப்பு இல்லையெனினும் கூட மாணவர் போராட்டத்தின் ஊடே அதைக கட்டுவதற்கான முயற்சி வெற்றிபெற வில்லை. ஏறத்தாழ 50 நாள்கள் நடந்த இந்தப் போராட்டத்தில் மக்கள் திரளினர் கலந்து கொண்டு தமக்குள் உறைந்துள்ள அரசாங்க எதிர்ப்பை வெளிப்படுத்திக் கொண்டனர். 40க்கும் மேற்பட்ட இடங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு நிகழ்வுகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் மாண்டனர். போலீசுக்காரர்களுக்கும்மக்களுக்கும் இடையிலான மோதல்களில்இரண்டுதரப்பினருமேமாண்டனர். தமிழகத்துக்குள் வரவழைக்கப்பட்ட இராணுவம் தமிழகத்தின்மூலை முடுக்குகளைக் காட்டுத்தனமாகத் தாக்கியது. வெகுண்டெழுந்தமக்கள் மைய,மாநில அரசாங்கக்கட்டிடங்களுக்கும் சொத்துகளுக்கும் சேதம் விளைவித்தனர்.1947க்குப் பின் தமிழகத்தில் நடந்த முதல் உள்நாட்டுப்போர்என்று குறிப்பிடக்கூடிய அளவில இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. போராட்டத்தில் வன்முறை கலந்து விட்டதாகவும் போராட்டத்தை நிறுத்தும்படியும் தி.மு.க. சார்பில் அண்ணாதுரை வேண்டுகோள் விடுத்தார். எனினும் போராட்டம் அதன் இயல்பான அளவில் சென்ற பின்னரே தானாக ஓய்ந்தது. மையப் பட்ட ஸ்தாபன அமைப்போ ஒருங்கிணைந்த திட்டமிடலோ எவையுமின்றி நடத்தப்பட்ட போராட்டமெனினும் மாணவர்களும் இளைஞர்களும் மக்களும் பெருமளவில் தங்கள் போர்க் குணத்தை வெளிப்படுத்தினர். தமிழகத்தில் இருந்த அரசியல் கட்சிகள் மக்களிடமிருந்து அன்னியமாகி இருந்தன. தி.மு.க. தொடக்கத்தில போராட்டத்தில்ஐக்கியமாகி இருப்பினும் அரசாங்கவன்முறைக்கு மக்கள் பதில் கொடுக்கும் சந்தர்ப்பங்களில் மக்களிடமிருந்து வசதியாக நழுவிச் சென்றுவிட்டது. இவ்வளவு வசதிக் குறைவுகளுடன் நடத்தப்பட்ட போராட்டந்தில் கோரிக்கையின் நிலை மாறி மாறிச் சென்றாலும் அது முன்னோக்கியே இருந்தது., இந்தி ஆட்சிமொழி ஆவதற்குக் கணடனமாகத் துவக்கப்பட்டு, பின் ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு, இறுதியில் பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழிகளாகவேண்டும் எனறும் இதற்கேற்ப 17ஆவது அரசியல் சட்டப் பிரிவை நீக்கவேண்டும் எனறும் மாணவர்கள் கோரினர். (இரத்தத்தில் ஐம்பது நாள்

கள், அ. இராமசாமி, தென்னிந்திய வரலாற்று ஆராய்ச்சிக்கழகம், மதுரை, பக். 196) எனவே மாணவர்களின் போராட்டத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகள், முன்னோக்கிய நிலையிலேயே அமைந்தன.

1) 17 ஆவது சட்டப்பிரிவை நீக்குக.

2) அனைத்து மொழிகளையும் ஆட்சிமொழிகளாக்குக'

என்ற கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்ட முதல் போராட்டம் என்ற விதத்தில் இது ஒரு மாபெரும் வெற்றியே. இந்தப் போராட்டத்தின் கோரிக்கைகள் அனைத்தும் கோரிக்கைகளாகவே இருந்தன என்றும் அது செயல் வடிவம் பெறவில்லை என்றும் ஆகவே இந்தப் போராட்டம் ஒரு மிகப்பெரிய தோல்வியில் முடிவடைந்தது என அ. இராமசாமி கருதுகின்றார் (முன்னூல், பக். 196). மேற்கண்ட போராட்டத்தில் மதுரை நகரில் முதன்மைப் பங்கு வ்கித்தவரான அ. இராமசாமியின் கருத்து சிறிது ஆராயத்தக்கது.

எந்தவொரு மக்கள் போராட்டமும் தோல்வியில் முடிந்ததில்லை. தோல்வியிலும் முடியாது. வெற்றி/ தோல்வி என்பதை நாம் சில கோரிக்கைகள் நிறைவேறுதலோடு மட்டுமே தொடர்பு படுத்திக் காணமுடியாது. சில நேரங்களில் ஒரு போராட்டம் நடத்துவதென்பதே ஒரு போராட்டத்தின் வெற்றிகரமான அம்சமாக இருக்கக் கூடும். சில நேரங்களில் கோரிக்கைகள் நிறைவேறாமலும் கூட ஒரு போராட்டத்தின் ஊடே ஒரு ஸ்தாபன அமைப்பு கட்டப்பட்டால் அல்லது வலிமையுற்றால் அதுகூட ஸ்தாபனரீதியிலான வெற்றியாகும். சிக்கலான ஒருவிஷயத்தில் சில புதிய கோரிக்கைகளை முன் வைத்தலும் அவற்றின் நியாயத்தை வலியுறுத்தலும், வெற்றியாகும். எனவே ஒரு போராட்டத்தின் வெற்றி பன்முகப் பட்டது. தமிழக மக்களின். மாணவர்களின்— இளைஞர்களின் உள்ளார்ந்த போர்க் குணத்தை வெளிப்படுத்திய விதத்திலும் தமிழகம் தழுவிய ஒரு போராட்டம் மையமான ஸ்தாபன பலமின்றி 50 நாள்களுக்கு நடத்த முடியுமென்ற அளவிற்கு மாணவர்களிடம் உள்ளுறைந்த முன் முயற்சியை செயலுக்குக்

கொணர்ந்த விதத்திலும் அனைத்துத் தேசிய இனங்களின் சமத்துவத்துக்கு ஏற்றமுறையில் ஒருபுதிய தீர்வை மக்கள் மயப்படுத்திய விதத்திலும் இந்தப் போராட்டத்தில் மாபெரும் வெற்றியைக் காண இயலும். ஆங்கிலத்தை தொடாந்து பயன் படுத்துக என்ற தி. மு. க., வின் உயிரோட்டமான் கோரிக்கை, மாணவர்களால் முன் வைக்கப்பட வில்லை என்பது முக்கியமானது. இந்தப் போராட்டத்தின் நியாயமான கோரிக்கைகளைத் தொடர்ந்து முன்வைக்காமல் இருப்பதும் அவற்றை நிறைவேற்றுவதற்குரிய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பதும் 1965 க்குப் பின்னர் தமிழ்நாடு அளவில் மாணவர் அமைப்பு எதுவும் வலுவாகக் கட்டப்படாமல் இருப்பதும் குறைபாடுகளாக உள்ளன எனக் குறிப்பிட்டால் அவை சரியாக இருக்கும். தி. மு. க., அமைப்புக்கு இவை குறித்த அக்கறை பெரிதும் இல்லை. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு மாற்றாக ஒரு சக்தியாக வளரும் வரையில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுகளைக் காங்கிரசு எவ்வாறு பயன்படுத்திக் கொண்டதோ அவ்வாறே காங்கிரசுக்கு மாற்றான ஒரு சக்தியாக வளர்ந்து பதவியைக் கைபற்றுவதற்குரிய எல்லை வரையில் தி, மு. க , வும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டது. ஓர் இயக்கத்தின் போராட்டத் திட்டம் தற்போதைய நிலைக்கு ஏற்றதாகவும் எதிர்கால வளர்ச்சியைப் பாதிக்காததாகவும் இருக்க வேண்டும் என்பதில் அண்ணாதுரை தொடக்கம் முதற் கொண்டே (திராவிடநாடு; 7.8.1955) தெளிவாக இருந்தார். எனவே எந்தப் போராட்டத் திட்டமும் இயக்கத்தின் வளர்ச்சிக்கானதே, அதைப் போல எந்த நியாயமான போராட்டத்தை நடத்துதலும் இயக்கத்தின் வளர்ச்சிக்கானதே. 1965 இல் தமிழக மக்களும் மாணவர்களும் ஏறத்தாழ ஓர் உள்நாட்டுப் போரில் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடிய பொழுது இந்திஎதிர்ப்பின் முன்னோடி பெரியாரும் காமராசரும் ஆற்றிய உரைகளைக் காண்போம்: பெரியார் குறிப்பிட்டார்:

> இந்தி எதிர்ப்பு என்றபெயரால் நடைபெற்ற காலித்தனம் ..... தமிழ்நாட்டில் எங்கே உள்ளது இந்தி? யார் வீட்டுப்பையனை இந்திபடி என்றுஎந்தப்பள்ளியில் யார் கட்டாயப் படுத்தினார்கள்? பத்திரிகைக்

> கார அயோக்கியர்களும் பித்தலாட்ட அரசியல்வாதிகளும் இந்தி கட்டாயம் என்று கட்டி விட்டது கண்டு எல்லா மக்களும் சிந்திக்காமல் இந்தி இந்தி என்று இல்லாத ஒன்றை இருக்கின்றதாக எண்ணிக் கொண்டு மிரள்வதா?... ஆரம்பத்திலே நான்கு காலிகளைச் சுட்டு இருந்தால் இந்த நாச வேலைகளும் இத்தனை உயிர்ச் சேதமும் உடைமைச் சேதமும் ஏற்பட்டு இருக்காது. எதற்காக சட்டம்? எதற்காக போலீஸ்? எதற்காக போலீஸ் கையில் தடி, துப்பாக்கி? எதற்கு? முத்தம் கொடுக்கவா கொடுத்துள்ளாய்? இதுஎன்ன அரசாங்கம்? வெங்காய அரசாங்கம். (கிளர்ச்சிக்குத் தயாராவோம், பெரியார், மே 28— 30, 1965, பக். 6, 10, 14 மற்றும் 15).

இந்தித்திணிப்பை என்றும் எதிர்த்தல் என்பது திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடு என நம்பப்படுகிறது. அதுகூடஇங்கே உருக்குலைந்துவிடுகிறது. காமராசர் பேச்சு அரசியல் நாகரிகத்தின் எடுத்துக் காட்டாய் அமைந்தது (9.5.65, திருச்சிகூட்டம்):

> எங்கே இந்தியைத் திணித்தாங்க. யார்வாயிலே திணித்தாங்க. ஒரு மனிதன் விரும்பாததைஇன்னொரு மனிதன் திணிக்க முடியாதே...இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி என்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே தீர்மானித்து விட்டோமே?அரசியல்சட்டம் எழுதிய காலத்திலேயும் 1965இலிருந்து இந்திதான் ஆட்சிமொழி என்று சட்டம் பண்ணினோமே......(விடுதலை 12-5-1965).

தேர்தல் அரசியலின் அணிச் சேர்க்கைக்கு (polarisation) உகந்தவிதத்தில் மொழிக் கொள்கை குறித்த நடைமுறை அமைந்தது அண்ணாதுரை குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசும் பொழுது (மார்ச்1965) இணைப்பு மொழிகுறித்து (Lingua Franca), இயல்பான போக்கில் எந்தவொரு அரசுஆதரவும் இன்றி காலப்போக்கில் உருவாக வேண்டும் என்று குறிப்பிட்டார். இதையே டில்லி நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலும் குறிப்பிட்டுள்ளார் (காஞ்சி 21.3.65)

திராவிட இயக்கத்தில் ஒரு பிரிவான திராவிடர் கழகம் 1954முதல் ஆளுங்கட்சியை ஆதரித்தது. இன்னொரு பிரிவான திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாகவே உருமாறும் வாய்ப்பை 1967 இல் மக்கள் அளித்தனர். அண்ணாதுரையின் கைதேர்ந்த வலைப் பின்னலினால் உருவான அற்புதமாக மட்டும் இந்திவெற்றி அமைத்திடவில்லை. இதற்கான பல படிக்கட்டுகளில்1965இன் இந்தி எதிர்ப்புப்போராட்டம் முக்கியமானதாகும். இப்பொழுது திராவிட இயக்கத்தின் ஒரு பகுதியான தி.மு.க. ஒரு மாநில ஆளும் கட்சியாகி விட்டது. 1967 ஆம் ஆண்டுத்தேர்தல் அத்தகைய வாய்ப்பை வழங்கியது.

1967 இல் தமிழகமாணவர்கள் கொடைக்கானலில் கூட்டிய இந்திஎதிர்ப்பு மாநாட்டில் இந்தியை எதிர்த்தும் 17 ஆவது சட்டப்பிரிவை ரத்துசெய்யும்படியும் தமிழக அரசு போராட்டத்தை நடத்தவேண்டுமென மாணவர்கள் கோரிக்கை வைத்தனர். இந்திஎதிர்ப்பு உணர்வுக்கு மாணவர்களைத் தயார்செய்வதில் மிகவும் நேர்மையாகச் சிறப்புடன்பணியாற்றிய **பேராசிரியர். சி. இலக்குவனார்** தமிழக அரசின் ஆங்கில ஆதரவுப் போக்கை இந்த மாநாட்டில் கண்டித்தார். இறுதியில் பேசிய **முதலமைச்சர் அண்ணாதுரையின்**. பேச்சில் சமரசம் நிரம்பிவழிந்தது. இந்தியை எதிர்ப்பதில் இந்தியாவில் இந்த ஒரு அரசுதான் உள்ளதென்றும் இதையும் இழந்துவிடலாமா என்றும் அவர் உருக்கமாக மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

இந்நேரத்தில் 23.1.1968 இல் தமிழக அரசால் கொண்டுவரப்பட்ட **இருமொழித்திட்டமும்** அதில் முதலமைச்சரின் உரையும் உற்சாகமளிக்கத்தக்கவையாக இருந்தன. மொழியை ஒரு பாடமாகக் (Language as a Subject) கற்பதில் அதுவரை ஒருமுறை இருந்தது. 1963 ஆம் ஆண்டுமுதல மூன்றாம் வகுப்புதொடங்கி ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்றுத்தரப்பட்டது. ஆறாம் வகுப்புமுதல்பதினொன்றாம்வகுப்பு(எஸ்.எஸ்.எல்.சி.,) வரை முதல்மொழியாக ஆங்கிலம் அல்லாத ஏதேனும் ஒருமொழியும் (தமிழ், தெலுங்கு, சமசுகிருதம் பிரெஞ்சு என்பன போன்றவற்றில் ஏதேனும் ஒன்று), இரண்

ட்ாவது மொழியான ஆங்கிலமும் கட்டாயப்பாடங்களா கும்; தேர்வுபெற இவற்றில் குறைந்த அளவுமதிப்பெண் வேண்டும். மூன்றாவதுமொழியாக இந்தி உண்டு; ஆனால் குறைந்த அளவு மதிப்பெண் வேண்டாம். இதுதான் உயர்நிலைப்பள்ளிகளில் மொழிகற்பிக்கும் முறையாக இருந்தது. இருமொழித்திட்டத்துக்குப்பின் என்ன நிலைமை?

1) உப்புக்குச் சப்பாணியாக இருந்த இந்தியை மூன் றாவது மொழியாகக் கற்க வேண்டாம்.

2) இரண்டாவது மொழியான ஆங்கிலம், கட்டாயம் ஆகும்

3) முதலாவது மொழிகளுள் ஆங்கிலம் அல்லாத மொழிகளுள் இந்தியும் சேர்க்கப்பட்டு ஏதேனும் ஒரு மொழி கட்டாயமாகும்.

ஆக, தமிழ்கட்டாயமொழி இல்லை; ஆங்கிலம் கட்டாய மொழிஆகும்; இந்தியை முதல் மொழிகளுள் ஒன்றாகப் படிக்கும் வாய்ப்பு உண்டு. இது உயாநிலைப்பள்ளி களைப் பொறுத்ததாகும். இது 1985 இல் அ.இ.அ.தி. மு.க, ஆட்சியில் இரண்டாவது வகுப்பு முதல் ஆங்கிலம் கட்டாய மொழியாக்கப்பட்டது.

இனி கல்லூரிகளுக்கு வருவோம். இருமொழித்திட்டம் வருதலுக்கு முன்னரும் பின்னரும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் முதலாண்டில் ஆங்கில மொழி கட்டாயப் பாடம் ஆகும்; தமிழுக்குத் தொழில் நுட்பத்தகுதி தரப்பட வில்லை. கலைக்கல்லூரிகளில் பட்ட வகுப்பு களில் முதல் இரண்டு ஆண்டுகளில் இரண்டு மொழிகள் கட்டாயப்பாடங்களாகும். இவற்றுள் ஆங்கிலம் காட்டய பாடமாகும். தமிழ், தெலுங்குமலையாளம், இந்தி, சமசுகிரு தம், பிரெஞ்சு ஆகியமொழிகளில் ஏதேனும் ஒரு மொழி இன்னொரு கட்டாயப்பாடமாகும். இதுவே இரு மொழித்திட்டம் நிறைவேற்றத்துக்குப் பின்னரும் இருந்துவருகிறது. எனவே உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் தமிழ்மொழியைப் பாடமாகப் பயிலாத ஒருமாணவர் தமிழ்நாட்டில் பட்டம் பெற்றிட முடியும் என்ற1967க்குமுந்தைய நிலையே தொடர்ந்தது. இன்று வரை இதுவே தமிழ்கூறு நல்லுலகத்தின் கேவலமான

நிலைமை. பாடமொழி குறித்துமட்டுமல்ல..இருமொழித் திட்டத்தின் மீதான உரையில் முதலமைச்சர் பயிற்று மொழிச் சிக்கலையும் எடுத்து விளக்கினார்.

1939இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் பொழுது போராட்டத்தைத் திசைதிருப்பும் நோக்குடன் இராசாசி உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் வழிக்கல்வியை அறிமுகப் படுத்தினார் என முன்னரே கண்டிருந்தோம். 1961–1962இல் கல்லூரிகளில் அறிமுகமான தமிழ் வழிக் கல்விமுறை, சரியான ஊட்டச்சத்து இன்றி முடங்கிக் கிடந்தது. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதைத் தி.மு.க. நிறைவேற்றும்என்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் மண்டிக்கிடந்தது. முதல்வரின் சட்டமன்றப் பேருரையில் இதற்கான வாக்குறுதிகள் தாராளமாக வழங்கப்பட்டன.

> தமிழகத்தில் தமிழ் பயிற்சிமொழியாகவும் பாட மொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும் நிர்வாக மொழியாகப் பல்வேறு துறைகளிலும் ஐந்தாண்டுக் காலத்துக்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேஉரையில்(23.1.68) சிறிது நேரம் கழித்து அழுத்தமாக முதல்வர் உறுதி கூறியுள்ளார்:

> அடுத்த ஆண்டிலேயே சர்க்கார் கல்லூரிகள் அத்தனையிலும் தமிழ் பாடமொழியாகும் என்பதை இன்றைய தினம் அறிவிக்க விரும்புகிறேன்.... அடுத்த வருடம் சர்க்கார் கல்லூரிகளிலே தமிழ் பாடமொழியாக இருக்கும் என்பது மட்டுமல்ல' ஆங்கிலப் பிரிவு அகற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அழுத்தமாகவும் உறுதியாகவும் சட்டமன்றத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் தலைகீழ் வீதத்திலே செயல் உருப்பெற்றன. அண்ணாவழிவந்த தி.மு.க மற்றும் அ.இ.அ.தி.மு.க. அரசாங்கங்களின் ஆளுகைக்குப் பின்னர்— ஏறத்தாழ 22 ஆண்டுகளுக்குப்பின்னர் —அண்ணாதுரை சொன்னது போல ஐந்தாண்டோ அடுத்தாண்டோ அல்ல— இன்றைக்குக் கூட கல்லூரி

களில் தமிழ் கட்டாய பாடமொழியாகஇல்லை; தமிழ்ப் பயிற்று மொழியில் பயிலும் வாய்ப்பு, மொத்த மாணவர் களில் 15 சதவீதத்தினருக்கு மட்டுமே தரப்பட்டுள்ளது. இந்திய ஒன்றிய அலுவல்மொழிகுறித்தும் நடைமுறைச் சாத்திய வழிகள் குறித்தும் முதல்வர் விளக்கினார்:

> 17ஆவது மொழிப்பிரிவை மாற்றும்வலிவு எம்மிடம் இல்லை, மழை பெய்கிற பொழுது குடை பிடிக்கா விட்டாலும் தலைககுமேலே துணியை வைத்துப் பிடித்துக் கொள்வது போல உடனடியாக இந்தி வந்துவிடாமல் ஆங்கிலத்தை வைத்துத் தடுக்கி றோம். அப்படித் தடுத்துக்கொண்டிருக்கும் பொழுது பதினான்கு மொழிகளுக்காகவும் பாடுபட்டு அவற் றை வளரச் செய்து.... இந்திய அரசு இந்திக்கு மட்டும் சலுகை காட்டுகிற அந்தத் திட்டத்தை மாற்றி எல்லா மொழிகளுக்கும் சமஅந்தஸ்து கொடுத்து எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கு அதற் குரிய சலுகைகள் கொடுத்து வளரச்செய்வார் களேயானால் நாம் அந்த நிலைக்கு வரமுடியும்...

அண்ணாதுரையின் 23. 1. 1965 இன் பேச்சில் ஓர் அம்சம் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது. அதாவது — 17 ஆவது சட்டப்பிரிவை மாற்றும் வலிவு இல்லை என்பது ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது. ஒரு மாநில ஆளும் கட்சியாக மாறியபின் உணரப்பட்ட இந்த வலிவின்மையின் இன்னொரு பக்கம், 17 ஆவது சட்டப்பிரிவை ரத்துசெய் என்ற கோரிக்கையை கை விட்டு விடுதலாகும். இந்த வலிவு இல்லாத பொழுது எப்படி அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழிகளாக் கும் வலிவு வர இயலும்? எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுத்து சலுகைகள் கொடுத்து யாரால் வளரச் செய்ய இயலும்? இந்திக்கு மட்டும் சலுகை காட் டுகிற திட்டத்தை யார் மாற்ற இயலும்? அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் தேவைப்படும்; அது திராவிட இயக்கத்திடம் இல்லை; அல்லது, மக்களைத் திரட்டிச் சமரசமற்ற முறையில் ஒரு போராட்டத்துக்குத் தலை மை தாங்கும் அரசியல் ஆண்மை (Political will) தேவை. இது இல்லை என்று நாம் பதில் சொல்ல

இயலாது. ஏனெனில் இந்நாட்டில் முதல் அரசியல் சட்டத் திருத்தமே பெரியார் தலைமையிலான போராட்டத்தின் பயனாகும். பிற்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வசதி கொடுத்த சென்னை அரசாங்க ஆணை உச்ச நீதி மன்றத்தால் செல்லாததாக்கப்பட்ட பின்னர், அதன் நியாயத்தைப் பெரியாரும் திராவிட இயக்கமும் மக்கள் பலத்தின் மூலம் பாராளுமன்றத்துக்கு உணர்த்தினர்; அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடனேயே 1951 இல் முதல் சட்டத்திருத்தம் செய்யப்பட்டது. **இடஒதுக்கீடு அம்சத்தில் எவ்வித சமரசமற்ற தீர்வையும் விரும்பிய திராவிட இயக்கம் மொழிச்சிக்கலில் அத்தகைய சமரசமற்ற தீர்வை விரும்பவில்லை;** மேலும் திராவிட இயக்கத்தின் போராட்ட ஆற்றல் அதன் அரசியல் சமரசங்களுக்கும் எந்த அளவுக்கு வீரியம் குன்றியுள்ளது என்பதையும் கணக்கிலெடுக்க வேண்டும். ஆகவேதான் பெரியார் இந்தியைப் பற்றிப் பேசுவதே வீண் எனக் கருதினார். ஆனால் ஆட்சிக்கு வந்தபின்னர் வலிவின்மையை உணர்ந்த முதல்வர் 23. 1. 68 இல் இறுதி இலட்சியத்தையும் இடைக்கால நிச்சயத்தையும் குறிப்பிடுகிறார்:

> எங்களின் இறுதி இலட்சியம் பதினான்கு மொழிகள் ஆட்சிமொழிகளாக வேண்டும் என்பதே. அதுவரை ஆங்கிலம் நீடித்திருக்க வேண்டுமானால் நேருவின் உறுதிமொழி நிறைவேற்றப்பட வேண்டும்.

நேருவின் உறுதிமொழி இந்தியை ஒன்றிய அலுவல் மொழியாக ஏற்றுக் கொண்டு, இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் இணை (Associate) ஆட்சி மொழியாக நீடிக்கும் என்பது தானாகும். நேருவின் உறுதி மொழிக்குப்(7– 8– 59)பின்னர், 12. 4. 63 இன் சட்டத்தில் 1965 க்குப்பின்னரும் ஆங்கிலம் இந்தியுடன் தொடர்ந்து பயன்படுத்தப் படலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 8 1. 68 அன்று கொணர்ந்த ஒரு திருத்தம் (திருத்தம் எண் I/ 1968) இந்தி பேசாத மாநிலங்களின் சட்டசபைகள் இனிமேல் ஆங்கிலம் தேவையில்லை என முடிவு செய்து அத் தீர்மானம் நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் ஏற்றுக் கொள்ளும்

வரையிலும் ஆங்கிலம் இந்தியுடன் இணை ஆட்சி மொழித் தகுதியில் இருக்கும் என்பது ஆகும், எனவே நேருவின் உறுதி மொழிக்கு சட்டத்தகுதி உள்ளது; ஆனால் அது அரசியல் சட்டத்தில் ஓர் அம்சமாக இணைக்கப் படவில்லை. எனவே நேருவின் உறுதி மொழி அரசியல் சட்டத்தில் நிறைவேற்றப் படவேண்டும் என்பதே, இந்தியை அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்வதாகும். இவ்வாறு கோருவது தறகொலைக்கு ஒப்பாகும் என **கு. வெ. கி, ஆசான்** ஓரிடத்தில் கூறுவது சரியானதே (மொழி உரிமை, கு. வெ. கி, ஆசான் பக். 38), ஆக ஆங்கிலத்தின் நிரந்தர நீட்டிப்புக்கு இது வழி வகுக்கிறது. ஆங்கிலமும் இந்தியும் நிரந்தரத் தன்மை பெற்ற பின்னர், பதினான்கு மொழிகள் எங்கனம் ஆட்சி மொழிகளாவது? அண்ணாதுரையின் இத்தகைய கோரிக்கையை நடக்க முடியாத கோரிக்கைத் திரையின் பின்னே தன் உண்மைக் குறிக்கோளை தி மு.க. மறைத்து வைக்க முயற்சிக்கிறது என மோகன் குமாரமங்கலம் குறைபட்டுக் கொள்கிறார் (இந்தியாவின் மொழிச்சிக்கல், பக். 141). தி. மு. க., வின் உள்நோக்கம் குறித்த மோகன் குமாரமங்கலத்தின் முடிவை நாம் மறுக்கப் போவதில்லை யெனினும் அனைத்து மொழிகளையும் ஆட்சிமொழிகளாக்கும் இறுதி இலட்சியத்தை கொள்கை யளவில் — பேச்சளவில் — எழுத்தளவில் வைக்க வேண்டிய தேவை தி. மு. க., வுக்கு இருந்தது என்பதையும் தி. க., வுக்கு இப்படி எதுவும் தேவையில்லை என்பதையும் அறிகிறோம். இக் காலகட்டத்தில் (விடுதலை, 27-1-1969) பெரியார் தன் இந்தி எதிர்ப்பின் தன்மையை எவ்விதப் பிசிறும் இன்றித் தெளிவாகவும் நேர்மையாகவும் அம்பலப் படுத்துகின்றார்:

> எனது இந்தி எதிர்ப்பு என்பது இந்தி **கூடாது** என்பதற்கோ **தமிழ்வேண்டும்** என்பதற்கோ **அல்ல**... ஆங்கிலமே பொதுமொழியாக அரசாங்க மொழியாக, தமிழ்நாட்டு மொழியாக, தமிழன் வீட்டுமொழியாக, ஆகவேண்டும் என்பதற்காகவே ஆகும்.

ஆக இந்தி எதிர்ப்பு என்பது தமிழ்ஆதரவு அன்று; அது ஆங்கில ஆதரவுக்கே என்பதைப் பெரியார் போட்டு

உடைத்து விடுகிறார். அண்ணாதுரை அனைத்து மொழிகளையும் கேடயமாக்கிக் கொண்டு ஆங்கிலத்தின் தொடர்ச்சியை விரும்புகிறார். இருவருக்கும் இடையிலான இந்த வேறுபாட்டை இவர்களது மொழிக் கண்ணோட்டத்தின் வழியாக விளங்கிக் கொள்ள இயலும்: தி.மு.க. அரசு கொணர்ந்த மாநில சுயாட்சி தீர்மானத்திலும் இந் நிலைபாடே எடுத்தது. தி.மு.க விலிருந்து பிரிந்த அ.இ.அ.தி.மு.க. இத்தகைய நிலைபாடே எடுத்தது. அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மு. கருணாநிதி சட்டமன்ற மேலவையில் (18. 3. 85) நேருவின் உறுதி மொழிக்கு அரசியல் சட்டத்தகுதி கோரினார். அன்றைய முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் நேருவின் உறுதிமொழி குறித்து அன்றைய பிரதமர் ராஜீவ்வின் உறுதி மொழியே போதுமானது என்றும் நேருவின் உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெற வேண்டிய தில்லை என்றும் குறிப்பிட்டார். (தினமணி 20– 3– 1985). இதுசிறிது கவனிக்கத் தக்கது. 23.1.68 அன்று பேச்சிலும் அதற்குமுன்பு 5– 7– 1960 தொடங்கி அண்ணாதுரையிடம் குவிந்திருந்த சிந்தனை என்பது, ஆங்கிலத்துக்குத் தேவைப்படும் சட்டரீதியான பாதுகாப்பு தருதல் என்பதாக இருந்தது. இங்கு எம் ஜி.ஆர். நேருவின் உறுதிமொழி குறித்து ராஜீவ்வின் உறுதி மொழியே போதும் என முடிவிற்கு வருதல், காங்கிரசுக்கும் அ. இ. அ. தி. மு. க. வுக்கும் இடையிலான நெருங்கிய உறவில் இத்தகைய பாதுகாப்பும் தேவையின்றிப் போய் விட்டது என்பதையும் தெரிவிக்கிறது. மேலும் எம். ஜி. ஆர் எடுத்த நிலைபாடு, அண்ணாதுரையின் அரசியல் பாதையோடும் தொடர்புடையது. நேருவின் உறுதிமொழி நிறை வேற்றப்படும் என நேருவே இன்னொரு உறுதி மொழியை சம்பத்துக்கு (3.8.60 சம்பத்துக்கு நேருவின் கடிதம்) தந்தமையைக் கொண்டு ஒரு போராட்டத் திட்டம் அண்ணாதுரையால் ஒத்தி வைக்கப்பட்டதை இங்கு நினைவு கூரும்பொழுது எம். ஜி ஆரின் அரசியல் வழி, அண்ணாதுரையின் அரசியல் பாதையோடு தொடர்பு கொண்டதாக உள்ளது. அதே நேரத்தில் எம். ஜி. ஆர். முதல்வராக இருந்த பொழுது சட்டமன்றத்தில் 'எல்லா மொழிகளும் ஆட்சி மொழிகளாக வேண்டும்' என ஒரு தீர்மானம் நிறை வேற்றப் பட்டது.

1986 நவம்பரில் மத்திய அரசு இந்தி வாரம் கொண்டாடப் படுதலை எதிர்த்து தி. மு. க., ஒரு போராட்டத்தைத் துவக்கியது இந்தி ஆதிக்கத்தை வலியுறுத்தும் 17 ஆவது சட்டப் பிரிவைக் கொண்டுள்ள அரசியல் சட்டத்தைக் கொளுத்துதல் என்று தி. மு. க., முதலில் முடிவு செய்து, அதன் பின்னர் 17ஆவது சட்டப் பிரிவை கொளுத்துதல் என்று முடிவுசெய்து, இறுதியில் 17 ஆவது சட்டப் பிரிவைத் தட்டச்சு செய்த தாள்களைக் கொளுத்துதல் என்று முடிவுசெய்தது. 1963 இல் தேசிய அவமதிப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நிலையிலும் நீதி மன்றத்தில் 'தான் செய்யக் கருதிய நிலையை நியாயப் படுத்தியும் 17 ஆவது சட்டப் பிரிவுதான் தேசிய அவமானமாக உள்ளது என்றும்' அண்ணாதுரை வழக்காடினார். ஆளுங்கட்சியாக வளரும் நோக்கில் உள்ள ஓர் எதிர்க்கட்சி நிலைக்கும் ஆளுங்கட்சியாக இருந்து அதன்பின் எதிர்க் கட்சியான நிலைக்கும் இடையிலான வேறுபாட்டை இங்கு காணலாம். இருப்பினும் கூட தட்டச்சு செய்யப்பட்ட தாள்களை எரித்தமைக்காக தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள், அ.இ. அ.தி.மு.க., ஆட்சியில் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். அரசியல் சட்டத்தின்படி விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அதன் பிரிவைக் கொளுத்தக் கூடாது என்பது அ.இ.அ.தி.மு.க.,வின் நிலைபாடு. திராவிட இயக்கமே ஆளும் கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் ஆன ஒரு சூழலில் ஏற்பட்ட நிகழ்வு இதுவாகும். எதிர்க்கட்சியாக இருக்கும்பொழுதும் ஆளும் கட்சியாக இருக்கும் பொழுதும் இரண்டு கட்சிகளும் இந்தி எதிர்ப்புக்கு வாயுபசாரஞ் செய்தன.

1969இல் காங்கிரசு அனைத்திந்திய அளவில் இரண்டாக உடைந்த பின்னர் பிளவுபடாத தி,மு.க.,வுக்கு அன்றையசூழ்லில் ஒருபேரஆற்றல்கிடைத்தது அப்பொழுதைய குடியரசுத் தலைவர் தேர்தலிலும் தி.மு.க.வின் வாக்குகள் **தீர்மானிக்கும்** சக்தியைப் பெற்றிருந்தன. அக்காலத்தில் தம் ஆட்சி மொழிக் கொள்கையை வலியுறுத்தவோ மத்திய அரசை ஆதரிப்பதற்கான ஒரு நிபந்தனையாக இதை முன்வைக்கவோ தி மு க. முனையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1979 இல் **சரண்சிங்** தலைமையிலான மத்திய அரசில் அ.இ.அ தி.மு.க. பங்கேற்றிருந்தது. **குறுகிய காலத்தில்**

வாழ்ந்த அமைச்சரவை எனினும் இந்த அரசாங்கத்தின் மொழிக் கொள்கை காங்கிரசின் மொழிக் கொள்கை யாகவே இருந்தது. திராவிட இயக்க மத்திய அமைச்சர்களின் துறைகளும் இந்தியிலேயே இயங்கின. 1989இல் தி.மு.க., உள்ளிட்ட தேசிய முன்னணியின் கொள்கையில் பழையமொழிக்கொள்கைமாறிடவில்லை. தி.மு.க. உள்ளிட்ட இன்றைய தேசிய முன்னணி அரசாங்கம் இதுவரையிலான அரசாங்கங்களைப் போன்றே—

- இந்தியை இந்திய ஒன்றிய ஆட்சிமொழியாகக் கொண்டுள்ளது.
- ஆங்கிலத்தை இணை ஆட்சி மொழியாகக் கொண்டுள்ளது.
- மும்மொழித் திட்டத்தைக் கல்விக் கொள்கையில் ஓர் அங்கமாகக் கொண்டுள்ளது.
- நேருவின் உறுதிமொழி இன்னமும் அரசியல்சட்டத் தகுதி பெற்றாக வில்லை.
- இந்திய மொழிகள் இன்னமும் தேசியத்தகுதி யைக் (National Status) கூடப் பெறவில்லை.
- இந்தியை மத்திய அரசு தன் அலுவலகங்களிலும் வெகுசன ஊடகங்களிலும் திணித்துக் கொண்டு வருகிறது.
- தேசிய அவமதிப்பு என அண்ணாதுரையால் வருணிக்கப்பட்ட 17ஆவது சட்டப்பிரிவை நீக்க வில்லை.

இது ஒரு புதிய அரசியல் யதார்த்தம்; இது ஒருவித மான சமரச சக வாழ்வு. இந்தி ஏகாதிபத்தியம், வட நாட்டுப் பேரரசு என்றெல்லாம் 1960 களின் முன் பகுதி வரை வருணிக்கப்பட்ட சக்திகளுடன் உருவாகிப் போன சுகவாழ்வு. இந்தநேரத்தில் இந்தித்திணிப்பு என்பதைப்பற்றி உச்சாடனம் செய்வது கூட இப் போதைய நிலையில் ஓர் அரசியல் பாவமே ஆகும். இருப்பினும் அது இன்னமும திராவிட இயக்கத்தின்

ஆயுதக்கிடங்கிலிருந்து காலாவதியாகிவிடவில்லை. அது தமிழ்த்தேசிய இனத்தின் எதிர்ப்புணர்வுக்கருவி என்ற நிலையை இன்னமும் இழந்துவிடாததால் அது அதன் அம்பறாத்தூணியில் இப்பொழுதும் கிடக்கிறது— கேட்பாரற்றவிதத்திலாவது.

இந்தித்திணிப்பை எதிர்ப்பது என்ற போர்வையில் ஆங்கிலத்துக்கு ஆதரவு காட்டுவதும் எல்லா மொழிகளும் தகுதிபெறும வரையில் ஆங்கிலமே நீடிக் கட்டும் என்று குறிப்பிடுவதும் திராவிட இயக்கத்தின் மொழிக் கொள்கையாகவும் நடைமுறையாகவும் இருந்து வந்திருக்கின்றன. தமிழுக்கு உதட்டுச் சேவகம், இந்தித்திணிப்பு எதிர்ப்பு, ஆங்கில விசுவாசம் என்ற மூவகைப்பட்ட நிலைபாடுகளில் ஆங்கிலவிசுவாசமே உயிர்நாடியாகும். ஆங்கில மொழியைக் கேடயமாகக் கொண்டு இந்தியை எதிர்ப்பதாகச் சொல்லும் திராவிட இயக்கத்தின் போர்த்தந்திரம்தமிழ் மொழியைச்சவலைப் பிள்ளையாக்கிப் போட்டுவிட்டது என்பதே இதன் நடைமுறையாகவும்ஆகிவிட்டது. இந்திய ஒன்றியத்தின் அலுவலக மொழிகளாக தமிழ்உள்ளிட்ட எல்லா மொழிகளும்ஆகவேண்டும்என்பதுதிராவிட இயக்கத்தின் (அதாவது தி.மு.க., அ.இ.அ.தி.மு.க.,) இறுதி இலட்சியமாக இருப்பின், அது உண்மையான இலட்சி யமாக இருந்திருப்பின், தமிழ் நாட்டில் திராவிட இயக் கத்தின் கால்நூற்றாண்டு (1967-1990) ஆட்சிக்காலத் தில் தமிழைக் குறைந்த அளவு தமிழ் நாட்டில் ஆட்சி மொழியாக- கல்வி மொழியாக-நீதி மன்ற மொழியாகக் கொண்டு வருவதற்கான நேர்மையான முயற்சிகள்மேற் கொள்ளப் பட்டிருக்கவேண்டும்; எங்கும்தமிழ் என்பதை நடைமுறைப் படுத்தியிருக்க வேண்டும்; கால் நூற்றாண் டுக் காலத்தில் அது வரலாற்று நிச்சயமாகி இருக்க வேண்டும். வரலாறுஎன்பதுவாய்ச்சொற்களைச் கொண் டோ வாக்குறுதிகளைக் கொண்டோ வாய்ச்சவடால் கொண்டோ எழுதப்பட முடியாது; வரலாறு, செயல் களைக் கொண்டு எழுதப்பட வேண்டும். அப்படியாயின் திராவிட இயக்க ஆளும்கட்சியின் வரலாறு, தமிழ் உதட் டுச் சேவகத்தையும் ஆங்கில விசுவாசத்தையும் கொண்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஒருமாநிலத்திலேயே ஒருகால் நூற்றாண்டுக்காலத்தில்

அம் மாநிலமொழியை (தமிழை) நிர்வாக மொழியாக மாற்ற முடியாத பொழுது அதைஎப்படி அனைத்திந்திய ஒன்றிய நிர்வாக மொழியாக முன்வைக்கக் கோரும் உரிமையை அந்த இயக்கம் பெற இயலும்? இந்த விதத்தில் **அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழி களாக்குக** என்ற திராவிட இயக்கத்தின் கோரிக்கை, **கோட்பாட்டளவில் சரியானதாக** இருப்பினும், திராவிட இயக்கத்தினரால் **உள்ளார்ந்த ஏற்பும் விருப்பும் இன்றி வைக்கப்படுவதாகவே** தேய்ந்து போயுள்ளது. இந்த விதத்திலும் உதட்டுச் சேவகம் தொடர்ந்துள்ளது. ஒரு தேசிய இனத்தின் கோரிக்கையை முன்வைப்பத னாலோ தேசிய இனங்கள் அனைத்துக்கும் சமதகுதி யை வாயளவில் முன்வைப்பதனாலோஓர் இயக்கத்தைத் தேசிய இனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப் பாகக் கொள்ள முடியாது என்பதற்கு இன்றைய திரா விட இயக்கம் சரியான சான்றாகும். இது குறித்துப் பின்னர்க் காண்போம்.

# 8

மொழிக் கொள்கையில் திராவிட இயக்கத்தின் நடை முறைப் போர்த்தந்திரம் மிகவும் முதன்மையானது. பெரியாராயினும் அண்ணாத்துரையாயினும் பாராளு மன்ற நடைமுறைகளின் மூலம் அரசியல், சமூக, பொருளாதார சீர்திருத்தங்களைக் கோரியவர்கள் ஆவர். பெரியார் தேர்தல்பாதையை விமரிசித்தாலும் தேர்தல்பாதையைக் கோட்பாட்டு அளவில் புறக் கணிக்க வில்லை, அண்ணாதுரை அதை நோக்கிச் சென்றார்; 1957 முதல் நேரடியாகவே இதில் ஈடு பட்டார். பாராளுமன்ற அரசியல் நிலைகளில் தமது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளவோ முன்னேற வோ உகந்த போர்த்தந்திரத்தைக் கையாண்டனர். 1938, 1948, 1950 ஆகிய ஆண்டுகளில் நடந்த போராட்டங்கள் இந்தி பள்ளிகளில் கட்டாயப் பாட மாக வைக்கப் படுதலை எதிர்த்து நடத்தப்பட்டவை. 1952- 55 ஆகிய ஆண்டுகளில் நடந்தவை, இந்தி

ஆட்சி மொழியானதை எதிர்த்து இருந்தன. 1960 இல் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்ட போராட்டம், ஆங்கிலத்தின் நீட்டிப்பு பற்றிய நேருவின் உறுதி மொழி குறித்ததாகும், 1963-65 இல் தி.மு.க. அறிவித்து நடத்திய போராட்டம், எல்லா மொழி களையும் ஆட்சிமொழிகளாக்குக என்பதையும் கோரிக் கையாகக் கொண்டிருந்தது. 1986 இல் சட்டச்சுத் தாள் எரிப்புப் போராட்டம், மத்திய அரசின் இந்தித் திணிப்பைக் கண்டிக்கவேயாகும். அரை நூற்றாண்டுக் கும் மேலான இந்தப் போராட்ட வரலாற்றில் இந்தித் திணிப்பை எதிர்த்தும் ஆங்கில நீட்டிப்பை வேண்டி யும் நடத்தப் பட்டவையே பிரதானங்களாக இருந்தன. எல்லா மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்குக என்பது பிரதானமாக இல்லாமல் அதுவரை ஆங்கில மே ஆட்சிமொழியாக நீடிக்கட்டும் என்பதே 1963 இல் பிரதானமாக இருந்தது. இத்தகைய போராட் டங்களின் கோரிக்கைகளைக் கண்டால் ஒரு தேசிய இனத்தின் மீது இன்னொரு மொழியைத் திணிப் பதை எதிர்க்கின்ற ஆதிக்க எதிர்ப்பு உணர்வு இருப் பதையும் அதேநேரத்தில் ஒன்றியம் என்ற பெயரில் திணிக்கப்படும் இந்தியைத் தடுப்பதற்கு இன்னொரு மொழியான ஆங்கிலத்தைத் திணிக்கின்ற ஆதிக்கப் போக்கும் இருப்பதையும் காணலாம். மேலும் தமிழ்த் தேசிய இனம் இந்தியைச் சுமப்பதா அன்றி ஆங்கிலத் தைச் சுமப்பதா என்றே மொழிச்சிக்கல் அணுகப்பட்டி ருப்பதாகத் தெரிகிறது. ஓர் ஆதிக்கத்துக்கு மாற்று இன்னோர் ஆதிக்கமன்று. தேசிய இனங்களின் சமத் துவத்தை நாம் ஒப்புக் கொள்ளும் பொழுது இத்தகைய முடிவுக்கு வரலாம். ஆனால் திராவிட இயக்கம் முன் வைத்ததோ ஓர் ஆதிக்கத்துக்கு மாற்றாக இன்னொரு ஆதிக்கம் ஆகும். இது ஒரு விதத்தில் தம்மைத் தற் காத்துக் கொண்டு, மீண்டும் படுகுழியில் வீழ்வதாகும். இன்னொரு அம்சம். இந்தப் போராட்டங்கள் (1963 நீங்கலாக) தமிழை நிர்வாக மொழியாகவும் கல்வி மொழியாகவும் ஆக்க முயன்றவை அல்ல; பெரியார் இதைக் கொள்கையளவில் கூட மறுத் துள்ளார். தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., இது குறித்து நிரம்பத் தமிழில் எழுதியிருப்பினும் பேசியிருப்பினும் செயலளவில் எதுவும் உருப்பெற

வில்லை. இந்தவிதத்தில் தேசிய இனமொழி மேம்பாட்டுக்கு கொள்கை அளவில் கூட உடன்பாடாக தி.க., இருந்ததில்லை; தி. மு. க., அ. இ. அ. தி, மு. க., ஆகியாவவை வாயுபசாரம் செய்துள்ளன. இந்த விதத்தில் இவை இரண்டும் தேசிய இனத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகத் தோற்றமளித்துள்ளன. ஒரு தேசிய இன மொழியின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தாமல் அந்த தேசிய இனத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகச் சொல்லுதல் ஒரு மாயையே. இந்த விதத்தில் இந்தித் திணிப்பைத் தடுக்க முயலும் அதிர்ச்சி தாங்கியாகவும் ஆங்கிலத்தைத் திணிக்கிற அதிர்ச்சி அலை இயந்திரமாகவும் திராவிட இயக்கங்கள் இருந்துள்ளன.

1938, 1948, 1950, 1952-55, 1960, 1963-65, 1986 ஆகிய ஆண்டுகளில் இந்தப் போராட்டங்களை நடத்திய நீதிக்கட்சி, தி.க., தி மு,க., ஆகியவை எதிர்க்கட்சிகள் என்ற நிலையில் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. 1937 இல் நீதிக் கட்சி தோற்று, எதிர்க்கட்சியானது. 1955 இல் காங்கிரசைப் பெரியார் ஆதரித்தார். 1986 இல் அ இ.அ.தி.மு.க., ஆளும் கட்சியாகவும் தி.மு.க.. எதிர்க் கட்சியாகவும் இருந்தது. இவற்றில் தி க., காங்கிரசை ஆதரிக்கத் தொடங்கியபின் இந்தி எதிர்ப்புத் தன்மையில்நீர்த்துப்போய்.இந்தித்துணிப்பைப் பற்றிப் பேசுவதே வீண் என முடிவுக்கு (1965) வந்து விட்டது. மேலும் ஆகஸ்டு முதல் நாள் இந்தி எழுத்து அழிப்புக்கிளர்ச்சியை குடியாத்தம் இடைத் தேர்தலுக்காக ட்டாம் நாள் பெரியார் ஒத்திவைத்தார் 1967க்கு முநதிய தி மு க ,வின் இந்தி எதிர்ப்பு வேகத்துக்கும் அதற்குப் பிந்திய தன்மைக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு தி.மு.க., வின்போராட்டங்கள் அதன் எதிர்க்கட்சி நிலையில் அமைந்தன. அ.இ.அ. தி.மு.க,, எதிர்க் கட்சி நிலையில் கூட (1972-1977) இத்தகைய தன்மையில் அமையவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய இனத்தின் இந்தி மொழி ஆதிக்க எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் விதத்தில் வரலாற்றின் கருவிகளாகத் திராவிட இயக்கம் செயல் பட்டாலும்

திராவிட இயக்கத்தின் பாராளுமன்றவாத நிலைபாட்டுக்கு உரிய ஒரு கருவியாக அது மாற்றப் பட்டது என்பதும் வரலாறே. மாநில ஆளும் கட்சியை ஆதரிக்கும் எதிர்க்கட்சி, உண்மையான எதிர்க் கட்சி, ஆளும்கட்சியானபின் பதவி இழந்து அதன்பின் எதிர்க் கட்சி என்ற மூவகைப்பட்ட நிலைகளோடு மத்தியில் ஆளும்கட்சிகளுள் ஒரு கட்சி என்ற நான்காவது நிலையோடு திராவிட இயக்கத்தைப் பொறுத்துக் காணும் பொழுதே திராவிட இயக்கத்தின் மொழிக் கொள்கை குறித்த **பரிபூரணத்துவமும் ஆன்று அவிந்து அடங்கிய சான்றாண்மையும்** நமக்கு விளங்கும். பாராளுமன்றவாத அரசியல் நிலைபாட்டில் பல சந்தர்ப்பங்களுக்கும் வசதிகளுக்கும் ஏற்ற விதத்தில் இது பயன்பட்டு விடுகிறது. மக்களை எழுச்சிகொள்ளச் செய்வதற்கும், தம் கட்சியின் இருப்பைக் காட்டிக் கொள்வதற்கும் தம் தொண்டர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், ஆளும் கட்சிக்கு எதிரான அணிச்சேர்க்கையை உருவாக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும் என்று இப்படிப் பலதரப்பட்ட நோக்குகள் குவிந்துள்ளன. இதை திராவிட இயக்கத்தோடு மட்டும் சேர்த்துவைத்துப் பார்க்கவும் முடியாது. பாராளுமன்றவாத நிலைபாட்டை எடுத்த எந்த ஓர் இயக்கத்திற்கும், அர்ச்சுனனுக்கு குருவியின் கழுத்து மட்டுமே தெரிவதைப் போல தேர்தலில் வெற்றி என்பது மட்டுமே தெரிகிறது. இதுபாராளுமன்றவாத நிலைபாடு என்ற உளைச் சேற்றின் தன்மை. எனவே இந்த நிலைபாடுடையோர் ஒரு பிரச்சனையைக் கையாள்வதற்கு பல நோக்குகள் உண்டு. எதிர்க் கட்சியாக! ஆளும் கட்சியாக இருக்கும் பொழுது இதில் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. இதற்கு ஒரு தேசிய இனத்தின் மொழி நலன்கள் பலியாகிப் போனது, அரசியல் விபத்து.

திராவிட இயக்கத்தின் மொழிப் போராட்டங்களைக் காணும்பொழுது அவை எப்பொழுதும் சட்டவரம்புக்கு உட்பட்டவையாகவும் வன்முறையை முற்றாக நிராகரிப்பவையாகவும் இருப்பதைக் காணலாம் 'அமைதியான முறையில் சட்டவரம்புக்குட்பட்டே இந்தக் காரியத்தைச் செய்வதாகவே' அறிக்கைகளும் அமைந்தன (பெரியார்

விடுதலை 6.8.1954). அண்ணாதுரையின் நீதிமன்ற வாக்குமூலத்தில் இது மிகவும் தெளிவாகக் காணப்படு கிறது. (தி.மு.க. வரலாறு, டி.எம்.பார்த்தசாரதி, பக்.386) போராட்டத்தின் இயல்பான போக்கில் தவிர்க்க இயலாதவகையில் மக்கள் வன்முறையில் இறங் கினால்அத்தகையவன்முறை நிகழ்வுகளிலிருந்து தம்மை விலக்கிக்கொள்ளவும் உடனே இயக்கம் தயார்நிலையில் இருந்தது. போராட்டத்துக்குத்தொண்டர்களை அழைக் கும் முறை மிகவும் உணர்ச்சித்தூண்டலாக இருந்தது.

> உன் நாட்டிற்கு,உன்மொழிக்குத் துரோகம் செய்து வடவனுக்குக் காட்டிக்கொடுத்து வயிறுவளர்ப்பது திராவிடப்பண்பா? ஆகஸ்டு 8-ந்தேதி ஆம் அல்லது இல்லை என்றுபதில் சொல்லு. ஆம் என்றால் ஜே இந்தி என்று சொல்லு. இல்லாவிட்டால் இந்தி ஒழிக என்றுதாரில் புருசை நனைத்து இந்திப் பெயரை அழி! அழி! அழி. (விடுதலை 5.8.54)

எளிமையாக, குறைவான சொற்களில், விளங்கும்படி பேசும் வல்லமை பெற்ற பெரியாரின் இந்த நடையில் உணர்ச்சித் தூண்டலுக்குரிய கிளர்ச்சி மதிப்பு இருக் கிறது. ஒரு போராட்டத்திற்குத் தொண்டர்களைத் தயார்படுத்தும் மூலதனம் இது. அறிவார்ந்த முறையில் பிரச்சாரம் அமையாமல் உணர்ச்சிகளைத் தூண்ட வல்ல கிளர்ச்சி மதிப்பே பயன்பட்டது. அண்ணாதுரையின் நடை, மிகவும் உருக்கமாகவும் தொண்டரோடு நேரடி யான உறவு கொள்வதாகவும் பண்டையகால தமிழ் இன வீரவுணர்வுகளோடு தொடர்பு படுத்துவதாகவும் அமைந்திருப்பதைக் காணலாம். **புறநானூற்று** மன் னரின் வஞ்சினம், **மனோன்மணீயம்** நாடகத்து சீவகனின் சூளுரை ஆகியவற்றை நினைவு கூரும் வகையில் அணிகளுக்கு ஓர் உத்வேகத்தை ஊட்டு வதற்குஅண்ணாதுரையின் நடைஉகந்ததாக இருந்தது. ஒருநோக்கத்துக்காகப் போராட்டம் திட்டமிடப்பட்டு அதற்கெனத் தொண்டர்களைத் திரட்டி,பின் போராட் டம் நடத்தாமல் தொண்டர்கள் சோர்வு அடையும் பொழுது அச்சோர்வை அகற்றுவதற்குரிய ஒரு நடை யையும் (style) அண்ணாதுரை தம் எழுத்துகளில் கொண்டிருந்தார். தமிழ்எழுத்துலகில்அரசியல் கிளர்ச்சி

மதிப்புள்ள படைப்புகளைத் தொகுக்கும் பொழுது அண்ணாதுரையின் பங்கு குறிப்பிடத்தக்கது ஆகும். எனினும் இத்திறமை அணிகளை ஏமாற்றப்பயன் பட்டது என்பதே உண்மை.

போரட்டத்தைக் கையாளும் தன்மையில் (Mechanism) சில பொதுவான அம்சங்களைக் காணலாம். 1938/ 39 ஆம் ஆண்டுப் போராட்டம் முதல உலகப் பெரும்போர் தொடங்கியவுடன் அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படுத்தக் கூடாதென விலக்கிக் கொள்ளப் பட்டது. 1948 ஆம் ஆண்டுப் போரராட்டம் இந்தியப் படைகளுக்கும் நிஜாம் படைகளுக்கும மோதல் உரு வாகும் காலத்தில் நிறுத்திக் கொள்ளப்படும் என முன்னரே அறிவிக்கப்பட்டு, அது போன்று நிறுத்தப் பட்டது. அரசுக்கு ஏற்படும் நெருக்கடிகளைப் பயன் படுத்திக் கொள்ளும் நோக்கம் இல்லை. 1952, 1963 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப் பட்ட போரராட்டங்கள் நீண்ட காலத்துக்கு நடத்தும் நோக்குடன் அறிவிக்கப் பட்டன; எனினும் அவ்வாறு நடத்தப்படவில்லை. அதற்குரிய தொண்டர் அடித்தளமும் சமூகப்பின்னணி யும் இல்லை. 1952, 1953 இந்தி எழுத்துக்களைத் தார்பூசி அழித்த போராட்டங்களும் 1986 இல் 17 ஆவது சட்டப் பிரிவைத் தட்டச்சு செய்த தாள்களைக் கொளுத்திய போராட்டமும் அடையாளப் போராட் டங்களாகும் (Token struggles) 1938/ 39 மற்றும் 1960 ஆகிய ஆண்டுகளில் நடந்த போராட்டங்கள் அவற்றின் கோரிக்கை இலக்குகளை அடைவதற்கு முன்னரே— அடையாமலே— திரும்பப் பெறப் பட்டன. 1955 இல் கொடிகொளுத்துவதாக அறிவிக் கப்பட்ட போராட்டமும் அவ்வாறே, போராட்டங்கள் தொடங்குவதற்கு முன்பு என்ன நிலை இருந்ததோ அதே நிலை இருக்கும் பொழுது போராட்டங்கள் திரும்பப் பெறப்பட்டன; இருப்பினும் போராட்டங்கள் வெற்றியில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டன. ஒரு போராட்டத்தை நடத்திமுடித்தோ நடத்தாமலேமுடித்தோ இருக்கும் பொழுது அதே பிரச்சனை குறித்து இன் னொரு போராட்டத்தை உடனடியாக நடத்துவதற்கு உரிய சாத்தியத்தையும் போராட்டத்தின் முடிவில் காண்கிறோம். எப்பொழுது வேண்டுமானாலும் ஒரு

போராட்டத்தைத் தொடங்குவதற்கும் எப்பொழுது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் போராட்டத்தை முடிப்பதற்கும் உரிய அளவில் இந்தியாவின் மொழிச்சிக்கல் இயக்கந்துக்கு போராட்ட அட்சய பாத்திரமாக உள்ளது. இவை அனைத்தும் திராவிட இயக்கத்தின் அமைப்புச் சாதுரியத்தை மட்டுமின்றி தொண்டர்களின் தேசிய இன ஆர்வத்தையும் போராட்டக் குணத்தையும் தலைமை மீதான விமரிசனமற்ற ஆதரவுத் தன்மையையும் காட்டுகின்றன. மொழிச்சிக்கலைப் பொறுத்து திராவிடர் இயக்க நிலைபாடு தமிழர்களை இந்தித் திணிப்பிலிருந்து காக்கும் கேடயமாகவும் ஆங்கிலத்தைத் திணிக்கும் அளவில் தமிழர்களைத் தாக்குகிற வாளாகவும் உள்ளது. இந்த நிலைபாடு காங்கிரசு கம்யூனிஸ்டு கட்சிகள் ஆகியவற்றின் நிலைபாடுகளிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறதா?

மாநில நிர்வாக/ கல்விமொழியைப் பொறுத்த அளவில் அந்தந்த மாநில மொழிகளைப் பயன் படுத்த வேண்டும் என கட்சிகளும் கொள்கையளவில் மட்டுமே ஒப்புக் கொள்கின்றன. ஆனால் எந்த ஒரு மாநிலத்திலும் அந்த மாநில மொழியே முழுமையாகப் பயன் படுத்தப்பட வில்லை. அரசியல் சட்டத்தின் 345 ஆம் பிரிவு மாநிலங்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொள்ள வகை செய்கிறது. இந்தி உட்பட எந்த மாநில மொழியும் தேசியந் தகுதி (National status) பெறவில்லை.

இந்திய ஒன்றிய நிர்வாக மொழியாகவும் இணைப்பு மொழியாகவும் இந்தி மட்டுமே இருப்பதா இந்தியுடன் ஆங்கிலம் இருப்பதா என்ற சிக்கல் காங்கிரசுக்குள் 1925 முதல்இருந்து வந்தது. இதில் இந்திக்கு வாதாடும் பகுதி (lobby) பெரும்பான்மையாக இருப்பினும் ஆங்கிலத்துக்கும் சேர்த்து வாதாடும் பகுதி செல்வாக்கு நிலையில் இருந்தது; எனவே மோதிலால் நேருவின் அறிக்கையில இந்தி/ இந்துஸ்தானியுடன் கூடிய ஆங்கிலம் பரிந்துரைக்கப் பட்டிருந்தது. வட இந்தியப் பகுதிகளில் இருந்த இத்தகைய ஆங்கில ஆதரவுச் சிந்தனையாளர்களுடன் தென்னக காங்கிரசுககாரர்கள் ஒன்றியிருந்தனர். இந்தியே இந்தியா முழுவதையும் ஆத்கிரமித்துக்

கொள்ளாத வகையில் ஒரு தற்காப்புத் தந்திரத்தை மட்டுமே இவர்களால் அன்றைக்குப் பயன்படுத்த முடிந்தது. அதே நேரத்தில் இவர்களால் முன்வைக்கப்பட்ட ஆங்கிலமும் இந்தியைப் போன்ற இன்னொரு அன்னிய மொழி என்பதையும் ஆங்கிலம் ஒரு சதவீதத்தினரால் பேசமுடிந்த ஒருமொழி என்பதையும் புறக்கணித்து விட்டிருந்தனர். வடஇந்தியப் பகுதியில் உள்ள ஆங்கில ஆதரவாளர்களுடன் இந்தப் பிரச்சனையில் தென்னக காங்கிரசுக் காரர்கள் இணைந்திருந்தனர். அரசியல் சட்ட நிருணய சபையிலும் அந்த இணைவு தொடர்ந்திருந்தது. இந்தி இந்திய ஒன்றிய மொழியாக ஆக்கப்பட்டாலும் அது ஆங்கிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்தது. ஆங்கிலம் 15 ஆண்டுகள் நீட்டிக்கப்படும் என அரசியல் சட்டம் குறிப்பிட்டதும் (26–11–1949). இந்திபேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக இருக்கும என நேரு உறுதிமொழி கூறியதும் (7-8-1959), 15 ஆண்டுகளுக்குப் 'பின்வரும் ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தலாம் என அனுமதித்ததும் (12–4–1963), இந்திபேசாத மாநிலங்களில் தீர்மானம் நிறைவேற்றி நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றும் வரை ஆங்கிலம் இணை ஆட்சிமொழியாகத் தொடரும் என்பதும் (ஜனவரி 1968, திருத்தச் சட்டம் 1/1968) இன்றுவரை ஆங்கில மொழியின் தொடர்ந்த ஆதிக்கத்துக்கு எடுத்துக் காட்டுகளாக உள்ளன. ஆங்கிலத்தை நீடித்துப்பயன்படுத்தும்போக்கு மேலாதிக்க நிலையில் காங்கிரசில் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்தப் போக்குடன் திராவிட இயக்கத்தின் நிலைபாடு எந்த அளவுக்கு அடிப்படையில் மாறுபாடு கொண்டுள்ளது என்பதே நமக்கு முக்கியமாகும்.

காங்கிரசைப்போன்று திராவிட இயக்கம் அனைத்திந்திய இயக்கமாக இல்லை. காங்கிரசைப்போன்று 1925 முதல் அனைத்திந்தியக்கொள்கையை உருவாக்கவில்லை. 1938/39 இல் இந்தி கட்டாயப்பாடமாக வைக்கப்பட்டபொழுது, இந்தியாவுக்குப் பொதுமொழி ஒன்று தேவையில்லைஎன்றும் இந்தியாஒருநாடுஇல்லை என்றும் பெரியார்கருதினார். எனினும் ஆங்கிலத்துக்கு உரிய ஆதரவை அப்பொழுது முதல் காண்கிறோம். பெரியாரைப் பொறுத்தவரை அவர் இந்நிலையைத்

தொடர்ந்து கடைப்பிடித்தார். தி.மு.க., 1960க்கு முன்புவரை ஆங்கிலமும் தொடர்ந்து இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்ற கொள்கையைப்பின்பற்றியது. 1960க்குப்பின்னர் குறிப்பாக 1963 க்குப்பின்னர் அனைத்து மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்க வேண்டும என்றும் அதுவரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டது. இது உண்மையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற நிலைபாடாகும். எனவே இந்தியுடன் ஆங்கிலம் தொடர்ந்து இருககவேண்டும் என்ற காங்கிரசின் ஒருதரப்பார் நிலைபாட்டுடன் தி.மு.க.,வின் நிலைபாடு அடிப்படையில் முரண்படவில்லை. இது ஒரு விதத்தில் அனைத்திந்தியப் பகுதிகளிலும் உள்ள ஆங்கில ஆதரவு சக்திகளுடன் எந்தவிதமான முரண் பாட்டையும் ஏறபடுத்திக் கொள்ளவில்லை. இதனால் தான் அனைத்திந்திய அரசியல் கட்சிகளுடன் இத்தகைய அம்சத்துடன் திராவிட இயக்கம் ஒன்றுபட முடிகிறது.

# 9

இந்திய நாட்டின் விடுதலை என்பது இந்தியமொழிகளின விடுதலையோடும் சுயவளர்ச்சியோடும் தொடர்புடையதாகும். இந்தியமொழிகளை இந்தியமொழிகளுள் ஒன்றோ வேறு நாட்டுமொழியோ அல்லது இரண்டுமோ ஆதிக்கம் செலுத்தினால் அதன் பெயரை விடுதலை எனக்குறிப்பிடமுடியாது. இந்திய ஒன்றியம் என்பது பல்வேறு தேசிய இனங்களின் மீது திணிக்கப் பட்ட அமைப்பாக ஏகாதிபத்தியம் உருவாக்கி இருப்பினும் அது இருநூறு ஆண்டுகால அரசியல் நிகழ்வு என்பதை நாம் மறுக்கவேண்டியதில்லை. எனினும் பல்வேறு தேசிய இனங்களின் விருப்பார்ந்த ஒருங்கிணைவாகத் தொடர்ந்து நிலவவேண்டுவதற்கு முதன்மையாகத் தேவைப்படுவது,தேசிய இனங்களுக்கு சமவாய்ப்பும் சம உரிமையும் ஆகும். வரலாற்றுரீதியில் தேசிய இனங்களுக்கு இடையில் சமனற்ற நிலை இருக்

கலாம்; ஆனால் அரசியல் சட்ட அளவில் தேசிய இனங்களுக்கு இடையில் சமத்துவம் இருந்தாக வேண்டும். இத்தகைய சமத்துவம், தேசிய இனங்களின் மொழிகளுக்கு வழங்கப்பட்டாகவேண்டும். இன்றைய அரசியல் சட்டம், இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் மொழிகளுக்கு இடையிலான சமத்துவநிலையைப் பேணவில்லை. இன்னும் சொல்லப்போனால் மொழிகளுக்குத் தேசியத்தகுதி இல்லை. மொழிகளுக்கு இடையிலான சமத்துவம் இல்லாத பொழுது விருப்பார்ந்த ஒருமைப்பாட்டைப் பேசுவது விரயமே, எனவே இந்தியாவின் மொழிக் கொள்கை முதலில் இரண்டு அம்சங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும்.

1) இந்தியா பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு.

2) விருப்பார்ந்த ஒருமைப்பாடு என்பது மொழிகளுக்கு இடையிலான சமத்துவத்தின் மூலமே உருவாகும்.

நம் அரசியல் சட்டம் மேற்குறித்த இரண்டையும் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. இத்தகைய அடிப்படைகளைக் கொண்டு புதிய மொழிக்கொள்கை உருவாக்கப்படவேண்டிய தேவையை இன்றைய வரலாற்று யதார்த்தம் வேண்டுகிறது. அத்தகைய புதிய மொழிக் கொள்கையின் பல்வேறு அம்சங்கள் பின்கண்டவாறு அமையலாம் என்பதை இந்த விவாதத்தின் இறுதிநிலையாக ஒரு மேல்விவாதம் நோக்கி முன்வைக்கலாம்: அவை:

1) இந்திக்கும் ஆங்கிலத்துக்கும் ஆதிக்கம் வழங்குகிற அரசியல் சட்டத்தின் 17 ஆம் மொழிப்பிரிவு ரத்து செய்யப்படவேண்டும்.

2) இந்திய மொழிகள் அனைத்திற்கும் தேசியத். தகுதி வழங்கப்பட்டு அவை அனைத்திற்கும் சமவாய்ப்பும் சம உரிமையும் வழங்கப்படல் வேண்டும்

3) எல்லாமாநிலங்களிலும் நிர்வாகம், சட்டமன்றம், கல்வித்துறை, நீதித்துறை ஆகிய அனைத்துத் தி துறைகளை அதனதன் தேசிய மொழியிலேயே

நடத்துதல்வேண்டும். இவற்றுக்கு உகந்தவிதத்தில் தேசிய மொழிகளின் தகுதியை உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்வதற்கு அந்தந்த மாநிலங்களும் இந்திய அரசாங்கமும் அரசியல் சட்ட உத்திரவாதம் அளித்து, நடைமுறைப் படுத்த வேண்டும்.

4) ஒரு மாநிலத்தில் உள்ள தேசிய சிறுபான்மையினர் மாநில அரசோடு தம் மொழியில் தொடர்பு கொள்ளவும் தம் மொழியிலேயே கல்வி கற்கவும் வசதி இருக்க வேண்டும்.

5) ஒரு மாநிலத்திற்கும் பிற மாநிலங்களுக்கும் அல்லது ஒன்றிய அரசாங்கத்துக்கும் இடையிலான தொடர்புக்கு அந்த மாநிலத்தின் மொழியைப் பயன் படுத்தவேண்டும். ஏனைய மாநிலங்கள் தம் மறுமொழியை அவற்றின் மொழிகளில் தரலாம். இந்திய ஒன்றிய அரசாங்கம் அந்த மாநிலத்தின் மொழியில் பதில் தரவேண்டும். இன்றைக்கு மொழிபெயர்ப்பு தொடர்பாக நவீன அறிவியல் கருவிகள் பல பயன்பாட்டுக்கு வந்த பின்னர், இணைப்பு மொழி என்பதில் சிக்கல் இல்லை. தேசிய இனங்களுக்கு இடையிலும் தேசிய மொழிகளுக்கு இடையிலும சமத்துவம் உருவாகும் ஒரு காலகட்டத்தில், தங்களுக்கு உகந்த ஒரு பொதுத் தொடர்பு மொழியை வளர்த்துக் கொள்வதா ஏதேனும்ஒரு இந்திய மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதா என்பதற்கான பதில்களைக்கூட எதிர் கால யதார்த்த நிலை தீர்மானித்துக் கொள்வதே பொருத்தமாக இருக்கும்.

6) கல்வியில் தொடக்கக் கல்விமுதல் தொழில் நுட்பக் கல்வி வரை அந்தந்த மாநில மொழிகளில் கற்றுத் தருவதற்குரிய முறை உருவாக்கப் படவேண்டும். மாநிலத்தின் சிறுபான்மையினர் தம் மொழியில் தொடக்கக் கல்வியைக் கற்கும் உரிமை இன்றியமையாதது ஆகும். சிறுபான்மையினர் மொழி வளர்ச்சி பெற்றதாக இருப்பின் அதில் உயர் கல்வி கொடுக்கப்படல் வேண்டும். இல்லையெனில்

அத்தகு மொழிகளின் வளர்ச்சி குறித்து திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டும்.

7) ஒருதேசிய இனத்தின் மொழியைக் கற்காமல் அந்த தேசிய இனத்தில் யாரும் பள்ளிக் கல்வியை அல்லது கல்லூரிக் கல்வியை முடிக்க இயலாது; **தாய்மொழி கட்டாயமாகும்.**

8) இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழிகளாக பதினைந்து மொழிகள் அமைய வேண்டும். இதை நடை முறைப்படுத்துவதில் சில நெறி முறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

அ) இந்தியத்தலைமையகத்தில் உள்ள அரசு அலுவலகங்களான நாடாளுமன்றம், குடியரசுத்தலைவர் அலுவலகம், உச்ச நீதிமன்றம் ஆகியவை **பதினைந்துமொழிகளில் இயங்குதல்வேண்டும்.** நாடாளுமன்ற உறுப்பினர் **எந்தமொழியிலும் பேசும் உரிமை** மட்டுமின்றி அதை உடனுக்குடன் ஏனைய மொழிகளில் மொழிபெயர்த்துத்தரும் வசதியை உருவாக்குதல் வேண்டும். இந்திக்கும் ஆங்கிலத்துக்கும் இப்போதுள்ள மொழிபெயர்ப்பு வசதி அனைத்துமொழிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். நாடாளுமன்றத்தின் அறிக்கைகள், ஆணைகள், சட்டங்கள் ஆகியவை அனைத்தும் எல்லாமொழிகளிலும் வரவேண்டும். இப்பொழுது நாடாளுமன்றத்தின் பொறுப்புகளில் இந்தி அல்லது ஆங்கிலம் தெரிந்தோர் மட்டுமே இருக்க முடியும் என்றநிலை இதன் மூலம் மாறும். குடியரசுத்தலைவர் அலுவலகம் அனைத்துமொழிகளில் இயங்கவேண்டும். வங்காளி மட்டுமே அல்லது கன்னடம் மட்டுமே தெரிந்த ஒருவர் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றாலும் பொறுப்புகளை நிறைவேற்ற இயலும். கணிப்பொறியின் மூலம் மொழிபெயர்ப்புவசதிகள் இப்போது மிக எளிமைப் பட்டிருக்கும் காலத்தில் இது குறித்த செலவினத்தைக் கருதாமல் இவ்வாறு பயன்படுத்த இயலும்.

ஆ) மாநிலங்களில் உள்ள மைய அரசு அலுவலகங்கள், அந்த மாநில மக்களோடு தொடர்புகொள்ளவும்

மாநில அரசோடு தொடர்புகொள்ளவும் மைய அரசோடு தொடர்பு கொள்ளவும் தம் அலுவலக மொழியாகவும் அந்தந்த மாநிலமொழியையே கையாளலாம். மொழியைப் பொறுத்து மைய அரசு அலுவலகம் ஒரு மாநிலத்தில் தீவு நிலையில் இருந்தாக வேண்டியதில்லை.

இ) இதற்கு உகந்தவிதத்தில் மைய அரசின் ஊழியர்கள், அதிகாரிகள் அந்தந்த மாநில மொழியை அறிந்திருக்க வேண்டும்; அல்லது அந்தந்த மொழியை அறிந்தவர்கள் அமர்த்தப்பட வேண்டும். நான்கு வகைப்பட்ட பணிநிலைகளில் அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வுகள் அனைத்துமொழிகளிலும் நடைபெறலாம் என கோத்தாரி குழு குறிப்பிட்டதை ஏற்றுக் கொண்டு, இப்போது அவ்வாறே தேர்வு நடைபெறுகிறது. ஒரு மாணவர் தன் தாய் மொழியைக் கற்றுள்ள சூழலில் வேறு ஏதேனும் ஒரு மொழி பேசும் மாநிலத்தில் பணிபுரிய நேர்ந்தால் அந்த மொழியைக் கற்றுக் கொள்ளலாம்.

9) அனைத்திந்திய முதன்மை பெற்ற மாநாடுகளிலும் கூட்டங்களிலும் அனைத்து மொழிகளிலும் பேசுவதற்குரிய உரிமை இருந்தாக வேண்டும்; எல்லா மொழிகளிலும் கருத்துகளை விளக்குவதற் கேற்ற விதத்தில் மொழிபெயர்ப்பு வசதிகள் அமைத்தாக வேண்டும்.

ஏகாதிபத்தியத்தின் உருவாக்கத்துக்குப் பின்னர் அதன் வளர்ச்சி நிலையில் உலகில் அதன் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி பல தேசிய இன நாடுகள் (multi national countries) தோன்றியுள்ளன. அத்தகைய நாடுகளுள் ஒன்றான இந்தியாவில் மொழிக் கொள்கை தேசிய இன சமத்துவ நிலைபாட்டால் உருவாக்கப்பட வில்லை. இதற்கு இன்றைக்கு இரண்டு பெருந்தடைகள் இருக்கின்றன. அரைக்குடியேற்றத் தன்மை கொண்ட இந்தியப் பகுதிகளில் தொடர்ந்து இருந்துவரும், ஏகாதிபத்திய ஆதிக்கம். சுயமான தேசிய இனங்களின் வளர்ச்சிக்கு இன்னமும் தடையாக இருந்து வரும் அரைநிலப்பிரபுத்துவ ஆதிக்கம், ஏகாதி

பத்திய ஆதிக்கம், தேசிய இனங்கள் மீது சுய விருப்பற்ற முறையில் வலுக்கட்டாயமாக ஓர் அனைத்திந்திய போக்கைத் திணித்துக் கொண்டிருக்கிறது; அதாவது அதன் ஊடே இன்றைக்கு ஏகாதிபத்தியம் ஊடுருவிக் கொண்டிருக்கிறது. தேசிய இனங்களை முழுமையான வளர்ச்சிக்குரிய கலாச்சாரத்தடைகளை அரை நிலவுடைமையை உற்பத்தி உறவுகள் அளிக்கின்றன. இத்தகைய ஏகாதிபத்திய ஆதிக்கம் கொண்ட அரைநிலவுடைமை முறைக்குள் ஒரு சமூகம் பல தேசிய இனங்களைக் கொண்டு இயங்கும் பொழுது தேசிய இன சமத்துவம் யதார்த்தமாக மாற சாத்திய மில்லை; ஆனால் அதற்கான வலுமிக்க போராட்டங்கள் சாத்தியமே. அரசியல் சட்ட நிருணய சபையில் மொழிக் கொள்கை பற்றிய விவாதத்தில் திரு. டி டி. கிருஷ்ணமாச்சாரி குறிப்பிட்டார்;

> முழுஇந்தியா வேண்டுமா? அல்லது இந்திஇந்தியா மட்டும் அவர்களுக்கு வேண்டுமா? என்பதை அவர்களே முடிவு செய்யட்டும். இந்த இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுப் பதும் அந்த முடிவை அரசியல் அமைப்பில் ஏற்றி வைப்பதும் அவர்களுடைய முடிவைப் பொறுத்ததே. நாங்கள்வெளியே தனித்து விடப்படின் எங்கள் தலைவிதியை நொந்து கொண்டு இனி வரக்கூடிய நல்ல காலத்தை நம்பி இருப்போம்.

பாரி நிறுவனத் தரகு வணிகராகத் தன் வாழ்வைத் தொடங்கிய டி.டி.கே., தலைவிதியை நொந்து கொள்வதற்கும் அண்ணாதுரை 17 ஆம் சட்டப்பிரிவை மாற்றும் வலிவு நம்மிடம்இல்லை என ஆட்சிக்குவந்த பின்னர் உணர்ந்து கொண்டதற்கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லை. நமக்குத்தேவை இந்தி இந்தியாவா ஆங்கில இந்தியாவா என்ப நல்ல; இந்தியுடன் கூடிய ஆங்கில இந்தியாவா என்பதும் அல்ல. நமக்குத் தேவை எல்லா தேசிய இன மொழிகளுக்கும் சமதகுதி வழங்கும் இந்தியா என்பதாகும். ஆனால் இது எல்லா தேசிய இனங்களுக்கும் சமதகுதி வழங்குதலோடு தொடர்புகொண்டதாகும். சமத்துவமில்லாமல் உண்மையான ஒற்றுமையை உருவாக்கமுடியாது. எல்லா தேசிய இனங்களுக்கும் சமதகுதி கொடுப்பதற்கு

ஏகாதிபத்தியமும் அரைநிலவுடைமையும் ஏகாதிபத்திய நோக்கிலான அனைத்திந்தியத்தன்மையும் தடைகளாக உள்ளன. இந்தியா முழுவதும் சந்தையைக்கொண்டுள்ள பெருமுதலாளிகள், பெருநிலவுடைமையாளர்கள், அரசாங்க உயர் அதிகாரவர்க்கம் ஆகியோரின் நலன் களைப் பிரதிபலிக்கக் கூடிய அரசாங்கக் கட்டமைப் பானது, எல்லா தேசிய இனங்களிலும்—இந்திமொழி பேசும் தேசிய இனம் உட்பட—உள்ள அடிப்படை வர்க் கங்கள் மத்திய தரவர்க்கத்தினர் ஆகியோரின் வளர்ச் சிக்குத்தடையாக உள்ளது; பல்வேறு பொருளாதார, கலாச்சார மாயைகளை உசுப்பிவிட்டு வர்க்கப் போராட்டங்களைத்தாமதப்படுத்திக்கொண்டேவருகிறது ஏகாதிபத்தியசகாப்தத்தில் ஒரு தேசிய இனத்தின் அடிப்படைவர்க்கத்தின் நலன்களுக்கான தத்துவத்தின் தலைமையில் தேசிய இனத்தின் கோரிக்கை முன்வைக் படும் பொழுதே சமரசங்கள் சாத்தியமில்லாமல்போகும். ஏகாதிபத்தியத்தின் கைப்பிள்ளையாக இருக்கும் திராவிட இயக்கத்தலைமையின் வரலாறு சமரசங்களின் தொகுப்பாகும். இந்தி வாயிலான அனைத்திந்தியப் போக்கோ இந்தியுடன் கூடிய ஆங்கிலத்தை முன்னிறுத் தும் அனைத்திந்தியப் போக்கோ அடிப்படையில் தேசிய இனங்களின் மொழிகளைக் குப்புறவீழ்த்திவிட்டுக் கட்டியமைக்கப்படும் வலுவான மையப்படுத்தலாகும். இதுவும் ஏகாதிபத்திய நலனுக்கானதே பல்வேறு தேசிய இனங்களின் அடிப்படைவர்க்கங்களான தொழி லாளர், விவசாயிகள் மற்றும் மத்தியதரவர்க்கத்தினர் ஆகியோரிடையே ஏற்படவேண்டிய ஒற்றுமையையும் இதன் அடிப்படையில் அடிப்படைவர்க்க நோக்கிலான அனைத்திந்தியப் போக்கையும் ஏகாதிபத்தியச் சார்பி லான அனைத்திந்தியப் போக்கையும் நாம் பண்புரீதி யில் பிரித்து அறிந்தாக வேண்டும். ஏகாதிபத்தியச் சார்பிலான அனைத்திந்தியப் போக்கில் சிறிதுசிறிதாக ஈர்க்கப்பட்ட திராவிட இயக்கத்தலைமையின் மொழிக் கொள்கை, அனைத்துத் தேசிய இனமொழிகளுக்கும் சமத்துவத்தை நடைமுறையில் வழங்க இயலாது என்பது மட்டுமின்றி அதற்கான சமரசமற்ற போராட் டத்தில் அந்த இயக்கத்தின்தலைமை ஈடுபடவும் இயலாது என்பதே அதன் வரலாறாகும். திராவிட இயக்கத்தலைமையின் மொழிக்கொள்கையால் தமிழ் மொழிக்குப் பயனில்லாமல் இருக்கலாமே தவிர,

மொழிச்சிக்கல் திராவிட இயக்கத்தின் தலைமைக்குப் பயன்பட்டுவருகிறது. எனினும் அடிப்படைவர்க்க நோக்கில் தேசிய இன உணர்வைத் திரட்டப்பட வேண்டிய அரசியல் தேவையில் அந்த இயக்கத்தின் அடிநிலை அணியினரும் தேசிய இன உணர்வுச் சிந்தனையாளர்களும் தமிழ்மொழிக்கு உரிய இடத்தைத் தரத் தகுதியும் விருப்பமும் கொண்டவர்கள் என்பதில் ஐயமில்லை. திராவிட இயக்கத்தின் தலைமையின் இதயத்தில் ஆங்கிலம் வீற்றிருந்தாலும், தோழர்கள் தாளமுத்து முதல் சிவலிங்கம் வரையிலான மாவீரர்கள் சிறையில செத்துமடிந்ததும் செந்தணலில் வெந்து கருகியதும் தமிழுக்காக என்பதே வரலாறு. இவர்கள் அடிப்படை வர்க்கத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களின் நலன்களுக்கான இயக்கங்களை இவர்கள் கண்டடைவதும் இவர்களின் நலன்களுக்கான இயக்கங் கள் இவர்களை வென்றெடுப்பதும் இன்றைய வரலாற் றுத் தேவைகளாகும். ஏகாதிபத்திய சகாப்தத்தில் பல தேசியஇனங்கள் கொண்ட ஒருநாட்டின் ஆளும் வர்க்கம் அனைத்துத் தேசிய இனங்களுக்கும் சமத்துவத்தைத் தாமாக வழங்கி விடாது என்பதும் அத்தகைய சமத் துவத்தையோ ஒரு தேசிய இனத்தின் சுய மரியாதை யையோ அடிப்படைவர்க்க நோக்கிலான, அடிப்படை மக்கள் கலந்து கொள்ளும் சமரசமற்ற போராட்டங் களின் மூலம் மட்டுமே பெற இயலும் என்பதும் இன்றைய அரசியல் யதார்த்தமாகும். அரசியல் யதார்த்தம் குறித்த அறிவே அதிகாரத்தை வழங்கி விடாது; அது நடைமுறையின் முதற்படியாகும்